









இலங்கை மின்சார சபை

ஆண்டு அறிக்கை

# 2021



# உள்ளடக்கம்


எமது நோக்கு, செயற்பணி மற்றும் அடிப்படை விழுமியங்கள் 2
எமது சுற்றுச்சூழல் கொள்கை 3
ஒரே பார்வையில் 4
எமது பணிக்குழு 5
கடந்தகாலச் செயலாற்றுகை 6
நிறுவனத் தகவல்கள் 7
நிறுவனக் கட்டமைப்பு 8
துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச. இன் நிறுவனக் கட்டமைப்பு 2021 10
தலைவரின் மீளாய்வு 12
பொது முகாமையாளரின் மீளாய்வு 14
இ.மி.ச. மின் பரிமாற்ற வலையமைப்பு 16
செயற்பாட்டு மீளாய்வு
- மின் பிறப்பாக்கல் பிரிவு 18
- மின் பரிமாற்றப் பிரிவு 23
- விநியோகப் பிரிவுகள் 29
- செயற்றிட்டங்கள் பிரிவு 36
- சொத்துமு காமைத்துவப் பிரிவு 42
- நிறுவன உபாயப் பிரிவு 47
- நிதிசார் இடர் முகாமைத்துவம் 51
- தொழினுட்ப இடர் முகாமைத்துவம் 53
- நிலைபேற்று அறிகை 55
- நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை 58
- நிதிப் பிரிவும் நிதிசார் தகவல்களும் 61

பணிப்பாளர்களின் அறிக்கை 72
இலாப, நட்டக் கூற்று 79
முற்றடக்க வருமானக் கூற்று 80
நிதி நிலைக் கூற்று 81
உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று - குழுமம் 82
உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று - சபை 84
காசுப் பாய்வுக் கூற்று 85
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 86
குழும நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 150
குழும நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் 162
சுருக்கக் குறியீடுகள் 202

## எமது நோக்கு

வளமான வாழ்விற்கு
மின்சாரம்

## எமது செயற்பணி

எமது அடிப்படை விழுமியங்களைக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை முழு இலங்கைக்கும் மின்சார வழங்கலில் செயற்றிறனானதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் சிக்கனமானதுமான முறைமை ஒன்றினை விருத்தி செய்தலும் பேணுதலும்.

## எமது அடிப்படை விழுமியங்கள்

தரம்
பாதுகாப்பு
வினைத்திறனும்
விளைதிறனும்
அர்ப்பணிப்பு
நிலைத்திருக்கும்தன்மை
தேசத்திற்கான சேவை



# எமது சுற்றுச்சூழல் கொள்கை

இ.மி.ச. ஆனது இயற்கையானதும் மனிதனால் உருவாக்கப்பட்டதுமான சுற்றுச்சூழலைப் பேணுவதற்காகவும் நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காகவும் அதன் சகல வணிக நடவடிக்கைகளையும் பொருத்தமான முறையில் முகாமை செய்கிறது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதன் மூலம் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள், அதிகாரசபைகள், ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களின் வகிபாகம் மீதான எமது செயற்பாடுகளில் நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கு நாங்கள் முனைந்துள்ளோம். எமது செயற்பாடுகளில் சுற்றுச்சூழல் கருத்தாய்வுகளைக் கூட்டிணைத்து ஒருங்கிணைக்கின்ற கொள்கையை நாங்கள் தீவிரமாகப் பின்பற்றுகின்றோம்.




1969 இல்
தாபிக்கப்பட்டது
16,716 GWh
நிகரப் பிறப்பாக்கம்
ஒரே
பார்வையில்
24,960 ஊழியர்கள்
18.63 LKR/kWh
சராசரிக் கிரயம்
16.37 LKR/kWh
விற்பனை விலை
1,383 MW
நீர்மின் கொள்ளளவு
1,987 MW
விற்பனை விலை
817 MW NCRE
கொள்ளளவு
415 MW
மேற்கூரை சூரிய
மின் கொள்ளளவு
6,809,528
நுகர்வோர் கணக்குகள்
வருமானம்
249,089 மில்.இல்.ரூபா
விற்பனைக் கிரயம்
283,364 மில்.இல்.ரூபா

# 2021.12.31 இல் எமது பணிக்குழு







நிரந்தரப் பதவியணிக்கான புதிய ஆட்சேர்ப்புகள்

வயதுப் பகுப்பாய்வு




சேவைப் பகுப்பாய்வு




வகைப் பகுப்பாய்வு



# கடந்தகாலச் செயலாற்றுகைகள்



| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சக்திப் பிறப்பாக்கம் (GWh) | 11,801 | 11,962 | 12,423 | 13,154 | 14,249 | 14,773 | 15,985 | 16,556 | 16,392 | 17,378 |
| NCRE பிறப்பாக்கம்* (GWh) | 736 | 1,179 | 1,217 | 1,467 | 1,160 | 1,464 | 1,832 | 1,761 | 1,866 | 2,930 |
| உயர்ந்தபட்சக் கேள்வி (MW) | 2,146 | 2,164 | 2,152 | 2,283 | 2,453 | 2,523 | 2,616 | 2,669 | 2,717 | 2,802 |
| மின்சார விற்பனை (GWh) | 10,474 | 10,621 | 11,063 | 11,786 | 12,785 | 13,431 | 14,091 | 14,611 | 14,286 | 15,214 |
| நுகர்வோர் கணக்குகள் (எ/கை) | 4,979,862 | 5,210,761 | 5,417,532 | 5,648,132 | 5,964,194 | 6,193,131 | 6,354,281 | 6,500,641 | 6,636,266 | 6,809,528 |
| முறைமைச் சக்தி இழப்புகள் (%) | 11.24 | 11.14 | 10.91 | 10.40 | 10.28 | 8.45 | 8.34 | 8.23 | 9.08 | 8.72 |
| வருமானம் (மில்.இல.ரூபா) | 163,513 | 194,147 | 202,645 | 188,684 | 206,811 | 218,450 | 229,571 | 242,950 | 238,911 | 249,089 |
| சராசரி விற்பனை விலை (ரூபா/kwh)-(a) | 15.56 | 17.93 | 18.50 | 16.00 | 16.18 | 16.26 | 16.29 | 16.63 | 16.72 | 16.37 |
| விற்பனைப் புள்ளியில் சராசரிக் கிரயம் (ரூபா/kWh) - (a) | 23.66 | 16.94 | 20.00 | 15.07 | 18.08 | 20.34 | 19.12 | 24.12 | 21.67 | 18.63 |
| ஆண்டின்போது வீடுகளுக்கான மின்னூட்டம் (எ/கை) | 225,707 | 198,484 | 178,300 | 198,166 | 277,038 | 181,627 | 118,077 | 108,315 | 98,829 | 125,277 |

* - NCRE (சிறிய நீர்மின், காற்றாலை, சூரியஒளி, தாவர மூலம், உயிர்த்திணிவு மற்றும் மாநகரக் கழிவுகள்)

(a) - தற்காலிகமானது

# நிறுவன முகாமை

## சட்ட அமைப்பு

இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) ஆனது 1969 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) மின்சார சபைச் சட்டம் ஆகியவற்றால் திருத்தம் செய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டாண்மை நிறுவனமாகும்.

## சபை அங்கத்தவர்கள்

**தலைவர்**

பொறியியலாளர் எச்.எம். விஜித ஹேரத் 19.07.2021 வரை
திரு. எம்.எம்.சீ. பெர்டினான்டோ 20.07.2021 இலிருந்து

**துணைத் தலைவர்**

திரு. என்.எஸ். இலங்கக்கோன்
அங்கத்தவர/தொழிற்படு பணிப்பாளர்

**பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்**

திரு. எஸ்.டி. யூட் நிலக்ஷன்

**அங்கத்தவர்கள்**

திரு. எம்.எம். நயீமுதீன்
திரு. பி.கே. ஜகத் பெரேரா 07.01.2021 வரை
திரு. பி. விஜயரத்ன 07.01.2021 இலிருந்து
திரு. எஸ்.ஜி. பிரேமசிறி 29.01.2021 வரை
திரு. வீ.பீ.கே. அனுஷ பல்பிட்டி 30.01.2021 இலிருந்து 07.07.2021 வரை
ஜெனரல் தயா ரத்நாயக்க (ஓய்வு) 08.07.2021 இலிருந்து 23.12.2021 வரை
திரு. ஜீ.பீ.என்.எம். அபேசேகர 24.12.2021 இலிருந்து
திரு. ஆர். விக்கிரமாராய்ச்சி

**சபைச் செயலாளர்**

திருமதி எச்.ஆர்.பி. பத்வேரிய (பதில்)

**பொது முகாமையாளர்**

பொறியியலாளர் (திருமதி) என்.டபிள்யு.கே. ஹேரத் 22.08.2021 வரை
பொறியியலாளர் எம்.ஆர். ரணதுங்க 23.08.2021 இலிருந்து

**நிறுவன முகாமை**

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)**

பொறியியலாளர் எச்.எம்.ஏ. ஹேரத் 25.04.2021 வரை
பொறியியலாளர் கே.டீ.ஏ. முனசிங்க 26.04.2021 இலிருந்து 08.05.2021 வரை
பொறியியலாளர் ஏ.ஆர். நவமன்னி 09.05.2021 இலிருந்து

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம்)**

பொறியியலாளர் எம்.எம்.எஸ்.எம்.கே. குணரத்ன 29.05.2021 வரை
பொறியியலாளர் ஜீ.ஜே. அழுத்கே 30.05.2021 இலிருந்து 30.11.2021 வரை
பொறியியலாளர் பீ.டபிள்யூ. ஹெந்தஹேவா 01.12.2021 இலிருந்து

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 01)**

பொறியியலாளர் ஜே. மீகொட

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 02)**

பொறியியலாளர் (திருமதி) ரி.ஏ.கே. ஜயசேகர

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 03)**

பொறியியலாளர் ஜே. நந்தகுமார் 28.10.2021 வரை
பொறியியலாளர் பீ.டபிள்யூ. ஹெந்தஹேவா 29.10.2021 இலிருந்து 30.11.2021 வரை
பொறியியலாளர் ஜீ.ஜே. அழுத்கே 01.12.2021 இலிருந்து

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 04)**

பொறியியலாளர் ஜி.ஏ.டி.ஆர்.பி. செனவிரத்ன

**மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை)**

பொறியியலாளர் கே.கே.எஸ். தசநாயக்க

**மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்)**

பொறியியலாளர் (கலாநிதி) டி.சி.ஆர். அபேசேகர

**மேலதிகப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)**

பொறியியலாளர் எம்.ஆர். ரணதுங்க 22.08.2021 வரை
பொறியியலாளர் எச்.எஸ். சோமதிலக 23.08.2021 இலிருந்து

**நிதி முகாமையாளர்**

திரு. ரி.கே. லியனகே

# இலங்கை மின்சார சபை ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - 2021



பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழினுட்பம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (நிறுவன வளத் திட்டமிடல்)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்திக் கொள்வனவு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம் மற்றும் மின் பிறப்பாக்கல் திட்டமிடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - தெற்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம் மற்றும் நிலைமைக் கண்காணிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (முறைமைக் கட்டுப்பாடு)
பிரதிப் பொது முகாமையாளர் (தொடர்பாடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி சந்தைப்படுத்தல்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின்பரிமாற்றக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (தனியார் மின்வலு அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியும் செயலாற்றுகை கண்காணிப்பும்)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பரிமாற்றம்)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் II)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு I)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் II)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விதுலக்பய)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 4)

பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற வடிவமைப்பும் சுற்றுச்சூழலும்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் ஆலோசனைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் செயற்றிட்டங்களின் ஒருங்கிணைப்பு)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மேல் கொத்மலை நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் கட்டம் II TL & SS)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பாரிய கொழும்பு மின் பரிமாற்ற மற்றும் மின் விநியோக இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (தேசிய மின் பரிமாற்றம் மற்றும் DND & EI செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பசுமைச் சக்தி அபிவிருத்தி மற்றும் EEII செயற்றிட்டம் - கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (LNG)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)

மேலதிக நிதி முகாமையாளர் (தலைமையகம்)
மேலதிக நிதி முகாமையாளர் (நிறுவனம்)
மேலதிக நிதி முகாமையாளர் (திறைசேரி முகாமை)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி விற்பனை)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (அனல் தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ அனல் மின்)
பிரதிப் பொது முகாமையாளர் (மகாவலி தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ நீர் மின்)
பிரதிப் பொது முகாமையாளர் (லக்'பான தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ அனல் எந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ நீர் எந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கல் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (சமனல தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கப் பாதுகாப்பு)
மின்வலு ஆலை முகாமையாளர் (லக்விஜய மின்வலு ஆலை)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (கொழும்பு நகர்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மேல் மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மேல் மாகாணம் II)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மத்திய மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் விநியோக ஒருங்கிணைப்பு)
செயற்றிட்டப் பணிப்பாளர் (கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்சார வழங்கலின் நம்பகத்தன்மையை மேம்படுத்த உதவியளிக்கும் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 1)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு II)
பிரதிப் பொது முகாமையாளர் (சப்ரகமுவ மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (ஊவா மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 3)

பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (பயிற்சி)
பிரதிப் பொது முகாமையாளர் (குடியியல் வேலைகள் மற்றும் கட்டடம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வேலைப் பட்டறை மற்றும் துணைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்)
மேலதிக நிதி முகாமையாளர் (சொத்து முகாமை)

பிரதிப் பொது முகாமையாளர் (ஒருங்கிணைப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் கணக்காய்வு)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி)
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

பிரதம சட்ட அதிகாரி

புலனாய்வு முகாமையாளர்

சபைச் செயலாளர்

# துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச. இன் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - 2021






லக்விஜய மின்வலு ஆலை



# தலைவரின் மீளாய்வு

"அதற்கிணங்க, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆலைகளில் (பெரியளவு நீர் மின்வலு ஆலைகள் தவிர்ந்த) நிறுவப்பட்டுள்ள கொள்ளளவை 14% இனால் அதிகரிப்பதற்கு இ.மி.ச. இனால் முடிந்தது. இந்த ஆலைகளால் பங்களிப்புச் செய்யப்பட்ட மொத்த மின் பிறப்பாக்கம் 2921.2 GWh (அதாவது மொத்தப் பிறப்பாக்கத்தில் 17.5%) ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மன்னார் தீவின் தெற்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள முழுமையாக இயக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இ.மி.ச. இற்குச் சொந்தமான முதலாவது பெரிய அளவிலான காற்றுமின்வலு ஆலையான "තම්බපවනී" இன் பங்களிப்பையும் உள்ளடக்குகிறது.

2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை நினைவுகூர்ந்து மீளாய்வு செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது பல சவால்கள் கொண்ட வருடமாகும். இது மேலும் மீள்புதுப்பிக்கத்தக்கவைகளை நோக்கி மின்சாரத் துறையின் நகர்வை யதார்த்தமாக்கிய ஒரு வருடமாகும். கௌரவ மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் வழிகாட்டுதலுடன் "සෞභාග්‍යයේ දැක්ම" செழிப்பானதும் ஒளிமயமானதுமான எதிர்காலம்" என்ற எண்ணக்கருவில் பட்டியலிடப்பட்ட கொள்கை வேலைச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதில் பங்களிப்பு நல்கிய ஒரு ஆண்டாக இது இருக்கிறது.

அதற்கிணங்க, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆலைகளில் (பெரியளவு நீர் மின்வலு ஆலைகள் தவிர்ந்த) நிறுவப்பட்டுள்ள கொள்ளளவை 14% இனால் அதிகரிப்பதற்கு இ.மி.ச. இனால் முடிந்தது. இந்த ஆலைகளால் பங்களிப்புச் செய்யப்பட்ட மொத்த மின் பிறப்பாக்கம் 2921.2 GWh (அதாவது மொத்தப் பிறப்பாக்கத்தில் 17.5%) ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மன்னார் தீவின் தெற்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள முழுமையாக இயக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இ.மி.ச. இற்குச் சொந்தமான முதலாவது பெரிய அளவிலான காற்றுமின்வலு ஆலையான "තම්බපවනී" இன் பங்களிப்பையும் உள்ளடக்குகிறது.

அத்துடன், இ.மி.ச. "සූර්ය බල සංග්‍රාමය" (சூரிய மின்சக்திக்கான போர்) என்ற மின்வலுப் பிறப்பாக்கச் செயற்றிட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டது. மேற்கூரை சூரிய PV பலகங்கள் ஊடாக மின் நுகர்வோரின் வீடுகள்/வளாகங்களில் உற்பத்தி செய்யப்படும் சூரிய மின்சக்தியை தேசிய மின்தொகுப்பிற்கு ஒருங்கிணைக்க மின்வலு அமைச்சினால் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி செயற்றிட்டத்தின் கீழ் 6,727 புதிய மேற்கூரை சூரிய மின்சக்தி இணைப்புகள் அங்கீகிக்கப்பட்டதுடன் அவற்றில் நிறுவப்பட்டுள்ள மொத்தக் கொள்ளளவு 415 MW ஆகும்.

இ.மி.ச. 2021 ஆம் ஆண்டில் "அனைவருக்கும் மின்சாரம்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்த அதே வேளை ஆண்டின் இறுதியில் 33,302 வீடுகளுக்கு இலவச மின்சார இணைப்புகளும் வழங்கப்பட்டன.

மேலுள்ளவற்றுக்குப் புறம்பாக, மிகவும் அழிவுகரமான நோய்த்தொற்றிலிருந்து மீள்வதற்கு நாடு போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில், வாழ்வையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டிய அவசரத் தேவை இருந்தது. இத்தகைய வழமைக்கு மாறான மற்றும் கடினமான காலப்பகுதியில், மிக உயர்ந்த மட்ட செயற்பாட்டு வினைத்திறனில் எங்களது ஊழியர்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிசெய்த அதே வேளை இ.மி.ச. அதன் நுகர்வோருக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான மின்சாரத்தை வழக்கியிருந்தது. இது இ.மி.ச. இன் சகல ஊழியர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சி காரணமாக சாத்தியமாகியிருந்தது.

தொடர்ச்சியான சவாலான சூழலிலும், இ.மி.ச. 2021 ஆம் ஆண்டில் ரூபா 249 பில்லியன் வருமான மொன்றைப் பதிவு செய்திருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்டிருந்த 4% வளர்ச்சியானது நோய்த்தொற்று காரணமாக ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் ஸ்திரமற்ற தன்மைகளைக் கடந்து செல்வதற்கு எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்களவு முயற்சிகளைப் பிரதிபலிக்கிறது. 2020 ஆம் ஆண்டில் நோய்த்தொற்று காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த தொகையளவு வழங்கல் விதிப்பனவு வகைகளில் காணப்பட்ட கேள்வி அதிகரிப்பு, வீட்டு மின்நுகர்வில் காணப்பட்ட அதிகரிப்பு உள்ளிட்ட வருமானத்திற்கான பிரதான பங்களிப்பாளர்கள், நாட்டினுடைய மொத்த மின்சாரத் தேவையில் ஒட்டுமொத்தமாக 6% அதிகரிப்பொன்றை பிரதிபலிக்கின்றனர்.

இ.மி.ச. இன் காசு முகாமைத்துவம் கடினமானதாக இருந்தது. நாட்டின் புதிய இயல்புநிலை மற்றும் முடக்கநிலைத் தளர்வுடன் வழக்கமான மின்சாரத் தேவை முறை தாபிக்கப்பட்டது. குறைந்த மின் நுகர்வு காரணமாக ஏற்பட்ட சேமிப்பு கரைந்து போனது. கிரயத்தைப் பிரதிபலிக்காத உலக நிலக்கரி விலைகள் உயர்ந்ததால் நிலைமை மோசமடைந்தது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரலில் ரூபா 20 பில்லியன் பெறுமதியான பெரியளவு பட்டியலிடப்பட்ட தனிச்சங்களின் விநியோகத்தைப் பூர்த்தி செய்ததன் மூலம் சவாலானது வெற்றிகரமாக சமாளிக்கப்பட்டது. இதனால் பட்டியலிடப்பட்ட கடன் பிணையங்களை விநியோகிக்கத் தொடங்கிய அரசாங்கத்திற்குச் சொந்தமான முதலாவது சட்டநியதி

சபையாக இ.மி.ச. மாறியது. இதற்கிடையில், அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமொன்றினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து விதிப்பனவுக் கட்டமைப்பு தொடர்ந்தும் மாறாது காணப்பட்ட அதே வேளை மின்வலுப் பிறப்பாக்கத்துடன் தொடர்புடைய சகல கிரயக் காரணிகளும் விரைந்து அதிகரித்திருந்தன.

குறிப்பாக நீர் மின்வலுப் பிறப்பாக்கத்தால் ஆதரிக்கப்படுகின்ற சாதகமான பிறப்பாக்கல் கலவையின் விளைவாக, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகர நட்டம் 68% இனால் குறைவடைந்திருந்தது. இது ரூபா 21.95 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. சாதகமான பிறப்பாக்கல் நிலை, விதிப்பனவு இருந்த போதிலும் உள்ளீட்டு விலைகளில் குறிப்பிடத்தக்களவு ஏற்ற இறக்கங்களைத் தாங்குவதற்கு இ.மி.ச. இற்கு இது உதவியது. ஆண்டின் இறுதியில், நீர்மின் பிறப்பாக்கம் (சிறிய நீர்மின் உள்ளிட்ட) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45% அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது.

மேலும், இ.மி.ச. ஆனது அதிநவீன தொழில்நுட்பத்துடன் செயற்பாட்டுச் சிறப்பினை அடைவதற்காக தனது முயற்சிகளைத் தொடர்ந்திருந்ததுடன் மின் குறுக்கீட்டுக் கோரிக்கைகள், மின்தடை திட்டமிடல், மின்தடை அட்டவணைப்படுத்தல் மற்றும் புதிய மின்தடைத் திட்டமிடல் தொகுதியுடன் வேலையைச் செயன்முறைப்படுத்துவதற்கான அனுமதி ஆகியவற்றை டிஜிடல்மயப்படுத்தி தானியங்கப்படுத்துவதன் மூலம் விருது வென்ற IT தீர்வான - "CEB Assist" இனை மேலும் விருத்தி செய்யக்கூடியதாக இருந்தது.

நிறுவனத்தின் பிரதான வியாபாரத்திற்குப் புறம்பாக, இ.மி.ச. பயன்படுத்தப்படாத வளங்களில் இருந்து வருமானத்தை ஈட்டுகின்ற முறைகளை ஆராய்ந்தது. மிதவை விமானங்களை இயக்குதல் மற்றும் படகுச் சேவைகளை இயக்குதல் போன்ற சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக நீர்மின் நீர்த்தேக்கங்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

முடிவாக, பொது முகாமையாளர் தலைமையிலான இ.மி.ச. இன் உறுப்பினர் சபை மற்றும் சகல ஊழியர்களினதும் அர்ப்பணிப்பான சேவைகளால் இந்தச் சாதனைகள் அனைத்தும் சாத்தியமானது என்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.எம்.சி. பெர்டினாண்டோ**
தலைவர்
இலங்கை மின்சார சபை





# பொது முகாமையாளரின் மீளாய்வு

“2021 ஆம் ஆண்டிற்கான பிறப்பாக்கல் கலவையை பகுப்பாய்வு செய்யும்போது, மொத்த மின் பிறப்பாக்கத்தில் நிலக்கரி மூலமான பிறப்பாக்கம் 33% ஆகவும் சிறியளவு நீர்மின் பங்களிப்புடனான நீர்மின் இன் பங்களிப்பு 43% ஆகவும் இருந்தது. அதற்கிணங்க, அனல் எண்ணெய் மூலமான மின் பிறப்பாக்கம் 16% ஆகக் குறைக்கப்பட்டதால் இ.மி.ச. இன் நிதி இழப்புகளில் கணிசமானளவு குறைவை பதிவு செய்ய முடிந்தது. மீதி 8% உம் காற்று மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்களால் பங்களிப்புச் செய்யப்பட்டன. இது 2030 ஆம் ஆண்டிற்காகத் தாபிக்கப்பட்ட அரசாங்கத்தின் மீள்புதுப்பிக்கத்தக்க இலக்குகளை நோக்கிய திடமான நகர்வைக் காட்டுகிறது.

இலங்கை மின்சார சபையின் (இ.மி.ச.) பொது முகாமையாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2021 ஆம் ஆண்டு இ.மி.ச. இற்கு சவாலான மற்றும் திருப்திகரமான ஆண்டாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கான நிகர நட்டம் குறிப்பிடத்தக்களவு குறைவினைப் பதிவு செய்துள்ளது. இது நிதிசார் செயலாற்றுகைகளின் கணிசமானளவு முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 261.91 பில்லியனாக இருந்ததுடன் மொத்தச் செலவினம் ரூபா 283.36 பில்லியனாகக் காணப்பட்டது. இதன் விளைவாக ஆண்டிற்கான மொத்த நட்டம் ரூபா 21.95 பில்லியனாக இருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 68% குறைவு ஆகும்.

முறையான மின்வலுப் பிறப்பாக்கக் கலவை என்பது இ.மி.ச. இன் இலாபத்தன்மை மற்றும் நிதி நம்பகத்தன்மையின் முக்கிய காரணியாகும். இத்தனை ஆண்டுகளில், இ.மி.ச. இன் நேரடிப் பிறப்பாக்கல் கிரயம் நீர் மற்றும் நிலக்கரி மின் பிறப்பாக்கத்தில் அதிகம் சார்ந்திருந்தது. அதனைத் தொடர்ந்து, நீர் மின்வலு நிலைமைகள் பலவீனமடையும்போது அனல் எண்ணெய் மின்வலு மூலங்கள் பிறப்பாக்கல் கலவையில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தை ஆற்றியிருந்தன. இதனால் எரிபொருள் கிரயத்தினால் சுமையாக இருந்த நேரடி உற்பத்திக் கிரயங்கள் அதிகரிக்கின்றன. இலங்கையின் மிகப்பெரிய காற்றாலை மின்வலு ஆலையான “தம்பபவனி” வருடாந்த நிகரப் பிறப்பாக்கத்தில் 2% பங்களிப்பை வழங்கியது. இது சந்தேகத்திற்கு இடமின்றி சரியான பிறப்பாக்கல் கலவைக்கான முன்னோக்கிய வழியொன்றை உருவாக்கியது.

2021 ஆம் ஆண்டிற்கான பிறப்பாக்கல் கலவையை பகுப்பாய்வு செய்யும்போது, மொத்த மின் பிறப்பாக்கத்தில் நிலக்கரி மூலமான பிறப்பாக்கம் 33% ஆகவும் சிறியளவு நீர்மின் பங்களிப்புடனான நீர்மின் இன் பங்களிப்பு 43% ஆகவும் இருந்தது. அதற்கிணங்க, அனல் எண்ணெய் மூலமான மின் பிறப்பாக்கம் 16% ஆகக் குறைக்கப்பட்டதால் இ.மி.ச. இன் நிதி இழப்புகளில் கணிசமானளவு குறைவை பதிவு செய்ய முடிந்தது. மீதி 8% உம் காற்று மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்களால் பங்களிப்புச் செய்யப்பட்டன. இது 2030 ஆம் ஆண்டிற்காகத் தாபிக்கப்பட்ட அரசாங்கத்தின் மீள்புதுப்பிக்கத்தக்க இலக்குகளை நோக்கிய திடமான நகர்வைக் காட்டுகிறது.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த மின்வலுப் பிறப்பாக்கமாக 16,716 GWh (நிகர) பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.4% வளர்ச்சியைக் காட்டுகிறது. 2021 இல் பிறப்பாக்கம் செய்யப்பட்ட 16,716 GWh இல், 24% ஆனவை சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும். இது 2020 இல் 29% ஆகக் காணப்பட்டது. மின் பரிமாற்ற மற்றும் விநியோக இழப்பானது 2021 ஆம் ஆண்டில் 8.72% ஆகப் பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டில் 9.08% ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டில் சராசரிப் பிறப்பாக்கல் கிரயம் ரூபா 11.74 ஆக இருந்தது. இது பிறப்பாக்கல் அலகுகள் 6% இனால் அதிகரித்திருப்பினும்கூட 2020 ஆம் ஆண்டிற்கு மாறாக 16% இனால் குறைவடைந்திருக்கிறது. முக்கியமாக நீர் மின் பிறப்பாக்கத்தின் மூலம் பிறப்பாக்கல் கலவை ஆதரிக்கப்படுவதால் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. விற்பனைப் புள்ளியில் மின்சாரத்தினது ஒரு அலகின் மொத்தக் கிரயம் ரூபா 18.63 ஆகப் பதிவாகியிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் ரூபா 21.67 ஆகக் காணப்பட்டிருந்தது. இது ரூபா 3.04 இனால் குறைவையும் சதவீத ரீதியில் 14% குறைவையும் காட்டுகிறது.

மேலும், ஆண்டின் மொத்த மின்சார நுகர்வு 15,214 GWh ஆக இருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.5% வளர்ச்சியைக் காட்டுகிறது. சராசரி விற்பனை விலை ரூபா 16.37 ஆகப் பதிவாகியிருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.1% இனால் குறைவடைந்திருப்பதை இது காட்டுகிறது. 2021 ஆம் ஆண்டில் வருமானமாக ரூபா 249 பில்லியனை இ.மி.ச. பதிவு செய்திருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4% வளர்ச்சியை இது காட்டுவதுடன் நோய்த்தொற்று காரணமாக இடம்பெற்ற நிச்சயமற்றதன்மை மற்றும் உறுதியற்றதன்மையை சமாளிப்பதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது. நோய்த் தொற்று காலப்பகுதியில் 2020 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்திருந்த தொகையளவு வழங்கல் விதிப்பனவு வகைகளின் தேவை அதிகரிப்பு மற்றும் வீட்டு நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன வருமான வளர்ச்சிக்கு பங்களித்த பிரதான பங்காளிப்பாளர்களில் அடங்குகின்றனர் இது நாட்டினுடைய மொத்த மின்சாரத் தேவையில் 6% என்ற ஒட்டுமொத்த அதிகரிப்பைக் காட்டுகிறது.

அரசாங்கக் கொள்கைத் தீர்மானத்திற்கிணங்க, விதிப்பனவுக் கட்டமைப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் மாறாது காணப்படுகின்ற அதே வேளை மின்வலுப் பிறப்பாக்கத்துடன் தொடர்புடைய சகல கிரயக் காரணிகளும் விரைந்து

அதிகரித்துள்ளன. இலங்கை மின்சார சபை அதன் பிறப்பாக்கல் கிரயத்தையும் விடக் குறைந்த விலையில் தேசத்திற்கான மின்சாரத்தை வழங்குகிறது.

அனைவருக்கும் மின்சாரம் வழங்குதல் என்ற அரசாங்கத்தின் கொள்கையால் உந்தப்பட்டு, இ.மி.ச. அதன் அனைத்து வருங்கால வாடிக்கையாளர்களையும் சென்றடைவதற்கான அதன் முயற்சிகளை ஆண்டு முழுவதும் தீவிரமாகத் தொடர்ந்தது. ஆண்டின் காலப்பகுதியில், நுகர்வோர் எண்ணிக்கை 173,262 இனால் அதிகரித்து, ஆண்டின் இறுதியில் மொத்த நுகர்வோர் எண்ணிக்கையை 6,809,528 ஆக மாற்றியிருந்தது. இ.மி.ச. அதன் வாடிக்கையாளர்களுக்கு தவிர்க்க முடியாத குறுகிய கால மின்தடைகளைத் தவிர நாளின் 24 மணி நேரமும் மின்சாரத்தைக் கிடைக்கச் செய்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண்டு நெடுகிலும் எடுத்திருந்தது. எவ்வாறாயினும், துரதிஷ்டவசமாக 2021 டிசெம்பர் 3 ஆந் திகதி நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

நோய்த் தொற்றிலிருந்து மீண்டுவரும் அதே வேளை, இ.மி.ச. அதன் வாடிக்கையாளர்கள் அதே போன்று ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்கின்ற அதே நேரத்தில் தேசத்திற்குத் தரமான மற்றும் நம்பகமான மின்சார வழங்கலை வழங்குவதற்கு தனது முயற்சிகளை தொடர்ந்திருந்தது. இ.மி.ச. 2020 டிசெம்பர் 8 ஆந் திகதி மன்னார் தீவின் தெற்குக் கரையோரத்தை ஒட்டியவாறு அமைந்துள்ள முப்பத்து மூன்று (33) அதிநவீன காற்று விசையாழி மின்பிறப்பாக்கிகளுடன் மொத்தமாக 103.5 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்டுள்ளதும் “தம்பபவனி” எனப் பெயரிடப்பட்டுள்ளதுமான தனது முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்வலு ஆலையை முழுமையாக இயக்க அதிகாரமளித்துள்ளது. மேலும், உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம், விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம், மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுச் செயற்றிட்டம் போன்ற மின் பிறப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நாட்டின் மின்வலு வழங்கல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சீராகத் தொடரப்பட்டன. இதற்கு மேலதிகமாக, எட்டு மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடரப்பட்டன. சவாலான சூழல் இருந்த போதிலும் ஒட்டுமொத்தத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய முன்னேற்றத்தை அவர்கள் அறிக்கையிட்டிருந்தனர்.

மேற்படி அபிவிருத்திகளுக்கு மேலதிகமாக, களனிதிஸ்ஸ இணைந்த சுற்று மின்வலு ஆலையை மீள இயக்குதல், அலகு 2 சமனலவெவ நீர் மின்வலு நிலையத்தின் அவசரமான முழுமைத் திருத்தம் மற்றும் களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்திலுள்ள Frame V எரிவாயு விசையாழிகளைப் புதுப்பித்தல் போன்ற பிறப்பாக்கல் கொள்ளளவையும் ஆயுட்காலத்தையும் அதிகரிக்கும் செயற்பாடுகள் என்பன வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன. லக்விஜய மின்வலு ஆலையில் உள்ள நிலக்கரி முற்றத்தில் நிலக்கரியைக் கையாளும் கொள்ளளவை அதிகரிக்கும் செயற்பாடுகள் ஆண்டின் காலப்பகுதியில் தொடரப்பட்டன.

தொழினுட்ப அபிவிருத்திகளுக்குப் புறம்பாக, இ.மி.ச. முழுவதுமுள்ள அனைத்து வகைகளையும் சார்ந்த ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் மிகையினை இனங்காண்பதற்காக அனைத்து வகையான ஊழியர்களையும் உள்ளடக்கும் வகையில் இ.மி.ச. முழுவதும் மனித வளச் சோதனையொன்று நடத்தப்பட்டு, நிறுவன செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக அவர்கள் மீள்பரம்பல் செய்யயப்பட்டனர். இதற்கு மேலதிகமாக, சக்தி சேமிப்பு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திகள் மற்றும் இ.மி.ச. நிகழ்நிலை (ஒன்லைன்) வசதிகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக புதிய, குறைந்த கிரயத்தைக் கொண்ட விளம்பரப்படுத்தல் முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நிறுவனம் அதன் சொத்துத் தளத்தை 5% இனால், அதாவது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 48 பில்லியன் அதிகரித்ததுடன், மொத்தச் சொத்தின் பெறுமதி ஒரு ரில்லியன் ரூபாவை அடைந்திருப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்திருக்கிறது. ஆண்டின் காலப்பகுதியில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களின் வளர்ச்சி முறையே 4% இனாலும் 13% இனாலும் ஏற்பட்டிருந்தது. இதற்கான பிரதான பங்களிப்பாளர்களாக ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் தொக்குகளும் காணப்பட்டன. எவ்வாறாயினும், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தப் பொறுப்புக்கள் 7% இனால் அதிகரித்துள்ளன. மொத்த வட்டியைத்தாங்கும் கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள் என்பன உரிமையாண்மையைவிட கணிசமானளவு அதிகமாகவுள்ளன. இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இன் கடன் / உரிமையாண்மை விகிதத்தில் சரிவுக்கு வழிவகுத்தது.

இறுதியாக, அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமானத்தின்படி, இ.மி.ச. ஆனது குறைந்த நுகர்வு மட்டத்தைக் கொண்ட வீட்டு வகையினர் மற்றும் பொது நோக்க வகை தவிர்ந்த பெரும்பாலான ஏனைய வகையைச் சேர்ந்தோர் ஆகியோருக்கு விற்பனைப் புள்ளியிலுள்ள உண்மையான கிரயத்தைக் காட்டிலும் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குகிறது. எனவே, வீட்டு வகை மற்றும் பொது நோக்க வகையிலுள்ள உயர்ந்த அளவு மின்நுகர்வைக் கொண்ட இறுதி நுகர்வோர் இந்தக் கிரயத்தின் ஒரு பகுதியை மிகையாகத் தாங்க வேண்டியிருக்கிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், தற்போதுள்ள இந்த விதிப்பனவுத் திட்டம் காரணமாக மொத்த இழப்பாக ரூபா 59.7 பில்லியன் பதிவாகியிருந்த அதே வேளை உயர்ந்த அளவு மின்நுகர்வைக் கொண்ட இறுதி நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட மிகை ரூபா 25.4 பில்லியன் ஆகும். இதனால் ஏனைய வருமானங்கள் தவிர்ந்த இ.மி.ச. இற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 34.3 பில்லியனாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய வருமானங்களுடன் சேர்த்து நிகர நட்டமாக ரூபா 21.96 பில்லியன் கணக்கிடப்பட்டுள்ளது.

முடிவாக, நாட்டில் நிலவிய சவால்மிகுந்த சமூக - பொருளாதார நிலைமைகளின் மத்தியிலும், இ.மி.ச. அதன் நிகர இழப்பை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைப்பதற்கு முடிந்ததுடன் பிரதானமாக நேரடிப் பிறப்பாக்கல் கிரயம் மற்றும் சக்தித் தேவையிலிருந்து கிடைத்த அதிகரித்த பங்களிப்பு ஆகியவற்றால் இது எளிதாக்கப்பட்டிருந்தது. எனது முன்னோர்கள், மேலதிகப் பொது முகாமையாளர்கள், நிதி முகாமையாளர் மற்றும் இ.மி.ச. இன் ஏனைய அனைத்து ஊழியர்களும் அவர்களது தனிப்பட்ட திறன்களில் காட்டிய அர்ப்பணிப்பு மற்றும் ஊக்கம் இல்லாவிட்டால் இது சாத்தியமில்லை. அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய கௌரவ மின்சக்தி அமைச்சர், சூரிய மின்வலு, காற்றாலை மற்றும் நீர் மின்வலுப் பிறப்பாக்க செயற்றிட்டங்கள் அபிவிருத்தி அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர், மின்சக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சினது பணித்தொகுதியினர் மற்றும் இ.மி.ச. தலைவர், பணிப்பாளர்கள் சபை ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். ஒரே அலகாக வேலை செய்வதற்கு எனக்கு வழங்கப்பட்ட சிறந்த ஒத்துழைப்பானது 2021 ஆம் ஆண்டின் சாதனைகளுக்கு முக்கியமானதாக இருந்தது.



பொறியியலாளர் (திருமதி) என்.டபிள்யூ.கே. ஹேரத்
பொது முகாமையாளர்

# 2021 ஆம் ஆண்டில்
# இலங்கை மின்பரிமாற்ற முறைமையின் வரைபடம்

இலங்கை மின்சார சபை



மவுசாகலை நீர்த்தேக்கம்



# மின் பிறப்பாக்கப் பிரிவு

மின் பிறப்பாக்கல் பிரிவானது இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான சகல மின்வலு ஆலைகளையும் இயக்கிப் பராமரித்துப் புனரமைப்புச் செய்வதில் ஈடுபடுகிறது. மின் பிறப்பாக்கல் பிரிவானது 1,383 MW கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட பதினேழு நீர் மின்வலு நிலையங்களையும், 654 MW கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட ஏழு எண்ணெய் எரிப்பு அனல் மின்வலு நிலையங்களையும், 900 MW கொள்ளளவுடன் நிறுவப்பட்டுள்ள ஒரு நிலக்கரி எரிப்பு மின்வலு ஆலையையும் 103 MW கொள்ளளவுடன் நிறுவப்பட்டுள்ள ஒரு காற்றாலை மின்வலு நிலையத்தையும் கொண்டிருக்கிறது. இ.மி.ச. யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள தீவுகளில் ஒரு சில டீசல் ஆலைகளையும் இயக்குகிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்வலு ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள மொத்தக் கொள்ளளவு 3,040 MW ஆகும்.

### மின்வலு நிலையங்களின் செயலாற்றுகை

மின்சாரப் பிறப்பாக்கத்தைப் பொறுத்த வரையில் 2021 ஆம் ஆண்டு மகாவலித் தொகுதிக்கு திருப்திகரமானதொரு ஆண்டாக இருந்தது. மகாவலித் தொகுதியிலுள்ள மின்வலு நிலையங்கள் 2,985.85 GWh இனைப் பிறப்பாக்கம் செய்திருந்தன. இது இ.மி.ச. இன் மொத்த நீர்மின் பிறப்பாக்கத்தில் கிட்டத்தட்ட 53% ஆகும். இது 2021 ஆம் ஆண்டில் நாட்டில் பிறப்பாக்கம் செய்யப்பட்ட மொத்த மின்சாரத்தில் கிட்டத்தட்ட 18% ஆகும். விக்டோரியா, கொத்மலை, மேல் கொத்மலை, ரந்தெனிகல, உக்குவளை மற்றும் போவத்தென்ன மின்வலு நிலையங்கள் அவற்றின் வருடாந்த திட்டமிடப்பட்ட மின் பிறப்பாக்கல் இலக்குகளை விஞ்சிய அடைவைக் காட்டியிருந்ததுடன் ரன்தம்பே மற்றும் நில்லம்பே மின்வலு நிலையங்கள் அவற்றின் திட்டமிடப்பட்ட மின் பிறப்பாக்கல் இலக்குகளில் 87% இனையும் தாண்டிய மின் பிறப்பாக்க அடைவையும் காட்டியிருந்தன.

2021 ஆம் ஆண்டில் லக்ஷபான தொகுதியின் மொத்த வருடாந்தப் பிறப்பாக்கம் 1,813.12 GWh ஆனது அதன் வரலாற்றில் மிக உயர்ந்த பிறப்பாக்கமாக இருக்கிறது. 2021 ஆம் ஆண்டில் பழைய லக்ஷபான (351.9 GWh) மற்றும் சமனல (530.1 GWh) மின்வலு நிலையங்கள்கூட அவற்றின் உயர்ந்தபட்ச வருடாந்தப் பிறப்பாக்கத்தைப் பதிவு செய்தன.

சமனல தொகுதியின் சமனலவெவ, குக்குளே கங்கை மற்றும் உடவளவை மின்வலு நிலையங்கள் அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த சக்தியை விடவும் அதிகமான அளவு பிறப்பாக்கம் செய்திருந்த அதே வேளை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கோரிக்கைக்கிணங்க, நீர்ப்பாசனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஆண்டின் காலப்பகுதியில் அனல் (எண்ணெய்) மின்வலு நிலையங்கள் 1,234.04 GWh இனைப் பிறப்பாக்கம் செய்திருந்தன. 2021 ஆம் ஆண்டு சவால்மிக்க ஆண்டாக இருந்த போதிலும், தேசிய மின்தொகுப்பிற்கான லக்விஜய மின்வலு ஆலையின் பங்களிப்பானது இ.மி.ச. முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தினால் (உலர் நிலைமையில் எதிர்பார்க்கப்படும் சக்தி அனுப்பீடு - 2021 சனவரி) வழங்கப்பட்ட அதன் இலக்கையும் விட ஒரு சதவீதம் அதிகமாக இருந்தது. 2021 ஆம் ஆண்டில் லக்விஜய மின்வலு ஆலையினால் பிறப்பாக்கம் செய்யப்பட்ட நிகர சக்தியானது அதற்காக வழங்கப்பட்ட இலக்கான 5477.13 GWh இற்கு எதிராக 5,519.04 GWh ஆகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் லக்விஜய மின்வலு ஆலையிலிருந்து பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரம் தேசிய தேவையின் 33% ஆக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் மின்வலு ஆலைகளால் பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட காரணிகள் என்பன கீழே நிரற்படுத்தப்பட்டுள்ளன.

### நீர் மின்வலு நிலையங்களின் பங்களிப்பு

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | 2021 இல் பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|
| விக்டோரியா | 210 | 973.00 | 97.99 | 52.97 |
| கொத்மலை | 201 | 565.14 | 99.79 | 32.23 |
| மேல் கொத்மலை | 150 | 507.95 | 99.89 | 38.80 |
| ரந்தெனிகல | 122.6 | 424.58 | 99.87 | 39.88 |
| ரண்தம்பே | 50 | 193.81 | 99.68 | 45.61 |
| உக்குவளை | 40 | 212.60 | 99.38 | 60.78 |
| போவத்தென்ன | 40 | 94.13 | 99.73 | 26.97 |
| நில்லம்பே | 3.2 | 14.64 | 99.36 | 50.36 |
| **மகாவலித் தொகுதி மொத்தம்** | **816.8** | **2,985.85** | | |
| சமனலவெவ | 120 | 405.19 | 92.66 | 42.32 |
| குக்குளேகங்கை | 75 | 399.69 | 94.17 | 65.42 |
| உடவளவை | 6 | 13.67 | 92.93 | 47.05 |
| இங்கினியாகல | 11.25 | 22.46 | 98.22 | 22.95 |
| **சமனலவெவ தொகுதி மொத்தம்** | **212.25** | **841.01** | | |
| பழைய லக்ஷபான கட்டம் I | 28.8 | 351.92 | 99.8 | 74.5 |
| பழைய லக்ஷபான கட்டம் II | 25 | | | |
| புதிய லக்ஷபான | 100 | 610.19 | 99.7 | 60.6 |
| சமனல | 90 | 530.08 | 99.3 | 66.5 |
| விமலசுரேந்திர | 50 | 142.51 | 99.6 | 32.6 |
| கன்யோன் | 60 | 178.42 | 100 | 34.1 |
| லக்ஷபான தொகுதி மொத்தம் | 353.8 | 1,813.12 | | |
| நீர்மின் மொத்தம் | 1,382.85 | 5,639.98 | | |

## அனல் (எண்ணெய்) மின்வலு நிலையங்களின் பங்களிப்பு

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | அதிகபட்சம் கிடைக்கக்கூடிய மொத்தக் கொள்ளளவு (MW) | 2021 இல் பிறப்பாக்கம் செய்யப்பட்ட சக்தி (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக்காரணி (%) | தவறுக்காரணி (%) |
|---|---|---|---|---|---|---|
| சபுகஸ்கந்த - A | 80 | 70 | 238.86 | 93.9 | 40.3 | 0.09 |
| சபுகஸ்கந்த - B | 80 | 72 | 333.01 | 94.3 | 55.1 | 0.07 |
| களனிதிஸ்ஸ CCPP- GT | 110 | 110 | 133.25 | 53.74 | 37.71 | 33.11 |
| களனிதிஸ்ஸ CCPP - ST | 55 | 55 | | 46.61 | 32.07 | 32.99 |
| களனிதிஸ்ஸ GT - 07 | 115 | 115 | 78.75 | 86.26 | 10.19 | 6.95 |
| களனிதிஸ்ஸ Frame V GTT | 80 | 54 | 10.96 | 65.81 | 8.21 | 25.61 |
| களனிதிஸ்ஸ 50X1 MW DGs | 50 | 40 | 41.35 | 95.6 | 13 | 3.5 |
| உத்துறு ஜனனி | 24 | 24 | 88.59 | 87.93 | 49.35 | 5.85 |
| மிதக்கும் மின்வலு ஆலை | 60 | 62.4 | 306.57 | 96.13 | 58.37 | 3.76 |
| சிறிய தீவுகள் | | | 2.70 | | | |
| **அனல் (எண்ணெய்) மொத்தம** | **654** | **602.4** | **1,234.04** | | | |

## லக்விஜய மின்வலு ஆலையின் பங்களிப்பு

| | | அலகு 01 | அலகு 02 | அலகு 03 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிறுவப்பட்ட கொள்ளளவு | MW | 300 | 300 | 300 | 900 |
| மொத்தச் சக்தி | GWh | 2,103.03 | 2,082.59 | 1,925.31 | 6,110.93 |
| அனுப்பப்பட்ட நிகர சக்தி | GWh | 1,901.93 | 1,876.56 | 1,740.55 | 5,519.04 |
| துணை நுகர்வு | GWh | 201.10 | 206.03 | 184.76 | 591.88 |
| கிடைப்பனவுக் காரணி | % | 98.55 | 96.15 | 86.87 | 93.85 |
| கொள்ளளவுக் காரணி | % | 80.02 | 79.25 | 73.26 | 77.51 |

### முக்கிய நிகழ்வுகள்

மின் பிறப்பாக்கல் அலகுகள் மற்றும் மின்வலு ஆலைகளின் துணை முறைமைகள் ஆகியவற்றின் வழமையான பராமரிப்பு வேலைகளுக்கு மேலதிகமாக, மின்வலு ஆலைகள் மற்றும் அதனோடிணைந்த உபகரணங்களின் நம்பகத்தன்மை மற்றும் பிறப்பாக்கல் கொள்ளளவை அதிகரிப்பதற்காக கீழ்வரும் விசேட பராமரிப்பு நடவடிக்கைகளும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

### பொல்பிட்டிய மின்பிறப்பாக்கிகளின் செயலிழப்பிற்காக எடுக்கப்பட்ட எதிர் நடவடிக்கைகள்.



உரு G1: உள்ளெடுப்புத் திரை - பழுதுபார்ப்புக்கு முன்னரும் பின்னரும்

லக்ஷபான குளத்தில் பொல்பிட்டிய உள்ளெடுப்பு திரையில் ஏற்பட்ட கடுமையான சேதங்கள் காரணமாக பொல்பிட்டிய மின்பிறப்பாக்கிகளில் பல செயலிழப்புகள் ஏற்பட்டன. இந்தப் பிரச்சினையானது பழுதுபார்ப்புக் கிரயங்கள் மற்றும் பிறப்பாக்கல் இழப்புகள் ஆகிய இரண்டிலும் இ.மி.ச. இற்கு கணிசமான நட்டத்தை உருவாக்கின. இயந்திரங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக லக்ஷபான குளம் தூர்வாரப்பட்டதுடன் பொல்பிட்டிய உள்ளெடுப்புத் திரையின் பழுதுபார்ப்புக்காக 2021 செப்ரெம்பரில் மூன்று நாள் குளம் தூர்வாரப்பட்டது.

### லக்ஷபான அலகு 4 இல் மீள நிறுவப்பட்ட மின்பிறப்பாக்கி சுமையேற்றல் கொள்ளளவு

பழைய லக்ஷபான அலகு 4 மின்பிறப்பாக்கி சுமையேற்றல் கொள்ளளவானது அதன் காற்றோட்டப் பாதையில் தூசுகள் அடைத்திருந்ததன் காரணமாக 10.5 MW இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2021 யூலையில் இயந்திரத்தை முழுமையாக துப்புரவு செய்ததன் மூலம் மின்பிறப்பாக்கியின் சுமையேற்றும் கொள்ளளவு மீண்டும் 12.5 MW ஆக மேம்படுத்தப்பட்டது.



உரு G2: அலகு 4 மின்பிறப்பாக்கி – பழைய லக்ஷபான

**களனிதிஸ்ஸ இணைந்த சுற்று மின்வலு நிலையத்தில் (KCCPS) எரிவாயு விசையாழியின் சுழலி திருத்தப்பட்ட பின்னர் 165 MW வலையமைப்புக்கு மீள இணைக்கப்பட்டது.**



உரு G3: சுழலியை பழுதுபார்க்கும் பணிகள் நடைபெறுதல்

KCCP எரிவாயு விசையாழிச் சுழலி காப்பிசூழ் மின்வெளியீடு (Flashover) காரணமாக சேதமடைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து, 165 MW பிறப்பாக்கல் கொள்ளளவு தேசிய மின்தொகுப்பிலிருந்து இழக்கப்பட்டது. சேதமடைந்த சுழலி பழுதுபார்க்கப்பட்டு, 2021 ஏப்ரலில் வெற்றிகரமாக இயக்கப்பட்டதுடன் இழக்கப்பட்டிருந்த பிறப்பாக்கல் கொள்ளளவு மீள இணைக்கப்பட்டது.

**லக்விஜய மின்வலு ஆலையில் நிலக்கரி முற்ற கையாளும் கொள்ளளவை அதிகரித்தல்**



உரு G4: நிலக்கரி முற்ற விரிவாக்கல் பணிகள்

நடைபெறுதல் நிலக்கரி மின்வலு ஆலை ஒன்றை இயக்கியதன் மூலம் கடந்த சில ஆண்டுகளாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவத்துடன், நிலக்கரி இருப்பின் கிடைப்பனவுத் தன்மையை அதிகரிக்கக் கூடியதாக இருப்பின் ஆலையின் நம்பகத்தன்மையை மேம்படுத்தலாம் என்பது கண்டறியப்பட்டது. மோசமான காலநிலை, நிலக்கரியைப் பெறுவதில் ஏற்படும் தாமதம் மற்றும் நிலக்கரியைக் கையாளும் முறைமைகளில் உள்ள பிரச்சினைகள் என்பவற்றினால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டு, தற்போது இருக்கின்ற நிலக்கரி முற்றத்தை 1.21 MMT இற்கு உயர்த்துவதன் மூலம் நிலக்கரி களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளும் கொள்ளளவு ஆகியவற்றை உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

செயற்றிட்டத்தை 2023 பெப்ரவரிக்குள் நிறைவு செய்ய அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் பிரதான பகுதிகளின் பௌதிக ரீதியான முன்னேற்றம் அண்ணளவாக கீழ்வருமாறு :

| | |
|---|---|
| கனரக பராமரிப்புக் கட்டடம் – | 40% |
| வதிவிடக் கட்டடம் – | 60% |
| நிலக்கரி முற்ற விரிவாக்கம் – | 62% |

**களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்திலுள்ள Frame V எரிவாயு விசையாழியின் ஓய்வுறுத்தும் காலத்தை நீட்டித்தல்**



உரு G5: புனரமைக்கப்பட்ட Frame V எரிவாயு விசையாழிகள்

கொழும்பு நகர பிராந்தியத்தில் மின் பிறப்பாக்கப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காகவும் மின்னழுத்த ஒழுங்குபடுத்தலுக்காகவும் ஆகக் குறைந்தது ஆறு (06) வருடங்களால் Frame V எரிவாயு விசையாழிகளின் ஓய்வுறுத்தும் காலத்தை நீட்டிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தேவையான உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், Frame – V GTs இன் நான்கு அலகுகளான GT-01, GT-02, GT-04, GT-05 ஆகியவற்றின் பிரதான பராமரிப்பு/புனரமைப்புகளை முன்னெடுப்பதற்கான தேவை எழுந்துள்ளது. இவற்றைப் பூர்த்தி செய்வதற்கான செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டின் இறுதியில் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் 95% ஆகும். இதனை 2022 மார்ச் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

**களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தின் கொள்ளளவை அதிகரித்தல்**

களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தில் 3x35 MW எரிவாயு விசையாழிகளை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான தேவை, அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால மின் பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தில் (LTGEP) 2015-2034 இனங்காணப்பட்டது. இந்த ஆலையை டீசல் எரிபொருளில் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் பின்னர் களனிதிஸ்ஸவில் LNG கிடைக்கப்பெறும்போது LNG இல் இயக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்றிட்டப் பெறுகையின் தற்போதைய முன்னேற்றத்துடன் ஒப்பந்தத்தை 2022 ஏப்ரலில் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

## பிறப்பாக்கல் கிரயம்

| தொகுதி | ஆலை | திரண்ட உண்மையான நிகரப் பிறப்பாக்கம் (GWh) | திரண்ட உண்மையான செலவினம் (ரூபா மில்லியன்) | சராசரி அலகுக் கிரயம் (ரூபா/ kWh) |
|---|---|---|---|---|
| அனல் | KPS - வாயு விசையாழிகள் | 89.71 | 4,648.12 | 51.81 |
| | KPS - இணைந்த சுற்று | 133.25 | 4,307.98 | 32.33 |
| | சபுகஸ்கந்த | 571.87 | 11,962.39 | 20.92 |
| | தீவு - சிறிய மின்பிறப்பாக்கிகள் | 2.7 | 186.12 | 68.93 |
| | உத்துறு ஜனனி | 88.59 | 2,472.67 | 27.91 |
| | மிதக்கும் மின்வலு நிலையம் | 306.57 | 5,361.66 | 17.49 |
| | அவசரகால மின்வலு - 1MW x 50 | 41.35 | 1,659.24 | 40.13 |
| | **ஒட்டுமொத்த அனல் - எரிபொருள்** | **1234.04** | **30,598.19** | **24.80** |
| **நிலக்கரி** | **நிலக்கரி** | **5519.05** | **68,752.08** | **12.46** |
| **மொத்த அனல்** | **ஒட்டுமொத்த அனல்** | **6753.09** | **99,350.26** | **14.71** |
| மகாவலி | விக்டோரியா | 973 | 671.21 | 0.69 |
| | கொத்மலை | 565.14 | 1,102.69 | 1.95 |
| | உக்குவளை | 212.6 | 300.96 | 1.42 |
| | போவத்தென்ன | 94.13 | 503.23 | 5.35 |
| | ரந்தெனிகல/ரண்தம்பே | 618.39 | 1,288.22 | 2.08 |
| | நில்லம்பே | 14.64 | 110.42 | 7.54 |
| | மேல் கொத்மலை | 507.95 | 1,529.46 | 3.01 |
| | தம்பபவனி காற்றாலை | 318.21 | 919.01 | 2.89 |
| | **ஒட்டுமொத்த மகாவலி** | **3304.06** | **6,425.21** | **1.94** |
| லக்'பான | பழைய மற்றும் புதிய லக்ஷபான | 962.12 | 1,015.25 | 1.06 |
| | சமனல | 530.08 | 494.44 | 0.93 |
| | விமலசுரேந்திர | 142.51 | 468.48 | 3.29 |
| | கன்யோன் | 178.41 | 408.05 | 2.29 |
| | **ஒட்டுமொத்த லக்ஷபான** | **1813.12** | **2,386.23** | **1.32** |
| சமனல | சமனலவெவ | 405.19 | 1,434.79 | 3.54 |
| | குக்குளே | 399.69 | 567.00 | 1.42 |
| | இங்கினியாகல | 22.46 | 142.31 | 6.34 |
| | உடவளவை | 13.67 | 170.74 | 12.49 |
| | **ஒட்டுமொத்த சமனல** | **841.01** | **2,314.84** | **2.75** |
| **மொத்த நீர்மின்** | **ஒட்டுமொத்த நீர்மின்/காற்றாலை** | **5958.19** | **11,126.27** | **1.87** |
| **மொத்த CEB** | **ஒட்டுமொத்த இ.மி.ச. (பிறப்பாக்கல் புள்ளியில்)** | **12711.28** | **110,476.53** | **8.69** |

மூலம்: சக்தி விற்பனைக் கிளை


வவுனியா மின்தொகுப்பு உபமின் நிலையம்

# மின் பரிமாற்றப் பிரிவு

இ.மி.ச. ஆனது முழு நாட்டிற்கும் சிக்கனமான மின்பரிமாற்ற முறைமை ஒன்றை விருத்தி செய்து, செயற்படுத்தி, பேணுவதற்கான சட்டநியதி பொறுப்பினைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, நாட்டிற்கென எதிர்வுகூறப்படும் மின்சாரத்திற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு மின் பிறப்பாக்கத்தைக் கொண்டிருப்பது இ.மி.ச. இன் சட்டநியதியான கடமை ஆகும். இத்தகைய சட்டநியதிக் கடமைகள் அதேபோன்று ஏனைய பொறுப்புக்களைக் கூட்டிணைத்து, இலங்கை மின்சாரச் சட்டத்திற்கு இணங்கியவாறு இ.மி.ச. இற்கான மின் பரிமாற்ற உரிமமொன்றை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) வினியோகித்துள்ளது.

**இப்பிரிவின் செயற்பாட்டு நோக்கங்கள் கீழ்வருமாறு:**

- வினைத்திறனான, ஒருங்கிணைக்கப்பட்ட, நம்பகமான மற்றும் சிக்கனமான மின் பரிமாற்ற முறைமையொன்றை விருத்தி செய்வதும் பேணுவதும்.
- நுகர்வோருக்கு பாதுகாப்பான, நம்பகத்தன்மை வாய்ந்த மற்றும் சிக்கனமான மின்சார வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக விநியோக உரிமதாரர்களுக்கு தொகையளவில் மின்சாரத்தைப் விற்பனை செய்வதும் பெறுவதும்.
- மின்சாரத்திற்கான நியாயமானளவு எதிர்வுகூறல் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு மின்பிறப்பாக்கல் ஆலைகளிலிருந்து போதுமானளவு கொள்ளளவு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவது.
- 132 kV மற்றும் 220 kV இற்கான முறைமை மின்பரிமாற்ற மின்னழுத்து மாறுபாடுகளை ±10 % இனுள்ளும் 50 Hz மீடிறனை ±1 % இனுள்ளும் பேணுவது.

மின் பரிமாற்றப் பிரிவானது இ.மி.ச. இன் ஏனைய பிரிவுகளுக்கான சேவைகளை வழங்குகின்ற அதே வேளை பதின்மூன்று கிளைகள் ஊடாக இ.மி.ச. சார்பாக இந்த நோக்கங்களுடன்கூடிய மேற்படி கடமைகளை ஆற்றுவதற்கு பொறுப்புடையதாக இருக்கிறது.

விபரமான ஆய்வுகளை முன்னெடுத்ததன் பின்னர், மின் பரிமாற்றப் பிரிவானது குறைந்த கிரய நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டத்தினை (LCLTGEP) வெளியிட்டது. LCLTGEP ஆனது 20 ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றிற்கு நாட்டின் மின்வலு முறைமைக்கு தேவையான எதிர்கால மின் பிறப்பாக்கல் சேர்ப்பனவுகள் பற்றி விபரிக்கிறது. மேலும், LCLTGEP இன் அடிப்படையிலான நீண்ட கால மின் பிறப்பாக்கல் அபிவிருத்தித் திட்டமானது (LTTDP) அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேவையான மின் பரிமாற்ற மார்க்கங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புச் சேர்ப்பனவுகள் பற்றிக் குறித்துரைக்கின்றது. இந்தத் திட்டங்கள் சுழற்சித் திட்டம் ஒன்றாக வெளியிடப்பட்டுள்ளது.

மின் பரிமாற்றப் பிரிவானது அதன் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் ஊடாக 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற வலையமைப்பைப் பயன்படுத்தி சகல மின் பிறப்பாக்கல் நிலையங்களாலும் தேசிய மின்தொகுப்பிறகு வழங்கப்பட்ட மின்சாரத்தை அனுப்புகிறது. இப்பிரிவு மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் (PPA) தொடர்பான ஒப்பந்தங்களில் ஈடுபடுவதன் மூலம் தனியார் துறையுடன் சேர்ந்து IPP மின்வலு ஆலைகளைச் செயற்படுத்துதல், அபிவிருத்தி மற்றும் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) அல்லது ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (ORE) ஆலைகளைச் செயற்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாக உள்ளது. இதற்கு மேலதிகமாக, பிரிவானது மின் பிறப்பாக்கல் உரிமதாரர்களிடமிருந்து (GLs) மின்சாரத்தைக் "கொள்வனவு" செய்வதிலும் LECO உள்ளிட்ட ஐந்து விநியோக உரிமதாரர்களுக்கு (DLs) விற்பனை செய்வதிலும் ஈடுபடுகிறது. அத்துடன் இது அங்கீகரிக்கப்பட்ட விதிப்பனவு முறையியல் 2015 இற்கிணங்க ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு முறை PUCSL இற்கு தொகையளவு வழங்கல் விதிப்பனவினை (BST) சமர்ப்பிக்கின்றது.

மின் பரிமாற்ற வலையமைப்பின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு என்பன இந்தப் பிரிவின் முதன்மையான பொறுப்பாகும். சொத்து முகாமையும் பராமரிப்பு முகாமையும் கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமை முறைமையின் (CMMS) அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது. செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன.

மேலும், தேவையான பாதுகாப்புத் தத்துவங்களை அடையாளம் காண்பது மற்றும் தற்போதுள்ள மின்வலு வலையமைப்பின் பாதுகாப்பிற்காகவும் மின்வலு வலையமைப்பின் எதிர்கால அபிவிருத்தி அல்லது புனரமைப்பிற்காக அவற்றைப் பயன்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகிறது. மின் பரிமாற்றப் பிரிவானது இ.மி.ச. இனுள் தேவைப்படும் குரல் மற்றும் தரவுத் தொடர்பாடலையும் வழங்குகிறது. இது குரல் மற்றும் தரவுப் பராமரிப்பு மற்றும் செயற்பாடு, குரல் மற்றும் தரவுச் சமிக்ஞைகள் மற்றும் நிருவாகத்தின் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

இதற்கு மேலதிகமாக, கையளிப்புச் செய்யப்பட்ட HR மற்றும் நிதித் தொழிற்பாடுகளும்கூட இப்பிரிவினால் கையாளப்படுகிறது.

**மின் பரிமாற்றப் பிரிவின் செயலாற்றுகை**

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மின் பரிமாற்ற முறைமையின் விபரங்கள் கீழ்வருமாறு :

| உருப்படி | அலகு | கணியம் |
|---|---|---|
| 220kV மேந்தலை மின்பரிமாற்ற மார்க்கங்கள் | கி.மீ. | 807 |
| 220kV நிலத்தடி கம்பிவடங்கள் | கி.மீ. | 22 |
| 132kV மேந்தலை மார்க்கங்கள் | கி.மீ. | 2335 |
| 132kV நிலத்தடி கம்பிவடங்கள் | கி.மீ. | 55 |
| 220/132/33kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 4 |
| 220/132/33kV மின்மாற்றிகள் | எ/கை | 8 |
| | MVA | 1600/380 |
| 220/132kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 7 |
| 220/132kV மின்மாற்றிகள் | எ/கை | 12 |
| | MVA | 3010 |
| 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 60 |
| 132/33kV மின்மாற்றிகள் | எ/கை | 154 |
| | MVA | 4757.5 |
| 132/11 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 8 |
| 132/11kV மின்மாற்றிகள் | எ/கை | 22 |
| | MVA | 792 |
| 220/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 5 |
| 220/33kV மின்மாற்றிகள் | எ/கை | 8 |
| | MVA | 498 |

அட்டவணை T 1: 2021 டிசெம்பர் 31 இல் மின் பரிமாற்ற முறைமை

## மின்வலு முறைமையின் செயலாற்றுகை

2021 ஆம் ஆண்டிற்கான நிகர மின்சாரப் பிறப்பாக்கம் 16,715.6 GWh ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 6.4 % இனால் அதிகரித்துள்ளது.

2021 இல் இ.மி.ச. இற்குச் சொந்தமான நீர் மின்வலு ஆலைகளில் இருந்தான நிகர மின் பிறப்பாக்கம் 5,640 GWh ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44.2 % அதிகரிப்பாகப் பதிவாகியிருந்தது.

தம்பபவனி காற்று மின்வலு ஆலையை முழுமையாக இயக்குவதற்காக வழங்கப்பட்ட அதிகாரத்துடன் இ.மி.ச. இற்குச் சொந்தமான காற்றாலை மின்பிறப்பாக்கமானது 318.2 GWh ஆகப் பதிவாகியிருந்ததுடன் இது மொத்த மின் பிறப்பாக்கத்தில் 1.9 % பங்களிப்பாகக் காணப்பட்டது.

இலங்கையிலுள்ள ஒரேயொரு நிலக்கரி மின்வலு ஆலையான லக்விஜய மின்வலு நிலையத்தின் வருடாந்த மின் பிறப்பாக்கம் 5,519 GWh ஆக இருந்ததுடன் இது மொத்த மின் பிறப்பாக்கத்திற்கு வழங்கிய பங்களிப்பு 33% ஆகும்.

IPP அனல் (எண்ணெய்) மின்வலுப் பிறப்பாக்கத்தின் பங்களிப்பு 1,400.3 GWh ஆக இருந்ததுடன் இது மொத்த மின்வலுப் பிறப்பாக்கத்தில் 8.4% ஆகும். ACE மின்வலு (எம்பிலிப்பிட்டிய), ACE மின்வலு (மாத்தறை) மற்றும் ஆசிய மின்வலு ஆகிய பெயர்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட IPP ஆலைகளின் ஒப்பந்தக் காலம் முறையே 2021 ஏப்ரல் 06, ஏப்ரல் 08 மற்றும் ஏப்ரல் 11 ஆகிய திகதிகளில் காலாவதியாகும்போதே ஓய்வடைகின்றன. IPP ஆலை V பவர் (வாழைச்சேனை) 2021 ஏப்ரல் தொடக்கம் அக்டோபர் வரையிலான 6 மாத காலம் என்ற குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட்டதுடன் இது வருடாந்த நிகர மின் பிறப்பாக்கத்திற்கு 5.846 GWh இனைப் பங்களிப்புச் செய்திருந்தது.




உரு T1:2021 ஆம் ஆண்டின் நிகர சக்திப் பிறப்பாக்கக் கலவை

காற்றாலை, சிறிய நீர்மின், சூரியகலம், மாநகர திடக் கழிவு, தாவரமூலம் மற்றும் உயிர்த் திணிவு என்பன மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் தற்போதைய மின்வலுப் பிறப்பாக்க மூலங்களாகும். மேற்கூரை சூரிய மின்கல மின் பிறப்பாக்கம் உள்ளிட்ட மொத்த IPP NCRE மின் பிறப்பாக்கம் 2,604 GWh ஆகப் பதிவு செய்யப்பட்டது. இது மொத்த மின் பிறப்பாக்கத்திற்கான 15.6% பங்களிப்பாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 40.1% அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது.

மீளாய்வு ஆண்டின் கீழ் மொத்த மின் பிறப்பாக்கத்தில் மொத்த மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பு 51.2% ஆகப் பதிவாகியிருந்தது.




உரு T2: பல்வேறு மின்வலு மூலங்களினதும் பங்களிப்பினது ஒப்பீடு 2021/2020 (GWh இல்)




உரு T3: 2021 ஆம் ஆண்டில் மாதாந்த நிகர மின் பிறப்பாக்கம் (GWh இல்)

வருடம் ஈறாக மாதாந்த மின்வலுப் பிறப்பாக்கத்தின் வேறுபாடானது பிரதானமாக காலநிலை மாற்றங்கள் மற்றும் மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் சனவரி, பெப்ரவரி மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கான கேள்வியானது கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக நாட்டில் காணப்பட்ட பகுதி நிலை முடக்கத்துடன் தாக்கம் செலுத்தியுள்ளது. இதுகூட சராசரி நாளாந்த வடிவமைப்பில் அவதானிக்கப்பட்டுள்ளது.




உரு T4: 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாதாந்த சராசரி நாளாந்த மின் பிறப்பாக்கத்தின் மாறுபாடு (GWh இல்)

2021 ஆம் ஆண்டின் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சக் கேள்வி 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி 19:00 மணிக்குப் பதிவாகியிருந்ததுடன் மின்சாரத்திற்கான கேள்வி 2,801.6 MW இனை அடைந்திருந்தது அதே நாளின் பகல் நேர உச்சக் கேள்வி 2,407.7 MW ஆக 16:00 மணிக்குக் காணப்பட்டதுடன் இதுவே 2021 ஆம் ஆண்டிற்கான பகல் நேர உச்சமாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் மிகக்குறைந்ததாகப் பதிவு செய்யப்பட்ட முறைமைக் கேள்வி 2021 மே 27 ஆந் திகதி 03:00 மணிக்குப் பதிவாகியிருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட கேள்வியாக 964.2 MW காணப்பட்டது.




உரு T5: உயர்ந்தபட்ச இரவு நேர அதியுச்ச பாவனை நாளில் கால் மணித்தியால மின் பிறப்பாக்க விபரம் - 2021

ஆகக்கூடிய நாளாந்தப் பிறப்பாக்கமான 50.1 GWh ஆனது 2021 ஏப்ரல் 06 ஆம் திகதியும் ஆகக்குறைந்த நாளாந்தப் பிறப்பாக்கமான 28.3 GWh ஆனது 2021 ஏப்ரல் 14 ஆம் திகதியும் அதாவது சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்திலும் பதிவு செய்யப்பட்டிருந்தன. மேலே குறிப்பிடப்பட்ட உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச நாளாந்த மின் பிறப்பாக்கப் பெறுமானங்களில் NCRE இன் மின் பிறப்பாக்கம் சேர்க்கப்படவில்லை.




உரு T6: வருடாந்த உயர்ந்தபட்ச இரவு நேர உச்சப் பாவனை நாளின் சுமை வளையிகள் (2019 -2021)

### நாடளாவிய ரீதியான மின் விநியோகத் துண்டிப்பு

நாடளாவிய ரீதியான மின் விநியோகத் துண்டிப்பு 2021 டிசெம்பர் 03 ஆந் திகதி 11:27 மணிக்கு ஏற்பட்டது. கொத்மலை - பியகம cct 02 இன் இடறலுடன் முறைமைச் செயலிழப்பு ஆரம்பமாகியது. 34% மின் பிறப்பாக்க நிராகரிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்தான மின் பிறப்பாக்கிகளின் இடறல் ஆகியன காரணமாக தளர்வடைந்த ஏனைய பல சுற்றுக்களினதும் முறைமைகளினதும் இடறலினால் இது பின்தொடர்ந்தது. பேராற்றல் கொண்ட அணியினரின் 5 மணித்தியால முயற்சியின் பின்னர் முறைமையானது வெற்றிகரமாகச் செயல்பட வைக்கப்பட்டது. சகல மின்தொகுப்பு உபமின் நிலையங்களும் 16:47 மணிக்குள் சக்தியூட்டப்பட்டன. இந்தச் செயலிழப்பு காரணமாக மொத்த முறைமையின் பயன்படுத்தப்படாத சக்தி 10.4 GWh ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

### நீர்த்தேக்க செயலாற்றுகை

2021 ஆம் ஆண்டு 893.2 GWh என்ற மொத்த நீர்மின் சேமிப்புடன் ஆரம்பித்தது. இது முறைமையின் முழுமையான சேமிப்பான 1,207.3 GWh இன் 74 % ஆகும். இந்த ஆண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு பதிவாகியிருந்த உட்பாய்வு 5,647.2GWh நீர்ப் பிடிப்புப் பகுதிகளுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகக் குறைந்த சேமிப்பாக 2021 மே 02 இல் 743 GWh இல் பதிவாகியிருந்தது. ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சேமிப்பு 888.2 GWh ஆக இருந்தது. இது மொத்த முறைமைச் சேமிப்பில் 73.6% ஆகும்.

தென் - மேல் பருவநிலை மற்றும் இரண்டாவது இடைப் பருவநிலை (அக்டோபர் - நவெம்பர்) முழுவதும் கிடைக்கப்பெற்ற உயர்ந்தளவான உட்பாய்வுகளைத் தொடர்ந்து 2021 நவெம்பர் 16 இல் உயர்ந்தபட்ச சேமிப்பு 1154.07 GWh பதிவாகியிருந்தது. இது மொத்தச் சேமிப்பில் 95.6% ஆகும். 2021 இனை உயர்ந்த உட்பாய்வு கிடைத்த ஆண்டாகக் கருத முடியும்.

2021 ஆம் ஆண்டின் உயர்ந்தளவு உட்பாய்வாக உயர்ந்தபட்ச சராசரி நாளாந்த உட்பாய்வு 25 GWh உடன் மே மாதத்தில் பதிவாகியிருந்தது. ஆண்டின் இரண்டாவது பாதியில் முறைமைக்கு 3,417 GWh உட்பாய்வு கிடைத்திருந்தது.




உரு T7: 2019 தொடக்கம் 2021 வரையான முறைமைச் சேமிப்பின் மாறுபாடு

### NCRE செயற்றிட்டங்களின் செயலாற்றுகை

| வகை | 2021 இல் இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டவை | | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான திரண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
| சிறியளவு நீர்மின் | 3 | 4.6 | 211 | 414.15 |
| உயிர்த்திணிவு | - | - | 13 | 40.09 |
| காற்றாலை | - | - | 17 | 148.45 |
| சூரிய மின்கலம் | 25 | 25 | 57 | 100.36 |
| மாநகர திண்மக் கழிவு | - | - | 1 | 10.00 |
| **மொத்தம்** | **28** | **29.6** | **299** | **713.05** |

அட்டவணை T2: இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட NCRE செயற்றிட்டங்கள்

### நியம விதிப்பனவின் கீழுள்ள PPA கைச்சாத்திடப்பட்ட இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்படாத செயற்றிட்டங்கள்

PPAs கைச்சாத்திடப்பட்ட சில செயற்றிட்டங்களுக்கு, காணி, சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக இன்னும் இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்படவில்லை. அவை தொடர்பான பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| வகை | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
|---|---|---|
| சிறியளவு நீர்மின் | 51 | 91.20 |
| உயிர்த்திணிவு | 17 | 75.63 |
| காற்றாலை | 1 | 1.10 |
| மாநகர திடக் கழிவு | 3 | 20.40 |
| சூரிய ஒளி அனல் | 2 | 20.00 |
| **மொத்தம்** | **74** | **208.33** |

அட்டவணை T3: நியம விதிப்பனவின் கீழுள்ள இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்படாத NCRE செயற்றிட்டங்கள்

## விலைமனுக் கோரல் செயன்முறையின் கீழுள்ள செயற்றிட்டங்களின் பொழிப்பு

2013 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுடன், NCRE அபிவிருத்தியும்கூட போட்டி விலைமனுக் கோரல் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் இரண்டு 10 MW காற்று மின்வலு ஆலைகளுக்கான முதலாவது விலைமனு கோரப்பட்டிருந்தது. அதன் பின்னர் பல விலைமனுக்கள் கோரப்பட்டன. அதன் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| விலைமனு | ஆலைகளின் எண்ணிக்கை | மொத்தக் கொள்ளளவு (MW) | குறிப்புகள் |
|---|---|---|---|
| சுன்னாகம் காற்றாலை | 2 | 20 | இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. |
| 60x 1 MW சூரிய மின்கலம் | 35 | 35 | 35 செயற்றிட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன, PPA கைச்சாத்திடப்பட்ட 34 செயற்றிட்டங்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன 1 செயற்றிட்டம் நிருமாணத்தின் கீழுள்ளது. |
| 90x 1 MW சூரிய மின்கலம் | 68 | 68 | 3 செயற்றிட்டங்களுக்கு PPA கைச்சாத்திடுவது நிலுவையாகவுள்ளது. 15 செயற்றிட்டங்களுக்கு இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 50 செயற்றிட்டங்கள் நிருமாணத்தின் கீழுள்ளது. |
| 2x 10 MW சூரிய மின்கலம் | 2 | 20 | நிருமாணத்தின் கீழுள்ளது. |
| விவசாயத்துடனான சூரிய PV | 1 | 10 | LOI விநியோகிக்கப்பட்டுள்ளது. PPA கைச்சாத்திடுவது நிலுவையாகவுள்ளது. |
| (1~10) MW காற்றாலைகள் | 5 | 35 | 3 செயற்றிட்டங்களுக்கு PPA கைச்சாத்திடுவது நிலுவையாகவுள்ளது. 2 செயற்றிட்டங்களை வழங்க PUCSL இன் அங்கிகாரத்திற்கு காத்திருக்கப்படுகிறது. |
| (1~10) MW சூரியகல ஆலைகள் | 23 | 147 | 19 செயற்றிட்டங்களுக்கு LOI வழங்கப்பட்டுள்ளது. 4 செயற்றிட்டங்களுக்கு LOI நிலுவையாகவுள்ளது. |
| **மொத்தம்** | | **335** | |

அட்டவணை T4: 2021 ஆம் ஆண்டின் இறுதியில் விலமனு கோரல் செயன்முறையின் கீழுள்ள NCRE செயற்றிட்டங்களின் விபரங்கள்

| | SPPA கைச்சாத்திடப்பட்டவை (2021 காலப்பகுதியில்) | | LOI வழங்கப்பட்டவை (2021 காலப்பகுதியில்) | |
|---|---|---|---|---|
| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
| சூரிய மின்கலம் | 39 | 66 | *20 | 124 |
| காற்றாலை | - | - | 3 | 25 |

அட்டவணை T5: PPA மற்றும் LOI நிலைமைகளின் கீழ்க் காணப்படும் செயற்றிட்டங்களின் விபரங்கள் (2021 காலப்பகுதியில்)

2021 இல் LOI கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்டங்களில் 1 சூரிய கல செயற்றிட்டத்திற்கு (10 MW) இதே வருடத்தில் PPA உம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டம் 2021 இற்குள் 39 கைச்சாத்திடப்பட்ட PPAs களை உள்ளடக்கியுள்ளது.

மற்றுமொரு 140 MW சூரிய கல மின்சக்தி மற்றும் 40 MW காற்றாலை மின்சக்திக்கு விலைமனுக்களைக் கோருவற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், துரதிஸ்டவசமாக இந்த விலைமனுக் கோரல்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

## NCRE அபிவிருத்தி மற்றும் கடந்தகால செயலாற்றுகை




உரு T8: இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட திரண்ட மொத்த NCRE செயற்றிட்டங்கள் (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)




உரு T9: NCRE செயற்றிட்டங்கள் ஊடான சக்திப் பிறப்பாக்கம் (மேற்கூரை சூரிய மின்கலம் தவிர்ந்த)



உரு T10: தேசிய சக்திப் பிறப்பாக்கத்திற்கான NCRE பங்களிப்பு (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)




உரு T11: 2021 ஆம் ஆண்டில் NCRE இன் தொழினுட்ப ரீதியான பங்களிப்பு (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)




உரு T 12: 2021 ஆம் ஆண்டிற்கான NCRE இன் சராசரிக் கிரயம் (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)

## எதிர்கால NCRE அபிவிருத்திகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திகளுக்கு மேலதிகமாக கீழ்வரும் செயற்றிட்டங்கள் அபிவிருத்தி வரிசையில் காணப்படுகின்றன:

- பூநகரி 233 MW காற்றாலைப் பூங்கா
- சியம்பலாந்துவ 100 MW சூரியசக்திப் பூங்கா
- மன்னார் தீவு கட்டம் II - 100 MW காற்றாலைச் செயற்றிட்டம்
- 190 MW சூரிய மின்கலம் மற்றும் காற்றாலை விலைமனு (150 MW சூரியசக்தி மற்றும் 40 MW காற்றாலை)

## முக்கிய நிகழ்வுகள்

2021 இலும்கூட, பிரிவும் அதன் பணிக்குடு கோவிட் 19 நோய்ப் பரவலால் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டிருந்தன. சவால்கள் மிகவும் தீவிரமாக இருந்தது, விசேடமாக நடைமுறைக்கு மிகவும் கடினமாகக் காணப்பட்ட கண்டிப்பான சுகாதார வழிகாட்டல்களுடன் பராமரிப்பு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளில் சவால்கள் மிகவும் தீவிரமாகக் காணப்பட்டன.

## எதிர்காலத்திற்கான புதிய திட்டங்கள்

குறைந்த கிரய நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LCLTGEP) 2022-2041 ஆனது மின்வலுத் துறைக்கான அரசாங்கத்தின் புதிய கொள்கைக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு எந்தத் தடையுமற்ற வகையில் அபிவிருத்திகளை முன்னெடுத்தல் என்ற ஒரேயொரு நிபந்தனையுடன் 2021 அக்டோபர் 5 ஆந் திகதி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் (PUCSL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. LCLTGEP 2022-2041 இன் இந்த நிபந்தனையுடனான அங்கீகாரத்தில், நீர்மின், அனல்மின் மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் (காற்றாலை, சூரியசக்தி, சிறிய நீர்மின் மற்றும் உயிர்த்திணிவு) ஆகியவற்றின் கலவையுடன் அடுத்த 20 ஆண்டுகள் காலப்பகுதியில் 13,184 MW மின் பிறப்பாக்கல் கொள்ளளவைச் முறைமைக்குச் சேர்த்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய கொள்கை வழிகாட்டி 2030 இற்குள் 70% ஆன மீள்புதுப்பிக்கத்தக்க சக்திப் பிறப்பாக்கத்தை அடைவது பற்றிக் குறிப்பிட்டுள்ளதுடன், 2050 இற்குள் நிலக்கரி மின்வலு ஆலைகளை அமைக்கக்கூடாது எனவும் காபன் சமநிலையை அடைவது பற்றியும் குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் புதிய கொள்கை வழிகாட்டலுக்கு இடமளிக்கும் வகையில் புதிய திட்டத்தைத் (LCLTGEP 2023-2042) தயாரிப்பதற்கான ஆய்வுச் செயன்முறையை இ.மி.ச. ஏற்கனவே தொடங்கியுள்ளது.

## உந்தப்பட்ட சேமிப்பு

2030 இற்குள் 70% மீள்புதுப்பிக்கத்தக்க சக்திப் பிறப்பாக்க இலக்கினை அடைந்து கொள்வதற்கு, அடுத்த எட்டு ஆண்டுகள் காலப்பகுதியில் சூரியகலம் மற்றும் காற்றாலை போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து குறிப்பிடத்தக்களவு மின் பிறப்பாக்கக் கொள்ளளவுகளைச் சேர்ப்பது தேவையாகவுள்ளது. சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்வலு ஆகியன விரும்பிய வெளியீட்டு மட்டத்தில் "உறுதியான" தொடர்ச்சியான வெளியீட்டைக் கொடுக்காது, ஆனால் வளத்தின் தீவிரத்தன்மை மற்றும் கிடைப்பனவுத்தன்மையைப் பொறுத்து அதன் வெளியீடு மாறுபடுகிறது. அத்துடன், ஆற்றலை விரயம் செய்யாமல் தேவைக்கேற்ப இத்தகைய ஆலைகளை நிறுத்தி வைக்கவும் முடியாது. இந்த இரண்டு குறைபாடுகளையும் சமாளிப்பதற்கு மின்வலு முறைமையில் அதிக கொள்ளளவு கொண்ட சக்தி சேமிப்பு முறைமைகளை நிறுவுவது அவசியமாகும். இது பல்வேறு சூரிய சக்தி மற்றும் காற்றாலை வளங்களில் இருந்து பிறப்பாக்கத்தை ஈடுகட்ட விரைவான மின்வலு சரிப்படுத்தல்களை மேற்கொள்ள முடியும். அத்தகைய உறுதியான கொள்ளளவைச் சேர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் தீர்வாக உந்தப்பட்ட சேமிப்பு நீர் மின்வலு ஆலையை (PSHP) இ.மி.ச. இனங்கண்டிருந்தது.

முன்னைய ஆய்வுகள் PSHP களை அபிவிருத்தி செய்வதற்கான இரண்டு தளங்களை ஒதுக்கியிருக்கிறது. அவையாவன மகா ஓயா படுகையிலுள்ள மகா ஓயா தளமும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் விக்டோரியா - வேவத்தென்ன பாய்வு மேற்புறத் தளமும் ஆகும். மேற்படி தளங்களை அடிப்படையாகக் கொண்டு, PSHP ஒன்றிற்கான முன் சாத்திவள ஆய்வையும் விபரமான சாத்தியவள ஆய்வையும் முன்னெடுப்பதற்கு ஆலோசகர்களைக் கொண்ட குழாமொன்றைத் தெரிவு செய்வதற்கான ஆலோசனை பெறுகைச் செயன்முறையை இ.மி.ச. ஆரம்பித்திருக்கிறது. ஆய்வுகளை 2022 இன் நடுப்பகுதியில் தொடங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பசுமைச் சக்திக்கான அதிவேகப் பாதை

LTTDP 2023 – 2032 தொடர்பான தற்போதைய ஆய்வுகள், 2030 ஆம் ஆண்டிற்குள் 70% மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியை அடைந்து கொள்வது என்ற அரசாங்கத்தின் புதிய கொள்கை வழிகாட்டல்களைப் பின்பற்றி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனுடன் இணைந்தாற்போல 'மின்தொகுப்பிற்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின்பிறப்பாக்கத்தை ஒருங்கிணைக்கும் போது ஏற்படும் பிரதான சவால்களைப் புலனாய்வு செய்யும் நோக்கத்துடனும் உத்தமமான தீர்வுகளைக் கண்டறிவதற்காகவும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின் பிறப்பாக்கத்தை இலங்கையின் மின்தொகுப்பினுள் ஒருங்கிணைத்தல் 2023-2042' என்ற ஆய்வும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது நீண்ட கால மின் பிறப்பாக்க விரிவாக்கம், மின்வலு முறைமை செயற்பாட்டு ஆய்வு மற்றும் மின் பரிமாற்ற வலையமைப்பு ஆய்வுகள்.

மேலும், மின் பரிமாற்றத்தின் முதுகெலும்பான பகுதிகள் மற்றும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளிலுள்ள சேகரிப்பு உபமின் நிலையங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்கின்ற பிரதான நோக்குடன் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் தொடர்பான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு முடிவுகள் நாடு முழுவதிற்கும் தேவையான மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் அவற்றுக்கான கிரயங்கள் ஆகியவற்றை வழங்கும்.

## புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்கள்

கீழ்வரும் மின்தொகுப்பு உபமின் நிலையங்களுக்கு இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டு, செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு என்பன 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, பழைய அநுராதபுரம் மின்தொகுப்பு உபமின் நிலையமானது, அநுராதபுரம் 132 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தால் மாற்றீடு செய்யப்பட்டது.

| மின்தொகுப்பு உபமின் நிலையம் | மின்னழுத்த மட்டம் | கொள்ளளவு |
|---|---|---|
| நாவலப்பிட்டி | 132/33 kV | 63 MVA |
| இராகலை | 132/33 kV | 63 MVA |
| துறைமுகம் (Sub L) | 220/132 kV | 500 MVA |
| கப்பல்துறை | 220/33 kV | 126 MVA |


20'
20'

# விநியோகப் பிரிவுகள்

நாட்டின் மின்சார விநியோகத்தில் பாரிய பங்கினை இ.மி.ச. ஆற்றுகிறது. இது மொத்த விற்பனைத் தொகையில் 89% ஆக இருக்கிறது. எஞ்சிய தொகை, இ.மி.ச. இன் ஒரு துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியால் நிறைவேற்றப்படுகிறது.

ஒட்டுமொத்த இ.மி.ச. விநியோக முறைமையும் விநியோகப் பிரிவு 1 (DD1), விநியோகப் பிரிவு 2 (DD2), விநியோகப் பிரிவு 3 (DD3), விநியோகப் பிரிவு 4 (DD4), என பூகோள ரீதியில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிப்பானது பிரதானமாக நிருவாக மற்றும் செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காகவும் வினைத்திறன் மற்றும் மின்வழங்கலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான இலக்குப் போட்டியை அடைந்து கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

விநியோக வலையமைப்பானது 33 kV மற்றும் 11 kV இடைநிலை மின்னழுத்த (MV) மார்க்கங்களையும், 400 V தாழ் நிலை மின்னழுத்த (LV) மார்க்கங்களையும் விநியோக மின்மாற்றிகளையும் கொண்டிருக்கிறது. 220 kV மற்றும் 132 kV மின்பரிமாற்ற முறைமைகள் நாடு பூராகவும் உள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் ஊடாக விநியோக வலையமைப்புக்கு மின்வலுவை மாற்றுகின்றன.

### செயற்பாட்டுக் கட்டமைப்பு

ஒவ்வொரு பிரிவும் இ.மி.ச. இன் பொது முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடும் மேலதிகப் பொது முகாமையாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. விநியோகப் பிரிவுகள் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் (இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்ற மாகாணங்கள் நாட்டிலுள்ள நிருவாக மாகாணங்களுடன் சரியாகப் பொருந்தாமல் இருக்கலாம்), ஒவ்வொரு மாகாணமும் ஒரு பிரதிப் பொது முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவின் கீழும் வருகின்ற மாகாணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பிரிவின் பெயர் | மாகாணம் |
|---|---|
| பிரிவு 1 (DD1) | கொழும்பு நகர், வட மேல் மாகாணம் I, வட மேல் மாகாணம் II, வட மத்திய மாகாணம் மற்றும் வட மாகாணம் |
| பிரிவு 2 (DD2) | மேல் மாகாணம் வடக்கு, மத்திய மாகாணம் I, மத்திய மாகாணம் II, கிழக்கு மாகாணம் |
| பிரிவு 3 (DD3) | மேல் மாகாணம் தெற்கு II, ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் |
| பிரிவு 4 (DD4) | மேல் மாகாணம் தெற்கு I, தென் மாகாணம் I, தென் மாகாணம் II |

ஒரு மாகாணம் பல பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு பிரதேசமும் அப்பிரதேசத்தால் சேவை வழங்கப்படுகின்ற நுகர்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்து பிரதேச பிரதம பொறியியலாளர்கள் அல்லது பிரதேச மின் பொறியியலாளர்களால் நிருவகிக்கப்படுகிறது. ஒரு பிரதேசம் பல நுகர்வோர் சேவை நிலையங்களாக (CSCs) மேலும் பிரிக்கப்படுகிறது. இந்த ஒவ்வொரு நுகர்வோர் சேவை நிலையமும் ஒரு மின் அத்தியட்சகரால் தலைமை தாங்கப்படுகிறது.

### செயற்பாட்டுப் பிரதேசம்

விநியோகப் பிரிவு 1 ஆனது வட மேல் மாகாணம் I, வட மேல் மாகாணம் II, வட மத்திய மாகாணம், வட மாகாணம் மற்றும் கொழும்பு மாநகரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாகாணங்களைக் கொண்டுள்ளது. 2021 இல் உள்ளவாறு வட மத்திய மாகாணமானது மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை வட மாகாணம் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட மேல் மாகாணம் I ஆனது நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை வட மேல் மாகாணம் II நான்கு பிரதேசங்களாகவும் கொழும்பு நகர் பிரதேசம் நான்கு பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | வட மேல் I | சிலாபம், குளியாப்பிட்டி, வென்னப்புவ, புத்தளம் |
| | வட மேல் II | குருநாகல், வாரியப்பொல, நாரம்மல, மாகோ |
| | வட மத்திய | அநுராதபுரம், கெக்கிராவ மற்றும் மின்னேரியா. |
| | வடக்கு | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் கிழக்கு, கிளிநொச்சி மற்றும் வவுனியா |
| | கொழும்பு நகர் | கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு கிழக்கு |

விநியோகப் பிரிவு 2 ஆனது கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தை முழுமையாகவும் மேல் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை பகுதியளவிலும் உள்ளடக்கியதாக 25 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளது. 2021 இல் உள்ளவாறு, நான்கு மாகாணங்களிலும் கிழக்கு மாகாணம் ஐந்து பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை மத்திய மாகாணம் I ஆறு பிரதேசங்களாகவும் மத்திய மாகாணம் II ஏழு பிரதேசங்களாகவும் மேல் மாகாணம் வடக்கு ஏழு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 2 | கிழக்கு மாகாணம | அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வாழைச்சேனை மற்றும் கல்முனை |
| | மத்திய மாகாணம் I | தம்புள்ள, கலகெதர, கண்டி நகர், கட்டுகஸ்தோட்டை, குண்டசாலை, மாத்தளை |
| | மத்திய மாகாணம் II | கேகாலை, மாவனெல்ல, பேராதனை, நுவரெலியா, கினிகத்தென்ன, நாவலப்பிட்டி, ஹங்குராங்கெத்த |
| | மேல் மாகாணம் வடக்கு | கம்பஹா, களனி, நீர்கொழும்பு, ஜா-எல, திவுலப்பிட்டிய, வெயாங்கொறடை மற்றும் கிரிந்திவெல |

விநியோகப் பிரிவு 3 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் (மேல் மாகாணம் தெற்கு II) சப்ரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. இந்த மூன்று மாகாணங்களில், 2021 இல் உள்ளவாறு மேல் மாகாணம் தெற்கு II உம் சப்ரகமுவ மாகாணமும் ஐவ்வைந்து பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஊவா மாகாணம் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 3 | மேல் மாகாணம் தெற்கு II | பண்டாரகம, ஹோமாகம, அவிசாவளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் ஹொரணை |
| | சப்ரகமுவ | இரத்தினபுரி, கஹவத்தை, ருவன்வெல்ல, எஹலியகொடை மற்றும் எம்பிலிபிட்டிய |
| | ஊவா | பதுளை, தியத்தலாவ, மொணராகலை மற்றும் மஹியங்கணை |

விநியோகப் பிரிவு 4 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் (மேல் மாகாணம் தெற்கு I), தென் மாகாணத்தை முழுமையாகவும் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்குகிறது. 2021 இல் உள்ளவாறு மேல் மாகாணம் தெற்கு I ஆனது நான்கு பிரதேசங்களை உள்ளடக்குகின்ற அதே வேளை தென் மாகாணம் I ஆனது நான்கு பிரதேசங்களை உள்ளடக்குவதுடன் தென் மாகாணம் II ஆனது மூன்று பிரதேசங்களை உள்ளடக்குகிறது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 4 | தென் மாகாணம் I | அம்பலாங்கொடை, காலி, அக்குரஸ்ஸ, பத்தேகம |
| | தென் மாகாணம் II | தங்காலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை |
| | மேல் மாகாணம் தெற்கு I | இரத்மலானை, களுத்துறை, தெஹிவளை மற்றும் மத்துகம |

மாகாணங்களுக்குப் புறம்பாக, ஒவ்வொரு பிரிவினதும் நீடித்திருக்கத்தக்க செயற்பாட்டிற்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை மேற்கொள்வதற்காக அனைத்து விநியோகப் பிரிவுகளிலும் மூன்று பிரத்தியேகமான கிளைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அவையாவன, செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்புக் கிளை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை மற்றும் வர்த்தகம் மற்றும் நிறுவனக் கிளை. மேலும், விநியோகப் பிரிவு 1 ஆனது விநியோக ஒருங்கிணைப்புக் கிளையையும் கொண்டிருக்கிறது.

## விநியோகப் பிரிவுகளின் பிரதான நோக்கங்கள்

- பிரிவினுள் அனைத்து நுகர்வோருக்கும் நம்பகரமான மற்றும் தரமான மின்சார வழங்கலை ஏற்பாடு செய்தல்.
- தற்போதைய கேள்வி மற்றும் எதிர்காலத் தேவைக்கான திட்டமிடல் ஆகியவற்றை நிறைவேற்றுகின்ற அதே வேளை மின்சாரத்தை விற்பனை செய்வதும் திட்டமிடப்பட்ட வருமானங்களை அடைந்து கொள்வதும்.
- நவீன தொழில்துறையின் பெரும்பாலான கடுமையான நியமங்களைப் பூர்த்தி செய்கின்ற உயர் தரம், பயனுறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் அனைவருக்கும் உயர்ந்தபட்ச நுகர்வோர் திருப்தியை உறுதிப்படுத்துகின்ற மின்சாரத்திற்கு ஏற்பாடு செய்தல்.
- முறைமை இழப்புகளைக் குறைக்கின்ற அதே வேளை சர்வதேச நியமங்களுடன் இணக்கமாக இருக்கும் வகையில் நம்பகத்தன்மை, தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான மின்சார விநியோக முறைமையின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.
- பராமரிப்புச் சேவைகள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை ஒருங்கிணைப்பதும் மேம்படுத்துவதும்.
- மின்சாரத்தை விநியோகிப்பதற்கான புதிய தொழினுட்பங்களை விருத்தி செய்வதற்கு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும் மேம்படுத்துவதும்
- பாதுகாப்பான, பத்திரமான மற்றும் ஆரோக்கியமான வேலைச் சூழல் ஒன்றைப் பேணுவதன் மூலம் திறமையான வேலைப்படையை உருவாக்குவதும் அவர்களது வெற்றிக்கான சந்தர்ப்பங்களை உச்சப்படுத்துதலும்.
- செயற்பாடுகள் நிகழும் சூழலை பாதுகாப்பதிலும் முற்காப்பு செய்வதிலும் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுதல்.
- தற்போதைய அரசாங்கக் கொள்கைகளின்படி மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல்களுக்கு வசதியேற்படுத்துதல்.

## இ.மி.ச. விநியோகப் பிரிவு

**பிரிவு 1**
**வடக்கு**
N1 யாழ்ப்பாணம்
N2 கிளிநொச்சி
N3 வவுனியா
N4 யாழ்ப்பாணம் கிழக்கு

**வட மத்திய**
NC1 அநுராதபுரம்
NC2 கெக்கிராவ
NC3 மின்னேரியா

**வட மேல் 1**
NW1-1 வென்னப்புவ
NW1-2 குளியாப்பிட்டி
NW1-3 சிலாபம்
NW1-4 புத்தளம்

**வட மேல் 2**
NW2-1 நாரம்மல
NW2-2 குருநாகல்
NW2-3 வாரியப்பொல
NW2-4 மாகோ

**கொழும்பு நகர்**
CO - கொழும்பு வடக்கு
- கொழும்பு தெற்கு
- கொழும்பு கிழக்கு
- கொழும்பு மேற்கு

**பிரிவு 2**
மேல் மாகாணம் வடக்கு
WN1 - நீர்கொழும்பு
WN2 - வெயாங்கொடை
WN3 - ஜா-எல
WN4 - களனி
WN5 - கம்பஹா
WN6 - திவுலப்பிட்டிய
WN7 - கிரிந்திவெல

**மத்திய மாகாணம் - I**
CP1-1 - மாத்தளை
CP1-2 - கட்டுகஸ்தோட்டை
CP1-3 - குண்டசாலை
CP1-4 - கண்டி நகர்
CP1-5 - தம்புள்ள
CP1-6 - கலகெதர

**மத்திய மாகாணம் - II**
CP2-1 - கினிகத்தென்ன
CP2-2 - நாவலப்பிட்டி
CP2-3 - நுவரெலியா
CP2-4 - பேராதனை
CP2-5 - ஹங்குராங்கெத்த
SA1 - கேகாலை
SA1 - மாவனெல்ல

**கிழக்கு**
E1 - திருகோணமலை
E2 - மட்டக்களப்பு
E3 - அம்பாறை
E4 - கல்முனை
E5 - வாழைச்சேனை

**பிரிவு 3**
**மேல் மாகாணம் தெற்கு 2**
WS1 - ஸ்ரீ ஜயவர்த்தனபுர
WS2 - அவிசாவளை
WS5 - ஹோமாகம
WS6 - ஹொரணை
WS7 - பண்டாரகம

**சப்ரகமுவ**
SA3 - ருவன்வெல்ல
SA4 - எஹலியகொடை
SA5 - இரத்தினபுரி
SA6 - கஹவத்த
SA7 - எம்பிலிப்பிட்டிய

**ஊவா**
U1 - தியத்தலாவ
U2 - பதுளை
U3 - மொணராகலை
U4 - மஹியங்கணை

**பிரிவு 4**
**மேல் மாகாணம் தெற்கு 1**
WS3 - தெஹிவளை
WS4 - இரத்மலானை
WS8 - களுத்துறை
WS9 - மத்துகம

**தெற்கு - I**
S1-1 - அம்பலாங்கொடை
S1-2 - பத்தேகம
S1-3 - காலி
S1-4 - அக்குரஸ்ஸ

**தெற்கு - II**
S2-1 - மாத்தறை
S2-1 - தங்காலை
S2-1 - ஹம்பாந்தோட்டை

## இ.மி.ச. விநியோக எல்லைகளும் இ.மி.ச. பிரதேச எல்லைகளும்




| திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை<br>விநியோகப் பிரிவு - 1 | 2022.04.27 |
|---|---|

## விநியோகப் பிரிவுகளின் எல்லை

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| சேவைப் பிரதேசம் (சதுர கி.மீ.)* | 26,929 | 17,935 | 12,178 | 6,870 |
| பிரதேசங்கள் (எண்ணிக்கை) | 19 | 25 | 14 | 11 |
| நுகர்வோர் சேவை நிலையங்கள் (எண்ணிக்கை) | 58 | 91 | 53 | 42 |
| இ.மி.ச. இயக்கிய சேகரிப்பு நிலையங்கள் (POS) (எண்ணிக்கை) | 21 | 21 | 13 | 27 |
| கட்டுப்பாட்டு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 3 | 0 |
| அழைப்பு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 3 | 2 |
| தொகையளவு நுகர்வோர் (எண்ணிக்கை) | 4,846 | 3,901 | 2,357 | 1,953 |
| சில்லறை நுகர்வோர் (எண்ணிக்கை) | 1,961,369 | 2,335,704 | 1,381,462 | 1,117,934 |
| SAIDI (நிமிடங்கள்/ஆண்டு) | 3,215 | 3,995 | 5,041 | 3,896 |
| SAIFI (குறுக்கீடுகள்/வாடிக்கையாளர்/ஆண்டு) | 17 | 38.4 | 48.6 | 28.7 |

*மின்சார வலையமைப்பைக் கொண்டிராத காடுகள் மற்றும் தீவுகள் தவிர்ந்த.

## 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விநியோக உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்

ஆண்டின் காலப்பகுதியில் விநியோக மார்க்கங்கள் / உபமின் நிலையங்களின் சேர்ப்பனவுகள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. GPS அடிப்படையிலான துல்லியமான தரவு சேகரிப்புச் செயன்முறையின் பின்னர் மின்மார்க்க நீளத் திருத்தங்கள் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| விபரம் | அலகுகள் | DD1 | DD2 | DD3 | DD4 | திரட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| விநியோக மார்க்கங்கள் மேந்தலை) | | | | | | |
| 33 kV | km | - | 126 | 215 | - | 33,269 |
| 11 kV | km | 19 | - | - | 44 | 1,413 |
| LV | km | - | 1,033 | 395 | - | 149,205 |
| நிலத்தடி கம்பிவடங்கள் | | | | | | |
| 33 kV | km | - | - | 0.2 | 0.4 | 48 |
| 11 kV | km | 23 | 4 | - | 5 | 1,036 |
| LV | km | 12 | - | 5 | - | 817 |
| உபமின் நிலையங்கள் | | | | | | |
| 33/ 11 kV முதன்மை உபமின் நிலையங்கள் | No. | 1 | 1 | - | 02 | 137 |
| LV விநியோக உபமின் நிலையங்கள் | No. | - | 376 | 257 | 185 | 35,290 |
| ஏனையவை | | | | | | |
| தாங்கு சட்டங்கள் | No. | 8 | 31 | 0 | 0 | 292 |
| A/R | No. | 61 | - | 10 | 17 | 1,351 |

## 2021 ஆம் ஆண்டின் பிரதான தரவுகள் - ஒரே பார்வையில்

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட அலகுகள் | GWh | 4,381 | 4,987 | 2,876 | 2,153 | 14,397 |
| பிரிவினுள் விற்பனை செய்யப்பட்ட அலகுகள் | GWh | 4,129 | 4,766 | 2,675 | 2,010 | 13,580 |
| விற்பனை செய்யப்பட்ட அலகுகளில் இருந்து ஈட்டப்பட்ட வருமானம் | MLKR | 73,868 | 75,522 | 43,254 | 33,528 | 226,172 |
| சராசரி விற்பனை விலை | LKR | 17.89 | 15.85 | 16.17 | 16.68 | 16.65 |
| விநியோக இழப்பு | % | 6.08 | 5.17 | 7.55 | 6.75 | 6.16 |
| வழங்கப்பட்ட புதிய இணைப்புகளின் எண்ணிக்கை | No | 49,311 | 62,890 | 35,870 | 25,191 | 173,262 |

## செயற்பாட்டுத் தரவுகள்

### விதிப்பனவு வகை ரீதியான கணக்குகளின் எண்ணிக்கை - 2021

(எ/கை)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,659,019 | 2,025,000 | 1,212,250 | 979,289 | 5,875,558 |
| சமயத்தலம் | 14,308 | 14,445 | 7,833 | 6,052 | 42,638 |
| தொழில்துறை | 38,102 | 15,676 | 9,099 | 6,723 | 69,600 |
| ஹோட்டல் | 113 | 240 | 39 | 159 | 551 |
| அரசாங்கம் | 2,163 | 2,880 | 2,813 | 1,507 | 9,363 |
| பொது நோக்கு | 252,510 | 281,364 | 151,785 | 126,157 | 811,816 |
| **மொத்தம்** | **1,966,215** | **2,339,605** | **1,383,819** | **1,119,887** | **6,809,526** |

**விதிப்பனவு மூலமான விற்பனைகள் – 2021** (GWh)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,531 | 1,789 | 1,016 | 902 | 5,238 |
| சமயத்தலம் | 32 | 25 | 12 | 12 | 81 |
| தொழில்துறை | 1,065 | 2,059 | 1,110 | 588 | 4,822 |
| ஹோட்டல் | 101 | 49 | 6 | 63 | 219 |
| அரசாங்கம் | 95 | 60 | 25 | 46 | 226 |
| பொது நோக்கு | 1,267 | 747 | 502 | 380 | 2,896 |
| தெரு விளக்கு | 38 | 37 | 4 | 19 | 98 |
| **மொத்தம்** | **4,129** | **4,766** | **2,675** | **2,010** | **13,580** |

**விதிப்பனவு மூலமான வருமானம் - 2021** (மில்.ரூபா)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 24,140 | 25,771 | 14,475 | 13,694 | 78,080 |
| சமயத்தலம் | 239 | 177 | 81 | 85 | 582 |
| தொழில்துறை | 15,935 | 29,874 | 16,241 | 8,709 | 70,759 |
| ஹோட்டல் | 1,726 | 928 | 123 | 1,125 | 3,902 |
| அரசாங்கம் | 1,774 | 1,104 | 459 | 806 | 4,143 |
| பொது நோக்கு | 30,054 | 17,666 | 11,875 | 9,109 | 68,704 |
| தெரு விளக்கு | 0 | 2 | 0 | 0 | 2 |
| **மொத்தம்** | **73,868** | **75,522** | **43,254** | **33,528** | **226,172** |

**நுகர்வோர் கணக்குகளின் ஐந்தாண்டு முன்னேற்றம்**




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| DD1 | 1,782,105 | 1,832,829 | 1,875,852 | 1,916,904 | 1,966,215 |
| DD2 | 2,122,740 | 2,178,082 | 2,229,774 | 2,276,715 | 2,339,605 |
| DD3 | 1,260,090 | 1,291,700 | 1,320,826 | 1,347,949 | 1,383,819 |
| DD4 | 1,028,194 | 1,051,668 | 1,074,187 | 1,094,696 | 1,119,887 |




உரு D 1: மின்னூட்ட மட்டம் - 2019/2020 ஆம் ஆண்டு

**முன்னேற்றச் செயற்பாடுகள் - 2021 ஆம் ஆண்டு**

**மின்சாரத்திற்கான அணுகல்**

தரப்பட்ட மாகாணம் ஒன்றிலுள்ள மக்களின் மின்சாரத்திற்கான எளிதான மற்றும் இலகுவான அணுகலானது ஒப்பீட்டளவில் மாகாணத்தின் அபிவிருத்தி மட்டத்தில் தங்கியுள்ளது. பதினைந்து மாகாணங்களில் கொழும்பு நகர், மேல் மாகாணம் வடக்கு, மேல் மாகாணம் தெற்கு 1, தென் மாகாணம் தெற்கு I மற்றும் தென் மாகாணம் தெற்கு II ஆகிய ஐந்து மாகாணங்களும் மின்சாரத்திற்கான 100% அணுகலை அடைந்துள்ளன. மின்னூட்டலின் நன்மைகளைக் கவனத்தில் கொண்டு, நன்கொடை அளிக்கும் அமைப்புக்கள், இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் இ.மி.ச. ஆகியவற்றால் செய்யப்பட்ட நிதிசார் அர்ப்பணிப்புகள் ஊடாக மின்சாரத்திற்கான 100% அணுகலை அடைவதற்கு கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**மின்னூட்டல் திட்டங்களும் விரிவாக்கங்களும்**

கிராமிய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கிராமிய மின்னூட்டல் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அண்ணளவாக 30 கிராமிய மின்னூட்டல் திட்டங்களும் 650 இற்கும் மேற்பட்ட விரிவாக்கல் திட்டங்களும் 466 மில்லியன் என்ற மொத்தக் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

**மேற்கூரை சூரியசக்தி (PV)**

மின் நுகர்வோர் தமது வளாகங்களிலுள்ள மேற்கூரைகளில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் நிகர அளவீடு, நிகரக் கணக்கீடு மற்றும் நிகரக் கூட்டல் ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் தங்களுடைய மின் பிறப்பாக்கத்தை இ.மி.ச. முறைமையுடன் ஒத்திசைவாக்கும் அதே வேளை சக்தியை நுகர்வதற்கும் முறைமைக்கு ஏற்றுமதி செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

| | DD1 | | DD2 | | DD3 | | DD4 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நுகர்வோர் (எ/கை) | நிறுவப்பட்ட கொள்ளளவு (மெ.வா.) | நுகர்வோர் (எ/கை) | நிறுவப்பட்ட கொள்ளளவு (மெ.வா.) | நுகர்வோர் (எ/கை) | நிறுவப்பட்ட கொள்ளளவு (மெ.வா.) | நுகர்வோர் (எ/கை) | நிறுவப்பட்ட கொள்ளளவு (மெ.வா.) | நுகர்வோர் (எ/கை) | நிறுவப்பட்ட கொள்ளளவு (மெ.வா.) |
| நிகர அளவீடு | 3,342 | 26 | 2,225 | 16 | 2,243 | 12 | 1,961 | 14 | 9,771 | 68 |
| நிகர கணக்கீடு | 4,256 | 39 | 4,394 | 40 | 3,002 | 25 | 3,579 | 32 | 15,231 | 136 |
| நிகர கூட்டல் | 860 | 52 | 428 | 71 | 357 | 49 | 421 | 38 | 2,066 | 210 |
| **மொத்தம** | **8,458** | **117** | **7,047** | **127** | **5,602** | **86** | **5,961** | **84** | **27,068** | **415** |

## முக்கிய நிகழ்வுகள்

### அனைவருக்கும் மின்சாரம்

அரசாங்கத்தின் “எதிர்கால நோக்கு” இற்கிணங்க இலங்கையில் மின்சாரம் இல்லாத அனைத்து வீடுகளுக்கும் இலவச மின்சார இணைப்புகளை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபையினால் “அனைவருக்கும் மின்சாரம்” என்ற நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டின் ஊடாக 750 மில்லியன் இலங்கை ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

சமுர்த்தி அலுவலர்கள் ஊடாக நடத்தப்பட்ட ஆய்வினை அடுத்து, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து மின்சாரம் இல்லாத வீடுகளின் பட்டியல் பெறப்பட்டதுடன் அதில் 115,925 வீடுகள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், முதலாவது மின்சார இணைப்பு, இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு கோட்டாபாய ராஜபக்ஷவின் பங்களிப்புடன் கிரிபாவ என்ற இடத்தில் 2021 மார்ச் 6 ஆந் திகதி வழங்கப்பட்டது. குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி, உள்ளக கம்பியிடல் (வயரிங்) வேலைகளைப் பூர்த்தி செய்த 33,302 பேருக்கு ஆண்டின் இறுதிக்குள் மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டன.





### சூரிய வலு சக்திக்கான போர் “සූර්ය බල සංග්‍රාමය”

இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) மற்றும் வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சாரக் கம்பனி (LECO) ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்புடன் மின்சார நுகர்வோரின் வீடுகள் / வளாகங்களில் உள்ள மேற்கூரை சூரியவலு PV பலகங்கள் ஊடாகப் பெறப்படுகின்ற சூரியவலு மின்சாரத்தை தேசிய மின்தொகுப்பிற்கு ஒருங்கிணைப்பதற்கு சமுதாய அடிப்படையிலான சூரியவலு மின்சாரப் பிறப்பாக்க நிகழ்ச்சித் திட்டமொன்று “සූර්ය බල සංග්‍රාමය” (சூரியவலு சக்திக்கான போர்) என்ற தலைப்பில் மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது.

இது வீடுகள், சமயத் தலங்கள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் மேற்கூரைகளில் சிறியளவிலான சூரியவலு மின்வலுப் பொறிகளை அமைப்பதை ஊக்குவிக்கிறது. இந்தத் தலையீட்டின் ஊடாக 2025 ஆம் ஆண்டிற்குள் சூரியவலு மின்சாரத்தின் 1000 MW இனையும் 2030 ஆம் ஆண்டிற்குள் 1500 MW இனையும் தேசிய மின்தொகுப்பினுள் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நுகர்வோர் தமது வளாகங்களில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்து பயன்படுத்துவதற்கான தெரிவுகளைக் கொண்டிருப்பர். பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரம் அவர்களுடைய தேவையைவிட அதிகமாக இருக்கும் பட்சத்தில், மிகையாகவுள்ள மின்சாரத்தை தேசிய மின்தொகுப்பிற்கு விற்பனை செய்ய முடியும் அல்லது பிந்தைய பயன்பாட்டிற்காக சேமித்து வைக்கவும் முடியும். மின்சாரப் பாவனைக்கு இணங்க, வாடிக்கையாளர் நிகர அளவீடு, நிகரக் கணக்கீடு மற்றும் நிகரக் கூட்டல் ஆகிய மூன்று திட்டங்களிலிருந்து முன்னுரிமையளிக்கப்பட்ட தெரிவொன்றைத் தெரிவு செய்ய முடியும். சூரியவலு சக்திக்கான நிறுவல் சேவைகள் பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

2021 டிசெம்பரில் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் கீழ்வருமாறு :

| | நிகர அளவீடு | நிகர கணக்கீடு | நிகர கூட்டல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சூரியவலு வாடிக்கையாளர் எண்ணிக்கை | 9,771 | 15,231 | 2,066 | 27,068 |
| நிறுவப்பட்டுள்ள சூரிய மின்வலுவின் கொள்ளளவு (MW) | 68.5 | 136.3 | 210.4 | 415.1 |



தம்பபவனி காற்றாலை மின் நிலையம்

# செயற்றிட்டங்கள் பிரிவு

இலங்கை மின்சார சபையின் செயற்றிட்டங்கள் பிரிவு சகல பெரியளவான மின் பிறப்பாக்கல் மற்றும் மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களின் (வெளிநாட்டு நிதியுதவி/இலங்கை அரசாங்கம்/ இ.மி.ச. இனால் நிதியிடப்படுகின்ற) நடைமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக 2010 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இத்தகைய செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலானது முழு மின்வலு முறைமையினதும் நம்பகத்தன்மையை மேம்படுத்தல், கொள்ளளவை அதிகரித்தல் போன்றவற்றில் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றன. இந்தப் பிரிவு மேலதிகப் பொது முகாமையாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. அவரின் கீழ் ஐந்து பிரதிப் பொது முகாமையாளர்களும் பதினொரு செயற்றிட்டப் பணிப்பாளர்களும் (வகுப்பு 1 ஐச் சேர்ந்த அதிகாரிகள்), ஒரு மேலதிக நிதி முகாமையாளரும் செயற்றிட்டங்கள் பிரிவின் இலக்குகளை அடைவதற்காகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மின் பரிமாற்ற வடிவமைப்புகள் கிளையானது செயற்றிட்டங்கள் பிரிவின் கீழ் தொழிற்படுகிறது. இது பணிகளின் விபரமான நோக்கெல்லையைத் தயாரித்தல், சபை அங்கீகரித்த செயற்றிட்டங்களுக்கான விவரக் குறிப்புகள், சுற்றுச்சூழல் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல், விலைமனு கோரும் கட்டத்தில் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு (TEC) உதவுதல், வடிவமைப்பு ஆவணங்கள் FAT நெறிமுறைகள் மற்றும் FAT முடிவுகளை மீளாய்வு செய்து அங்கீகரித்தல், செயற்றிட்ட நிருமாணக் கட்டத்தில் செயற்றிட்ட பணித்தொகுதியினருக்கு உதவுதல் மற்றும் வடிவமைப்பு தொடர்பான பிரச்சினைகளை கையாளுதல் போன்றவற்றில் ஈடுபடுகிறது.

நோய்ப் பரவல் நிலைமையின் கீழ், 34.4 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியான செயற்றிட்ட வேலைகளை கையாள்வதற்கும் மேற்கொள்வதற்கும் வேண்டியிருந்ததால் 2021 ஆம் ஆண்டு செயற்றிட்டங்கள் பிரிவுக்கு மற்றுமொரு சவால்மிக்க ஆண்டாகத் திகழ்ந்தது.

2021 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் கீழ்வருமாறு :

**மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் - கட்டம் I**

இலங்கை மின்சார சபையின் "தம்பபவனி" எனப் பெயரிடப்பட்டதும் மொத்த நிறுவப்பட்ட கொள்ளளவாக 103.5 MW இனைக் கொண்டதுமான அதன் முதலாவது பெரிய காற்று மின்வலு ஆலையை முழுமையாக இயக்குவதற்கான அதிகாரம் 2021.05.18 ஆந் திகதி வழங்கப்பட்டது. இந்த ஆலையானது அதி நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய முப்பத்து மூன்று (33) காற்று விசையாழி மின்பிறப்பாக்கிகளை மன்னார் தீவின் தெற்குக் கடற்கரை ஓரங்களில் கொண்டிருக்கிறது.

இந்தச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலானது இலங்கையின் காற்றாலை மின்வலுப் பிறப்பாக்கத்தின் ஒரு மைல்கல்லாக இருந்தது. இது தேசிய மின்தொகுப்பினுள் பாரியளவிலான காற்று ஊடுருவலின் செயற்பாட்டுப் பண்புகளை முன்கூட்டியே புரிந்து கொள்ள வழிவகுத்தது. தொடர்புடைய மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட முழுமையான செயற்றிட்டத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதியுதவி அளித்திருந்தது.

தம்பபவனி மின்வலு ஆலையானது மேம்பட்ட காற்று எதிர்வுகூறல் முறைமையினால் ஆதரவளிக்கப்பட்ட பகுதியளவில் அனுப்பீடு செய்யத்தக்க மின்வலு ஆலையொன்றாக இயங்குவதற்கான இயலுமையைக் கொண்டிருக்கிறது. மேலும், ஒவ்வொரு காற்று விசையாழி மின்பிறப்பாக்கியும் மின்தொகுப்புக் கோவை நிபந்தனைகளுடன் இணக்கமாக இருக்கிறது. இந்த ஆலை பறவைகளைக் கண்டறியும் அதிநவீன ராடார் முறைமையொன்றையும் கொண்டிருக்கிறது. இது பறவைகள் தாக்கும் சாத்தியத்தை உணர்ந்தால், தன்னிச்சையாக காற்றாலை விசையாழிகளைத் தேர்ந்தெடுத்து மூடுகிறது.



உரு P1: மன்னார் தளம்

**விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம்**

கொழும்பில் இருந்து வட - கிழக்காக கிட்டத்தட்ட 90 கிலோமீற்றர் தூரத்தில் கித்துல்கல நகருக்கு அருகில் களனி ஆற்றில் கட்டப்பட்டுள்ள ஒரு நீரோட்ட வகை செயற்றிட்டம் இதுவாகும்.

இந்தச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் தற்போதிருக்கின்ற பொல்பிட்டிய மின்வலு நிலையத்தில் நீரோட்டத்தில் உள்ள நீர்மின் ஆற்றலை அறுவடை செய்வதாகும்.

| நிறுவப்பட்ட கொள்ளளவு | 2 X 17.5 MW |
|---|---|
| ஒப்பந்தகாரர் | வரையறுக்கப்பட்ட சீன தேசிய மின் உபகரணக் கூட்டுத்தாபனம் (CNEEC) |
| மதிப்பிடப்பட்ட கிரயம் | 97 மில்லியன் அமெரிக்க டொலர் |
| செயற்றிட்ட நிதியுதவி | 85% : கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி, சீனா (ICBC)<br>15% : ஹட்டன் நஷனல் வங்கி |

பிரதான அணை, பிரதான சுரங்கம், திசைதிருப்பும் சுரங்கம், மின்வலு இல்லம் மற்றும் ஆளி முற்றத் தளம் ஆகியவற்றின் நிருமாண வேலைகள் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஆலைச் சோதனைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டமானது இலங்கையில் நிருமாண வடிவமைப்பு மற்றும் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் (CDM) பதிவினைப் பெற்றுக் கொண்ட முதலாவது பெரிய அளவிலான நீர் மின்வலுச் செயற்றிட்டமாகும்.



உரு P4: விரிநில மின்வலு இல்லக் கட்டடம்



உரு P2: விரிநில மின்பிறப்பாக்கித் தளம்



உரு P3: விரிநில பிரதான அணையும் நீர்த்தேக்கமும்

## மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்

| நிறுவப்பட்ட கொள்ளளவு 30.5 MW | |
|---|---|
| ஒப்பந்தகாரர்<br>முன்னாயத்த வேலைகள்<br>பிரதான குடியியல் வேலைகள்<br>இயந்திரவியல், மின்னியல் வசதிகள் | <br>விவி கருணாரத்ன அன்ட் கம்பனி<br>சீன ஜெஜூவா குழுமக் கம்பனி<br>டோன்ங்பேங் எலக்ரிக் இன்டநெனல் கோப்பரேஷன், சீனா |
| மதிப்பிடப்பட்ட கிரயம் | ரூபா 18,553 மில்லியன் |
| செயற்றிட்ட நிதியுதவி | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| இயக்குவதற்காக அதிகாரமளிக்க எதிர்பார்க்கும் | நவெம்பர் 30.2023 |
| ஒட்டுமொத்த முன்னேற்றம் | 30 % |

2021.12.31 இல் ஒவ்வொரு செயற்றிட்டக் கூறுகளினதும் அறிக்கையிடப்பட்ட முன்னேற்றம் உரு 5 இல் தரப்பட்டுள்ளது.




உரு P5: MHPP இன் முன்னேற்றம்

## உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம்

உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டமானது (UOMDP) நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சினால் (MOIWM) நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தற்போது நீர்பாசன அமைச்சின் (MOI) செயல் எல்லையின்கீழ் வருகின்றது. செயற்றிட்டத்தின் மின் எந்திரவியல் தொடர்பான தொழினுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக UOMDP செயற்றிட்ட முகாமைத்துவ அலகிற்கு (PMU) இ.மி.ச. தொழினுட்பப் பணியாளர்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளனர்.

| நிறுவப்பட்ட கொள்ளளவு 120 MW | |
|---|---|
| ஒப்பந்தகாரர் | FARAB கம்பனி (FC), ஈரான் |
| மதிப்பிடப்பட்ட கிரயம் | 530 மில்லியன் அமெரிக்க டொலர் |
| இயக்குவதற்கான அதிகாரமளிக்க எதிர்பார்க்கப்படும் திகதி | 2022 மே 25 |
| ஒட்டுமொத்த முன்னேற்றம் | 97.71% |



படம் **P6:** உமா ஓயா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒற்றைக் கோபுரம்

## திரவநிலை இயற்கை எரிவாயுச் செயற்றிட்டம் (LNGP)

2020 யூன் மாதத்தில், LNG ஐப் பயன்படுத்தும் செயற்றிட்டத்திற்கான அங்கீகாரம் அமைச்சரவையினால் வழங்கப்பட்டதுடன் FSRU மற்றும் நங்கூரமிடும் முறைமையை அமைப்பதற்கும் FSRU இற்கு LNG ஐப் பெறுவதற்கும் இ.மி.ச. இற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின் மூலம், களனிதிஸ்ஸ மற்றும் கெரவலப்பிட்டிய ஆகிய இடங்களில் தற்போதிருக்கின்ற இணைந்த சுற்று மின்வலு ஆலைகளும் அதே போல் வருங்கால இணைந்த சுற்று மின்வலு ஆலைகளும் 2024 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு கெரவலப்பிட்டிய கடலோரத்திலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் நங்கூரமிடப்படும் இந்த FSRU இலிருந்து வழங்கப்படுகின்ற இயற்கை எரிவாயுவில் இயங்கும் என்பதுடன் நாட்டிற்கு பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளையும் வழங்கும்.

அரசாங்க - தனியார் பங்குடமை (PPP) அடிப்படையில் வருங்கால முதலீட்டாளர்களால் RFP பெற்றுக் கொள்ளப்பட்ட அதே வேளை FSRU மற்றும் நங்கூரமிடல் முறைமைக்கான ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் வருங்கால முதலீட்டாளர்களுடன் நடந்து வருகிறது. ஒப்பந்தமானது விரைவில் உருவாக்கப்படும் என்பதுடன் 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குள் LNG மற்றும் இயற்கை எரிவாயுவைப் பெறுவதற்கு FSRU தயாராக உள்ளது.

LNG வழங்கலுக்கான பெறுகைச் செயன்முறை விரைவில் ஆரம்பிக்கப்படும.

## மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

2021.12.31 இல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின் பரிமாற்ற அபிவிருத்திகளின் முன்னேற்றங்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை 1 இல் தரப்படுகிறது. முன்னேற்றப் பட்டை வர்ணங்கள் கீழே தரப்பட்டவாறு திட்டமிடப்பட்ட முன்னேற்றங்களுக்கு எதிரான உண்மையான முன்னேற்றங்களின் மாறுபாட்டினைக் குறிக்கிறது.

மாறுபாடு < 10 % எனின்

10%< மாறுபாடு <25% எனின்

25%< மாறுபாடு <50% எனின்

50%< மாறுபாடு <100% எனின்

வடிவமைக்கப்பட்டு, 2021.12.31 இல் இன்னும் ஆரம்பிக்கப்படாத மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களின் நிலை பற்றிய விபரங்கள் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளது.

## ஆண்டின் காலப்பகுதியில் எதிர்கொண்ட சவால்கள்

பிரிவின் நோக்கொல்லையின் கீழான செயற்றிட்டங்களின் முன்னேற்றத்திலும் செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்வதிலும் பாதிப்பை ஏற்படுத்திய, ஆண்டின் காலப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட பிரதான பிரச்சினைகளும் சவால்களும் கீழே தரப்பட்டுள்ளன :

- உள்நாட்டுச் சந்தையில் சீமெந்து மற்றும் உருக்குக் கம்பிகள் போன்ற நிருமாணப் பொருட்கள் போதியளவில் கிடைக்காமை
- உள்நாட்டுச் சந்தையில் நிருமாணப் பொருள்களின் விலை அதிகரிப்பு.
- நோய்த் தொற்று காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களின் வேலைத் தளத்திற்கு ஆளணியினர் வருகை தருவதிலுள்ள பிரச்சினை
- நோய்த் தொற்று காலப்பகுதியில் இயக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கப்பல் போக்குவரத்து மற்றும் சுங்கத் தடைநீக்கம் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பெறுகைகளில் ஏற்பட்ட தாமதம்.
- மின் பரிமாற்ற மார்க்கத் தாழ்வாரங்கள் மற்றும் காணிகளைப் பாதுகாப்பதில் எழுப்பப்பட்ட பொதுமக்களின் ஆட்சேபனைகள்.

## நடந்து கொண்டிருக்கும் மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டம் | பொதி | கிரயம் (ரூபா மில்லியன்) | 2021.12.31 இல் பௌதிகரீதியான முன்னேற்றம் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் திகதி |
|---|---|---|---|---|
| பாரிய கொழும்பு மின் பரிமாற்றமும் விநியோகமும் மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம் | கெரவலப்பிட்டியவிலிருந்து கொழும்பு L வரை இரண்டாவது 220 kV கம்பிவட நிருமாணம் | 9,119 | 5% | ஏப்ரல் 2024 |
| | கொழும்பு E மற்றும் F இல் CT மற்றும் மின்னேகிச் சட்டப் பாதுகாப்புத் திட்டத்தின் மாற்றீடு. | 122 | 45% | மே 2022 |
| திருகோணமலை நிலக்கரி மின்வலு அபிவிருத்திச் செயற்றிட்டம் | துண்டம் A: புதிய ஹபரணை GSS மற்றும் வெயாங்கொடை GSS இன் நிருமாணம் | 3,200 | 97% | மே 2022 |
| | துண்டம் B: வெயாங்கொடை தொடக்கம் புதிய ஹபரணை மின்தொகுப்பு உபமின் நிலையம் வரைக்குமான 148 km, 220 kV மின் பரிமாற்ற மார்க்கம் மற்றும் அதனோடிணைந்த மார்க்க திசைதிருப்பல்கள் ஆகியவற்றின் நிருமாணம் | 7,100 | 95% | ஜூலை 2022 |
| பசுமை மின்வலு அபிவிருத்தி, சக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் - கட்டம் II | பொதி 1/துண்டம் A - ஹம்பாந்தோட்டை 220 kV அபிவிருத்தி | 1,866 | 95% | பெப்ரவரி 2022 |
| | பொதி 1/துண்டம் B – புதிய பொல்பிட்டி - ஹம்பாந்தோட்டை TL | 5,794 | 78% | மே 2022 |
| | பொதி 2/துண்டம் A –மன்னார் 220/33 kV GSS விருத்தியாக்கமும் நடுக்குடா நிருமாணமும் | 2,698 | 100% | ஏப்ரல் 2021 |
| | பொதி 2/துண்டம் B2A – பாதுக்கை - ஹொரணை 2132 kV TL இன் நிருமாணம் | 592 | 45% | ஏப்ரல் 2022 |
| | பொதி 2/துண்டம் B2B – ஹபரணை - வாழைச்சேனை 132 kV TL இன் 2 ஆவது cct. இழுத்துக்கட்டல் | 502 | 96% | சனவரி 2022 |
| | பொதி 3/துண்டம் A1 – கொழும்பு B GSS இன் நிருமாணம், கொழும்பு C – கொலன்னாவை வரையான 132 kV 800 sqmm கம்பிவட ஒற்றை உள்வரும் - வெளிச்செல்லும் இணைப்பு, கொழும்பு C மற்றும் கொலன்னாவை GSS இன் விருத்தியாக்கம் | 1,261 | 84% | மே 2022 |
| | பொதி 3/துண்டம் A2 – கொட்டுகொட, கொலன்னாவை, பாதுக்கை, ஹொரணை, தெஹிவளை மற்றும் மாதம்பே GSS இன் விருத்தியாக்கம் | 2,316 | 90% | மே 2022 |
| | பொதி 3/துண்டம் B – பியகம 220 / 33 kV GSS இன் நிருமாணம் மற்றும் பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம் | 1,540 | 99% | சனவரி 2022 |
| துணை மின்சார வழங்கல் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் செயற்றிட்டம் (SESRIP) | பொதி 7/துண்டம் A1 – பன்னிப்பிட்டிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 100 Mvar BSC இன் நிறுவல். | 1,104 | 71% | ஏப்ரல் 2022 |
| | பொதி 7/துண்டம் A2 - பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் நிலையான Var முறைமை (SVS) இன் நிறுவல். | 1,595 | 35.5% | அக்டோபர் 2022 |
| திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மின்வலுச் செயற்றிட்டம் | மிதவைக் களஞ்சியமும் மீள்வாயுவாக்கல் அலகும் (FSRU) மற்றும் நங்கூரமிடல் முறைமையும் அபிவிருத்தி | PPP | 28% | பெப்ரவரி 2024 |
| தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் EI செயற்றிட்டம் | பொதி 1 - 400 kV, 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாணம் | 13,003 | 50% | ஜூலை 2022 |
| | பொதி 2 - மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணமும் விருத்தியாக்கமும் | 7,418 | 59% | ஜூன் 2022 |
| | பொதி 3 - 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாணம் | 12,000 | 42% | ஜூன் 2022 |
| | பொதி 4 - தெஹிவளை, கல்கிசை மற்றும் பத்தரமுல்ல ஆகிய இடங்களில் முதன்மை உபமின் நிலையங்கள், விநியோக உபமின் நிலையங்கள் மற்றும் கம்பி வடங்களின் நிருமாணம் | 4,594 | 31% | செப்ரெம்பர் 2022 |
| பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் - 1 | கப்பல்துறை GS இன் நிருமாணம் மற்றும் கெரவலப்பிட்டிய, கட்டுநாயக்க, திருகோணமலை GSS இன் விருத்தியாக்கம் | 2,525 | 99.9% | நவெம்பர் 2021 |
| | கெஸ்பேவ மற்றும் களுத்துறை GSS இன் நிருமாணம், புதிய அநுராதபுரம், பழைய அநுராதபுரம் GSS இன் விருத்தியாக்கம் | 2,738 | 98% | பெப்ரவரி 2022 |
| | GDPEEIP: கட்டம் 2 - பொதி 9 : கெரவலப்பிட்டியில் 220 kV ஆளியிடல் நிலையம் | 2,910 | 34% | ஆகஸ்ட் 2022 |
| மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் கிளை | புதிய அநுராதபுரம் GS இல் 100 ஆஏயச மின் உலை மற்றும் மன்னார் GS இல் 50 MVar மின் உலைகளின் நிறுவல் | 1,463 | 97% | ஏப்ரல் 2022 |
| | வேகவத்தை மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் | 1,898 | 60% | ஜூலை 2022 |
| | ரந்தெனியவில் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்) 132 kV ஆளி முற்றத்தின் நிருமாணம் | 350 | 65% | ஜூன் 2022 |
| | மாதம்பே - அம்பாறை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள்நிருமாணம் | 3,206 | 4% | சனவரி 2025 |
| | விக்டோரியா - ரன்தம்பே 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 1,400 | 4% | டிசெம்பர் 2024 |
| | பூநகரி - கிளிநொச்சி 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 3,450 | 3% | டிசெம்பர் 2025 |

**அட்டவணை P1: 2021.12.31** இல் நடைபெற்றுக்கொண்டிருந்த மின் பரிமாற்ற அபிவிருத்திகளின் முன்னேற்றம்

| செயற்றிட்டம் | உப - செயற்றிட்டம் | கிரய மதிப்பீடு (ரூபா மில்லியன்) | நிலை |
|---|---|---|---|
| பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் - கட்டம் II | பொதி 8/ துண்டம் A - நடுக்குடா 220/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், ஆனியகந்த 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், சுன்னாகம் 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம். | 1,382 | வழங்கத் தயாராகவுள்ளது |
| | பொதி 8 / துண்டம் B - அம்பலாங்கொடை 132 / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், பன்னல 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கமும் 132/33 kV 31/5 MVA உதிரிப்பாக மின்மாற்றிகள் 2 இன் வழங்கலும் | 1,494 | |
| மின்சார வழங்கலின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் செயற்றிட்டம் (SESRIP) | பொதி 7- துண்டம் A3 - கொழும்பு நகர மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 124 MVr பிரிகலன் ஆளியிட்ட கொள்ளளவி வங்கிகளின் நிறுவல் மற்றும் துல்கிரிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் மீள - துல்லியமாக்கப்பட்ட பிரிகலன் ஆளியிட்ட கொள்ளளவி வங்கிகளை மாற்றீடு செய்தல் | 1,705 | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக காத்திருக்கப்படுகிறது. |
| துணை மின்சார வழங்கல் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் செயற்றிட்டம் (SESRIP) | பொதி 1 (துண்டம் A) - கலவான மற்றும் நீர்கொழும்பு 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணம் | 3,638 | நிதியுதவி இறுதி செய்யப்பட உள்ளது |
| | பொதி 1 (துண்டம் B) - மீரிகம 220 / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம், புதிய அநுராதபுரம் மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 220 kV மின்மார்க்க நுழைவு வழிகள், ஹம்பாந்தோட்டை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 132 kV மின்மார்க்க நுழைவு வழிகள் ஆகியவற்றின் நிருமாணமும் மாத்தறை 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கமும் | 4,655 | |
| | பொதி 2 (துண்டம் A) - 132 kV DC மாத்தறை - ஹம்பாந்தோட்டை மின் பரிமாற்ற மார்க்கத்தின் (77 km) நிருமாணம், 132 kV DC ஹம்பாந்தோட்டை - திஸ்ஸ மகாராம மின்பரிமாற்ற மார்க்கம் (23 km), 132 kV DC ஹொரணை - பாதுக்கை மின் பரிமாற்ற மார்க்கத்திலிருந்து ஹோமாகம மின்தொகுப்பு உபமின் நிலையம் வரை (8 km), 132 kV DC அம்பலாங்கொடை - காலி மின் பரிமாற்ற மார்க்கத்திலிருந்து பத்தேகம மின்தொகுப்பு உபமின் நிலையம் வரை (0.5 km), பிலியந்தலை GSS இன் UG கம்பிவட முனையத்திற்காக களனியில் கம்பிவட முனையக் கோபுரம் ஆகியவற்றின் நிருமாணம் | 4,396 | |
| | பொதி 2 (துண்டம் B) - பேலியகொடை 132/22 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்திற்கு 132 kV XLPE Cu நிலத்தடி கம்பிவடத்தின் நிருமாணம் | 200 | |
| | பொதி 3 - 132/33 kV திஸ்ஸமகாராம, பத்தேகம, ஹோமாகம, பேலியகொடை மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணம். | 2,045 | |
| | பொதி 4 -220 kV, DC புதிய அநுராதபுரம் - புதிய ஹபரணை மின் பரிமாற்ற மார்க்கம் (46 km), 132 kV குக்குளே - கலவான மின் பரிமாற்ற மார்க்கம், புதிய ஹபரணை - வெயாங்கொடை மின்பரிமாற்ற மார்க்கத்திலிருந்து மீரிகம மின்தொகுப்பு உபமின் நிலையம் வரையான (5 km) 220 kV மின் பரிமாற்ற மார்க்கம் ஆகியவற்றின் நிருமாணம். | 2,921 | |

அட்டவணை **P1: 2021.12.31** இல் நடைபெற்றுக்கொண்டிருந்த மின் பரிமாற்ற அபிவிருத்திகளின் முன்னேற்றம்



சுன்னாகம் மின்தொகுப்பு உபமின் நிலையம்

# சொத்துமு காமைத்துவப் பிரிவு

சொத்து முகாமைத்துவம் என்பது உட்கட்டமைப்பு அபிவிருத்தி உருமாற்றத்தின் ஒரு பகுதியாகும். இந்தப் பிரிவு இ.மி.ச. இன் பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி ஆகியன தொடர்பில் இ.மி.ச. இல் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. இந்தப் பிரிவு கீழே விபரிக்கப்பட்டவாறான ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது.

மனித வளங்களை உத்தமமான வகையில் பயன்படுத்துவதன் மூலம் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவின் முறையான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவது சொத்துகள் முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கிளையின் பொறுப்பாகும். ஊழியர்களின் மனிதவள மற்றும் நிறுவனத் தொழிற்பாடுகளைத் தவிர, கிளையானது இ.மி.ச. இன் சொத்து முகாமைத்துவம் தொடர்பான தொழிற்பாடுகளையும் கையாள்கிறது. இ.மி.ச. காணிகள் மற்றும் கட்டடங்களை சிறப்பான முறையில் முகாமை செய்வதும் பிரதான சட்டநியதித் தொழிற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் பிரதான நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக இருக்கின்ற வளங்கள் மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்துவதன் மூலம் மேலதிக வருமானமொன்றை ஈட்டுவதும் இந்தக் கிளையின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

இ.மி.ச. இன் பயிற்சிக் கிளையானது உயர்ந்தபட்ச கல்விச் சேவைகளை வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. மேலும், தற்போதைய மற்றும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அறிவு மற்றும் திறமைகளை வழங்குவதற்காக ஊழியர்களுக்கு தொடர் பயிற்சிகளை வழங்குகின்ற அதே வேளை அவர்களின் மனப்பான்மை விருத்தியைத் பேணுவதிலும் தோள்கொடுக்கிறது.

வேலைப்பட்டறை மற்றும் துணைச் சேவைகள் கிளையானது மின்வலு ஆலை அலகு, மின்தூக்கிகள் அலகு, காற்று பதனமாக்கி மற்றும் குளிர் பதனப்படுத்தல் அலகு மற்றும் மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகனக்கூட அலகு என நான்கு செயற்பாட்டு அலகுகளைக் கொண்டுள்ளதுடன் கோரிக்கையின் பேரில் இ.மி.ச. இன் உள்ளக மற்றும் வெளிவாரியான பழுதுபார்ப்புகள், பராமரிப்புகள் மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகிறது.

குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளையானது புதிய கட்டடங்களின் நிருமாணம், தற்போதிருக்கின்ற கட்டடங்கள்/ அலுவலகங்களின் புனரமைப்புகள்/விரிவாக்கங்கள் மற்றும் நாடு பூராகவும் உள்ள இ.மி.ச. இற்குச் சொந்தமான சுற்றுலா பங்களாக்கள் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தின் பராமரிப்பு ஆகியவற்றை கவனிக்கிறது. இந்தக் கிளை மிகப் பிந்தைய மென்பொருளைப் பயன்படுத்தி கட்டமைப்புசார் வடிவமைப்புகளையும் தொடர்புடைய வரைதல்களையும் மேற்கொள்வதற்காக அதற்குச் சொந்தமான கட்டமைப்புசார் வடிவமைப்பு அலகினையும் கொண்டிருக்கிறது. அத்துடன் IESL இன் நிறுவன அங்கத்துவத்திற்காக இ.மி.ச. இன் குடியியல் பொறியியலாளர்கள் இந்த அலகின் மூலம் பயிற்றுவிக்கப்படுகின்றனர். CW&B உடன் இணைக்கப்பட்டுள்ள வசதியளித்தல் முகாமை அலகானது தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் சுற்றுலா பங்களாக்களின் பராமரிப்பு வேலைகளை முன்னெடுப்பதற்கு பொறுப்புடையதாகும்.

விபத்துக்கள் மற்றும் காயமடையும் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலமும் ஊழியர்களிடையே சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் நிறுவனத்தினுள் பாதுகாப்புக் கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 2015 ஆம் ஆண்டில் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கிளை இ.மி.ச. இல் அமைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, இ.மி.ச. இன் சகல உயிர்கள் மற்றும் மின் பிறப்பாக்கல் பிரிவு, மின் பரிமாற்றப் பிரிவு, மின் விநியோகப் பிரிவு மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் பாதிப்புக்குள்ளாகக்கூடிய சகல ஆதனங்களினதும் பாதுகாப்பிற்குப் பொறுப்பான பாதுகாப்புப் பிரிவும் இந்தப் பிரிவின் கீழேயே இருக்கிறது.

### செயற்பாட்டுச் செயலாற்றுகை
### பயிற்சி

2021 ஆம் ஆண்டு ஏனைய ஆண்டுகளைப் போல இருக்கவில்லை. பயிற்சிக் கிளையானது கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக அதிகமான சவால்களை எதிர்கொண்டது. நோய்த் தொற்றுக்குப் பதிலளிக்குமுகமாக, பயிற்சிக் கிளையானது நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தொலைதூர மற்றும் நெகிழ்வு முறைக் கற்பித்தலுக்குத் திசைதிருப்பப்பட்டிருந்தது.



படம் A1: தலைமைத்துவ பயிற்சி நடத்தப்பட்டது கிஞ்சிகுனே பயிற்சி மையத்தில்

எவ்வாறாயினும், பல்வேறு வகைகளையும் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளை இந்த ஆண்டின் காலப்பகுதியில் விசேடமாக 2021 மே மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட நோய்த் தொற்றின் வீரியம் காரணமாக மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. மேலும், களச் சேவை ஊழியர்களுக்கு வழங்க வேண்டியிருந்த பயிற்சிகளை, நிலையத்தில் பௌதிக ரீதியாக மேற்கொள்ள வேண்டிய செய்முறைச் செயலமர்வுகளில் ஈடுபட்டதன் காரணமாக ஒழுங்கு செய்ய முடியவில்லை.

பிலியந்தலை, கலவான மற்றும் கிஞ்சிகுண விடுதிக் கட்டடங்கள், இந்தக் காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக கோவிட் நோயாளர் பராமரிப்புக்கான இடைத்தங்கல் நிலையங்களாக மாற்றப்பட்டன. இதனால்கூட இந்த நிலையங்களில் பயிற்சிகளை ஒழுங்கமைக்க முடியாமற் போனது.




படம் A2: TCP இல் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்கள்




உரு A3 : TCP இல் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்




உரு A7: ஊழியர்களின் வெளிநாட்டு விஜயங்கள்




உரு A4 : TCC இல் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட வகைகள்




உரு A5: TCC இல் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்




உரு A6: TCC இல் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட வகைகள்

**அவசர தேவைக்காக வைத்திருக்கப்படும் டீசல் மின்பிறப்பாக்கியின் பராமரிப்பும் வாடகைக்கமர்த்தலும்**

| பணியின் வகை | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் (ரூபா மில்.) |
|---|---|---|
| அவசர தேவைக்காக வைத்திருக்கப்படும் டீசல் மின்பிறப்பாக்கியிறன் வருடாந்தப் பராமரிப்பு | 87 | 133 |
| டீசல் மின்பிறப்பாக்கிகளின் பழுதுபார்ப்பு/ புனரமைப்பு | 86 | 72 |
| இ.மி.ச. இன் தேவைக்காக டீசல் மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கமர்த்தல் | 72 | 42 |
| டீசல் மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கமர்த்தல் - தனியார், சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு, பிரதம மந்திரியின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஏனைய 3 ஆந் தரப்பு | 58 | 94 |
| ஏனைய பணிகள் | 26 | 15 |
| மின்வலு ஆலைகளின் அலகிற்குச் சொந்தமான மின்பிறப்பாக்கிகளில் செய்யப்பட்ட பராமரிப்பு | 31 | 19 |
| **மொத்தம்** | **360** | **375** |

**காற்று பதனமாக்கி மற்றும் குளிரூட்டல்களின் நிறுவல், பழுதுபார்ப்புகள் மற்றும் புனரமைப்புகள்**

| பணி வகை | வெளிவாரி | | உள்வாரி | |
|---|---|---|---|---|
| | எ/கை | பெறுமதி மில். இல. ரூபா | எ/கை | பெறுமதி மில். இல. ரூபா |
| வருடாந்த பராமரிப்பு | 34 | 247.2 | 299 | 68.4 |
| புதிய நிறுவல்கள் | - | - | 25 | 12 |
| பழுதுபார்ப்பும் புனரமைப்பும் | 5 | 1.8 | 26 | 3.3 |
| **மொத்தம்** | 39 | 249.0 | 350 | 83.7 |



உரு 8 : கோவிட்-19 இன்போது கண்டி வைத்தியசாலையின் பிணவறை குளிரூட்டியின் பராமரிப்பு

## மின்தூக்கிகளின் நிறுவல், பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு

| பணி வகை | வெளிவாரியான | | உள்வாரியான | |
|---|---|---|---|---|
| | எ/கை | பெறுமதி (மில். ரூபா) | எ/கை | பெறுமதி (மில். ரூபா) |
| வருடாந்தப் பராமரிப்பு | 22 | 27 | 11 | 4.4 |
| புதிய நிறுவல் | - | - | 1 | 7.9 |
| பழுதுபார்ப்பும் புனரமைப்புகளும் | 6 | 1.9 | 9 | 2.7 |
| ஏனையவை (சோதனைகளும் ஆலோசனைகளும்) | - | - | - | - |
| **மொத்தம்** | 28 | 28.9 | 21 | 15 |

## உருவாக்கங்கள், உற்பத்திகள் மற்றும் வாகன பழுதுபார்ப்புகள

| பணி வகை | பணி விபரம் | பணிகளின் எ/கை | பெறுமதி (மில். ரூபா) |
|---|---|---|---|
| இயந்திரவியல் | தெரு விளக்கு வெளிச்சத்திற்கான உருவாக்க வேலைகள், டீசல் மின் பிறப்பாக்கிகளுக்கான பாதை வளிச்சீராக்கி, நொதுமல் மின்னோட்ட மின்மாற்றிகளின் கட்டமைப்பு, இ.மி.ச. தலைமையகத்தில் மேற்கூரை சூரியவலு சக்திக்கான உருக்கிலான ஏணி. | 07 | 3.6 |
| மின்னியல் | பிறப்பாக்கல் பிரிவின் சபுகஸ்கந்த மின்வலு நிலைய மின் மோட்டர்களின் மீள்சுற்று | 28 | 2.7 |
| உற்பத்தி | மின் பரிமாற்றப் பிரிவுக்கும் விநியோகப் பிரிவுகளுக்கும் கல்வனைசுப்படுத்தப்படாத D தாங்குசட்டங்கள் மற்றும் அலுமினிய பற்றுகருவிகளின் உற்பத்தி | 24 | 16.6 |
| **வாகனப் பழுதுபார்ப்பு/ சுத்திகரிப்பு** | இ.மி.ச. வாகனங்களின் எஞ்ஜின் முழுமைத்திருத்தம், ஓட்டப் பழுதுபார்ப்புகள், வாகன உடலின் ஓட்டை உடைசல் அடைத்தல், சுத்திகரிப்பு மற்றும் தீந்தை பூசுதல். | 305 | 14.7 |
| **மொத்தம்** | | | **37.6** |

## கட்டட நிருமாணங்கள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள்

| விபரம் | பெறுமதி (மில்.ரூபா) |
|---|---|
| இ.மி.ச. தலைமை அலுவலக நிருமாணமும் புதுப்பிப்பும் | 70 |
| பொலநறுவையில் பிரதேச அலுவலகத்தின் நிருமாணம் | 100 |
| கொலன்னாவையில் இ.மி.ச. வளாகங்களில் நிருமாணமும் புனரமைப்புகளும் | 39 |
| **மொத்தம்** | **209** |



உரு A9: பொலநறுவை பிரதேச அலுவலகம்

## தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய பயிற்சிகள்

| பங்குபற்றியோர் வகை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| கள உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுநர்களும் அதனோடிணைந்த சேவை வகுதியினரும் | 11 | 444 |
| மின்வலு நிலையப் பணியாளர்கள் | 02 | 74 |
| **மொத்தம்** | 13 | 518 |

## பாதுகாப்புப் பரிசீலனைகள்

| பிரிவு | பரிசீலிக்கப்பட்ட முதன்மை உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | பரிசீலிக்கப்பட்ட தாங்குசட்டங்களின் எண்ணிக்கை | பரிசீலிக்கப்பட்ட நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | - | 04 | - |
| விநியோகப் பிரிவு 2 | 01 | 07 | - |
| விநியோகப் பிரிவு 3 | - | 05 | 01 |
| விநியோகப் பிரிவு 4 | 01 | - | 01 |
| **மொத்தம்** | 02 | 16 | 02 |

## விபத்துகள் பற்றிய பொழிப்பு



## முக்கிய நிகழ்வுகள்

- 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற செயற்பாடுகளின் முக்கிய நிகழ்வுகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- இ.மி.ச. இற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்கள் பற்றிய சொத்துப் பதிவேடுகளின் தயாரிப்பு மற்றும் இ.மி.ச. காணி மற்றும் கட்டடங்கள் பற்றிய தரவுத்தளத்தின் இற்றைப்படுத்தலும் பராமரிப்பும். 2021 ஆம் ஆண்டில், மின் பிறப்பாக்கல் பிரிவில் 1710 துண்டங்களும், விநியோகப் பிரிவுகளில் 05 துண்டங்களும் இனங்காணப்பட்டதுடன் மொத்தமாக மின் பிறப்பாக்கல் பிரிவில் 2766 உம் ஏனைய பிரிவுகளில் 1013 உம் இனங்காணப்பட்டுள்ளன.

- சகல இ.மி.ச. மாகாணங்களிலும் அதிகாரமளிக்கப்பட்ட பாவனைக்கான நுழைவு அணுகலுக்கு காணி தொடர்பான தரவுகளை சேமிப்பதற்கு வலையமைப்பு அடிப்படையிலான CEBAssist தரவு முகாமைத்துவ முறைமைக்கு அர்ப்பணிக்கப்பட்ட நுழைவு தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது இறுதிப் பயனர் மட்டத்திலிருந்து காணி தொடர்பான தரவுகளைச் சேமிப்பதற்கு வசதியளிக்கிறது.

- இ.மி.ச. இன் நீர்த் தேக்கங்கள் மிதவை விமானங்களின் இயக்கம் மற்றும் படகுச் சேவைகள் போன்ற சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. காசல்றீ நீர்த் தேக்கத்தில் படகுச் சேவை மற்றும் மிதவை விமானங்களை இயக்குவதற்காக வரையறுக்கப்பட்ட MJF ஹோல்டிங்ஸ் கம்பனி மற்றும் சப்ரோன் ஏவியேஷன் ஆகியவற்றுடன் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

- காணி அமைச்சுடன் நடத்தப்பட்ட பல கலந்துரையாடல்களுடன், காசல்றீ நீர்த்தேக்க வளாகங்களில் அரசாங்க மின் திணைக்களத்திடமிருந்து இ.மி.ச. இற்கு மாற்றப்பட்ட காணிகள் மீள் வரையறை செய்யப்பட்டன. வளாகத்திலுள்ள அதிகாரமளிக்கப்படாத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் காசல்றீ வளாகத்தில் சமுதாய ஆய்வும் பூர்த்தி செய்யப்பட்டது.



# நிறுவன உபாயப் பிரிவு

இ.மி.ச. இன் நிறுவன உபாயப் பிரிவானது மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்) ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. இது வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை, நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் கிளை, தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்திக் கிளை, தகவல் தொழில்நுட்பக் கிளை, ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை என ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிளையும் ஒரு பிரதிப் பொது முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு கிளையினதும் செயலாற்றுகைகள் கீழே குறிப்பிடப்படுகின்றன. நிறுவன வளத் திட்டமிடல் (ERP) செயற்றிட்டமானது செயற்றிட்டப் பணிப்பாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. இதுவும் மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்) இன் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகிறது.

இ.மி.ச. இன் அவசியமான வணிக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான உபாயங்களை அமைத்தல், வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் (B&OS) கிளையின் முதன்மையான பொறுப்பு ஆகும். நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்புவதும் உயர்த்துவதும்கூட B&OS கிளையின் நோக்கெல்லையின் கீழ் வருகிறது. மேலும், நிறுவனத் திட்டத்தில் (2019 – 2023) குறிப்பிடப்பட்டுள்ள உபாயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நிறுவனத்தின் செயற்பாட்டைக் கண்காணிப்பதும் பிரதான நடவடிக்கைகளினும் அடங்குகிறது. இ.மி.ச நிறுவனத்தின் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளைக் (KPI's) கண்காணித்தலும் மீளாய்வு செய்தலும் இ.மி.ச. இன் நிறுவனத் திட்டம் 2019-2023 இன் வரிசையில் பிரதான நடவடிக்கைகளாக உள்ளன. நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்பி, நிலைபேறானதாகப் பேணுவது தொடர்பான நடவடிக்கைகளுக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உபாயத் தொடர்பாடல் அலகினை (SCU) இந்தக் கிளை உருவாக்கியுள்ளது. நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் வடிவமைக்கப்பட்ட நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள் DCU உருவானதைத் தொடர்ந்து வெளியிடப்பட்டன. B&OS கிளையின் பிரசித்தப்படுத்தல் அலகானது ஊடகங்கள், அச்சு மற்றும் விளம்பர நிறுவனங்கள், மற்றும் முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்துள்ளது.

நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் (CS&RA) கிளையானது இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோக உரிமங்கள், உரிமதாரர்கள் அதே போன்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஆகியவற்றிலிருந்து எழுகின்றதும் அவை தொடர்பானதுமான விடயங்களை ஒருங்கிணைக்கிறது ஒழுங்குபடுத்தல் அலுவல்களைக் கையாள்வதற்கு மேலதிகமாக, இந்தக் கிளையானது ஆய்வுகள் மற்றும் பிரச்சினைகளுடன் தொடர்புடைய விதிப்பனவுகளை நடைமுறைப்படுத்தி கையாள்வதற்கும் பொறுப்பாக இருக்கிறது. இக்கிளையானது இ.மி.ச. இன் நிறுவன உபாய உருவாக்கத்தையும் ஒருங்கிணைக்கிறது.

தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்திக் (FS&PD) கிளையானது இ.மி.ச. இன் தொழிற்பாட்டு உபாயங்களின் அபிவிருத்தி, கொள்கை மற்றும் செயன்முறை அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுகிறது. சகல முறைமைகளும் நடைமுறைகளும் ஆவணப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட செயற்பாட்டு மற்றும் தொழிற்பாட்டுக் கையேடுகளுடன் கூட்டிணைக்கப்படுவதை உறுதிசெய்வது இக்கிளையின் பொறுப்பாகும்.

வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியைக் கொண்டுவருவதற்காக இ.மி.ச. இன் வணிகச் செயன்முறைகளை விளங்கிக் கொள்ளும் நோக்கில் அவற்றை பொருத்தமான தொழில்நுட்பத்துடன் சீரமைப்பதற்கு தகவல் தொழில்நுட்பக் கிளை பொறுப்பாக இருக்கிறது. நிறுவனத்திற்கான டிஜிடல்மயப்படுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு IT கிளையானது நான்கு உபாயங்களைப் பயன்படுத்துகிறது. அவையாவன, உள்ளக ரீதியான அபிவிருத்தி, நிறுவனத் தேவைகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட உடனடியாகப் பெறக்கூடிய பொருட்கள், IT கிளைக்கு வெளியே இருந்தான அபிவிருத்திகள், புத்தாக்கங்களைப் பின்பற்றுதல் மற்றும் வெளிமூலமிடுதல் என்பனவாகும்.

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் (R&D) கிளையானது கேள்விப் பக்க முகாமைத்துவ அலகு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு மற்றும் ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அத்துடன் 2020 ஆம் ஆண்டில் கட்டுநாயக்கா திறன் மானியிடல் கட்டம் 2 செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு செயற்றிட்ட முகாமைத்துவ அலகு (PMU) அமைக்கப்பட்டது. R&D கிளையும் RCL ஆய்வுகூடமும் 2021 டிசெம்பரில் கொலன்னாவைக்கு இடமாற்றப்பட்டது.

### முக்கிய நிகழ்வுகள்

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன :

– இ.மி.ச. இற்குச் சொந்தமான காணிகள் மற்றும் முக்கியமான பொது இடங்களிலுள்ள அலுவலகங்கள் என்பன இனங்காணப்பட்டு, பல்வேறு தலைப்புகள் மற்றும் வர்த்தகக் குறிகளை உள்ளடக்கிய வெளிப்புற விளம்பரப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்டன. அத்தகைய வெளிப்புற விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகள் முக்கியமாக CEB care App இனைப் பயன்படுத்துதல், CEB நிகழ்நிலை வசதிகளைப் பயன்படுத்துதல், மின் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுத் தெரிவுகள், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் சக்திக் காப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டவை ஆகும்.

– இ.மி.ச. இற்குச் சொந்தமான "you-tube" சனல் ஒன்று விருத்தி செய்யப்பட்டு, பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக சகல காணொளிகளும் அறிவூட்டுகின்ற ஆவணப்படங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டன.

– தேசிய இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு (NSDI) ஊடாக தகவல் மற்றும் தொடர்பாடல் முகவரமைப்பால் (ICTA) விருத்தி செய்யப்பட்ட இலங்கையின் தற்போதைய புவியியல் சார்ந்த தகவல் வரைபடத்தில் (Geoportal), மின் பரிமாற்ற மார்க்க வழித்தடங்களின் புவியியல் சார்ந்த தகவல்களை உள்ளடக்குவதற்கு PUCSL உடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது. இது பொதுமக்களின் பாதுகாப்பான வாழ்க்கை மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் பல நாட்டதாரர்களுக்குமிடையில் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது உள்ளிட்ட மின் பரிமாற்ற வலையமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் பொது மக்களுக்கு தற்போதுள்ள மின் பரிமாற்ற மார்க்கங்களின் புவியியல் சார்ந்த தகவல்களை அணுகுவதற்கு வழிவகுக்கிறது.

– விதிப்பனவு முறையியலின் திருத்தத்திற்காக PUCSL தொடங்கிய ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தற்போதுள்ள விதிப்பனவு நிர்ணயச் செயன்முறைகள் மற்றும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விதிப்பனவு முறையியல், ஒழுங்குமுறை கணக்கீட்டு முறைமைக்கு ஏற்ப உரிமதாரர்களால் செய்யப்படும் தாக்கல்கள் மற்றும் விதிப்பனவுத் தீர்மானங்களின் பகுப்பாய்வு ஆகியவை இந்த ஆய்வில் அடங்குகின்றன. இந்த ஆய்வினை பல ஆண்டு விதிப்பனவைத் தாக்கல் செய்வதற்கு முன்னர் PUCSL இனால் இறுதிப்படுத்தத் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், PUCSL இனால் திருத்தப்பட்ட முறையியலை உரிய நேரத்தில் நிறைவு செய்ய முடியாமற் போனதுடன், இறுதியாக அது 2021 அக்டோபரில் இ.மி.ச. இற்கு அனுப்பப்பட்டது.

– அனைத்து வகையான ஊழியர்களையும் உள்ளடக்கிய வகையில் இ.மி.ச. முழுவதும் 'மனித வளச் சோதனை' நடத்தப்பட்டது. இந்தச் சோதனையின் நோக்கம் இ.மி.ச. முழுவதும் காணப்படுகின்ற சகல வகைகளையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கையில் காணப்படும் மிகை மற்றும் பற்றாக்குறையை இனங்காண்பதும் நிறுவனச் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு அவர்களை மறு பகிர்வு செய்வதுமாகும். இந்த நடவடிக்கைக்கு இ.மி.ச. பணியாளர்களின் பயன்பாடு பற்றிய மிக ஆழமான பகுப்பாய்வு தேவைப்பட்டது. எனவே, விரிவான தரவுச் சேகரிப்பு, இற்றைப்படுத்தல், பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகளைச் செய்தல் ஆகியன இதில் உள்ளடக்கப்பட்டது. ஆண்டு முழுவதிற்கும் FS&PD கிளையிலுள்ள சகல வளங்களையும் பயன்படுத்த வேண்டுமென்று இந்த மதிப்பீடு தேவைப்படுத்தியது.

– வாடிக்கையாளர்களுக்கு இடையூறாகவும் இ.மி.ச. இற்கு மேந்தலையாகவும் இருந்த KIOSK கோபுரங்கள் மற்றும் NFC அட்டைக் கொடுப்பனவு முறைகளை முறைமையிலிருந்து நீக்கி, தற்போது இ.மி.ச. இற்குச் சொந்தமான EV மின்னூட்டிகளை இணைப்பதற்கு உள்ளமைவான மத்திய முறைமையொன்றை விருத்தி செய்தல். EV வாடிக்கையாளர்களுக்கு எப்பொழுதும், எங்கும், எந்தச் சாதன அணுகலுடனும் கிடைக்கக்கூடிய அனைத்து நிகழ் நேரக் கொடுப்பனவு முறைகளையும் வழங்குவதன் மூலம் இந்த முறைமையானது புதிய அனுபவத்தை கொண்டு வந்துள்ளது.

– தொழில்துறைக்கு இணையான, மெய்நிகராக்கப்பட்ட உட்கட்டமைப்பு அடுக்கினை நடைமுறைப்படுத்தல். புதிய மெய்நிகராக்கப்பட்ட தன்னியக்க வன்பொருள் தளமானது நம்பகமான வன்பொருள் சேவைகளை தவறு, சகிப்புத்தன்மை மற்றும் உயர் கிடைப்பனவுத் தன்மையுடன் உறுதி செய்கிறது.

– மின் தடை கோரிக்கைகள், மின் தடை திட்டமிடல், மின் தடை அட்டவணைப்படுத்தல் மற்றும் இ.மி.ச. உதவியுடன் புதிய மின் தடை திட்டமிடல் தொகுதியுடனான பணிச் செயன்முறைகளுக்கு அனுமதித்தில் ஆகியவற்றை டிஜிடல்மயப்படுத்தலும் தன்னியக்கப்படுத்தலும்.

– இன்போர்மிக்ஸ் தரவுத்தளத்தை புதிய பதிப்பு 14 இற்கு மேம்படுத்தல் மற்றும் நவீன வளர்ந்துவரும் தொழினுட்ப அடுக்குகளைச் சீரமைத்தல்.

– IT கிளையில் உள்ள அலகுகளுக்கான மரபுசார்ந்த முறைமைகளின் அடுத்த உள்ளக மறுசீரமைப்பு மற்றும் புதிய அம்சங்களின் அபிவிருத்திகள் ஆகியவற்றை வரையறுத்தலும் பிரித்தலும் மற்றும் நிறுவனத் திட்டத்தின் நடவடிக்கைகளுக்குள் அவற்றை ஒழுங்கமைத்தலும்.

– பயன்பாட்டிற்கான சுமை விபரத்தை கண்காணிப்பதற்கும் தன்னியக்கப்படுத்தப்பட்ட கட்டணப் பட்டியலிடல் செயன்முறைக்கும் வசதியளிப்பதற்காக ஹெட் எண்ட் முறைமை (HES) ஆனது உள்ளக ரீதியில் விருத்தி செய்யப்பட்டது. இதன் கட்டம் - I கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்டதுடன், அபிவிருத்தியானது ஒரு ஒருங்கிணைந்த மானித் தரவு முகாமைத்துவ முறைமை மற்றும் HES தீர்வாக விருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

– சபைக் கூட்டங்களுக்கான டிஜிடல் காப்பகத்தை இயக்குதல், சபைக் கூட்டங்களுக்கான BoardPAC ஒத்துழைப்புத் தளத்தை இயக்குதல்.

– CS&RA கிளையுடன் இணைந்து நிறுவனத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கையிடல் செயன்முறை ஆகியவற்றை தன்னியக்கப்படுத்துவதற்காக உள்ளக ரீதியில் விருத்தி செய்யப்பட்ட நுழைவு (portal). 2022 ஆம் ஆண்டிற்கான பயன்பாட்டு அளவிலான நடவடிக்கைத் திட்டமிடல் மற்றும் தடம் அறிதலுக்கு இந்த நுழைவு பயன்படுத்தப்படும்.

– கற்பிட்டி குடாநாட்டில் உள்ள விவசாயப் பிரதேசங்களில் மின் மாற்றிகளில் அதிக சுமை ஏற்றப்படுவது தொடர்பில் ஆய்வொன்று நடத்தப்பட்டது. தளப் பரிசீலனைகள், விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட இ.மி.ச. விநியோக அதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடல்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மின்மாற்றிகளின் தரவுப் பதிவுகள் மற்றும் வாடிக்கையாளர் சுமைகள் ஆகியவை ஊடாக ஆய்வு நடத்தப்பட்டது. இந்தத் தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவை, கேள்விப் பக்க முகாமைத்துவ (DSM) நடவடிக்கைகள் மற்றும் நிரம்பல் பக்க முகாமைத்துவ (SSM) நடவடிக்கைகளுக்கான நடைமுறைத் தீர்வுகளை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. DSM மற்றும் SSM நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, குறுகிய மற்றும் நீண்ட காலம் இரண்டையும் உள்ளடக்கிக் கருத்திற் கொள்ளப்பட்டது.

– சக்தி வினைத்திறனான வகையில் தெரு ஒளியூட்டப்படுவதை உறுதி செய்வதற்கு மேல் மாகாணம் தெற்கு II இலுள்ள ஹோமாகம பிரதேச HM55 உபமின் நிலையத்தில் தெருவுக்கு ஒளியூட்டும் முன்னோடிச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் 175 மின் ஒளிர்விப்பான்கள் பொருத்தப்பட்டன. ஒவ்வொரு மின் ஒளிர்விப்பானிலும் இரண்டு 9W LED விளக்குகள் இருக்கின்றன. இந்த ஒளிர்விப்பான்கள்கூட இ.மி.ச. இன் வேலைப் பட்டடையில் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

– CEPSI சர்வதேச மாநாட்டில் CEB பங்கேற்பை ஒருங்கிணைத்தது. அங்கு இ.மி.ச. நிறுவனத்தின் பல பிரிவுகளிலுமிருந்த பொறியியலாளர்களின் ஆக்கங்களின் கீழ் 10 முழுக் கட்டுரை சமர்ப்பிப்புகளை இ.மி.ச. அடையக்கூடியதாக இருந்தது.



உரு C1: சக்தி வினைத்திறனான தெரு ஒளியூட்டல்

– ANTE-LECO தனி நிலை திறன் சக்தி மானிகளுடன் நன்கு பொருந்தக்கூடிய தொடர்பாடல் தொகுதியொன்று உருவாக்கப்பட்டது. இது R&D கிளையினால் விருத்தி செய்யப்பட்ட ஹெட் எண்ட் முறைமையொன்றுடன் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது. 2021 இல், இந்தத் தொகுதி, இ.மி.ச. இன் IT கிளையினால் விருத்தி செய்யப்பட்ட ஹெட் எண்ட் முறைமையுடன் பணியாற்ற மேலும் மேம்படுத்தப்பட்டது. தற்போதைய வடிவமைப்பானது டைனமிக் IP சிம் அட்டைகளுடன் ஒப்பிடும்போது செயற்படுத்த அதிக விலை கொண்ட நிலையான IP சிம் அட்டைகளுக்கான

தேவை இல்லாமல் இரு வழித் தொடர்பாடலை ஆதரிக்கிறது. இந்த வடிவமைப்பு, இ.மி.ச. ஹெட் என்ட் முறைமையுடன் எந்தவொரு DLMS/COSEM இணக்கமான சக்தி மானியையும் இணைப்பதற்கு ஆதரவளிக்கிறது.

– கட்டுநாயக்கா திறன் மானியிடல் செயற்றிட்டம் - கட்டம் 2 இற்காக ஒரு PMU வடிவமைக்கப்பட்டுள்ளது. செயற்றிட்டம் நிறைவடைந்ததும், கட்டுநாயக்கா CSC பிரதேசத்திற்கு மானி வாசிப்பாளர்களோ, மின் துண்டிப்புக் குழுக்களோ தேவைப்படாது. ஏனெனில், தன்னியக்கமான மானி வாசிப்பு மற்றும் தொலைவியக்க மின் துண்டிப்பு வசதிகள் என்பன முறைமையின் முக்கிய நன்மைகளாகக் காணப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, மின் விநியோக உபமின் நிலைய கண்காணிப்பு முறைமை மற்றும் சுமை விபரங்கள் போன்ற பெறுமதி சேர் சேவைகள் என்பனவும் கிடைக்கப்பெறும். இ.மி.ச. இன் ERP செயற்றிட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படவுள்ள MDMS உடன் எதிர்காலத்தில் இந்த முறைமையை ஒருங்கிணைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் 2 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

– இ.மி.ச. இன் நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமை விருத்தி செய்யப்படுகிறது. இது முழு நிறுவனத்தினுள்ளும் தகவல்களை ஒருங்கிணைக்கின்ற நோக்கிலான தன்னியக்க வணிகச் செயன்முறையாக இருக்கும். மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம், மின் வநியோகம் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட சேவைகள் ஆகியவற்றிலிருந்து இது தனித்துவமான வணிகச் செயன்முறைகளாக ஒருங்கிணைக்கப்படும். இதனால் நிறுவனத்தினுள் அனைத்து மட்டங்களிலும் தகவல் பாயும்.

**சேவைகளுக்காகக் கிடைக்கப்பெற்ற அங்கீகாரங்கள் :**

CEB Assist இற்கு அதன் சிறப்பான தீர்வுகளுக்காக 2020/2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று முறை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. NBQSA – தேசிய ICT விருதுகள் 2021 இல் சிறந்த டிஜிடல்மயப்படுத்தல் செயன்முறை இயக்குநரின் வெற்றியாளராகவும், மிகச் சிறந்த ICT சாதனை விருது - பொதுத் துறை மற்றும் NBQSA - தேசிய ICT விருதுகள் 2020 இல் உள்ளக ரீதியான வகையில் வெள்ளி விருதும் கிடைக்கப் பெற்றுள்ளன.





கிளிநொச்சி - சுன்னாகம் மின் பரிமாற்ற மார்க்கம்

# நிதிசார் இடர் முகாமைத்துவம்

இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) என்பது மின் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகங்கள் தொடர்பில் நிதியல்லாத இடர்களுக்கு குறிப்பிடத்தக்க வெளிப்பாட்டைக் கொண்ட ஒரு பயன்பாட்டு நிறுவனமாகும். இ.மி.ச. கீழ்வரும் பரப்புதல் வழிகள் ஊடாக நிதிசார் இடர்களுக்கும் வெளிப்பாட்டைக் காட்டுகிறது :

1. இ.மி.ச. இன் வணிக மாதிரியானது மாறுபட்ட வட்டிச் செலவினங்களுக்கு வங்கிகள் மற்றும் நிதிச் சந்தைகளிலிருந்து பெறப்படுகின்ற கடன்கள் மீது அதிகமாகச் சார்ந்திருக்கிறது. இ.மி.ச. இன் வருமானமானது பிரதானமாக மின்சார வாடிக்கையாளர்களுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கிறது. இந்த மின்சார விற்பனைக்கான விதிப்பனவானது 2014 ஆம் ஆண்டிலிருந்து மாறாது காணப்படுகின்றது. எனவே, நிதிக்கான அதிகரிக்கப்பட்ட கிரயத்தை வருமானத்தின் ஊடாக அடையமுடியாதுள்ளதுடன் இது இடரொன்றை வெளிப்படுத்துகிறது. மேலும், இலங்கையின் கடன் நிலை / தரப்படுத்தல் மோசமடைந்து வருவதால் வெளிநாட்டு நாணயத்தில் நிதிக் கிரயம் அதிகரிக்கலாம். இதன் விளைவாக, இ.மி.ச. இன் கடன் தரப்படுத்தலும் குறையலாம். மாறாக, நிதிக் கிரயங்கள் குறைக்கப்பட்டால், இ.மி.ச. இலாப அதிகரிப்பினால் பயனடையும். சந்தை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டால், இ.மி.ச. இன் உரிமையாண்மை விகிதத்திற்கு கடன் குறைந்தால் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் கடன் பெற்றால், இலங்கை நாட்டினது தரப்படுத்தல் மேம்பாடடையுமாயின் நிதியிடல் கிரயம் குறைவடையும்.

2. நிலையான வீதக் கடன் பெறுகைகள்கூட முதிர்ச்சியின்போது திருப்பிச் செலுத்தப்படுவதற்குப் பதிலாக புதுப்பிக்கப்பட வாய்ப்புள்ளதால், ஒரு மாறும் கண்ணோட்டத்தில் வட்டி வீத இடருக்கு பங்களிப்புச் செய்கிறது என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். வட்டி வீத இடரானது முந்தைய கடன் பெறுகைகளை விடவும் அதிக சுழற்சி வீதங்களை விளைவாக்க முடியும்.

3. இ.மி.ச. இன் வணிக மாதிரியானது வெளிநாட்டு நாணயங்களில் கணிசமானளவு காசுப் பாய்வுகளை உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக, கடன் பெறுகைகள், பண்டங்களின் கொள்வனவு மற்றும் சேவைகளைப் பெறுதல் ஆகியன வெளிநாட்டு நாணயத்தில் சமான வருமானங்களைக் கொண்டிருக்காமல் இந்த வெளிப்பாய்வுகளை ஈடுசெய்யும் வகையில், இ.மி.ச. ஆனது அந்நியச் செலாவணி இடருக்கு ஆளாகிறது. இதனைக் கடந்து செல்ல முடியாது.

4. பிரதானமாக எரிபொருள், நிலக்கரிப் பாகங்கள் மற்றும் பொருள்கள் காரணமாக பண்ட இடர்களுக்கு இ.மி.ச. பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது. பண்டத்தின் விலைகள் அதிகரிக்குமாயின், அதிக கொள்வனவுக் கிரயத்தை இ.மி.ச. ஈடுகட்ட வேண்டும் அல்லது அது இலாபத்தில் வீழ்ச்சியான தாக்கத்தைக் காட்டும். இ.மி.ச. பின்பற்றுகின்ற பண்ட ஒப்பந்தத்தின் சாத்தியமான அதிகரிக்கப்பட்ட கொள்வனவுக் கிரயத்தை ஈடுகட்டுவதற்கு இ.மி.ச. அதன் விற்பனை விலைகளை அதிகரிக்க முடியாவிட்டால், நீண்டகால கொள்வனவு ஒப்பந்தங்கள்கூட பண்ட இடரொன்றை வெவளிக்காட்டும் என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

இ.மி.ச. இன் வணிக மாதிரி மற்றும் கட்டண முன்னறிவிப்பு இயலுமைகளில் எதிர்பாராத காசுப் பற்றாக்குறைகள் உள்ளடங்கும். அவை தற்காலிக அடிப்படையில் ஈடுகட்டப்பட வேண்டும். பற்றாக்குறையானது கணிசமான அளவிலும் ஈடுகட்ட கடினமானதாகவும் இருக்கலாம் அல்லது அபராத விகிதமொன்றில் மாத்திரம் ஈடுசெய்யக்கூடியதாக இருக்கலாம்.

இடர் முகாமைத்துவத்தின் நோக்கமானது எதிர்காலத்தில் வட்டி வீதங்கள், பரிமாற்று வீதங்கள் அல்லது பண்டத்தின் விலைகள் எங்கு இருக்கும் என்பதைத் துல்லியமாகக் கணிப்பதல்ல, மாறாக சாத்தியமான வட்டி வீதம், பரிமாற்ற வீதம் மற்றும் பண்டங்களின் விலை மாற்றங்கள் ஆகியவற்றின் ஒரு கற்றை மாதிரியை உருவாக்குவதும் இந்த மாற்றங்களது இ.மி.ச. இன் அடிமட்டத்தில் சாத்தியமான எதிர்மறை (அல்லது நேர்மறை) தாக்கங்களை அளவிடுவது என்பதை ஒப்புக்கொள்வது முக்கியமானதாகும்.

### நிதிசார் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்

பணிப்பாளர் சபையானது நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வுக்குப் பொறுப்பானதாகும். இருப்பினும், இ.மி.ச. இன் நிதி முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற மேலதிக நிதி முகாமையாளரால் தலைமைதாங்கப்படும் திறைசேரி முகாமைத்துவக் கிளையானது இ.மி.ச. இன் நிதிசார் இடர் முகாமைத்துவத்தில் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது.

### இடர் முகாமைத்துவச் செயன்முறை

இ.மி.ச. இன் நிதிசார் இடர் முகாமைத்துவச் செயன்முறை 7 படிமுறைகளைக் கொண்டுள்ளது:




**"இடரை இனங்காணல்"** என்பது ஒரு வருடாந்த மேலிருந்து கீழான செயன்முறை ஆகும். இந்தச் செயன்முறையானது இ.மி.ச. இன் இலாபம் மற்றும் நட்டத்தை அதன் பிரதான கூறுகளாகப் பிரித்து எந்தச் சந்தர்ப்பத்தில் வருமானம் குறைவாக இருக்கக்கூடும் என்பதையும் எந்தச் சந்தர்ப்பத்தில் செலவுகள் அதிகமாக இருக்கக்கூடும் என்பதை ஆராய்கிறது.

**இடரை அளவிடுதலில்** எந்தப் பரிவர்த்தனைகள் மற்றும் சூழ்நிலைகள் எதிர்பாராத அதிக வெளிப் பாய்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதை ஆராய்கிறது.

**"இடர் வேட்கை"** ஆனது பணிப்பாளர் சபை எடுக்க வசதியாகவிருக்கின்ற (இடர் கொள்ளளவு) இடரின் அளவை வரையறுக்கிறது. இது ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு, சபையினால் அங்கீகரிக்கப்படுகிறது. இடர் வேட்கை "வரையறை அமைத்தல்" ஊடாகச் செயல்படுகிறது. இது இடர் வேட்கையை முகாமிக்கக்கூடிய அளவுகளாக உடைத்து, குறிப்பிட்ட இடரை எதிர்கொள்பவர்கள் எவ்வளவு இடரை எதிர்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை வரையறுக்கிறது. ஒவ்வொரு நிறைவேற்றுத்தர வகைகளுக்கும் அதே போன்று பெறுகைக் குழுவின் பல்வேறு மட்டங்களுக்கும் நிதிசார் அதிகார எல்லைகளை நிறுவுவதற்கான சுற்றறிக்கைகள் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்றன. அதிக பெறுமதி மிக்க பரிமாற்றங்கள், அதிக இயல்திறனும் அதிக இடர்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டவர்களுமான உயர் அனுபவம் மற்றும் இயலுமை கொண்ட அதிகாரிகளால் நுணுகி ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது.

பரவலாக்கப்பட்ட இடரை எடுத்துக் கொள்ளல், ஆனால் ஒருமுகப்படுத்தப்பட்ட இடர் என்பது இ.மி.ச. இல் **'இடர் முகாமைத்துவத்தின்'** அடிப்படைக் கோட்பாடாகும். பல சிறியளவானவற்றையும்விட பெரியளவான இடர் தணிப்பு பரிவர்த்தனைகளினுள் உள்நுழைவதன் ஊடான அளவீட்டு பொருளாதாரங்கள் வெளிப்பாடுகளின் உயர்ந்தபட்ச எதிரீட்டிற்கான ஆற்றலின் அனுகூலங்கள் காரணமாக இடர் முகாமைத்துவம் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாளாந்த சேகரிப்புகளுடன் பொருந்துகின்ற நாளாந்தக் காசுத் தேவைகளை மதிப்பிடும் ஒவ்வொரு பிரிவினதும் வாராந்த காசுத் தேவைகள் நிதிப் பிரிவிலுள்ள கொடுப்பனவு அலகிற்கு ஏற்றப்படுகின்றன. அதற்கிணங்க, ஒட்டுமொத்த இ.மி.ச. இற்கும் தேவைப்படுகின்ற நிதி இனங்காணப்பட்டு, காசுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒவ்வொரு பிரிவுக்கும் அவர்களின் செலவுகளுக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்காகவும் சாதகமான வட்டி வீதங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகளுக்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

**"இடர் அறிக்கையிடல்"** என்பது இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்பட்ட உண்மையான இடர் பற்றி அடிக்கடி அறிக்கையிடுவதும் அதனைச் சமாளிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதுமாகும். நிதிசார் செயலாற்றுகை, நிதி நிலை மற்றும் காசுப் பாய்வுகளின் நகர்வுகள் குறித்த முற்றடக்கமான விளக்கங்களை வழங்குகின்ற மாதாந்த செயலாற்றுகை அறிக்கை நிதிப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு, சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், **இடர் கண்காணிப்புக்காக** மேற்படி பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட சாத்தியமான நிதிசார் இடர்கள் எடுத்தியம்பப்படுவதுடன் அதன் பரிந்துரைகளை பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கும் உதவுகிறது.

### நிதிசார் இடர் பகுப்பாய்வு

கோவிட் இனால் நடைமுறைப்படுத்தப்பட்ட முடக்க நிலை நீங்கி நாட்டில் புதிய இயல்புநிலை உருவாகியதுடன் வழக்கமான மின்சாரத் தேவை முறை நிறுவப்பட்டதுடன் குறைந்த மின்சார நுகர்வு காரணமாக திறைசேரி சேமிப்பு கரைந்து போனது. நுகர்வோரிடமிருந்தான குறைந்தளவு சேகரிப்பு மட்டத்துடன் உயர் வீதங்களில் அனல் மின் பிறப்பாக்கச் சக்திக் கொள்வனவுகளுக்கு நிதியளிப்பது நிறுவனத்திற்கு சவாலானதாகக் காணப்பட்டது. உலக நிலக்கரி விலை உயர்வால் திறைசேரி மேலும் நசுக்கப்பட்டது.

### வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை

இ.மி.ச. வெளிநாட்டு நாணயங்கள் கிடைக்காத பிரச்சினையையும் எதிர்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், திறைசேரியானது மக்கள் வங்கியைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, ஏனைய வங்கிகளுடனான வங்கித் தொடர்பினைப் பயன்படுத்தி அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியை வாங்கியதன் மூலம் நிலைமையை பெருமளவுக்கு சமாளித்திருந்தது. மேலும் அந்நியச் செலாவணி வெளிப்பாட்டைக் குறைப்பதன் மூலம் திறைசேரியானது முன்னுரிமையளித்து வெளிநாட்டுக் கொள்வனவுகளை குறைக்கும் நடவடிக்கையில் இறங்கியது.

### காசு மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம்

இ.மி.ச. அண்மைய ஆண்டுகளில் நிகர நட்டத்தைத் தொடர்ச்சியாக அறிக்கையிட்டிருந்தது. இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் காசு மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவமானது முக்கிய வகிபாகமொன்றை ஆற்றுகிறது. போட்டிச் சூழல்கள், நிறுவனங்கள் தமது சேகரிப்பு மற்றும் கொடுப்பனவுகளை மீள்பார்வையிடவும் அவற்றின் உள்ளகச் செயன்முறைகளை நியமப்படுத்தி, அதன் உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதன் மூலம் அதிநவீன காசு முகாமைத்துவத் தீர்வுகளை உருவாக்கவும் நிர்ப்பந்திக்கின்றன.

கோவிட் வைரஸின் பரவலுடன், வாடிக்கையாளர்களின் செலவழிக்கத்தக்க வருமானம் குறைந்து வருகிறது. மின் கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு சலுகைக் காலத்தை வழங்குதல் மற்றும் மின் கட்டணப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யாததன் காரணமாக மேற்கொள்ளப்படும் மின்துண்டிப்புகளை பிற்போடுதல் போன்ற அரசாங்கத்தின் தீர்மானமானது ஏற்கனவே தடைப்பட்டிருந்த காசுப் பாய்வுகளில் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எனவே, இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு திறைசேரி முகாமைத்துவ அணியின் பரிந்துரைகளுடன் பின்வரும் உத்திகளை சபை அங்கீகரித்திருந்தது.

- காசுப் பரிமாற்றங்களுக்கு கண்டிப்பான முன்னுரிமையளித்தல் மற்றும் மூலதனச் செலவுகளை அத்தியாவசியமாகக் கட்டுப்படுத்துதல் ஆகியவை கணிசமானளவு காசுப் பரிவர்த்தனைகளைக் கண்காணிக்க உதவும.
- MITFIN முறைமையில் உள்ள சென்மதித் தொகுதியின் தொழினுட்ப முன்னேற்றமானது எதிர்காலக் காசுத் தேவையை திட்டமிட உதவும் சபையின் நாளாந்த கடன் வெளிப்பாட்டை வழங்குகிறது.
- வழங்குநர்களின் கடன் காலத்தின் அதிகபட்சப் பயன்பாடு முன்னுரிமையளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான காசு இருப்பினை நீட்டித்தது.
- வட்டி வீதங்களைக் குறைப்பதற்காகவும் மீளச்செலுத்தல் காலத்தை நீடிப்பதற்காகவும் தற்போதைய கடன் தொகுதியை மறுசீரமைத்தல்.
- நிகழ்நிலை (ஒன்லைன்) சேகரிப்பு வசதிகளை விரிவாக்குவது வாடிக்கையாளர்களுக்கு இந்த நோய்ப் பரவல் சூழ்நிலையில் மின் கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதிக தெரிவுகளை வழங்குவதுடன் விற்பனை பெறுவனவுகளையும் உரிய நேரத்தில் சேகரிப்பதை மேம்படுத்துகிறது.
- போட்டி வட்டி வீதங்களை ஈர்ப்பதற்காக அரசாங்க வங்கிகளுக்குப் புறம்பாக தனியார் வர்த்தக வங்கிகளுக்கும் நிதியிடல் தெரிவுகள் விரிவாக்கப்பட்டன.
- நிதி நிலையை வலுப்படுத்துவதற்காக நிதி மீட்டல் மாதிரியை உருவாக்குதல

# தொழினுட்ப இடர் முகாமைத்துவம்

## இடரை இனங்காணல்

இ.மி.ச. இன் செயற்பாடுகளின் தன்மை மற்றும் மின்சார ஆபத்துகள் காரணமாக அதன் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக இடர் தணிப்பு நடைமுறைகள் காணப்படுகின்றன. தரம், நம்பகத்தன்மை மற்றும் சிக்கனத் தன்மை கொண்ட மின்சார வழங்குநர் ஒருவராக நிறுவனத்தின் முறையான தொழிற்பாட்டைப் பாதிக்கின்ற இடர்களை இலங்கை மின்சார சபை இனங்கண்டிருந்தது.

இடர்களை இனங்கண்டு, அவை நிகழ்வதற்கான வாய்ப்பு மற்றும் அளவு, அதன் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் ஆகியவற்றுக்கு இணங்க வகைப்படுத்தி, பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இனங்காணப்பட்டு, வகைப்படுத்தப்பட்ட அதிக பின்விளைவு கொண்ட சில இடர்கள் பற்றி திட்டமிடல் செயன்முறைகள், நிறுவனத் திட்டம், நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம், நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் மற்றும் பாதீடுகளில் சேர்க்கப்படுகின்றன. ஏனையவை பொறுப்பு வாய்ந்த பிரிவுகளால் அவசரகால நடைமுறைகளில் கையாளப்படுகின்றன.

## நிதிசார் இடரும் தொழினுட்பச் செயலாற்றுகை மீது அதன் தாக்கமும்

கிரயப் பிரதிபலிப்பு / கிரய மீட்பு விதிப்பனவைக் கொண்டிராதது அதிக பின்விளைவைக் கொண்ட இடர் காரணி ஒன்றாகும். அந்த இடர் நிதிச் செயலாற்றுகையை மாத்திரமின்றி தொழினுட்பச் செயலாற்றுகையையும்கூட பாதித்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 30(2)(b) இன் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் அனைத்து நியாயமான செலவுகளையும் மீட்பதற்கு இ.மி.ச. அனுமதிக்கப்படுகிறது. அந்தச் சரத்தானது, இ.மி.ச. தனது அதிகாரமளிக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளை நிதி ரீதியாக சாத்தியமான முறையில் தொடர முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், கிரய மீட்பு விதிப்பனவு ஒன்றைக் கொண்டிராமை, இ.மி.ச. அதன் முக்கிய தொழிற்பாடுகளை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் ஆற்ற முடியாமலிருக்கின்ற இடரை அதிகரித்திருந்தது.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பகுதி V இன் கீழ், இ.மி.ச. தனது கிரயங்களை மீட்பதற்காக விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்களை வகுத்தமைப்பதற்கு அதிகாரத்தைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அதிகாரம் இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்டு, ஒழுங்குபடுத்துநரான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (PUCSL) அவ்வதிகாரம் வழங்கப்பட்டது. நாடு முழுவதும் ஒரே சீரான தேசிய விதிப்பனவை (UNT) அரசு கொள்கையாகக் கொண்டிருப்பதால், UNT நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் சகல நுகர்வோருக்கும் ஏற்புடைய வகையில் இறுதிப் பயனர் விதிப்பனவு அட்டவணையை நிர்ணயிப்பது PUCSL இன் பொறுப்பாகும். ஒரு தனி உரிமதாரர் அவ்வாறு செய்ய முடியாது. இருப்பினும், 2014 இல் விதிப்பனவில் குறைப்பொன்று செய்யப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து இறுதிப் பயனர் விதிப்பனவில் அதிகரிப்பு எதுவும் செய்யப்படவில்லை. குறைந்த கிரய மின்வலு ஆலைகளை நிருமாணிப்பதற்கான இயலாமைகூட நிதிசார் நட்டத்தை அதிகப்படுத்தியது. திரவநிலை இயற்கை எரிவாயுவின் (LNG) அறிமுகப்படுத்தலுடன், இ.மி.ச. மின் பிறப்பாக்கல் கிரயத்தில் சில குறைப்புகளை எதிர்பார்த்தது. எனினும், LNG யுடனும்கூட இ.மி.ச. இன் வருவாய், விதிப்பனவு அதிகரிப்பு அல்லது மானியங்களின் வழங்கல் மூலமான அரசாங்கத்தின் தலையீடு இன்றி கிரய மீட்பு மட்டத்தை அடையுமென எதிர்பார்க்க முடியவில்லை.

அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளால் தேவைப்படும் மானியத்தை மீளளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இ.மி.ச. இன்று வரை தொடர்ந்தும் PUCSL ஐக் கோருகிறது.

## போதுமானதல்லாத பிறப்பாக்கல் கொள்ளளவு இடர்

இ.மி.ச. இன் நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டங்களில் அடையாளம் காணப்பட்டவாறான மின்வலுக் கொள்ளளவுகள் (நீண்ட காலத் தேவைகள் மற்றும் நடுத்தர கால நிறுத்த இடைவெளி தேவைகள் ஆகிய இரண்டிற்குமான) திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் இ.மி.ச. விரும்பியதைவிட குறைந்த ஒதுக்கக் கொள்ளளவு எல்லையுடன் இயங்குகிறது. திட்டமிடப்பட்ட பிறப்பாக்கல் சேர்க்கைகளை உரிய நேரத்தில் நிருமாணிக்க முடியாமையானது ஒரு பாதகமான சுழற்சியை உருவாக்குகிறது. குறைந்த ஒதுக்க எல்லையானது தற்போதுள்ள மின்வலு ஆலைகளை தடுப்புப் பராமரிப்பு அல்லது வேறு வழக்கமான பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக அட்டவணைப்படி எடுப்பதிலிருந்து தடுக்கிறது. அது இயந்திரங்களின் நம்பகத்தன்மையைப் பாதிப்பதுடன் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு கிடைக்கக்கூடிய கொள்ளளவை மேலும் குறைக்கிறது. ஒதுக்கக் கொள்ளளவின் பற்றாக்குறையானது ஒரு பெரிய ஆலையின் நாள்பட்ட செயலிழப்பின் போது கைமுறையாக சுமை உதிர்தலுக்கு வழிவகுக்கிறது. மேலும், முறைமையில் போதுமானதல்லாத ஒதுக்க பிறப்பாக்கல் கொள்ளளவு காரணமாக நீண்ட வறட்சியான காலங்களிலும் அல்லது ஒரு பெரிய பிறப்பாக்கல் அலகின் செயலிழப்பின் போதும் அவ்வப்போது இ.மி.ச. இற்கு குறுகிய கால குறைநிரப்பு மின்வலுவைப் பெறுவதற்குக் காரணமாக அமைகிறது.

## வலையமைப்பு விரிவாக்கல் இடர் - வலையமைப்பு விரிவாக்கத்தின் தாமதம்

எதிர்கால மின்வலு ஆலைகளிலிருந்து மின்வலுவைக் காவுவதற்கும் மிகவும் நம்பகரமான முறையில் அதிகரிக்கின்ற சக்திக் கேள்விகளுக்கு அதனை வழங்குவதற்குமான உயர், இடைநிலை மற்றும் தாழ் மின்னழுத்தங்களுக்கான வலையமைப்பு விரிவாக்கங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இவை புதிய மின் பரிமாற்ற மற்றும் விநியோகச் சுற்றுக்களை நிருமாணித்தல், புதிய உபமின் நிலையங்களை விருத்தி செய்தல் / நிருமாணித்தல், மின்தொகுப்பின் தரத்தை மேம்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்குகிறது. மின் பிறப்பாக்கல் ஆலைகளிலிருந்து மின்வலுவை வெளியெடுப்பதற்கு புதிய மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணிப்பது மின் பிறப்பாக்கல் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும். முந்தையவற்றின் தாமதம் பிந்தையவற்றிலிருந்து மின்வலுவை வெளியெடுப்பதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன், 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சேவையில் இருக்கின்ற இடைநிலை மட்ட மின்னழுத்த வலையமைப்பில் உள்ள கச்சிதமாக எரிவாயு காப்பிடப்பட்ட உபமின் நிலையங்கள் உள்ளிட்ட சில சொடுக்கிபல்லினைகளின் (சுவிட்ச்கியர்) நம்பகத்தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு நேரம் வந்துள்ளது. நீர் வழங்கல், பெற்றோலியம் மற்றும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் பகுதிகள் போன்ற தொழில்துறைகளுக்கு முக்கிய பயன்பாட்டுச் சேவையை வழங்குகின்ற அத்தகைய உபமின் நிலையங்களின் நம்பகத்தன்மையானது அந்தப் பிரதான சேவைகள் மற்றும் தொழில்துறைகளுக்கான தடையற்ற மின் வழங்கலை உறுதி செய்வதற்கு மாற்று மின்வலு வழங்கல் தெரிவுகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை அறிய புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். மேலும், மின்தொகுப்பு நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு மாற்றீடு செய்யப்பட வேண்டிய வயதான மின்தொகுப்பு உபகரணங்களும் காணப்படுகின்றன. அத்தகைய மாற்றீடுகளுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதும் மின் பிறப்பாக்கம் மற்றும் பரிமாற்ற வலையமைப்புகளில் இருப்பு இல்லாத மற்றும் தேவையற்ற திறன் ஆகியவற்றுக்கிடையிலான வேலைகளைச் செய்வதற்கான மின் தடங்கல்களைப் பெற்றுக் கொள்வதும் கடுமையான சவால் மிகுந்ததாகவும் இடர் மிகுந்த ஒன்றாகவும் கருதப்படுகிறது. இந்த வலையமைப்பு உபகரணங்கள் சிலவற்றில் கிடைக்காமையுடன் இணைந்த இடர்கள், தோல்வி நிகழ்வுகளை முன்கூட்டியே அறிய உதவுகின்ற தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஊடாக ஒரு அளவிற்குக் குறைக்கப்படுகின்றன. இதனால் கால

தாமதமின்றி அல்லது எந்தவொரு அனர்த்தத்தையும் ஏற்படுத்தாமல் சீக்கிரம் சரிசெய்யும் நடவடிக்கைகள் தொடங்கப்பட முடியும்.

### மனித வள இடர் - திறன்மிக்க மற்றும் ஊக்கமளிக்கப்பட்ட வேலைப் படையொன்றைப் பராமரிப்பதில் உள்ள சவால்கள்

திறன்மிக்க வேலைப்படையைக் கொண்டிருப்பது அருவச் சொத்து ஒன்றாக இருப்பதுடன் இது வலையமைப்பு உபகரணத்தின் சிறந்த பராமரிப்புக்கு முக்கியமானதாகும். தேசத்திற்கான தரமான சேவையை வழங்க நினைக்கும் இ.மி.ச. இன் முக்கிய வணிகத்தைப் பேணுவதற்கு பணியாளர் ஊக்கம் முக்கியமானதாகும். அத்துடன், தொழில்துறைப் பிணக்குகளைத் தவிர்ப்பதற்கு ஊழியர் திருப்தி பிரதானமானதாகும். இ.மி.ச. தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலைப் பயிற்சி ஊடாக ஒரு திறன்மிக்க வேலைப்படையை பேணுகிறது. குறிப்பிட்ட சில வேலைத் தொழிற்பாடுகளின் உயர் விசேடத்துவத் தன்மையைக் கருத்திற் கொண்டு, முக்கிய தொழில்நுட்பக் துறைகளில் நிபுணத்துவத்தைத் தக்கவைக்கும் நோக்கில் பாரம்பரிய மாற்றக் கொள்கையின் புதிய எதிர்காலம் பற்றிப் பார்க்கப்படுகிறது.

### கடன் வழங்கும் முகவராண்மைகளிடமிருந்து கிடைக்கம் அழுத்தம் காரணமாக முன்னுரிமைப் பிரதேசங்களிலிருந்து திசைதிருப்பப்படும் நிதிகளின் இடர்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ், சபையின் சேவைகளின் அபிவிருத்திக் கிரயத்தின் நியாயமான விகிதத்தை நிறைவேற்றுவதற்கு சபையின் வருவாய் போதுமானதாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் கடமை சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், அத்தகைய நிதிகளைப் பெறுவதற்கு இ.மி.ச. இற்கு கிடைக்கப்பெற்ற “கருவி” அதாவது விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கின்ற அதிகாரம், 2009 இல் இ.மி.ச. இடமிருந்து எடுக்கப்பட்டதுடன் அது இலங்கை மின்சாரச் சட்டத்தின் மூலம் PUCSL இடம் கையளிக்கப்பட்டது. சொந்த நிதிகள் கிடைக்காமை என்பது மின் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் மின் பரிமாற்ற / விநியோக வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டங்களுக்கு, குறிப்பாக சர்வதேச நிதிகளைப் பெற முடியாத ஒரு பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகிறது. மின்வலுத் துறையின் முதலீட்டுத் தீர்மானங்கள் மின்சாரத்திற்கான கேள்வி, மாறிவரும் அரசாங்கக் கொள்கைகள், நாட்டதாரர்களின் எதிர்பார்ப்புகள், வழங்கல் சங்கிலிப் பிரச்சினைகள், வணிக ஒருங்கிணைப்புகள் அதே போன்று காலநிலை தொடர்பான கொள்கைகளில் இருந்தான அழுத்தங்கள் உள்ளிட்ட சிக்கலான காரணிகளின் ஒரு கலவையால் வடிவமைக்கப்படுகின்றன. புதைபடிவ எரிபொருட்கள், அரசுக்குச் சொந்தமான பயன்பாட்டுக் கட்டமைப்புக்கள் போன்றவற்றைப் பற்றிய உலகின் மாறுபட்ட பார்வைகளைப் பூர்த்தி செய்ய நிதி வழங்கும் நிறுவனங்களும் தங்கள் சொந்த நிதிக் கொள்கைகளை உருவாக்கியுள்ளன. இதனால், இ.மி.ச. இன் உண்மையான தேவையை விட நிதி வழங்கும் நிறுவனங்களின் கொள்கைகளை நிறைவேற்றும் பகுதிகளுக்கு மாத்திரமே நிதி கிடைக்கப்பெறுகிறது.

கடன் உடன்படிக்கைகள் வாயிலாக நிபந்தனைகளை வலியுறுத்துவது, முன்னுரிமைப் பகுதிகளைக் காட்டிலும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கத் தயாராக இருக்கின்ற பகுதிகளுக்கு வரையறுக்கப்பட்ட கடன் பெறுகை வெளியைப் பயன்படுத்தவும் நிறுவனத்தை கட்டாயப்படுத்தியுள்ளன.

### பொதுக் கருத்து இடரும் பயன்பாட்டுத் திட்டங்களுக்கான சவால்களும்

நாட்டின் மொத்தச் சக்திப் பயன்பாட்டில் மின்சாரத்தின் பங்கு 12% மாத்திரமே. ஆயினும்கூட, மின்சாரத் துறையானது ஊடகங்கள், அரசசாரா நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அழுத்தக் குழுக்கள் போன்றவற்றிலிருந்து அதிக கவனத்தை ஈர்க்கிறது. இது, 88% மீதமுள்ளதைவிட அதிக வர்த்தக நாட்டம் காரணமாக இருக்கலாம். மின்வலு முறைமை என்பது மிகவும் விசேடத்துவம் மிக்க ஒரு விடயமாகும். இது பெரும்பாலும் பொதுமக்களுக்கு மட்டுமன்றி அடிப்படைப் பொறியியல் கல்வி பெற்ற ஆனால் மின்வலு முறைமை தொடர்பில் அனுபவம் இல்லாதவர்களுக்கும் விளங்கிக்கொள்ள முடியாதது. இதனால் பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் பயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முடிவுகளைப் பற்றிய நியாயப்படுத்தல்களை நம்ப வைப்பது மிகவும் கடினமானது. மின்வலுத் துறை மிகவும் கவர்ச்சிகரமான வணிக வாய்ப்புகளை வழங்குவதால், அவர்கள் ஈடுபடக்கூடிய வணிகப் பகுதிகளை ஆதரிப்பதற்கும் அவர்கள் வர்த்தகம் செய்யும் தொழில்நுட்பங்களுக்கு வழிவகை செய்வதற்கும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மாற்றுவதற்கான வணிக ஆர்வத்தைக் கொண்ட குழுக்களிடமிருந்தான அழுத்தத்தின் கணிசமானளவு இடர் காணப்படுகிறது.

இ.மி.ச. திட்டங்கள், செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான இத்தகைய தவறான புரிதல் இடரை ஓரளவு தணிப்பதற்காக நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்பி, நிலைபேற்றுத்தன்மையுடன் பேணுவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உபாயத் தொடர்பாடல் அலகினை (SCU) உருவாக்குவதற்கான முன்மொழிவுக்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### கொள்கை மாற்றத்தினால் ஏற்படும் இடர்

மின்வலுச் செயற்றிட்டங்கள் நீண்ட பேறு காலத்தைக் கொண்டவை. எனவே, முன்கூட்டியே அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக, தேவையான திகதிக்கு முன்பே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. மின்வலு விரிவாக்கத்திற்கான திட்டமிடலுக்குக்கூட குறிப்பிடத்தக்க காலம் எடுக்கும். எனவே, அரசாங்கக் கொள்கைகள் தெளிவானதாகவும் உறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். மாறிவருகின்ற மற்றும் சீரற்ற அரசாங்கக் கொள்கைகள் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் செயற்றிட்ட அமுலாக்கங்களுக்கு முன்னால் பாரிய சவால்களையும் இடர்களையும் உருவாக்குகின்றன.

### இணைய இடர்

நிறுவனங்கள் அதிகரித்த வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களாக மாறிவருகின்றன. பெரும்பாலும் அனைத்துக் கிளைகளும் வலையமைப்புச் செய்யப்பட்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இது அவைகளை வெளிவாரியான இணையத் தாக்குதலால் மிகவும் பாதிக்கக்கூடியதாக ஆக்குகிறது. ஏனெனில் ஓர் இடத்தில் ஊடுருவல் ஏற்படின் அது வலையமைப்பின் ஊடாக அனைத்து இடங்களுக்கும் பரவக்கூடும்.

இ.மி.ச. போன்ற மின்சாரப் பயன்பாடுகளால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமையானது தொடர்பாடல் மற்றும் கட்டுப்படுத்தல் நோக்கங்களுக்காக தகவல் தொழில்நுட்பவியலில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், இந்தச் செயற்பாடுகளும் முறைமைகளும் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்ட அமைப்புகளாக செயற்படுத்தப்பட முனைப்புக் காட்டப்படுவதுடன் முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப முறைமைகளைப் போலல்லாது வெளிப்புறத்துடன் குறைந்தளவு இணைப்புகளைக் கொண்டுள்ளன. மேலும், செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் வெளிப்புறத்துடன் இணைக்கப்படும்போது, அவை உயர்நிலை பாதுகாப்புச் சாதனங்களை நுழைவுவாயில்களாகக் (Gateways) கொண்டிருக்கின்றன. எனவே, அவைகளுக்கு வெளியிலிருந்து வரும் தாக்குதல்கள் மற்றும் ஊடுருவல்களின் சற்றே குறைந்தளவான அச்சுறுத்தல்களே காணப்படுகின்றன. இருப்பினும், இணையத் தாக்குதல்களின் இடர் எப்போதும் இருக்கிறது. இது பாதுகாப்பு முறைமைகளில் உள்ள ஓட்டைகளை தாக்குபவர்கள் சுரண்டுவதன் காரணமாக இருக்கலாம். அத்துடன் மனித வழுக்கள் மற்றும் தவறுகள் காரணமாக இருக்கலாம். ஊடுருவல் செய்பவர்களால் செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் வசப்படுத்தப்பட்டு மிகவும் தொழில்நுட்பரீதியாக முன்னேறிய நாடுகள்கூட இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளன. எனவே, தம்வசப்படுத்துவதற்கான இடரைக் குறைப்பதற்கு சரியாக ஒழுங்கமைக்கப்பட்டு முகாமிக்கப்பட்ட சாதனங்களும் வலிமையான IT கொள்கைகளும் தேவையாகும்.

# மின்சாரத் தொழில்துறையின் நிலைபேற்றுத்தன்மைக்கான எமது அணுகுமுறை

நிலைபேற்றுத்தன்மை என்பது இ.மி.ச. இன் பணிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள அதன் அடிப்படை விழுமியங்களில் ஒன்றாகும். நிலைபேற்றுத்தன்மை மூன்று தூண்களாக நிற்கிறது என இ.மி.ச. நம்புகிறது. அதாவது சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம். எனவே, இ.மி.ச. சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்கள் மத்தியில் சரியான சமநிலையை பேணியவாறு அதன் பிரதான செயற்பாடுகளை ஆற்றுவதற்கு உறுதி பூண்டுள்ளது.

**பொருளாதாரம்**
- கிரயத்தை பிரதிபலிக்கும் விதிப்பனவு
- அதிகரித்த வருமானம்
- குறைந்த கிரய மின் பிறப்பாக்கத்தை அதிகரித்தல்
- சக்திக் காப்பு
- T&D இழப்புகளைக் குறைத்தல்

**சமூகம்**
- நம்பகமான மின் வழங்கல்
- இலவச மின்சார இணைப்புகள்
- வாடிக்கையாளர் நேயச் செயற்பாடுகள்

**சூழல்**
- பசுமை சக்தியின் உத்தமமான ஒருங்கிணைப்பு
- குறைந்தளவு உமிழ்வை உறுதிப்படுத்தல்
- மர நடுகை

## பொருளாதார நிலைபேற்றுத்தன்மை

இலங்கைப் பொருளாதாரத்தின் மின்வலுத் துறையில், இ.மி.ச. என்பது ஒரு மேலாதிக்கம் கொண்ட நிறுவனமாக விளங்குகிறது. மற்றுமொரு மூலத்தால் பிரதியீடு செய்வது கடினமாக இருப்பதும், படிப்படியாக அதிகரித்து வருவதுமான ஒரு அத்தியாவசிய உருப்படியான மின்சாரத்திற்கான கேள்வியினை இது பூர்த்தி செய்கிறது. அடிப்படைப் பொருளாதாரக் கோட்பாடானது, இ.மி.ச. ஒரு நஷ்டத்திலுள்ள நிறுவனமாக இருக்கக்கூடாது என்று பரிந்துரைக்கும். இருப்பினும், இ.மி.ச., 1969 இல் தாபிக்கப்பட்டதில் இருந்து பல ஆண்டுகளாக நஷ்டத்தில் இருக்கிறது. ஏனெனில், சமூக மற்றும் அரசியல் சூழலில், இ.மி.ச. மக்களுக்கான ஒரு சேவை நிறுவனமாகக் கருதப்படுகிறது.

அதற்கிணங்க, இ.மி.ச. ஆனது மின்சாரப் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகம் தொடர்பான அதன் திட்டமிடல் தொழிற்பாடுகளையும் அதனைத் தொடர்ந்து, அவற்றுக்கான நிருமாணங்கள், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புக் கட்டங்களுக்கான முதலீடுகளையும் மேற்கொள்கிறது. இந்த நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க SLE சட்டம் (திருத்தப்பட்டதான), SEA சட்டம் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க PUCSL சட்டம், 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க CEA சட்டம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க மாகாண/ மாநகர/ உள்ளூராட்சி விதிகள் ஆகியவற்றால் வழிகாட்டப்பட்டு, ஆளுகை செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

இதன் நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LTGEP) ஆனது நிறுவனத்தின் நிதிக் கோட்பாடுகளின் சாத்தியத் தன்மைக்கு மாறாக முழு நாட்டிற்குமான பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. LTGEP இலங்கையில் கணிசமானளவு உட்கட்டமைப்பு முதலீடுகளைக் கொண்டுள்ளது. நீண்ட கால மின் பரிமாற்றத் திட்டம் மற்றும் பிரிவுகளின் மின் விநியோகத் திட்டங்கள் தற்போது மின்வலு நிலையங்களை வீட்டு மின் நுகர்வு, சமயத்தல, தொழில்துறை மற்றும் வர்த்தக ரீதியான நுகர்வோருக்கு உகந்ததாக இணைக்கின்றன.

நிறுவனத்தினதும் அதே போன்று நாட்டினதும் பொருளாதார நிலைபேற்றுத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு, பிறப்பாக்கல் கலவையின் சரியான சமநிலையுடன் நீர்பாசனத் தேவைகளின் சரியான தொழிற்பாட்டிற்குத் தொந்தரவு செய்யாத வண்ணம், உகந்த பிறப்பாக்கல் அனுப்பீட்டை இ.மி.ச. உறுதிப்படுத்துகிறது. இதன் விளைவாக, நிறுவனம் சராசரி உற்பத்திக் கிரயத்தை இல. ரூபா 18.63/kWh என்ற வீதத்தில் பேண முடிந்தது. இருப்பினும், கடந்த 9 வருடங்களாக மின்சார விதிப்பனவு திருத்தம் செய்யப்படாத காரணத்தால், இ.மி.ச. மின்சாரத்தை இல. ரூபா 16.37/kWh என்ற குறைந்த வீதத்தில் விற்பனை செய்ய வேண்டியிருந்தமை நிதிசார் நிலைபேற்றத்தன்மையை மோசமாகப் பாதித்தது எனலாம்.

குறைந்த கிரய மின்வலுப் பிறப்பாக்கத்தின் நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தல், அதிகரித்த வருமானச் சேகரிப்பை உறுதிப்படுத்தல் மற்றும் நிதிசார் ரீதியில் நீடித்திருக்கத்தக்க நிலைக்கு மீளவும் செல்வதற்காக T&D இழப்புகளைக் குறைத்தல் ஆகியவற்றுக்காக நிறுவனம் கிரயத்தைப் பிரதிபலிக்கும் விதிப்பனவொன்றை உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

இ.மி.ச. கடந்த சில ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்டதான விதிப்பனவு ஒன்றைப் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்திருந்த போதிலும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அது வெற்றியளித்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, நிறுவனம் அதன் T&D இழப்பு வளையியை மீண்டும் கீழ்நோக்கிக் கொண்டுவருவதில் வெற்றிகண்டிருந்ததுடன் மீளாய்வு ஆண்டில் T&D இழப்புகள் 8.72% வீதமாக அறிக்கையிடப்பட்டது. மேலும் நிறுவனத்தினதும் அதே போன்று நாட்டினதும் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையை உறுதிசெய்வதற்காக வருமானச் சேகரிப்புகளை மேம்படுத்துவதற்கும் சக்திக் காப்பினை ஊக்கப்படுத்துவதற்கும் புதிய அணுகுமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மை

இ.மி.ச. மரபுசார்ந்த மீள்புதுப்பிக்கத்தக் சக்தி செயற்றிட்டங்கள் உள்ளிட்ட அதன் நடவடிக்கைகளில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மனச்சாட்சிப்படி இணங்கிச் செல்கிறது.

இலங்கை காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடாக இருப்பதுடன் இதற்கு தணித்தல் மற்றும் தழுவல் ஆகிய இரண்டும் தேவைப்படுகின்றன. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் தேசிய கொள்கைகள், உபாயங்கள் மற்றும் சாத்தியமான பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் பல நேர்மறையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மரபுசார்ந்த புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான சக்தி ஆதாரங்களுடன் இணைந்து அதிகமான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆதாரங்களை ஒன்றிணைப்பது உபாயங்களில் ஒன்றாகும். தேசிய சக்திக் கொள்கை மற்றும் உபாயம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆதாரங்களின் ஊடுருவலை வெளிப்படுத்தி அதிகரித்துள்ளது. அதற்கிணங்க, இ.மி.ச. அதன் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கொள்ளளவை, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்ட மொத்தக் கொள்ளளவில் 57% வரை அதிகரித்திருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பாகும்.

தூய்மையான சுற்றுச்சூழலை உறுதிப்படுத்துவதற்காக, மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் பெரிய அளவான காற்று மின்வலுப் பண்ணைகள், சூரியசக்திப் பண்ணைகள் போன்றவற்றை மேலும் நிறுவுதல் மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைத் தழுவுதலும் கண்டறிதலும் ஆகியன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக, 103.5 MW என்ற மொத்த நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்ட "තම්බපවනි" என்ற பெயருடைய தனக்குச் சொந்தமான முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்வலு நிலையத்தை முழுமையாக இயக்குவதற்கான அதிகாரத்தை இ.மி.ச. வழங்கியுள்ளது.

மின்சார நுகர்வோர் தமது வளாகங்களிலுள்ள மேற்கூரைகளில் மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்கும் தமது மின்பிறப்பாக்கிகளை இ.மி.ச. முறைமையுடன் ஒத்துசைவாக்குவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ள அதே வேளை நுகர்வுசெய்து மீதமாகவுள்ள சக்தியை நிகர அளவீடு, நிகர கணக்கீடு மற்றும் நிகரக் கூட்டல் ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் இ.மி.ச. இற்கு ஏற்றுமதி செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வலையமைப்பில் நிறுவப்பட்டுள்ள மேற்கூரை சூரியசக்தியின் கொள்ளளவை இ.மி.ச. 51% இனால் வெற்றிகரமாக அதிகரித்துள்ளதுடன் ஆண்டின் இறுதியில் மொத்த மேற்கூரை சூரிய சக்தியின் கொள்ளளவு 415 MW ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சுற்றுச்சூழல் நிலைபேற்றுத் தன்மைக்கு நேர்மறையான பங்களிப்பாக இருக்கிறது.

மறுபுறத்தில், குறைந்த கிரயத்தில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வது பொருளாதார நிலைபேற்றுத் தன்மைக்கு முக்கியமானதாகும். நிறுவனத்தினதும் ஒட்டுமொத்த நாட்டினதும் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையைப் பேணுவதற்கு நிலக்கரி மற்றும் LNG போன்ற குறைந்த கிரயம் கொண்ட மின்சாரப் பிறப்பாக்கல் ஆதாரங்களைச் சேர்ப்பதற்கு இ.மி.ச. போராடுகிறது. அதே வேளை, மின்பிறப்பாக்கிகளின் செயற்பாடுகளின்போது, இ.மி.ச. நாட்டிற்குப் பொருத்தமான பெரும்பாலும் அனைத்து சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகிறது. இதன் விளைவாக மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. சராசரி உமிழ்வுச் சுட்டெண்ணை 0.555 kg / kWh என்ற மட்டத்தில் பேண முடிந்தது. உரிமதாரரால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்குள் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் லக்விஜய நிலக்கரி மின்வலு ஆலையின் செயல்பாடுகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. தென்மேற்கு பருவக்காற்று காலப்பகுதிக்கான பிந்தைய சுற்றுப்புற காற்று தர அளவீடுகளின் முடிவுகள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

காடுகளை அழிப்பது அல்லது மரத்தின் பகுதிகளை வெட்டுவது என்பது இலங்கையிலுள்ள தீவிரமான சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகும். மின்வலுப் பிறப்பாக்க, பரிமாற்ற மற்றும் விநியோகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, காட்டுப் பகுதிகளை அழித்தல் மற்றும் வீட்டுமனைகளிலுள்ள மரங்களை அகற்றுதல் என்பன தவிர்க்க முடியாததாகும். பொறுப்புவாய்ந்த அரச நிறுவனம் என்ற வகையில் இ.மி.ச., செயற்றிட்டத்தின் ஆரம்பத்திலிருந்து மிகக் கவனமாகத் திட்டமிடுவதன் மூலம் இத்தகைய தாக்கங்களைக் குறைப்பதற்குப் பாடுபடுகிறது. வனத் திணைக்களத்துடன் இணைந்து காடழிப்பை ஈடுசெய்கின்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேலதிகமாக, இ.மி.ச. ஏற்கனவே அதன் நீர்மின் தேக்கங்களின் நீர்நிலைப் பகுதிகளில் 30,000 இற்கும் மேற்பட்ட மரங்களை நட்டுள்ளது. அதற்கிணங்க, ஆண்டு நெடுகிலும் நிறுவனத்தினுள் நடத்தப்பட்ட மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பிற உயிரியல் பன்முகத்தன்மை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் தொடர்ச்சியாக சுற்றாடல் பரிகரிப்பு மற்றும் அழகுபடுத்தலை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் 8,000 இற்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டுள்ளன.

### சமூக நிலைபேற்றுத்தன்மை

மின்சாரத் தொழில்துறையின் முன்னோடியாக, இ.மி.ச. மின்வலு முறைமையின் நம்பகமான செயற்பாடே தேசத்தின் சமூக, பொருளாதார நிலைபேற்றுத்தன்மையின் அடிப்படையாக இருக்கிறது.

இந்நிறுவனம் சில வருடங்களுக்கு முன்பே மின்மயமாக்கலுக்கான 100% அணுகலை அடைந்திருந்ததுடன் சமூக நிலைபேற்றுத்தன்மைக்கும் அடித்தளமிட்டிருந்தது. இது இ.மி.ச. பெருமை கொள்ளக்கூடிய ஒரு சாதனை ஆகும். மின்சாரம் பிரதேசங்களைச் சென்றடையும்போது, சமுதாய வாழ்க்கை வியத்தகு முறையில் மாற்றமடைகிறது. கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கள் மக்களுக்காகத் திறக்கப்படுகின்றன. இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையிலான இடைவெளி குறைக்கப்படுகிறது. அதற்கிணங்க, அரசாங்கத்தின் “செழிப்பானதும் ஒளிமயமானதுமான எதிர்காலம்” என்ற கொள்கை வேலைச் சட்டகத்தின் கீழ், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடுகளுக்கு இலவச மின்சார இணைப்புகளை வழங்குவதற்கு இ.மி.ச. 750 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

நவீன நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்காக CEB care App, பிற CEB நிகழ்நிலை வசதிகள் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுத் தெரிவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை இ.மி.ச. ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை முறையை எளிதாக்குகிறது.

## அட்டவணை 1 : சுற்றுப்புறக் காற்றுத் தர அளவீடுகள்

| அளவுரு | சராசரி நேரம் | அலகுகள் | பேறுகள் | | | | | | | | | | ஆகக்கூடிய அனுமதிக்கத்தக்க மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | AAQ 1 | AAQ 2 | AAQ 3 | AAQ 4 | AAQ 5 | AAQ 6 | AAQ 7 | AAQ 8 | AAQ 9 | AAQ 10 | |
| காற்றியக்கவியல் விட்டம் 10µm ( $PM_{10}$ ) இனை விடக் குறைந்த துகள்மப் பொருள்கள் | 24 மணித்தியாலச் சராசரி | µg/m³ | 20 | 22 | 26 | 28 | 47 | 21 | 17 | 27 | 17 | 38 | 100 |
| | 1 மணித்தியாலச் சராசரி | µg/m³ | 42 | 42 | 33 | 43 | 56 | 32 | 21 | 43 | 32 | 56 | கிடைக்கவில்லை |
| காற்றியக்கவியல் விட்டம் 2.5µm ( $PM_{2.5}$ ) இனை விடக் குறைந்த துகள்மப் பொருள்கள் | 24 மணித்தியாலச் சராசரி | µg/m³ | 12 | 12 | 15 | 15 | 15 | 11 | 8 | 14 | 10 | 16 | 50 |
| | 1 மணித்தியாலச் சராசரி | µg/m³ | 24 | 19 | 20 | 27 | 19 | 15 | 14 | 28 | 14 | 22 | கிடைக்கவில்லை |
| சல்பர் ஈரொட்சைட்டு ( $SO_2$ ) | 24 மணித்தியாலச் சராசரி | ppb | 1.5 | 3.2 | - | 3.6 | 1.1 | 2.3 | 1.9 | 1.4 | 1.3 | 5.2 | 30 |
| | 1 மணித்தியாலச் சராசரி | ppb | 2.5 | 4 | - | 4.4 | 2.2 | 2.9 | 2.7 | 2.4 | 1.5 | 6.1 | 80 |
| நைதரசனீரொட்சைட்டு ( $NO_2$ ) | 24 மணித்தியாலச் சராசரி | ppb | 3.5 | 4 | 1.1 | 2.3 | 2 | 4.6 | 3.5 | 1.9 | 5.1 | 4.2 | 50 |
| | 1 மணித்தியாலச் சராசரி | ppb | 8.4 | 6.7 | 2.5 | 3.2 | 2.4 | 4.9 | 10.2 | 3.2 | 5.9 | 4.8 | 130 |
| காபனோரொட்சைட்டு CO ) | 24 மணித்தியாலச் சராசரி | ppb | 1331 | 1302 | 931 | 972 | 870 | 1075 | 540 | 699 | 472 | 987 | கிடைக்கவில்லை |
| | 1 மணித்தியாலச் சராசரி | ppb | 1506 | 1756 | 1133 | 1196 | 988 | 1453 | 752 | 936 | 718 | 1373 | 26000 |
| ஓஸோன் ( $O_3$ ) | 24 மணித்தியாலச் சராசரி | ppb | 19.8 | 21.9 | 17.3 | 23.8 | 22.8 | 21.7 | 12.6 | 14.7 | 17.9 | 21.5 | கிடைக்கவில்லை |
| | 1 மணித்தியாலச் சராசரி | ppb | 27.3 | 27.6 | 26 | 31.3 | 29.3 | 28.8 | 17.8 | 18.8 | 24.3 | 29.1 | 100 |

# நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை

இ.மி.ச. சமூகத்தின் சுகாதாரம், சேமநலன் மற்றும் அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்புக்கான சகல முயற்சிகளையும் எடுத்திருந்தது. இதனை உறுதிப்படுத்துவதற்காக, லக்விஜய மின்வலு ஆலைகளின் பறக்கும் சாம்பல் விற்பனையிலிருந்து ஈட்டப்படும் வருமானத்தில் 25% இனை CSR நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த சபை தீர்மானித்திருந்தது. இதற்கு மேலதிகமாக, சுற்றாடல் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வினை உறுதி செய்வதற்காக மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மர நடுகைத் திட்டங்கள் என்பனவும் நடத்தப்பட்டன.

### நோய்த் தொற்றினைச் சமாளித்தல்

புத்தளம் வைத்தியசாலையின் நிருவாகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கையின் பேரில், கோவிட் 19 அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் நிருமாணம் மற்றும் நிருமாண மேற்பார்வைக்கான பிரதான அனுசரணை 2021 நவெம்பரில் பூர்த்தியடைந்தது. பணியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் உள்ளிட்ட விடுதியின் கொள்ளளவு 20 படுக்கைகளுக்கும் மேல் அதிகரிக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்திற்கான மொத்தச் செலவினம் 6.7 மில்லியன் ரூபாயாகும்.





இதற்கு மேலதிகமாக, இந்த விடுதிக்கான அணுகல் பாதையின் புனரமைப்பு மற்றும் கழிவறை அலகுகளின் நிருமாணம் என்பன 1.5 மில்லியன் ரூபாய் என்ற மொத்தக் கிரயத்தில் செய்யப்பட்டன.

### அடுத்த தலைமுறையைக் கட்டியெழுப்பல்

லக்விஜய மின்வலு ஆலை பு/கல்/நாரக்கல்லிய அரசாங்க ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் பகுதியளவில் நிருமாணிக்கப்பட்டிருந்த 20'X40' அளவுள்ள பாடசாலைக் கட்டடத்தை பூரணப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்திருந்தது. இதற்கான மொத்தப் பங்களிப்பு 2.19 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன் இதன் மூலம் 150 மாணவர்கள் பயனடைவர்





.இதற்கு மேலதிகமாக, 2021 மார்ச் இல் பு/கல்/தாலுவ புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்தில் பத்து வகுப்பறைக் கட்டடத்தில் கம்பியமைப்பு (வயரிங்) மற்றும் மின் நிறுவல் வேலைகள் என்பன ரூபா 0.9 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. இதன் மூலம் 400 மாணவர்கள் பயனடைவர்.

நிலவிய நோய்த் தொற்று நிலைமையானது வாங்கும் திறனைப் பொருட்படுத்தாது நிகழ்நிலைக் கல்வியைத் தேவைப்படுத்தியிருந்தது. இந்தப் பழக்கமில்லாத நிலைமையில் நிகழ்நிலைக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு இலவச இணைய இணைப்புகளை (அகலக் கற்றை) வழங்குவதற்கான போட்டியொன்றை B&OS கிளை நடத்தியது.

### எமது மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தல்

கற்பிட்டி குடாநாட்டின் கரையோரப் பகுதியை அண்டி வாழுகின்ற மீன்பிடி சமுதாயத்தினரே பிரதான சமுதாயக் குழுவாகக் காணப்படுகிறது. மீனவ சமுதாயத்தின் நன்மைக்கான 1.64 மில்லியன் ரூபா கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட நுரைச்சோலை, இலந்தடியவில் உள்ள "ஆரோக்கிய மாதா" மீனவ சமுதாய மண்டபத்தின் புனரமைப்பு 2021 டிசெம்பரில் பூரணப்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டத்தால் 350 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் நன்மையடைவர்.

இதற்கு மேலதிகமாக, வெள்ளப் பெருக்கினைக் கட்டுப்படுத்துவதற்காக 2021 சனவரியில் ரூபா 1.64 மில்லியன் மொத்தக் கிரயத்தில் இலந்தடியா பகுதியில் ஐந்து கல்வெட்டுக்கள் நிருமாணிக்கப்பட்டன. இந்த நிருமாணத்தின் காரணமாக புயல் நிலைமைகளின்போது ஏற்படக்கூடிய வெள்ளப் பெருக்கிலிருந்து அண்ணளவாக 500 குடும்பங்கள் பாதுகாக்கப்படும்.

மேலும், பாலாவி – கற்பிட்டி வீதியில் அவ்விடத்தினைச் சுற்றியுள்ள மக்களின் நன்மைக்காக ரூபா 2.15 மில்லியன் மொத்தக் கிரயத்தில் அமைக்கப்பட்ட ஆறு பஸ் நிறுத்த நிழற்குடைகள் 2021 மார்ச் இல் பூரணப்படுத்தப்பட்டது.

### மீள்குடியமர்த்தப்பட்ட சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல

மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டத்தினால் சிங்கபுர, வெலிகங்க மற்றும் உலப்பனை தெற்கு பிரதேசங்களைச் சேர்ந்த 20 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்ட மொரகொல்ல அணை, மற்றும் நீர்த்தேக்கத்திற்கு அப்பால் மீள்குடியேற்றக் கிராமமொன்று மிகவும் எழில் சூழ்ந்த பகுதியில் நிருமாணிக்கப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் நிருமாணங்களுக்கு மீள்குடியேற்றம் தேவையாக இருந்தது.

இந்த மீள்குடியேற்றக் கிராமம் 20 அடி கொங்கிறீற்றுப் பாதைகள், குழாய் நீர், மின்சாரம், தெரு விளக்குகள் போன்ற சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சிறுவர்களுக்கான பாலர் பாடசாலை, மகப்பேற்று பிணியாய்வு நிலையம், கிராம நிலதாரி அலுவலகம், அழகுசாதனக் கடை, சிறுவர் பூங்கா மற்றும் சமுதாய மண்டபம் போன்ற சமுதாய வசதிகளும் வழங்கப்பட்டன.




### எமது கிரகத்தைப் பாதுகாத்தல்

மரக்கன்றுகளை நடுவது, வளிமண்டலத்தில் போதுமான ஒட்சிசன் உள்ளடக்கத்தை உறுதி செய்வது, வெப்பநிலையைக் குறைப்பது என்பன உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆரோக்கியமான விளைவை உருவாக்குகிறது. எனவே, இது ஒரு அற்புதமான சமூக சேவையாகும்.

செயற்றிட்டப் பணிகளின்போது மரங்களை அகற்றுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இ.மி.ச. ஒரு சமூகப் பொறுப்புடைய நிறுவனம் என்ற ரீதியில், மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டத்தின் நிருமாணம் காரணமாக அண்ணளவாக 1,5000 மரங்களின் இழப்பை ஈடுசெய்யும் வகையில் காடு வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதற்கிணங்க, மேற்படி செயற்றிட்டத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 78,000 மரக் கன்றுகள் நடும் பணி ஆரம்பிக்கப்பட்டது.



இதற்கு மேலதிகமாக, மீளாய்வு ஆண்டின்போது, பாலாவி தொடக்கம் கற்பிட்டி வரையான பிரதான வீதி ஓரங்களில் மீ, கும்புக், வேம்பு மற்றும் கரந்த மரங்கள் நடுகை செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டதுடன் கற்பிட்டி குடாநாட்டில் உயிர் பல்வகைமையைப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக புத்தளம் குளத்தின் எல்லைகளில் சுமார் 5000 மரக் கன்றுகள் நடப்பட்டன.






Financial Progress as of 30.09.2021
BOQ Components
Financial progress as of 30.09.2021
Plant and mandatory spare parts supplied from abroad
99.80%
Design services
98.30%
Installation
97.00%
Civil works for wind farm
95.00%
Civil works for accommodation Buildings
99.00%
Other services
82.00%
CITIZEN CT-666N
Bulk Supply Debtors without Finalized Debtors –Tariff wise
Trade Debtors as at 31 December 2021 - Divisional
Recurrent Expenditure
Analysis

# நிதிப் பிரிவு

நிதிப் பிரிவானது வணிக நடவடிக்கைகளின் வளர்ச்சி மற்றும் நீடித்திருக்கத்தக்க தன்மைக்கு வசதியளிப்பதற்காக நிதித் திட்டமிடல், திறைசேரி முகாமைத்துவம், நிதி மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடல், சட்டநியதி உறவுகள், வரி விதிப்பு, காசு முகாமைத்துவம், நிறுவன மற்றும் செயற்றிட்ட நிதி ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் முக்கிய வகிபாகமொன்றை ஆற்றுகிறது. இதன் பிரதான பொறுப்பு, இ.மி.ச. இனுள் கிரய வினைத்திறன் தன்மைக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய ஆழமான தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் சகல நிதிசார் தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

## செயல்பாட்டு அமைப்பு

நிதிப் பிரிவின் தலைவர், இ.மி.ச. இன் பொது முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற நிதி முகாமையாளர் ஆவார். அதே நேரம் AFM (தலைமையகம்), AFM (நிறுவனம்) மற்றும் AFM (திறைசேரி முகாமைத்துவம்) ஆகியோர் நிதிப் பிரிவினுள் நிதி முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றனர். பிரதேச AGM களுக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற எட்டு மேலதிக நிதி முகாமையாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு பிரிவினதும் நிதி தொடர்பான விடயங்களுக்கும் நிதி முகாமையாளர்களுக்கு தொழிற்பாட்டு ரீதியான பொறுப்புடையவர்களாக இருக்கின்றனர்.

AFM (தலைமையகம்) இன் பிரதான தொழிற்பாடுகளாக காசு முகாமைத்துவம், செயற்றிட்ட ஒருங்கிணைப்பு மற்றும் சேகரிப்பு முகாமைத்துவம் என்பன காணப்படுகின்ற அதே வேளை இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மற்றும் பாதீடுகள் உள்ளிட்ட முகாமைத்துவத் தகவல்களைத் தயாரிப்பதும் முன்வைப்பதும் AFM (நிறுவனம்) இன் பிரதான தொழிற்பாடுகளாகும். AFM (திறைசேரி முகாமைத்துவம்), ஆனது மூலதன செயற்றிட்டங்களுக்காகவும் நாளாந்த செயற்பாடுகளுக்காகவுமான நிதிகளை ஒழுங்கு செய்வதிலும் இ.மி.ச. இன் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியத்தை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு தொழிற்பாட்டினதும் செயற்பாடுகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட பிரதான முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளின் சுருக்கமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## காசு முகாமைத்துவம்

கொடுப்பனவு அலகானது நிதிப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றை ஆற்றுகிறது. அனைத்து கொடுப்பனவுகளும் இந்த அலகினால் கையாளப்படுகின்றன. இந்த ஆண்டு கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக கொடுப்பனவுப் பிரிவுக்கு முக்கியமானதாக விளங்கியது. நோய்த் தொற்றின் விளைவாக, இ.மி.ச. சாத்தியமான திரவத்தன்மைப் பிரச்சினைகள் உள்ளிட்ட காசு மற்றும் தொழிற்படு மூலதனம் மீதான குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளை அனுபவித்திருந்த போதிலும் நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணப் பட்டியல் மீது பல சலுகைகளை வழங்கியது. இருப்பினும், திறைசேரி முகாமைத்துவக் கிளையின் உதவியுடன், கொடுப்பனவு அலகானது கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமையளித்து, கிடைக்கக்கூடிய நிதியினை வினைத்திறனான முறையில் ஒதுக்கீடு செய்தது.

தொழில்நுட்ப அம்சங்களில், கொடுப்பனவு அலகானது செயற்பாட்டு முறைமையை சீராக மேற்கொள்ளும் பொருட்டு நிகழ்நிலை PIV தீர்ப்பனவு முறைமையை ஆரம்பித்திருந்தது.

## சேகரிப்பு முகாமைத்துவம்

இ.மி.ச. தலைமையக காசுக் கிளையானது மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள மூன்று நிலையங்கள் மற்றும் இ.மி.ச. தலைமையகத்திலுள்ள ஒரு நிலையம் உள்ளிட்ட நான்கு POS நிலையங்களிலுள்ள 14 POS கருமபீடங்களுடன் இயங்குகிறது. மின்சாரக் கட்டணங்களைச் சேகரிக்கின்ற 24 சேகரிப்பு முகவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் இலங்கையிலுள்ள சகல முன்னணி வர்த்தக வங்கிகள், சிறப்பங்காடிகள், செல்லிடப்பேசி வலையமைப்பு வழங்குநர்கள் மற்றும் இலத்திரனியல் பாவனைப் பொருள்கள் வழங்குநர்களாக இருக்கின்றனர். மேலும், இ.மி.ச. அதன் மின் கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதற்கு வெப் கொடுப்பனவுகள், குறுஞ்செய்திக் கொடுப்பனவுகள் மற்றும் CEBCare பிரயோகம் போன்ற வசதிகளை விரிவுபடுத்தியுள்ளது.

காசுக் கிளையின் பிரதான தொழிற்பாடாக இருப்பது நாடு பூராகவும் பரம்பியுள்ள 24 சேகரிப்பு முகவர்கள் ஊடாக நாளாந்த மின்கட்டணச் சேகரிப்புகளை இற்றைப்படுத்துவதாகும். இந்தச் சேகரிப்புத் தொகைகள், இ.மி.ச. இன் மாதாந்த சேகரிப்பின் மூன்றில் இரண்டு பங்காகும். சேகரிப்பு முகவர்கள் மூலமான நாளாந்த நிதி மாற்றல்களின் இணக்கம், மீள்நிதியிடல் சீராக்கங்கள் மற்றும் வழுத் திருத்தங்கள் என்பனவும் காசு அலகினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## செயற்றிட்ட ஒருங்கிணைப்பு

இ.மி.ச. இன் செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்பு அலகானது நிதியளிக்கும் முகவராண்மை, செயற்றிட்ட முகாமைத்துவ அலகுகள் (PMUs), வெளிவாரி வளங்கள் திணைக்களம் (ERD) மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றுடன் கடன் தொடர்பான விடயங்களின் ஒருங்கிணைப்புக்கு உதவுவதன் மூலம் நிறுவனத்தின் அனைத்து வெளிநாட்டு நிதியளிக்கும் செயற்றிட்டங்களுக்கான ஓர் ஒருங்கிணைப்புக் கிளையாகத் தொழிற்படுகிறது. கடன் உடன்படிக்கைகளின்படி, நிதி வழங்குகின்ற முகவராண்மைகளால் கோரப்படுகின்ற மற்றும் தேவையான கணக்காய்வு செய்யப்பட்ட செயற்றிட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய தகவல்களைச் சமர்ப்பிப்பது இதன் பிரதான நடவடிக்கையாகும். மேலும், கடனிலிருந்து உரிமையாண்மைக்கு மாற்றம் செய்வதில் பொதுத் திறைசேரியுடனான ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தும் முகவராண்மையின் எதிர்காலச் செயற்பாடுகளைத் தீர்மானித்துத் திட்டமிடுவதற்குத் தேவையான கடன் தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் இ.மி.ச. இன் முகாமைக்கு உதவுதல் போன்றவையும் திணைக்களத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகிறது.

கோவிட் 19 நோய்த் தொற்றின் பரவலுடன், 2021 ஆம் ஆண்டு, செயற்றிட்டங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை கடன் வழங்கும் முகவரமைப்புகளுக்கு உரிய காலப்பகுதிக்குள் வழங்குவது சவால்மிக்கதாக விளங்கியது. எவ்வாறாயினும், செயற்றிட்ட ஒருங்கிணைப்புத் திணைக்களம் சம்பந்தப்பட்ட PMU களுடனும் கணக்காய்வாளர்களுடனும் கைகோர்த்துப் பணியாற்றியிருந்ததுடன் அனைத்து தேவையான சமர்ப்பிப்புகளையும் கடன் வழங்கும் முகவரமைப்புகளுக்கு உரிய நேர்தில் வழங்குவததையும் முகாமித்திருந்தது.

## திறைசேரி முகாமைத்துவம்

திறைசேரி முகாமைத்துவக் கிளையானது காசு, முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்களை முகாமை செய்வதன் மூலம் முக்கிய வகிபாகமொன்றை ஆற்றுகிறது. நாட்டில் விதிக்கப்பட்ட முடக்க நிலை நீங்கி நாட்டில் புதிய இயல்புநிலை உருவாகியதுடன் வழக்கமான மின்சாரத் தேவை முறை நிறுவப்பட்டதுடன் குறைந்த மின்சார நுகர்வு காரணமாக ஏற்பட்ட திறைசேரிச் சேமிப்பு கரைந்து போனது. குறைந்தளவான வசூலிப்பு மட்டத்துடன் உயர் வீதத்தில் அனல் மின்வலுப் பிறப்பாக்க சக்தியைக் கொள்வனவு செய்வதில் இந்த அலகு சவால்களை எதிர்கொள்கிறது. மேலும், அதிகரித்த உலக நிலக்கரி வகைகள் காரணமாக திறைசேரி நலிவடைந்துள்ளது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரலில் ரூபா 20 பில்லியன் பெறுமானமுடைய பட்டியலிடப்பட்ட இதுவரை பட்டியலிடப்படாத பெரியளவிலான தனிச்ச வழங்கலை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் மூலம் இந்தச் சவால்கள் முகாமை செய்யப்பட்டன. வழங்கலின் முதல் நாளில், அது அதிகம் வாங்கப்பட்டிருந்தது. பட்டியலிடப்பட்ட கடன் பிணையங்களை வழங்குவதைத் தொடங்கிய முதலாவது அரசாங்கத்திற்குச்

சொந்தமான சட்டநியதிச் சபையாக இ.மி.ச. இருக்கிறது. அந்நியச் செலாவணிச் சந்தையில் காசு திரவத்தன்மைப் (பணப் புழக்கம்) பற்றாக்குறை காரணமாக வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் தீர்ப்பதற்கு அந்நியச் செலாவணியைத் தேடிக்கொள்வது திறைசேரி முகாமைத்துவ அலகிற்கு சவால்மிக்கதாக இருந்தது. இருப்பினும் திறைசேரியானது பிரதான வங்கியாளரை மாத்திரம் சார்ந்திருக்காமல் மற்றைய வங்கிகளுடனான உறவைப் பயன்படுத்தி அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியை வாங்கியதன் மூலம் நிலைமையை பெருமளவுக்கு சமாளித்திருந்தது. மேலும், அந்நியச் செலாவணி வெளிப்பாட்டைக் குறைப்பதற்காக திறைசேரியானது முன்னுரிமை அடிப்படையில் வெளிநாட்டுக் கொள்வனவுகளைக் குறைக்கத் தொடங்கியது.

ஆண்டின் காலப்பகுதியில், திறைசேரிக் கிளையானது MITFFIN கொடுப்பனவு தொகுதியை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. இது காசுத் திரவத்தன்மை நிலைமையை முகாமை செய்வதற்கும் காசுச் சேகரிப்பு மற்றும் காசு வெளிப்பாய்வுகளைக் கண்காணிப்பதற்கும் பொருந்தக்கூடிய காசு உட்பாய்வுகள் மற்றும் காசு வெளிப்பாய்வுகளுக்குப் பொருந்தும்.

## நிதியங்களின் முகாமைத்துவம்

### இ.மி.ச. சேமலாப நிதியம்

இலங்கை மின்சார சபை சேமலாப நிதியம் என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தனியான சேமலாப நிதியம் ஆகும்.

நிதியத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள இ.மி.ச. இன் சபை உறுப்பினர்களின் நெருங்கிய நுண்ணாய்வின்கீழ், நிதியத்தின் அலுவல்கள் பற்றிய ஒட்டுமொத்தப் பொறுப்பும் முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சபையினால் நியமிக்கப்படுகின்ற நிதியத்தின் செயலாளரும் கணக்காளரும் நிதியத்தினது அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர்களாவர்.




கோவிட் 19 நோய்த் தொற்றானது உலகெங்கிலும் சுகாதார நெருக்கடியையும் பொருளாதார அழிவையும் ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. 2020 அக்டோபரில் ஏற்பட்ட 2 ஆவது அலையின் காரணமாக பொருளாதார நிலைமைகள் மோசமடைந்தன. 2021 இனது செயல்பாட்டுச் சூழலில் முன்னெப்போதும் இல்லாத சவால்களை நிதியத்தின் செயலாற்றுகை பிரதிபலித்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நிதியத்தின் நிகர இலாபம் 14% இனால் குறைவடைந்துள்ளது. இது வட்டி வீதங்களில் நீடித்த குறைப்பினைப் பிரதிபலிக்கிறது. நடைமுறையிலுள்ள வங்கி வீதங்களுக்கு இணையாக குறைந்த விகிதமொன்றில் வழங்கப்பட்ட கடன் வசதிகளாலும் வட்டி வருமானம் பாதிக்கப்பட்டது. வழங்கப்பட்ட கடன்கள் மீதான பரிசீலனைகளில் அதிகரிப்புடன்கூடிய தொழிற்பாட்டுச் செலவினங்களில் கூர்மையான அதிகரிப்பு வெளிப்பட்டது.

2021 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் வரிச் செலவினங்கள் 20% இனால் குறைவடைந்துள்ளன. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க VAT சட்டத்தின் பிரிவு 25A(1) இன் கீழ் 15% இல் நிதிச் சேவைகள் மீதான VAT இற்கு பொறுப்பான நிதியங்களுக்கு ஒரு வழிப்படுத்தலை வழங்கியுள்ளது. இந்த நிதியமானது வட்டி வருமானம் மீது இதுவரை VAT எதனையும் செலுத்தியிருக்கவில்லை, ஆனால் வட்டி வருமானம் மீது 15% VAT விதிக்கப்படுவது நிதியின் நிலைபேற்றுத்தன்மையைப் மோசமாக்கும்.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியத்தின் சொத்துத் தளம் 9% இனால் அதிகரித்து ரூபா 73.895 பில்லியனை அடைந்திருந்தது. சாத்தியமான இடர் திரும்பலை உத்தமமாக்குவதில், நிதியமானது தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டு வாய்ப்புகளை மாத்திரமே பின்பற்றியது. நடைமுறையிலிருந்த செயற்பாட்டு நிலைமைகளின் அடிப்படையில், நிதியத்தின் முதலீடு மொத்தச் சொத்துக்கில் 74.86% ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது (முன்னைய ஆண்டின் 74.06% உடன் ஒப்பிடும்போது).

மொத்தப் பொறுப்புக்கள் 17.22% இனால் குறைவடைந்துள்ள அதே வேளை அங்கத்தவர் மீதி 2.93% இனால் அதிகரித்து ரூபா 66.632 பில்லியனாக இருந்தது. 2021 டிசெம்பர் 31 இல், நிதியமானது கிட்டத்தட்ட 25,118 அங்கத்தவர் கணக்குகளைக் கொண்டிருந்ததுடன் அதில் 24,602 பேர் தற்போது பங்களிப்புச் செய்யும் அங்கத்தவர்களாக உள்ளனர். 2021 ஆம் ஆண்டிற்கான மொத்தப் பங்களிப்பு 6.3 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்த அதே வேளை நிதியமானது இதே காலப்பகுதியில் அங்கத்தவர்களுக்கு ரூபா 4.49 பில்லியனை மீளளிப்புச் செய்திருந்தது.

2020 ஆம் ஆண்டிற்கான பங்கிலாபமாக அதன் அங்கத்தவர்களுக்கு 8% வீதத்தை நிதியத்தால் அறிவிக்க முடிந்தது. எவ்வாறாயினும், 2021 ஆண்டிற்கான இந்த அறிவிக்கும் வீதம், நிதிச் சேவை மீது புதிதாக விதிக்கப்பட்ட 15% VAT இனால் பாதிக்கப்படும்.

பொருளாதார நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட மறுமலர்ச்சியின் மீது முதலீட்டு வாய்ப்புகள் குறித்து நிதியமானது எச்சரிக்கையுடனான அணுகுமுறையைத் தொடர்ந்து பின்பற்றியது.

டிஜிடல் இயலுமைகள் மற்றும் மேம்பட்ட தரவுப் பகுப்பாய்வு ஊடாக கிரய வினைத்திறன்களை உருவாக்குதல் மற்றும் தொகுப்புத் தரத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் தொடர்ச்சியான கவனம் செலுத்தப்படும்.

- அங்கத்தவர் கணக்குகளை எளிதாக அணுகுவதற்கு அவர்களை மையமாகக் கொண்ட தரவுத் தளம் உருவாக்கப்பட்டது.

- EPF செயற்பாடுகளை டிஜிடல்மயப்படுத்தும் பொருட்டு, விருத்தியாளரின் உதவியுடன் நிதியத்திற்கான புதிய முகாமைத்துவ தகவல் முறைமையொன்று செயல்படுத்தப்பட்டது. இது காகிதமற்ற சூழலுடன் முழுமையாக தானியங்கும் முறைமைக்கு வழிவகுக்கிறது.

கீழுள்ள வரைபடங்கள் (உரு. F 1 தொடக்கம் உரு F 5 வரை) அரசாங்கம் மற்றும் அங்கத்தவர்களின் பார்வையில் நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் நிதியத்தின் சிறப்பம்சங்கள்.




உரு F1: செலுத்தப்பட்ட வருமான வரி (ரூபா)




உரு F2: வழங்கப்பட்ட கடன்கள் (ரூபா மில்லியன்)




உரு F3: வட்டியும் பங்கிலாபமும் (ரூபா பில்லியன்)




உரு F 4: வருமானம் (ரூபா பில்லியன்)




உரு F5 : முதலீடுகளின் தொகுப்பு

## இ.மி.ச. ஓய்வூதிய நிதியம்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 12(j) இன் கீழ் 1994 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி ஓய்வூதிய நிதியம் தாபிக்கப்பட்டதுடன் இலங்கை மின்சார சபையின் பாதுகாவலரால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவினால் முகாமை செய்யப்படுகிறது. நிதியமானது முகாமைத்துவக் குழுவின் நேரடி நுண்ணாய்வுக்கு உட்பட்டதாகும். செயலாளரும் கணக்காளரும் ஓய்வூதிய நிதியத்தின் பொருளாளரும் அதேபோன்று நிர்வாகியும் ஆவார்.

8,057 என்ற மொத்த ஓய்வூதியகாரர்களில் 2021 இன் இறுதியில் இருந்த செயற்பாட்டு ஓய்வூதியகாரர்களின் மொத்த எண்ணிக்கை 7,714 ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகள் காலப்பகுதியில் ஓய்வூதியகாரர்களின் அதிகரிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | ஓய்வூதியம் பெறுவோர் அதிகரிப்பு | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| 2015 | 5,721 | - | - |
| 2016 | 6,194 | 473 | 8.30% |
| 2017 | 6,622 | 428 | 6.90% |
| 2018 | 7,061 | 439 | 6.60% |
| 2019 | 7,533 | 472 | 6.70% |
| 2020 | 7,839 | 306 | 4.06% |
| 2021 | 8,057 | 218 | 2.78% |




உரு F 6: ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை 2015-2021

ஓய்வூதிய நிதியத்திற்கான பிரதான வருமான மூலங்களாக செயற்பாட்டு ஊழியர்கள் சார்பாக மேற்கொள்ளப்படும் இ.மி.ச. இன் பங்களிப்பும் முதலீடுகள் மூலம் பெறப்படும் வருமானமும் ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகள் காலப்பகுதியில், 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இ.மி.ச. இன் சம்பள அதிகரிப்புக்கு இணையான ஓய்வூதியக் கொடுப்பனவின் அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கையின் அதிகரிப்பு ஆகியன காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான குறுகிய வீழ்ச்சி ஆண்டு தோறும் அதிகரித்திருந்தது. கடந்த ஆறு ஆண்டுகளில் ஓய்வூதியதாரர்களின் சராசரி அதிகரிப்பு 5.90% ஆக இருந்தது.

பற்றாக்குறையை விரிவாக்கக் காரணமான குறைந்த வட்டி முறையால் நிதி கடுமையாகத் தடைப்பட்டது




உரு F 7: வருடாந்த ஓய்வூதிய அர்ப்பணிப்புகளின் தொகுப்பு 2015-2021




உரு F8 : நிகரச் சொத்துக்கள்

# நிதிசார் மீளாய்வு

இலங்கை மின்சார சபை நம்பகமான சக்தியை உறுதி செய்வதன் மூலம் தேசத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதிலும் தேசிய கொள்கைகளுக்கு இணங்க நிலைபேறான முன்னேற்றத்தை அடைவதிலும் தொடர்ந்தும் முக்கிய வகிபாகத்தை ஆற்றி வருகிறது.

மிகவும் அழிவுகரமான நோய்த் தொற்றிலிருந்து வெளிவருவதற்கு நாடு போராடி வரும் நிலையில், நிலைபேறான வகையில் வாழ்க்கை மற்றும் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய அவசரத் தேவை காணப்படுகிறது. இந்த அசாதாரணமான மற்றும் கடினமான காலங்களில், இ.மி.ச. தனது நுகர்வோருக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான மின்சார வழங்கலை வழங்குவது மிகவும் அவசியமானதாக இருந்த அதே வேளை எமது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மிக உயர்ந்த செயற்பாட்டுத் திறன்களில் உறுதிப்படுத்துகிறது.

## நிதிசார் செயலாற்றுகை

### வருமானம்

இ.மி.ச. 2021 ஆம் ஆண்டில் 249 பில்லியன் ரூபா வருமானத்தைப் பதிவு செய்திருந்தது. இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4% வருமான வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. இது நோய்த்தொற்று காரணமாக ஏற்பட்ட நிச்சயமற்றதன்மை மற்றும் நிலையற்றதன்மையைச் சமாளிப்பதற்கு எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க முயற்சியைக் காட்டுகிறது. 2020 ஆம் ஆண்டின் நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த தொகையளவு வழங்கல் விதிப்பனவு வகைகளுக்கான தேவை அதிகரிப்பு மற்றும் வீட்டு நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு உள்ளிட்ட வருமான அதிகரிப்புக்கு பிரதான பங்களிப்பாளர்கள் நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 6% ஒட்டுமொத்த அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றார்கள். மின்வலுப் பிறப்பாக்கம் தொடர்பான அனைத்து செலவுக் காரணிகளும் வேகமாக அதிகரித்து வரும் அதே வேளையில், அரசின் கொள்கைத் தீர்மானத்தின்படி 2014 ஆம் ஆண்டிலிருந்து விதிப்பனவுக் கட்டமைப்பு மாறாது காணப்படுகிறது.



படம் F1: விற்பனை வருவாய் மற்றும் அலகுகள்



படம் F2: மின் பிறப்பாக்கமும் விற்பனை அலகுகளும் (Gwh)

### நிகர இலாபம் / (நட்டம்)

ஆண்டிற்கான நிகர நட்டம் ரூபா 21.9 பில்லியன் ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 68% குறிப்பிடத்தக்களவு குறைவைக் காட்டுகிறது. ஒரு சாதகமான பிறப்பாக்கல் கலவை, முக்கியமாக நீர்மின் பிறப்பாக்கம் மூலமான ஆதரவானது கிரயப் பிரதிபலிப்பற்ற விதிப்பனவு காணப்பட்ட போதிலும் உள்ளீட்டு விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க ஏற்ற, இறக்கங்களைத் தாங்குவதற்கு இ.மி.ச. இற்கு உதவியது. குறைந்த செலவில், அடிப்படைச் சுமை மின்வலு ஆலைகளை நிறுவாமையினால், தொடர் இழப்புகள் மேலும் பங்களிக்கின்றன. நாட்டில் சவாலான சமூக - பொருளாதார நிலைமைகள் காணப்பட்ட போதிலும், இ.மி.ச. அதன் நிகர இழப்பை 2020 ஆம் ஆண்டிற்கு எதிராக குறைக்க முடிந்தது. பிரதானமாகக் குறைந்த நேரடிப் பிறப்பாக்கல் கிரயம் மற்றும் சக்தித் தேவையின் அதிகரித்த பங்களிப்பு ஆகியவற்றால் இது எளிதாக்கப்பட்டிருந்தது.



படம் F3: நிதிசார் செயலாற்றுகை 2021 எதிர் 2020

**குறிப்பு *:** வரையறை செய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் மீதான நடைமுறை ஆதாயம்/(இழப்பு) ஆனது பிற வருமானங்களுடன் இணைக்கப்பட்டது

| | 2021 ரூபா மில். | 2020 மீள்குறிப்பிடப்பட்ட ரூபா மில். | மாறுபாடு % |
|---|---|---|---|
| மின்சார விற்பனை | 249,089 | 238,911 | 4% |
| ஏனைய வருமானம் | 12,824 | 10,155 | 26% |
| மொத்த செலவு | (283,364) | (309,552) | -8% |
| வரையறுத்த நன்மைக் கடப்பாடுகள் மீதான உண்மையான நட்டம் | (505) | (8,678) | -94% |

பிறப்பாக்கல் கலவையில் காணப்பட்ட சாதகமான மாற்றமானது (2020) 25% இலிருந்து 34% இற்கு மேம்படுத்தப்பட்ட இ.மி.ச. நீர்மின் பங்களிப்பு மூலம் ஏற்பட்டதாகும். இதற்கு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நேரடி பிறப்பாக்கல் கிரயம் ரூபா 26 பில்லியனால் (14%) இனால் குறைவடைந்தமை பெரியளவில் உதவியிருந்தது. இது இலங்கை மின்வலுப் பிறப்பாக்கத்தின் ஒரு வரலாற்று ரீதியான மைல்கல்லைக் குறிக்கிறது. இலங்கையின் மிகப்பெரிய காற்று மின்வலு ஆலையான "தம்பபவனி", வருடாந்த நிகரப் பிறப்பாக்கத்தில் 2% பங்களிப்பை வழங்கியிருந்தது. இ.மி.ச. நீர்மின், இ.மி.ச. காற்றாலை மற்றும் தனியார் NCRE இலிருந்து

மின் பிறப்பாக்கல் கலவைக்கு (மொத்த நிகரப் பிறப்பாக்கத்தில் 35% இலிருந்து 49% இற்கு) அதிகரித்த உள்ளீடானது முந்தைய ஆண்டை விட நிதிச் செயலாற்றுகையை ஆக்கபூர்வமாகப் பாதித்தது. சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வது போன்ற அதிக கிரயம் கொண்ட அனல் மின்வலு மூலங்களிலிருந்து குறைந்த பங்களிப்புடன் இ.மி.ச. ஆண்டின் சக்தித் தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

நிலக்கரி, எரிபொருள் மற்றும் ஏனைய பொருள்களின் விலைகள் அதிகரித்ததன் விளைவாக உலகளாவிய வழங்கல் சங்கிலிகளுக்கு நோய்த் தொற்றால் தூண்டப்பட்ட இடையூறுகள், பிரதானமாக ஆண்டின் பிற்பகுதியில் தொழிற்பாட்டுக் கிரயத்தை மோசமாகப் பாதித்தன. மேற்கூரை சூரிய சக்திப் பிறப்பாக்கத்தின் இணைப்புக்கான தேவை சீராக வளர்ந்தது.




படம் F4: நிகர பிறப்பாக்கக் கலவை

## கிரயக் கட்டமைப்பு




படம் F5: கிரயக் கட்டமைப்பு 2021




படம் F6: கிரயக் கட்டமைப்பு 2020

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டிற்கான நேரடிப் பிறப்பாக்கல் கிரயம் 14% இனால் குறைவடைந்தமையானது (2021: 157 பில்லியன், 2020: 183 பில்லியன்) பிரதானமாக நாட்டின் மத்திய மலைநாட்டில் மேற்படி சாதாரண மழைவீழ்ச்சி காணப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சாதகமான பிறப்பாக்கல் கலவையின் விளைவாக எரிபொருள் மற்றும் IPP அனல்மின் கிரயங்களில் ஏற்பட்ட குறைவினால் ஆகும். நிலக்கரி மூலமான சக்திப் பிறப்பாக்கத்தில் 4% சரிவு காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் அதன் செலவினங்களுக்கான கிரயம் 11% அதிகரித்திருந்தது. ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய மேலதிக செலவினங்கள் காணப்பட்ட போதிலும், இ.மி.ச. இனால் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கிரயங்களை 4% இல் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.

2020 இல் பிறப்பாக்கல் புள்ளியில் இருந்த அலகொன்றின் கிரயம் ரூபா 13.96 / kWh உடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 11.74 / kWh ஆகக் குறைவடைந்தமை நேரடிப் பிறப்பாக்கத்தின் கிரயச் சேமிப்பை வெகுவாகப் பாதித்தது.

இறுதி நுகர்வோருக்கான விற்பனைப் புள்ளியில், இ.மி.ச. இன் அலகொன்றின் கிரயம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 18.63/ kWh ஆகக் காணப்பட்டது. இது 2020 இல் ரூபா 21.67/ kWh (மீள்குறிப்பிடப்பட்ட) ஆக இருந்தது. அதற்கிணங்க, நேரடி பிறப்பாக்கல் கிரயத்தை உள்ளடக்கிய தொழிற்பாட்டுக் கிரயம், முன்னைய நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% இனால் குறைவடைந்திருந்தது.

## கடன் பெறுகைகளும் நிதிக் கிரயமும்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான கொடுப்பனவுகள் மீதான தாமதக் கட்டணம் 145% இனால் ரூபா 6.4 பில்லியனாக அதிகரித்திருந்ததன் காரணமாக, ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. இன் நிதிச் செலவினங்கள் 5% இனால் ரூபா 20.4 பில்லியனுக்கு அதிகரித்தது. நோய்த்தொற்று நிலைமை காரணமாக சேகரிப்புச் செயன்முறையில் காணப்பட்ட இடையூறுகள், ஏற்கனவே தடைப்பட்டிருந்த காசுப் பாய்வுகளை கடுமையாகப் பாதித்திருந்ததுடன் CPC உள்ளிட்ட முக்கிய வழங்குநர்களுக்கான தீர்ப்பனவுகளும் தடைப்பட்டன. இதன் விளைவாக தாமத வட்டிக் கட்டணமும் அதிகரித்தது.

2021 ஆம் ஆண்டில் புதிய கடன்கள் ரூபா 64.8 பில்லியன் இருந்த போதிலும், வட்டி வீதங்களைத் திருத்துவதன் மூலமும் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிப்பதன் மூலமும் தற்போதுள்ள கடன் தொகுதியை மறுசீரமைப்பதற்கான தீவிர முயற்சிகளைப் பிரதிபலிக்கும் வகையில் வட்டிக் கிரயமானது 16% இனால் குறைவடைந்து ரூபா 12.2 பில்லியனாக இருந்தது.




படம் F7: கடன் பெறுகை எதிர் நிதிக் கிரயம் (ரூபா மில்லியன்)

அரசாங்கத்திற்குச் சொந்தமான பயன்பாட்டு நிறுவனமான இ.மி.ச. ஆனது ரூபா 20 பில்லியன் மதிப்பிலான சிரேஷ்ட, பாதுகாப்பற்ற, பட்டியலிடப்பட்ட, மீட்கத்தக்க, மதிப்பிடப்பட்ட தனிச்சங்களை ரூபா 100 என்ற விநியோக விலையுடன் நிலையான கூப்பன் வீதம் 9.35% இல் 5 ஆண்டுகள் முதிர்வுக் காலத்துடன் 2021 ஏப்ரலில் விநியோகித்த முதலாவது நிறுவனமாக இ.மி.ச. காணப்படுகிறது. ஆண்டிற்கான ரூபா 1.35 பில்லியன் வட்டிக் கிரயத்தைப் பதிவு செய்து, தனிச்சங்களின் மூலம் கிடைக்கின்ற வருமானம் இ.மி.ச. இன் பிரதான கடன் கொடுத்தோருக்கான நிலுவைத் தொகையை ஓரளவு செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

## நிதி நிலை

இ.மி.ச. ஒரு டிரில்லியன் மதிப்புள்ள மொத்தச் சொத்துக்களை எட்டியதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்திருந்ததுடன் அதன் சொத்துத் தளம் 5% இனால் அதிகரித்திருந்தது. அதாவது முந்தைய நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 48 பில்லியன் அதிகரித்துள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் நடைமுறையல்லாச் சொத்துக்களும், நடைமுறைச் சொத்துக்களும் முறையே 4% மற்றும் 13% இனால் வளர்ச்சியடைந்துள்ளன. இதற்கு பிரதான பங்காளிப்பாளர்களாக ஆதனம், பொறி மற்றும் உபகரணமும், தொக்குகளுமே உள்ளன.




படம் F7: சொத்து வளர்ச்சி

## நிதி நிலை (சிறப்பம்சங்கள்)

### மொத்தச் சொத்துக்கள







2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 4% இனால் அதிகரித்துள்ளன. இது இ.மி.ச. இன் மொத்த சொத்துத் தளத்தில் 85% இனைப் பிரதிபலிக்கிறது. இது பெரும்பாலும் பிறப்பாக்கல் மின்வலு ஆலைகள், மின் பரிமாற்ற, மின் விநியோக மார்க்கங்கள் மற்றும் கட்டடங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் காரணமாக ஏற்பட்டதாகும். தொக்குகளில் செய்யப்பட்ட முதலீடுகள் 40% இனால் அதிகரித்து ரூபா 64 பில்லியனாக அமைந்திருந்தது. இது பிரதானமாக நிலக்கரி இருப்புகள், உதிரிப்பாகங்கள் மற்றும் நுகர்வுப் பொருள்களால் ஏற்பட்டதாகும். இ.மி.ச. இன் மொத்த சொத்துத் தளத்தில் நடைமுறைச் சொத்துக்கள் 13% ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டில் 12% ஆகக் காணப்பட்டது. வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் ஆண்டின்போது 7% இனால் குறைவடைந்த போதிலும், நோய்த் தொற்று காரணமாக மின்சாரத் துண்டிப்புகளை ஒத்திவைக்கின்ற அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் கட்டணங்களை வசூலிப்பதில் ஏற்பட்ட தடங்கல்களால் நுகர்வோரின் செலவழிப்பு வருமானம் தடைப்பட்டதன் காரணமாக 'தொடர்பற்ற மின்சார கடன்பட்டோர்' 8% இனால் அதிகரித்திருந்தது.

இ.மி.ச. இன் மொத்தச் சொத்துக்களில் 40 % கடன் வசதியளிக்கப்பட்டதாகும் - இது முன்னைய ஆண்டுகளைவிட ஒப்பீட்டளவில் மாறாமல் காணப்பட்ட அதே வேளை 2021 ஆம் ஆண்டின் மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்களில் 5% அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. ஆண்டின் காலப்பகுதியில் தடையற்ற மின்சார வழங்கலைப் பேணுவதற்காக இ.மி.ச. இற்குத் தேவைப்பட்ட அதிகரித்த மூலதன மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கு நிதியிடுவதற்காக ரூபா 45 பில்லியன் பெறுமதியான கடன்கள் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

மேலும், இலங்கையில் இதுவரை பட்டியலிடப்பட்ட மிகப்பெரிய தனிச்சங்களின் வழங்கலாக முக்கியத்துவம் பெற்றுள்ள 20 பில்லியன் ரூபா பெறுமதியான தனிச்சங்களை சந்தையில் பட்டியலிட்டதன் மூலம் இ.மி.ச. நிதி திரட்டுவதற்கான சவால் நிறைந்த பாதையொன்றைத் தேர்ந்தெடுத்தது. தனிச்சங்களுக்கு வெற்றிகரமாக அதிக சந்தா செலுத்தப்பட்டதுடன் திரட்டப்பட்ட நிதியானது CPC மற்றும் இ.மி.ச. இன் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய கடன்களின் ஒரு பகுதியான முறையே ரூபா 6 பில்லியன் மற்றும் ரூபா 14 பில்லியன் தொகைகளைத் தீர்க்கப் பயன்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, புத்தளம் நிலக்கரி மின்வலு ஆலைச் செயற்றிட்டம் மீதான வெளிநாட்டுக் கடனுக்காக செய்யப்பட்ட தீர்ப்பனவுகள் ஊடாக திறைசேரியிடமிருந்து ரூபா 21.3 பில்லியன் பெறுமதியான மூலதன பங்களிப்பின் மாற்றல் காரணமாக உரிமையாண்மையின் நிலை உயர்த்தப்பட்டது. எவ்வாறிருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தப் பொறுப்புக்கள் 7% இனால் அதிகரித்திருந்தது. வட்டியைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன்பெறுகைகளின் மொத்தமானது உரிமையாண்மையைவிட குறிப்பிடத்தக்களவு உயர்வாக இருப்பதால், அது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இன் கடன் / உரிமையாண்மை விகிதத்தின் சரிவுக்கு வழிவகுத்தது.

## மொத்தப் பொறுப்புக்களும் உரிமையாண்மையும்







## நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூட்டமைவு







## நடைமுறைச் சொத்துக்களின் கூட்டமைவு







## நிதி விகிதங்கள்

| விகிதம் | *2021* | மீள்குறிப்பிடப்பட்ட *2020* |
|---|---|---|
| சொத்துக்கள் மீதான வருமானம் | *-2%* | *-7%* |
| உரிமையாண்மை மீதான வருவாய் | *-8%* | *-26%* |
| உரிமையாண்மை கடன் | *150%* | *143%* |
| சொத்துக் கடன் | *40%* | *40%* |
| நடைமுறை விகிதம் | *0.53:1* | *0.56:1* |
| விரைவு விகிதம் | *0.27:1* | *0.34:1* |
| *DSCR* | *0.79* | *-0.24* |
| வட்டி காப்பு | *-0.08* | *-2.80* |

நிதி விகிதங்கள்

### இறுதிப் பயனர் விதிப்பனவு மற்றும் அரசாங்கக் கொள்கை

அரசாங்கக் கொள்கையின்படி, இ.மி.ச. ஆனது குறைந்த நுகர்வினைக் கொண்ட வீட்டு வகை மின் நுகர்வாளர்கள் மற்றும் பொது நோக்க வகை தவிர்ந்த பெரும்பாலான ஏனைய வகையைச் சேர்ந்த நுகர்வாளர்கள் ஆகியோருக்கு விற்பனைப் புள்ளியில் உள்ள உண்மையான கிரயத்தை விடவும் குறைந்த விலையொன்றில் மின்சாரத்தை வழங்குகிறது. எனவே, உயர்ந்தளவு அலகுகள் வீட்டு மின் நுகர்வில் ஈடுபடும் நுகர்வோர்கள் மற்றும் பொது நோக்க வகையைச் சேர்ந்த மின் நுகர்வோர்கள் இந்தக் கிரயத்தின் ஒரு பகுதியை மிகையாகத் தாங்குகின்றனர். 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு, அரசாங்கக் கொள்கை காரணமாக ஏற்பட்ட மொத்த நட்டமாக ரூபா 59.7 பில்லியன் பதிவாகியிருந்த அதே வேளை உயர்ந்தளவு மின் நுகர்வில் ஈடுபட்ட நுகர்வோரிடமிருந்து மிகையாக வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூபா 25.4 பில்லியனாக இருந்தது. எனவே, இ.மி.ச. இற்கு ஏற்பட்ட ஏனைய வருமானங்கள் தவிர்ந்த நட்டம் ரூபா 34.3 பில்லியனாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, அரசாங்கத்தின் மானியக் கொள்கை காரணமாக இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட நிகர தாக்கம் கீழ்வருமாறு :

| | 2021 ரூபா மில்லியன் மில்லியன் | 2020 மீள்குறிப்பிடப்பட்ட ரூபா மில்லியன் |
|---|---|---|
| அரசாங்கக் கொள்கை காரணமான நட்டம் / குறைபாடு (தேவையான மானியம்) | (59,665) | (83,856) |
| அறவிடப்பட்ட மிகை | 25,390 | 13,215 |
| அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டிய நிகர மானியம் | -34,275 | -70,641 |
| ஏனைய வருமானம் (சீராக்கப்பட்ட வரையறுத்த நன்மை கடப்பாடு மீதான உண்மையான நட்டம்) | 12,320 | 1,477 |
| நிதிக் கூற்றுக்களின்படி நிகர நட்டம் | -21,955 | -69,164 |

# பத்து ஆண்டுகால பொழிப்பு

இலங்கை மின்சார சபையின் கடந்த பத்து ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகள் மற்றும் சொத்துக்களின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளன.

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2021 ரூபா மிலியன் | 2020 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2019 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2018 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2017 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2016 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2015 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2014 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2013 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2012 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு விளைவு** | | | | | | | | | | |
| வருமானம் | 249,089 | 238,911 | 242,950 | 229,571 | 218,450 | 206,811 | 188,684 | 202,645 | 194,147 | 163,512 |
| வீட்டு பாவனையாளருக்கு வழங்கிய மானியம் | (196) | (5,908) | - | - | - | - | - | - | - | - |
| விற்பனைக் கிரயம் | (254,452) | (276,938) | (322,521) | (251,964) | (260,273) | (222,097) | (168,781) | (213,646) | (165,509) | (222,419) |
| மொத்த, லாபம்/(நட்டம்) | (5,559) | (43,935) | (79,571) | (22,393) | (41,823) | (15,286) | 19,903 | (11,001) | 28,638 | (58,907) |
| ஏனைய வருமானம் மற்றும் நயம் | 11,693 | 8,817 | 10,307 | 9,450 | 8,143 | 10,323 | 8,292 | 5,871 | 5,107 | 4,225 |
| நிர்வாக செலவினம் | (8,285) | (7,131) | (7,280) | (5,832) | (5,110) | (4,965) | (4,086) | (3,146) | (2,556) | (2,997) |
| நிதி வருமானம் | 1,131 | 1,338 | 1,751 | 1,466 | 1,194 | 1,049 | 434 | 304 | 1,677 | 2,429 |
| நிதிக் கிரயம் | (20,430) | (19,522) | (22,526) | (13,036) | (8,415) | (4,312) | (5,134) | (7,030) | (10,601) | (6,198) |
| வருமான வரிக்கு முன், லாபம்/(நட்டம்) | (21,450) | (60,433) | (97,319) | (30,345) | (46,011) | (13,191) | 19,409 | (15,002) | 22,265 | (61,448) |
| வருமான வரிச் செலவினம் | - | (53) | (39) | (50) | (232) | (263) | (61) | (95) | | |
| பிற்போட்ட வரி (கட்டணம்)/தலைகீழாக்கள் | - | - | - | - | - | - | - | 995 | (1,326) | (16,198) |
| வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகள் மீதான அக்சூரியல் ஆதாயம்/ நட்டம் | (505) | (8,678) | (64) | (1,541) | (1,338) | (1,003) | 952 | (3,183) | (39) | (124) |
| விரிவான வருமானம் | (21,955) | (69,164) | (97,422) | (31,936) | (47,581) | (14,457) | 20,300 | (17,285) | 20,900 | (77,770) |
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2021 ரூபா மிலியன் | 2020 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2019 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2018 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2017 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2016 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2015 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2014 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2013 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் | 2012 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன் |
| சொத்துக்கள் | | | | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 853,011 | 819,248 | 781,517 | 747,012 | 724,068 | 704,695 | 694,415 | 681,471 | 648,130 | 621,088 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 912 | 912 | 912 | 912 | 912 | 912 | 912 | 785 | 785 | 762 |
| கூட்டு முயற்சிகளில் முதலீடு | 329 | 329 | 329 | 329 | 329 | 329 | 329 | 150 | 150 | 150 |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் முதலீடு | 10,658 | 9,981 | 8,997 | 8,070 | 7,246 | 6,496 | 6,036 | 5,653 | 5,250 | 4,433 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 7,700 | 8,859 | 9,951 | 10,204 | 8,912 | 8,983 | 3,848 | 2,291 | - | - |
| ஏனைய நடைமுறையல்லா சொத்துக்கள் | 851 | 1,074 | 1,489 | 1,242 | 961 | 949 | 896 | - | - | - |
| விற்பனைக்காக உள்ள நடைமுறையல்லா சொத்துக்கள் | 0.076 | 0.076 | 0.076 | 0.076 | 0.655 | 1,022 | 1,025 | 1,023 | 1,021 | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | 131,921 | 116,617 | 110,576 | 102,338 | 89,065 | 80,968 | 69,391 | 72,662 | 91,423 | 101,295 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,005,382** | **957,020** | **913,771** | **870,107** | **831,494** | **804,354** | **776,852** | **764,035** | **746,759** | **727,728** |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் | 353,928 | 352,094 | 318,149 | 281,262 | 236,129 | 220,476 | 214,299 | 221,735 | 355,043 | 345,700 |
| பாவனையாளர் வைப்புக்கள் | 16,300 | 15,641 | 15,014 | 14,311 | 13,557 | 12,753 | 11,484 | 10,458 | 9,722 | 8,899 |
| ஏற்பாடு மற்றும் ஏனைய பிற்போட்ட பொறுப்புக்கள் | 21,615 | 20,121 | 10,482 | 10,038 | 8,622 | 7,262 | 6,116 | 6,572 | 3,236 | 3,593 |
| அரசாங்க மானியங்கள் | 188 | 200 | 213 | 228 | 243 | 211 | - | - | - | - |
| பிற்போட்ட வருமானம் | - | - | - | - | - | - | 71,696 | 66,292 | 60,343 | 55,208 |
| ஒப்பந்த பொறுப்புக்கள் | 99,518 | 95,771 | 89,746 | 86,335 | 82,564 | 77,628 | - | - | - | - |
| பிற்போட்ட வரி | - | - | - | - | - | - | - | - | 22,182 | 20,857 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 249,031 | 208,447 | 223,803 | 145,712 | 123,682 | 72,661 | 43,630 | 64,147 | 69,134 | 96,171 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **740,580** | **692,274** | **657,407** | **537,886** | **464,797** | **390,991** | **347,225** | **369,204** | **519,660** | **530,428** |
| **உரிமைத்துவம்** | | | | | | | | | | |
| பங்களித்த மூலதனம் | 413,054 | 391,731 | 323,194 | 302,695 | 302,695 | 302,695 | 302,228 | 289,038 | 121,708 | 110,862 |
| ஒதுக்கங்கள் | 41,222 | 39,254 | 37,110 | 34,881 | 32,783 | 30,283 | 28,463 | 27,434 | 25,999 | 24,460 |
| நிறுத்திவைத்த உழைப்புக்கள் | (189,474) | (166,239) | (103,940) | (5,355) | 31,219 | 80,385 | 98,936 | 78,359 | 79,392 | 61,978 |
| **மொத்த உரிமைத்துவம்** | **264,802** | **264,746** | **256,364** | **332,221** | **366,697** | **413,363** | **429,627** | **394,831** | **227,099** | **197,300** |
| **மொத்த உரிமைத்துவமும் பொறுப்புக்களும்** | **1,005,382** | **957,020** | **913,771** | **870,107** | **831,494** | **804,354** | **776,852** | **764,035** | **746,759** | **727,728** |

# பெறுமதி சேர்க்கப்பட்ட அறிக்கை

| விவரணம் | 2021<br>இலங்கை ரூபா மில்லியன் | 2020<br>இலங்கை ரூபா மில்லியன் |
|---|---|---|
| **உருவாக்கப்பட்ட பெறுமதி** | | |
| வருமானம் | 249,089 | 238,911 |
| வேறு வருமானம் | 11,693 | 8,817 |
| நிதி வருமானம் | 1,131 | 1,338 |
| வெளியாட்களால் வழங்கப்பட்ட வளங்களுக்கான செலவு | (144,426) | (148,856) |
| **நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மொத்த பெறுமதி** | **117,488** | **100,210** |
| **பெறுமதி விநியோகிக்கப்பட்டது** | | |
| **ஊழியர்களுக்கு சம்பளமாகவும் வேறு நன்மைகளாகவும்** | **47,869** | **38,224** |
| **அரசாங்க வருமானத்திற்கு** | | |
| வருமான வரி | | 53 |
| ஏனைய வரிகள் | 3,504 | 3,173 |
| **மூலதனக் கடன் கொடுத்தவர்களுக்கு** | | |
| கடன்களுக்கான வட்டி | 20,431 | 19,522 |
| **சமூகத்திற்கு** | | |
| கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு | 24 | 69 |
| கோவிட் காரணமாக வழங்கப்பட்ட சலுகைகள் | 196 | 5,908 |
| மாணிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டது | 34,275 | 70,641 |
| **வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்காக தக்கவைக்கப்பட்ட பெறுமதி** | | |
| தக்கவைக்கப்பட்டது | (21,955) | (69,164) |
| தேய்மானம் | 33,144 | 31,784 |
| **நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட மொத்த பெறுமதி** | **117,488** | **100,210** |





ஹம்பாந்தோட்டை சோலார் பார்க்

# பணிப்பாளர்கள் சபை சுய விபரம்

## இயக்குநர்கள் குழு சுயவிவரம்

| பொறியியலாளர் எச். எம். விஜித ஹேரத் | |
|---|---|
| **பதவி** | தலைவர் |
| **பதவிக்காலம்** | 2021 ஜுலை 19 வரை |
| **திறன்களும் அனுபவமும்** | பீ.எஸ்சீ. பொறியியல் பட்டதாரி, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவக உறுப்பினர், அமெரிக்கன் வெல்டிங் சங்க உறுப்பினர். இவர் செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் வணிக நிருவாகத்தில் 20 வருட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (தனியார்) கம்பனியின் தலைவர்.<br>வரையறுக்கப்பட்ட எல்.ரீ.எல். ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின் தலைவர்.<br>வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் சபைப் பணிப்பாளர்.<br>தலைவர் - வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனி. |

| எம். எம். சீ. பேர்டினான்டோ | |
|---|---|
| **பதவி** | தலைவர் |
| **பதவிக்காலம்** | 2021 ஜுலை 20 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | எல்.எல்.பீ. (இலங்கை), சட்ட வழக்கறிஞர் மற்றும் பொது முகாமைத்துவ டிப்ளோமா (நிருவாகக் கல்லூரி, நெதர்லாந்து)<br>இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட உறுப்பினர் (முதன்மைப் பொது குடியியல் சேவை) மற்றும் அரச துறையில் 45 வருடத்திற்கும் மேலான சேவை அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். பல்வேறு அமைச்சுக்களில் செயலாளராகப் பணியாற்றியுள்ளதுடன் பல அரச உரிமை நிறுவனங்களில தலைவர், பிற உயர் பதவிகள் மற்றும் சபைப் பணிப்பாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். அத்துடன் பல சர்வதேச மன்றங்களில இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | வரையறுக்கப்பட்ட எல்.ரீ.எல். ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின் தலைவர்.<br>வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்.<br>வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனியின் சபை பணிப்பாளர். |

| என். எஸ். இலங்ககோன் | |
|---|---|
| **பதவி** | துணைத் தலைவர் |
| **பதவிக்காலம்** | 2020 டிசெம்பர் 11 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இலங்கை மற்றும் அமெரிக்காவில் கடல் விமானத்தின் வர்த்தகரீதியான ஓட்டத்திற்குரிய விமான ஓட்டிக்கான தகுதி பெற்றவர். இவர் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் தலைவராகவும் சிரேஷ்ட முகாமையாளராகவும் வணிக முகாமைத்துவத்தில் 16 வருட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (தனியார்) கம்பனியின் தலைவர்.<br>வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனியின் தலைவர்.<br>வரையறுக்கப்பட்ட எல்.ரீ.எல். ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின் சபை அங்கத்தவர்.<br>வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் சபை அங்கத்தவர். |

| எல். ஜீ. பிரேமசிறி | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2021 ஜனவரி 29 வரை |
| **திறன்களும் அனுபவமும்** | களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற வர்த்தக இளமாணிப் பட்டத்தையும் இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகத்தில் (SLIDA) இருந்த பெற்ற பொது நிருவாக முதுமாணிப் பட்டத்தையும் கொண்டிருக்கிறார். அத்துடன் இவர் இலங்கை கணக்காளர் சேவையின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.<br>இவர் ஒரு கணக்காளராக, பிரதம உள்ளகக் கணக்காய்வாளராக, பணிப்பாளராக பல்வேறு நிலைகளில் அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் 34 வருட சேவை அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | பிரதம நிதி அலுவலர் - கைத்தொழில் அமைச்சு |

| வீ. பீ. கே. அனுஷ பல்பிட்ட | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2021 சனவரி 30 இலிருந்து 2021 ஜுலை 7 வரை |
| **திறன்களும் அனுபவமும்** | அரச சேவையில் 27 வருட அனுபவத்தைக் கொண்ட இலங்கை நிருவாக சேவையின் விசேட தர அலுவலர். இவர் தாமரைக் கோபுரம் மற்றும் சூரியவெவ தகவல் தொழினுட்பப் பூங்கா செயற்றிட்டம் போன்ற முக்கியமான அரசாங்க செயற்றிட்டங்களை முகாமித்ததன் மூலம் சிறந்த முகாமைத்துவ மற்றும் திட்டமிடல் திறன்களை கொண்டிருப்பவர். இவர் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பல்வேறு சிரேஷ்ட முகாமைத்துவ நிலைகளில் வெற்றிகரமாகப் பணியாற்றியுள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | செயலாளர் - கைத்தொழில் அமைச்சு சபை அங்கத்தவர் - நகர அபிவிருத்தி அதிகாரசபை |

# இயக்குநர்கள் குழு சுயவிவரம் (தொடர்ச்சி..)

| ஜெனரல் தயா ரத்நாயக்க - (ஓய்வு) | |
|---|---|
| பதவி | சபை அங்கத்தவர் |
| பதவிக்காலம் | 2021 ஜூலை 8 இலிருந்து 2021 டிசெம்பர் 23 வரை |
| திறன்களும் அனுபவமும் | ஜெனரல் (ஓய்வு) தயா ரத்நாயக்க டபிள்யூ.டபிள்யூ. வீ. ஆர்.டபிள்யூ.பீ. ஆர்.எஸ்.பீ. வீ.எஸ்.வீ. யூ.எஸ்.பீ. என்.டீ.யூ. பீ.எஸ்.சீ.<br><br>ஜெனரல் (ஓய்வு) தயா ரத்நாயக்க 2021 இல் கைத்தொழில் அமைச்சுக்கான செயலாளராக நியமிக்கப்பட்டார். இவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முன்னாள் தலைவரும் ஒரு தனித்துவமான தொழில் சாதனையைக் கொண்ட இலங்கை இராணுவத்தின் 20 ஆவது தளபதியுமாவார் (2013-2015).<br><br>இவர் 1980 பெப்ரவரி 06 ஆந் திகதி இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையில் இளநிலைப் பயிலுநர் அலுவலராக ஆட்சேர்க்கப்பட்டு பணியிலமர்த்தப்பட்டார். அவர் பல்வேறு இராணுவம் சார்ந்த மற்றும் இராணுவம் சாராத பயிற்சிகளையும் இந்தியாவில் கனிஷ்ட கட்டளை மற்றும் சிரேஷ்ட கட்டளை பாடநெறிகளையும், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள கிரான்பீல்ட் பல்கலைக்கழகத்தில் ஆளுகை மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவப் பாடநெறியையும், ஐக்கிய அமெரிக்காவின் ஹவாய் இலுள்ள ஹொனலுலு இல் காணப்படும் பாதுகாப்புக் கற்கைகளுக்கான ஆசிய பசிபிக் நிலையத்தில் உயர் மட்ட பாதுகாப்புக் கற்கைகள் பாடநெறி மற்றும் உயர் தொடர்பாடல் திறன்கள் பாடநெறியையும் பின்பற்றியுள்ளார். அத்துடன் அவர் பங்களாதேஷ் இலுள்ள பாதுகாப்பு சேவைக் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி, சீனாவிலுள்ள தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் அரிசோனாவிலுள்ள போர்ட் ஹுனாச்சுகா இராணுவ புலனாய்வுப் பாடசாலை ஆகியவற்றிலிருந்து பட்டங்களைப் பெற்றுள்ளார். தற்போது, அவர் சேர் ஜோன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் தனது பி.எச்.டி. படிப்பினைத் தொடர்கிறார்.<br><br>ஜெனரல் (ஓய்வு) தயா ரத்நாயக்க அவரது தராதரத்திற்குப் பொருத்தமான பல்வேறு கட்டளை நியமனங்களை கொண்டிருந்ததுடன் 14,500 இற்கும் மேற்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. இன் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக அவர் ஆற்றிய வகிபாகம் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>பல அச்சுறுத்தல் மிகுந்த இராணுவ நடவடிக்கைகளில் அவரது விதிவிலக்கான தனித்துவமான செயற்பாடுகள் ஒரு போர்க்கள வீரராக நன்கு அங்கீகரிக்கப்பட்டதுடன் இருபத்தி ஆறுக்கும் மேற்பட்ட வீர மற்றும் சேவைப் பதக்கங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளார். |
| பிற நிறுவனங்களில் வகிபாகம் | கைத்தொழில் அமைச்சின் செயலாளர் |

| ஜீ. பீ. என். எம். அபேசேகர | |
|---|---|
| பதவி | சபை அங்கத்தவர் |
| பதவிக்காலம் | 2021 டிசெம்பர் 24 இலிருந்து |
| திறன்களும் அனுபவமும் | இவர் இலங்கை நிருவாக சேவையின் ஒரு உறுப்பினராக அரச சேவையில் 22 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் தற்போது இவர் கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றுகிறார். அவர் நீதி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றிலும்கூட மேலதிக செயலாளராக முன் அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். இதற்கு மேலதிகமாக, அவர் பல அமைச்சுக்களிலும் அரச திணைக்களங்களிலும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிகளையும் பணிப்பாளர் பதவிகளையும் வகித்துள்ளார். |
| பிற நிறுவனங்களில் வகிபாகம் | மேலதிக செயலாளர் கொள்கை விருத்தி - கைத்தொழில் அமைச்சு |

| எஸ். டீ. யூட் நிலுக்ஷன் | |
|---|---|
| பதவி | சபை அங்கத்தவர் |
| பதவிக்காலம் | 2020 சனவரி 13 இலிருந்து 2021 டிசெம்பர் 23 வரை |
| திறன்களும் அனுபவமும் | இவர் தென் கொரியாவின் கயூங் ஹீ பல்கலைக்கழகத்தில் சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிருவாகத்தில் பி.எஸ்.சீ. விசேட பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் அரச துறையில் 20 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் இலங்கை நிருவாக சேவையின விசேட தர அலுவலராகவும் இருக்கிறார். மேலும், இவர் 2015 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் அமைச்சரவை அலுவலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணி புரிந்ததுடன் பல பிரதான அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கிறார். |
| பிற நிறுவனங்களில் வகிபாகம் | பணிப்பாளர் நாயகம், தேசிய பாதீட்டுத் திணைக்களம் |

# இயக்குநர்கள் குழு சுயவிவரம் (தொடர்ச்சி..)

| எம். எம். நயீமுதீன் | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2020 சனவரி 17 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் SLAS விசேட தர அதிகாரியாக இருப்பதுடன் பட்டய தொழில்சார் முகாமைத்துவ சக உறுப்பினராகவும் இருக்கிறார். இவர் பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் பொருளியல் பட்டத்தையும் பெற்றிருக்கிறார். இவர் அரச துறை முகாமையாளராக கிட்டத்தட்ட 26 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் அதில் 16 வருடங்கள் உயர் மட்ட தலைமைத்துவ பதவிகளில் அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். இவர் கொள்கை மறுசீரமைப்புகள், நிறுவனரீதியான வலுப்படுத்தல், செயற்றிட்ட முகாமைத்துவம், கொள்வனவுகள் மற்றும் மனித வளங்கள் தொடர்பில் அரச நிறுவனங்களுக்கு வழிகாட்டியதற்காக பெரிதும் பாராட்டப்பட்டார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | மேலதிக செயலாளர் (செயற்றிட்டக் கண்காணிப்பு) - அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளுராட்சி அமைச்சு. |

| பி. கே. ஜகத் பெரேரா | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2021 சனவரி 7 வரை |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் தனியார் துறையில் 20 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தையும் அரச துறையில் 10 வருட அனுபவத்தையும் கொண்டிருக்கிறார். இ.மி.ச. இன் சபைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர், இவர் வரையறுக்கப்பட்ட கொழும்பு வர்த்தக உரக் கம்பனியின் தலைவராகவும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் வரையறுக்கப்பட்ட சீ-நோர் அமைப்பின் தலைவராகவும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | தலைவர் - வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனியார்) கம்பனி |

| கலாநிதி பி. விஜயரத்ன | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2021 சனவரி 7 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் இலங்கை நிருவாக சேவை உறுப்பினராக அரச துறையில் 35 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். இவர் இ.மி.ச. இன் சபைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் கமத்தொழில் அமைச்சின் செயலாளராகப் பணியாற்றியிருந்தார். இவர் இளைஞர் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகவும் பதவிகளை வகித்திருந்தார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | தோட்ட முகாமைத்துவ தேசிய நிறுவகத்தின் தலைவர். |
| | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் |
| | தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் |

| ரூபன் விக்கிரமாராய்ச்சி | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2020 ஏப்ரல் 24 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் தனிநபர் முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமாவையும் கொண்டிருக்கிறார். இவர் இ.மி.ச. உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசேட புலனாய்வுக் கிளைகளில் 36 வருட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். மேலும், இவர் 1994 இலிருந்து 2001 வரையான காலப்பகுதியில் இ.மி.ச. இல் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினராகவும் ஒழுக்காற்று சபை உறுப்பினராகவும் தமது கடமைகளை முன்னெடுத்திருந்தார். இவர் இ.மி.ச. இன் விசேட புலனாய்வுக் கிளையின் உருவாக்க தலைவராகவும் இருந்துள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிபாகம்** | லங்கா லொஜிஸ்டிக்ஸ் அன்ட் டெக்னோலொஜிஸ் கணக்காய்வுக் குழுவின் பணிப்பாளரும் அங்கத்தவரும். |
| | நுகர்வோர் சேவை அதிகாரசபை கணக்காய்வுக் குழுவின் பணிப்பாளரும் அங்கத்தவரும். |

# இயக்குநர்கள் குழு சுயவிவரம் (தொடர்ச்சி..)

### பணிப்பாளர்களின் அறிக்கை

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 49 இற்கு இணங்க, இலங்கை மின்சார சபையின் (சபை) பணிப்பாளர்கள் சபை 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைக் சமர்ப்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறது.

### முதன்மையான நடவடிக்கைகள்

சபையின் முதன்மையான நடவடிக்கைகளாக மின் பிறப்பாக்கம், பெறுகை, மின் பரிமாற்றம், பயனுறுதிமிக்க மின் விநியோகம் மற்றும் மின்சார விற்பனை என்பன காணப்படுகின்றன. சபையானது நாட்டின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணான எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை.

### துணைக் கம்பனிகளும் கூட்டு முயற்சிகளும்

துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் முதன்மை நடவடிக்கைகள் பற்றி பக்க இல. 86 இல் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளின் கீழ் தரப்பட்டுள்ளன. மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் சபை மற்றும் குழுமத்தின் முதன்மை நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் எவையும் இல்லை.

### குழுமக் கட்டமைப்புக்கான மாற்றங்கள்

ஆண்டின் காலப்பகுதியில் குழுமக் கட்டமைப்புக்கான மாற்றங்கள் பற்றி இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 116 தொடக்கம் 118 வரையுள்ள நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 12 மற்றும் 13 இல் தரப்பட்டுள்ளன.

### ஆண்டிற்கான செயலாற்றுகையின் மீளாய்வு

பக்கம் 12 தொடக்கம் 13 வரை காணப்படும் தலைவரின் செய்தியானது சபை/குழுமத்தின் ஆண்டிற்கான செயலாற்றுகையை கூட்டிணைக்கிறது. பக்கம் 14 தொடக்கம் 15. வரை காணப்படும் பொது முகாமையாளரின் மீளாய்வானது, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் சபையின் செயற்பாடுகளின் விபரமான விவரணமொன்றை வழங்குகிறது. பக்கம் 65 தொடக்கம் 68 வரை காணப்படுகின்ற "நிதிசார் மீளாய்வு" எனத் தலைப்பிடப்பட்டுள்ள பகுதியானது சபையின் நிதிசார் செயலாற்றுகையினதும் நிதி நிலையினதும் விபரமான பகுப்பாய்வொன்றை வழங்குகிறது. சபையின் அலுவல்கள் பற்றிய நியாயமான மீளாய்வொன்றை வழங்குகின்ற இந்த அறிக்கைகள் வருடாந்த அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கின்றன.

### பங்களிக்கப்பட்ட மூலதனம்

பங்களிக்கப்பட்ட மூலதனமானது 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இ.மி.ச. சட்டத்தின்படி, இ.மி.ச. தாபித்ததன் பேரில் 1969 ஆம் ஆண்டில் அரசாங்க மின் திணைக்களத்திடமிருந்து இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்பட்ட நிகரச் சொத்துகளின் பெறுமதியையும் குறிப்பிட்ட மூலதன அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்ட பங்களிப்பையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. பங்களிக்கப்பட்ட மூலதன விபரங்கள் பக்கம் 122 இல் காணப்படும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல. 22 இல் தரப்பட்டுள்ளன.

### தனிச்சங்களின் விநியோகமும் பயன்பாடும்

2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத காலப்பகுதியில், இ.மி.ச. ஆனது 5 ஆண்டுகள் முதிர்வுக் காலத்துடன் 9.35% என்ற நிலையான கூப்பன் வீதமொன்றில் ரூபா 100 என்ற விநியோக விலையில் ரூபா 20 பில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பாதுகாப்பற்ற நிரற்படுத்தப்பட்ட மீட்கப்படத்தக்க வீத தனிச்சங்களை விநியோகித்திருந்தது.

தனிச்சங்களின் விநியோகத்தின் ஊடாகத் திரட்டப்பட்ட நிதியானது (ரூபா 20 பில்லியன்) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (நிதியின் 30%) மற்றும் ஏனைய சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் (IPPs) (நிதியின் 70%) ஆகியோரிடமிருந்து பெறப்பட்டிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

நிறுவனத்தின் மேற்படி கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நிதி பயன்படுத்தப்பட்டதுடன் கொடுக்கப்பட்ட நிதியானது நிதித் திணைக்களத்தினால் உரிய மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான தண்டப்பண வட்டிக் கொடுப்பனவுகளைக் குறைப்பதற்கு நிறுவனம் உத்தேசித்துள்ளதால் தனிச்சங்களின் விநியோக நோக்கங்களை அடையாததற்கு இட்டுச் செல்லக்கூடிய எவ்வித குறிப்பிடத்தக்க இடர் காரணிகளும் இல்லை.

### நிறுவன சமூகப் பொறுப்புடைமை (CSR)

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் நிறுவன சமூகப் பொறுப்புடைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி நிறுவன சமூகப் பொறுப்புடைமை அறிக்கை என்ற தலைப்பின் கீழுள்ள பக்க இல. 58-59 இல் தரப்பட்டுள்ளன.

### நிலைபேற்றுத்தன்மை

இ.மி.ச. ஆனது சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் சரியான சமநிலையைப் பேணியவாறு அதன் செயற்பாடுகளை ஆற்றுவதற்கு அர்ப்பணித்திருக்கிறது. சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்கான இ.மி.ச. இன் அணுகுமுறையானது பக்க இல. 55-57 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

குறிப்பிடப்படும் விடயங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டம் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன எனப் பணிப்பாளர்கள் கருதுகின்றனர். துணைக் கம்பனிகளைப் பொறுத்தவரை, நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தயாரிக்கப்படுகின்றன.

### கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 51 இற்கு இணங்கவும் இலங்கை மின்சார சபையின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் நாயகம் காணப்படுகிறார். 2021 டிசெம்பர் 31 இலான சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் ஆகியவற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையில் பக்க இல. 150-161 இல் தரப்பட்டுள்ளது.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

குழு மற்றும் சபை ஆகியன இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKASs) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs) ஆகியவற்றிற்கிணங்க தமது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றன. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 86 தொடக்கம் 104 வரை தரப்பட்டுள்ளன. மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்வித பொருண்மை மாற்றங்களும் இருக்கவில்லை.

### சபையுடனான உடன்படிக்கைகளில் சபை அங்கத்தவர்களின் நாட்டம்

நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 39.4 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர்ந்த 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையுடனான ஏதாவது ஒப்பந்தம் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் எவ்வித நேரடியான அல்லது மறைமுக நாட்டத்தையும் பணிப்பாளர்கள் கொண்டிருக்கவில்லை.

### ஊதியக் குழு

இலங்கை மின்சார சபை பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஓர் அரசாங்க நிறுவகம் ஆகும். அதற்கிணங்க, நிருவாக நடைமுறைகளும் கட்டுப்பாட்டு நடைமுறைகளும்

# இயக்குநர்கள் குழு சுயவிவரம் (தொடர்ச்சி..)

சுற்றறிக்கைகள், சட்டங்கள் போன்றவற்றினால் ஆளுகை செய்யப்படுகின்றன. இ.மி.ச. பணிப்பாளர்களின் ஊதியம் நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட அரச நிறுவன சுற்றறிக்கை இல. PED 3/2015 இன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால் இ.மி.ச. இதற்காக ஊதியக் குழுவொன்றை வைத்திருப்பது அவசியமன்று. மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையை கீழ்வரும் இணைய முகவரியில் பார்வையிடலாம்.

https://www.treasury.gov.lk/web/public-enterprises-department-circular/section/2015.

**கீழ்வரும் உப குழுக்கள் சபையினால் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றன.**

01. ஊழியர் மனக்குறைகள் குழு
02. ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை
03. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
04. சட்ட குழு

### 01. ஊழியர் மனக்குறைகள் குழு

ஊழியர் மனக்குறைகள் குழு (EGC) என்பது இ.மி.ச. இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் தனிப்பட்ட மனக்குறைகளைக் கையாள்வதற்காக சபையால் நியமிக்கப்படும் ஓர் உப குழு ஆகும்.

மனக்குறைகள் குழுவானது 02 சபை அங்கத்தவர்களையும் இ.மி.ச. இன் பல சிரேஷ்ட நிறைவேற்றுத் தர அதிகாரிகளையும் உள்ளடக்கியிருக்கும்.

2021 ஆம் ஆண்டில் குழுவில் உள்ளடங்கியிருந்த சபை அங்கத்தவர்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

i. தலைவராக திரு. என்.எஸ். இலங்ககோன், துணைத் தலைவர், இ.மி.ச.
ii. அங்கத்தவராக திரு. ரூபன் விக்கிரமாராய்ச்சி, அங்கத்தவர்

**ஏனைய அங்கத்தவர்கள் பின்வருமாறு**

i. பொறியியலாளர் எச்.எம்.கே.ஜே. வீரசூரிய (DGM - C&C/ DD - 02)
ii. பொறியியலாளர் ஆர்.கே.பீ.எஸ். குணதிலக (DGM - CA/Gen.)
iii. பொறியியலாளர் பீ.ஏ.ஜே.பீ.கே. பெரேரா (DGM-P)
iv. திருமதி டபிள்யூ.பீ.ஜீ.சீ.எஸ். ஜயலத் (AFM-Corporate-Actg.)
v. பொறியியலாளர் எம்.ஐ.எம். இர்ஃபாட் (CE-Policy)
vi. திருமதி பீ.ஆர். ஹந்தபன்கொட (HRM/DGM-P)

குழுவானது 2021 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் முறைப்படி இரண்டு தடவைகள் கூடியிருந்ததுடன் இ.மி.ச. ஊழியர்கள்/ முன்னாள் ஊழியர்களின் 26 தனிப்பட்ட மனக்குறைகள் பற்றி மீளாய்வு செய்திருந்தது.
கூட்டக் குறிப்புகள் அங்கீகாரத்திற்காக சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து, இ.மி.ச. இன் பொது முகாமையாளர், கூறப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

சபைக்கான செயலாளர் இந்த உப குழுவின் சபை கூட்டுநர் ஆவார்.

### 02. ஒழுக்காற்று மேன்முறையீடுகள் சபை

ஒழுக்காற்று மேன்முறையீடுகள் சபை என்பது சபையின் ஓர் உப குழு ஆகும். இந்தக் குழு இ.மி.ச. ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்களைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. குழுவானது 2021 ஆம் நிதியாண்டு காலப்பகுதியில் முறைப்படி 10 தடவைகள் கூடியிருப்பதுடன் 24 மேன்முறையீடுகளைக் கையாண்டிருந்தது.

கூட்டக் குறிப்புகள் அங்கீகாரத்திற்காக சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து, இ.மி.ச. இன் பொது முகாமையாளர், கூறப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

**2021 ஆம் ஆண்டிற்கான குழுவில் உள்ளடங்கியிருந்தோர் விபரம் பின்வருமாறு :**

i. தலைவராக திரு. என்.எஸ். இலங்ககோன், இ.மி.ச. இன் துணைத் தலைவர்
ii. அங்கத்தவராக திரு. ரூபன் விக்கிரமாராய்ச்சி
iii. அங்கத்தவராக திரு. எல்.ஜீ. பிரேமசிறி (2021 சனவரி 11 வரை)
iv. அங்கத்தவராக திரு. வீ.பீ.கே. அனுஷ பல்பிட்ட (2021 ஜூன் மாதம் வரை)
v. அங்கத்தவராக கலாநிதி பீ. விஜயரத்ன (2021 செப்ரெம்பர் 28 இலிருந்து)
vi. அங்கத்தவராக திரு. ஜே.ஜீ.எல்.எஸ். ஜயவர்த்தன, சபை அவதானிப்பாளர் (2021 செப்ரெம்பர் 28 வரை)
vii. அங்கத்தவராக திரு. எல்.கே.எஸ்.யூ. தர்மகீர்த்தி, சபை அவதானிப்பாளர் (2021 செப்ரெம்பர் 28 வரை)
viii. அங்கத்தவராக திரு. பீ.எஸ். பத்திரத்ன, தொழில் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மேலதிக ஆணையாளர் நாயகம்

சபையின் செயலாளர் இந்த உப குழுவின் சபை கூட்டுநராக இருக்கிறார்.

### 03. சட்டக் குழு

சட்டக் குழுவானது சபையின் உப குழு ஒன்றாக இருக்கிறது. இந்தக் குழுவானது தேவைப்படின் இ.மி.ச. இன் சட்ட விடயங்கள்/ வழக்குகளை மீளாய்வு செய்வதற்குப் பொறுப்பானதாக இருப்பதுடன் அதன் மீதான ஆலோசனைகளையும் சபைக்கு வழங்குகிறது.
2021 ஆம் நிதி ஆண்டு காலப்பகுதியில் குழுவானது முறைப்படி இரண்டு தடவைகள் கூடியுள்ளது.

i. தலைவராக திரு. என்.எஸ். இலங்ககோன் - இ.மி.ச. இன் துணைத் தலைவர்,
ii. அங்கத்தவராக திரு. ரூபன் விக்கிரமாராய்ச்சி
iii. அங்கத்தவராக திரு. எம்.எம். நயீமுதீன்

சட்ட அதிகாரி இந்த உப குழுவின் சபை கூட்டுநராக இருக்கிறார்.

### 04. கணக்காய்வுக் குழு

ஆளுகை அமைப்பின் ஓர் உப குழுவாக இருக்கின்ற கணக்காய்வுக் குழுவானது நிறுவனத்தின் ஆளுகையையும் இடர் முகாமைத்துவ முறைமைகளையும் மீளாய்வு செய்தல், உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறையைக் கண்காணித்தல் மற்றும் உள்ளகக் கணக்காய்வினதும் சட்டநியதி கணக்காய்வினதும் தொழிற்பாடுகளை ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பினைக் கொண்டுள்ளது.

மேலும், CSE பட்டியல் விதி 7.10.6.a இற்கு இணக்கமாக இருக்கும் பொருட்டு கணக்காய்வுக் குழுவின் தலைவர் அல்லது எந்தவொரு குழு அங்கத்தவரும் குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுத் தகைமையினைக் கொண்டிருக்கவில்லை. இ.மி.ச. இன் பணிப்பாளர்கள் சபைக்கான நியமனங்கள் மின்வலு, சக்தி அமைச்சரினால் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்காய்வுக் குழுவில் உள்ளடக்கப்படும் சபையின் அங்கத்தவர்களைத் தீர்மானிக்க இ.மி.ச. இற்கு நெகிழ்வுத்தன்மை இல்லை. மேலுள்ள CSE பட்டியல் விதிக்கு இணக்கமாக இருக்கும் பொருட்டு, கணக்காய்வுக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் மீதான ஆலோசனைகளை வழங்குவதற்காக இ.மி.ச. இலிருந்து தேவையான தகைமைகளைக் கொண்ட ஒரு சிரேஷ்ட அதிகாரி (திருமதி ரீ.எச்.பீ. பந்துதிலக -

# இயக்குநர்கள் குழு சுயவிவரம் (தொடர்ச்சி..)

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினர் சபை கூட்டுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கணக்காய்வுக் குழுவானது நிதி, கணக்காய்வு மற்றும் தொடர்புடைய விடயப் பரப்புகளில் ஆழ்ந்த திறன்களும் பரந்துபட்ட அனுபவத்தையும் கொண்ட நான்கு சுயாதீனப் பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதுடன் உள்ளகக் கணக்காய்வின் தலைவர் குழுவுக்கான சபை கூட்டுநராக இருக்கிறார். பொது முகாமையாளர் CEO ஆகவும் நிதி முகாமையாளரும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் மற்றும் மின்வலு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அழைப்பின் பேரில் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுவில் உள்ளடங்கியிருந்தவர்கள் விபரம் கீழ்வருமாறு:

திரு. எஸ்.டி. ஜூட் நிலுக்ஷன் - தலைவர்

திரு. எம்.எம். நயீமுதீன் - அங்கத்தவர்

திரு. பி. விஜேரத்ன - அங்கத்தவர்

திரு. ஆர். விக்கிரமாராய்ச்சி - அங்கத்தவர்

கணக்காய்வுக் குழுவானது செயற்பாடு மற்றும் நிதிசார் மீளாய்வுப் பரப்புகளில் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுக் கிளை ஆகியவற்றினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை மீளாய்வு செய்து கலந்துரையாடுகிறது. கணக்காய்வுக் குழு தமது பரந்துபட்ட அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி இந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து, ஏற்கனவே இருக்கின்ற கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்குத் தேவையானவிடத்து நடைமுறைப்படுத்தக்கூடிய மேலதிக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் குறைப்பு தந்திரோபாயங்களைப் பரிந்துரை செய்கிறது. இதனால் நிறுவனம் எதிர்கொள்கின்ற மோசடி மற்றும் வழுக்கள், செயற்பாடு மற்றும் நிதிசார் இடர்கள் ஆகியன ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளையும் தாக்கத்தையும் குறைக்கிறது. இந்தக் குழுவானது நாட்டில் நிலவிய நோய்த் தொற்றுச் சூழ்நிலை காரணமாக 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முறைப்படி இரண்டு தடவைகள் மாத்திரமே கூடியது.

## இ.மி.ச. இன் காணியும் கட்டடங்களும்

கீழ்வரும் அட்டவணையானது 2021.12.31 இலான இ.மி.ச. இன் காணி மற்றும் கட்டடங்கள் பற்றிய பிரிவு ரீதியான விபரங்களைக் காட்டுகிறது:

**2021.12.31 இலான காணி விபரங்கள்**

| பிரிவு | காணிகளின் எண்ணிக்கை | காணியின் அளவு | | | மொத்தப் பெறுமதி (இல. ரூபா) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பேர்ச்சஸ் | | |
| விநியோகப் பிரிவு 1 | 206 | 157 | 0 | 31.65 | 7,281,768,325.00 | 186 காணிகளின் அளவும் 160 காணிகளுக்கான பெறுமதியும் |
| விநியோகப் பிரிவு 2 | 398 | 138 | 1 | 35.51 | 4,775,930,709.25 | 365 காணிகளின் அளவும் 297 காணிகளுக்கான பெறுமதியும் |
| விநியோகப் பிரிவு 3 | 128 | 66 | 2 | 0.94 | 2,177,543,200.00 | 127 காணிகளின் அளவும் 114 காணிகளுக்கான பெறுமதியும் |
| விநியோகப் பிரிவு 4 | 161 | 66 | 3 | 1.14 | 3,461,751,021.00 | 153 காணிகளின் அளவும் 140 காணிகளுக்கான பெறுமதியும் |
| சொத்து முகாமைத்துவம் | 5 | 45 | 2 | 14.55 | 5,366,450,000.00 | 5 காணிகளின் அளவும் 5 காணிகளுக்கான பெறுமதியும் |
| மின் பரிமாற்றம் | 123 | 409 | 2 | 6.28 | 5,772,362,300.00 | 117 காணிகளின் அளவும் 84 காணிகளுக்கான பெறுமதியும் |
| மின் பிறப்பாக்கல் | 3086 | 6194 | 0 | 6.19 | 688,700,000.00 | 2327 காணிகளின் அளவும் 8 காணிகளுக்கான பெறுமதியும் |
| **மொத்தம்** | **4107** | **7075** | **10** | **96.26** | **29,524,505,555.25** | |

**2021.12.31 இலான கட்டடங்களின் விபரம்**

| பிரிவு | கட்டடங்களின் எண்ணிக்கை | சதுர அடி |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | 271 | 250,955.79 |
| விநியோகப் பிரிவு 2 | 415 | 306,086.65 |
| விநியோகப் பிரிவு 3 | 216 | 195,907.62 |
| விநியோகப் பிரிவு 4 | 168 | 320,393.55 |
| சொத்து முகாமைத்துவம் | 68 | 21,808.24 |
| மின் பரிமாற்றம் | 98 | 39,231.39 |
| மின் பிறப்பாக்கம் | 1044 | 275,618.18 |
| செயற்றிட்டங்கள் | 31 | 9,687.31 |
| நிறுவனத் தந்திரோபாயம் | 8 | 7,597.32 |
| **மொத்தம்** | 2319 | 1,427,286.05 |

## உறவுமுறைத் தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்காய்வு நியமம் - LKAS 24 இனால் தேவைப்படுத்தப்பட்டதன்படியான, உறவுமுறைத் தரப்பினர் வெளிப்படுத்துகைகள், ஒன்றித்த நிதிக் கூற்றுகளின் குறிப்பு இல. 39 இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

## சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கம்

பணிப்பாளர்கள், தங்கள் அறிவு மற்றும் நம்பிக்கையின்படி, குழு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

## நிலுவையாகவுள்ள வழக்குகள்

நிலுவையிலுள்ள வழக்குகள் காரணமாக எழுகின்ற நிகழத்தக்க பொறுப்பு பற்றிய விபரங்கள் ஒன்றித்த நிதிக் கூற்றுகளில் குறிப்பு இல. 37.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சட்டநியதிக் கொடுப்பனவுகள்

அரசாங்கம் மற்றும் ஊழியர்கள் தொடர்பான சகல சட்டநியதிக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை சபை உறுதிப்படுத்துகிறது.

## ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

சீராக்கங்களோ அல்லது வெளிப்படுத்துகைகளோ தேவைப்படக்கூடிய எவ்வித பொருண்மையான நிகழ்வுகளும் நிதியாண்டு முடிவடைந்த திகதிக்கும் இந்த அறிக்கையின் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் எழவில்லை என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## தொடர்ந்தியங்கும் தன்மை

தனது செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு சபையின் வளங்கள் போதுமானதாக இருக்கிறது என்பதை பணிப்பாளர்கள் நம்புகின்றனர். எனவே, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவனம் தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

## இயக்குநர்கள் குழு சுயவிவரம் (தொடர்ச்சி..)

### வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கங்களுடன் தொடர்புடைய CSE பட்டியல் தேவைப்பாடு களுடனான இணக்கம்

| பட்டியல் விதி இல. | வெளிப்படுத்துகைத் தேவைகள் | தொடர்பு/கருத்துக்கள் | பக்க இல. |
|---|---|---|---|
| 7.6 (i) | நிதி ஆண்டின் காலப்பகுதியில் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக இருந்தவர்களின் பெயர்கள் | பணிப்பாளர்களின் அறிக்கை | 72-74 |
| 7.6 (ii) | ஆண்டின் காலப்பகுதியில் நிறுவனத்திலும் அதன் துணைக் கம்பனிகளிலும் இடம்பெற்ற முதன்மையான நடவடிக்கைகளும் அதிலுள்ள ஏதாவது மாற்றங்களும் | பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 12.1 | 75,117 |
| 7.6 (iii) | வாக்குரிமையுள்ள மற்றும் வாக்குரிமையற்ற பங்குகளை வைத்திருக்கின்ற 20 பெரிய பங்குதாரர்களின் பெயர்களும் பங்குகளின் எண்ணிக்கையும் மற்றும் வைத்திருக்கின்ற அந்தப் பங்குகளின் சதவீதமும் | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (iv) | பொதுமக்கள் வைத்திருக்கும் சதவீதம் | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (v) | ஒவ்வொரு நிதி ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் நிறுவனத்தின் பங்குகளில் ஒவ்வொரு பணிப்பாளரும் வைத்திருப்பவையும் பிரதம நிறைவேற்று அதிகாரி வைத்திருப்பவையும் பற்றிய ஒரு கூற்று. | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (vi) | நிறுவனத்தின் எதிர்பார்க்கத்தக்க பொருண்மையான இடர் காரணிகள் தொடர்பான தகவல்கள் | இடர் முகாமைத்துவ அறிக்கை | 51-54 |
| 7.6 (vii) | நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் தொழில்துறை உறவுகள் தொடர்பான பொருண்மைச் சிக்கல்கள் பற்றிய விபரம் | ஆண்டின் காலப்பகுதியில் எவ்வித பொருண்மைச் சிக்கல்களும் நிகழவில்லை. | - |
| 7.6 (viii) | நிறுவனத்தின் காணிகள் மற்றும் முதலீட்டு ஆதனங்களின் அளவுகள், அமைவிடங்கள், பெறுமதிகள் மற்றும் கட்டடங்களின் எண்ணிக்கை. | பணிப்பாளர்களின் அறிக்கை | 77 |
| 7.6 (ix) | நிறுவனத்தின் குறிப்பிடு மூலதனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குகளின் எண்ணிக்கை | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (x) | ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உரிமையாண்மைப் பிணையங்களை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையினது பரம்பல் அட்டவணையும் அவர்கள் மொத்தமாக வைத்திருப்பவற்றின் சதவீதமும். | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (xi) | விகிதங்கள் மற்றும் சந்தை விலைத் தகவல்கள்: | | - |
| | ஒப்பிடத்தக்க அரசாங்கப் பிணையங்களின் வட்டி வீதம், கடன்/ உரிமையாண்மை விகிதம், வட்டிக் காப்பு, விரைவுச் சொத்து விகிதம் | நிதி மீளாய்வு | 68 |
| | ஆண்டின் காலப்பகுதியில் சந்தை விலை மற்றும் விளைவு (மிகவுயர்ந்த விலை / மிகக் குறைந்த விலை / கடைசி வியாபார விலை | விற்பனை செய்யப்படவில்லை | - |
| | கடன் மதிப்பீட்டு வீதத்தில் ஏதாவது மாற்றங்கள் | கடன் மதிப்பீட்டு வீதங்களில் மாற்றமில்லை | n/a |
| 7.6 (xii) | பெறுமதியானது புத்தகப் பெறுமதியிலிருந்து கணிசமானளவுக்கு மாறுபடுமாயின், நிறுவனத்தின் அல்லது அதன் துணைக் கம்பனிகளின் நிலையான சொத்துக்கள் மற்றும் காணியின் சந்தைப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள். | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (xiii) | பொதுமக்களுக்கான பங்கு வழங்கல், உரிமைகளின் வழங்கல் மற்றும் தனியாருக்கான விற்பனைகள் ஊடாக ஆண்டின் காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்ட நிறுவனத்தின் நிதி | பணிப்பாளர்களின் அறிக்கை | 75 |
| 7.6 (xiv) | ஒவ்வொரு ஊழியரதும் பங்கு உரிமை அல்லது இருப்புத் தேர்வுத் திட்டம் தொடர்பான தகவல்கள். | பொருத்தமற்றது | n/a |
| 7.6 (xv) | விதிகளின் பிரிவு 7 இலுள்ள 7.10.3இ 7.10.5 (உ) மற்றும் 7.10.6 (உ) ஆகிய விதிகளின் பொருட்டு நிறுவன ஆளுகை நடைமுறைகள் தொடர்பிலான வெளிப்படுத்துகை. | பணிப்பாளர்கள் சபையின் சுயவிபரம் மற்றும் பணிப்பாளர்களின் அறிக்கை | 72-78 |
| 7.6 (xvi) | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, உரிமையாண்மையின் 10% அல்லது நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களின் 5% இனை விஞ்சிய உறவுமுறைத் தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள், இதில் எது குறைவானதோ அது. | கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல. 39. | 145-146 |

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 2021 | 2020 மீளமைக்கப்பட்டது | 2021 | 2020 மீளமைக்கப்பட்டது |
| **வருமானம்** | 4 | 291,198,388 | 264,265,952 | 249,089,188 | 238,910,553 |
| வீட்டுப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் | 5 | (195,709) | (5,907,770) | (195,709) | (5,907,770) |
| விற்பனைக் கிரயம் | | (279,421,532) | (286,530,043) | (254,452,760) | (276,938,425) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | | **11,581,147** | **(28,171,861)** | **(5,559,281)** | **(43,935,642)** |
| ஏனைய செயற்பாட்டு வருமானமும் ஆதாயமும் | 6 | 18,297,764 | 9,844,016 | 11,692,938 | 8,817,159 |
| விநியொக கிரயம் | | (205,209) | (166,221) | - | - |
| ஏனைய செலவினம் | | (3,260,481) | (3,164,799) | - | - |
| நிர்வாக செலவினம் | | (13,166,794) | (11,565,050) | (8,284,761) | (7,130,803) |
| **செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | **13,246,427** | **(33,223,915)** | **(2,151,104)** | **(42,249,286)** |
| நிதி வருமானம் | 7.1 | 3,286,673 | 2,942,470 | 1,131,378 | 1,337,772 |
| நிதிச் செலவினம் | 7.2 | (22,544,140) | (21,242,401) | (20,430,643) | (19,521,978) |
| நிதிக் கிரயம் -தேறியது | | (19,257,467) | (18,299,931) | (19,299,265) | (18,184,206) |
| கூட்டுத் தொழில்முயற்சி நட்டப் பங்கு | 13 | (5,080) | (6,143) | - | - |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | | **(6,016,120)** | **(51,529,989)** | **(21,450,369)** | **(60,433,492)** |
| வருமான வரிச் செலவினம் | 9.1 | (3,190,093) | (2,615,239) | - | (52,970) |
| பிற்போட்ட வரி (அறவீடு)/மீளமைத்தல் | 9.2 | (46,656) | 211,068 | - | - |
| **தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்க இலாபம்/(நட்டம்)** | | **(9,252,869)** | **(53,934,160)** | **(21,450,369)** | **(60,486,462)** |
| **கீழ்வருமாறு பகிரப்படுகின்றது:** | | | | | |
| **தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு** | | **(16,572,106)** | **(58,040,771)** | | |
| **கட்டுப்பாடற்ற வட்டி** | | **7,319,237** | **4,106,611** | | |
| | | **(9,252,869)** | **(53,934,160)** | | |

பக்கங்கள் 08 முதல 73 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# முற்றுமடங்கிய வருமானக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 மீளமைக்கப்பட்டது | 2021 | 2020 மீளமைக்கப்பட்டது |
| **தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | **(9,252,869)** | **(53,934,160)** | **(21,450,369)** | **(60,486,462)** |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | | |
| பிந்திய தொழில் நலக் கடப்பாடுகள் மீதான உள்ளபடியான நட்டம் | (377,986) | (8,877,951) | (504,579) | (8,677,627) |
| உள்ளபடியான ஆதாயம்/நட்டம் மீதான பிற்போட்ட வரித் தாக்கம் | (33,122) | 55,961 | - | - |
| வெளிநாட்டு துணை நிறுவன செயற்பாட்டு மாற்றல்கள் மீதான பரிமாற்று வேறுபாடுகள் | 935,845 | 336,799 | - | - |
| விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் மீதான நியாயப் பெறுமதி ஆதாயம் | 1,082,877 | 126,398 | - | - |
| அந்நியச் செலாவணிக் கடன்களை மாற்றும்போது நிகர லாபம் இழப்பு | (92,688) | - | - | - |
| **வரி தேறிய மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | **(7,737,943)** | **(62,292,953)** | **(21,954,948)** | **(69,164,089)** |
| கீழ் வருமாறு பகிரப்படுகிறது | (16,174,363) | (66,579,481) | | |
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு | 8,436,420 | 4,286,528 | | |
| கட்டுப்பாடற்ற வட்டி | **(7,737,943)** | **(62,292,953)** | | |

பக்கங்கள் 08 முதல 73 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குறிப்பு | குழுமம் 2021 | குழுமம் 2020 மீளமைக்கப்பட்டது | குழுமம் சனவரி 01 இல் உள்ளவாறானவை 2020 மீளமைக்கப்பட்டது | சபை 2021 | சபை 2020 மீளமைக்கப்பட்டது | சபை சனவரி 01 இல் உள்ளவாறானவை 2020 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10 | 873,253,897 | 838,065,364 | 801,729,433 | 852,877,484 | 819,086,380 | 784,022,232 |
| குத்தகைக்காணிக்கு செலுத்திய வட்டம் | | - | - | 235,577 | - | - | - |
| அருவச் சொத்துக்கள் | 11 | 513,343 | 512,459 | 499,058 | 133,997 | 161,509 | 107,718 |
| உபகம்பனிகளில் முதலீடுகள் | 12 | - | - | - | 911,813 | 911,813 | 911,813 |
| கூட்டுத் தொழில்முயற்சியில் முதலீடு | 13 | 25,677 | 30,757 | 36,900 | 328,606 | 328,606 | 328,606 |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 14 | 20,465,466 | 19,588,944 | 19,899,441 | - | - | - |
| பிறநடைமுறையல்லா நிதிச்சொத்துககள் | 15 | 28,054,665 | 24,418,095 | 25,353,078 | 7,700,399 | 8,859,225 | 9,951,461 |
| ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 16 | 1,830,583 | 2,160,224 | 2,591,430 | 851,383 | 1,073,891 | 1,489,354 |
| காப்புறுதி ஒதுக்கத்தில் முதலீடு | 17 | 10,657,598 | 9,980,730 | 8,996,893 | 10,657,598 | 9,980,730 | 8,996,893 |
| மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள் | | **934,801,229** | **894,756,573** | **859,341,810** | **873,461,280** | **840,402,154** | **805,808,077** |
| விற்பனைக்கான நடைமுறையல்லா சொத்துக்கள் | 18 | 76 | 76 | 76 | 76 | 76 | 76 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| இருப்புக்கள் | 19 | 74,986,599 | 53,412,273 | 56,128,504 | 63,926,113 | 45,522,065 | 48,529,122 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 20 | 84,380,715 | 74,358,646 | 56,491,746 | 56,340,888 | 59,342,291 | 49,126,626 |
| தொடர்புடைய தரப்பிலிருந்து வருமதி | 21 | - | - | - | 3,612,627 | 5,322,241 | 5,984,849 |
| பெறவேண்டிய உப குத்தகை | | - | - | 21,110 | | | |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 14 | 825,121 | 1,015,236 | 910,171 | - | - | - |
| ஏனைய நடைமுறை நிதிச்சொத்துக்கள் | 15 | 29,922,547 | 33,652,650 | 27,080,350 | 2,601,739 | 2,826,654 | 3,485,735 |
| காசும் வங்கி மீதிகளும் | 32 | 15,309,470 | 9,719,896 | 7,282,167 | 5,439,757 | 3,604,157 | 3,725,333 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **205,424,452** | **172,158,701** | **147,914,048** | **131,921,124** | **116,617,408** | **110,851,665** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,140,225,757** | **1,066,915,350** | **1,007,255,934** | **1,005,382,480** | **957,019,638** | **916,659,818** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | | | | |
| **மூலதனம் மற்றும் உரிமையாண்மை** | | | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 22 | 413,054,569 | 391,730,584 | 323,194,038 | 413,054,569 | 391,730,584 | 323,194,038 |
| ஒதுக்கங்கள் | 23 | 59,080,519 | 52,807,115 | 50,082,923 | 41,222,600 | 39,253,987 | 37,109,568 |
| நிறுத்திவைத்த இலாபம்/(நட்டம்) | | (170,433,066) | (148,673,699) | (80,229,218) | (189,474,269) | (166,239,107) | (95,851,304) |
| **தாய்க் கம்பனி உரிமையாளர்களிற்கு பகிரத்தக்க உரிமையாண்மை** | | **301,702,022** | **295,864,000** | **293,047,743** | **264,802,900** | **264,745,464** | **264,452,302** |
| கட்டுப்பாடற்ற நட்டம் | | 39,331,148 | 34,651,585 | 31,655,307 | - | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | **341,033,170** | **330,515,585** | **324,703,050** | **264,802,900** | **264,745,464** | **264,452,302** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்களும் பிற்போட்ட வருமானமும்** | | | | | | | |
| வட்டிக் கடன்கள், கடன்படுகைகள் | 24 | 372,001,007 | 353,176,565 | 324,004,981 | 353,927,442 | 352,094,501 | 318,149,176 |
| நுகர்வோர் வைப்புக்கள் | 25 | 16,299,865 | 15,640,570 | 15,013,791 | 16,299,865 | 15,640,571 | 15,013,791 |
| ஏற்பாடுகள், பிற பிற்போட்ட பொறுப்புக்கள் | 26 | 23,289,439 | 21,798,853 | 11,788,539 | 21,615,200 | 20,120,600 | 10,482,143 |
| அரசாங்க மானியம் | 27 | 261,134 | 278,934 | 297,697 | 188,347 | 200,334 | 213,303 |
| ஒப்பந்தப் பொறுப்புக்கள் | 28 | 104,566,765 | 100,694,744 | 94,421,389 | 99,518,157 | 95,770,721 | 89,746,084 |
| பிற்போட்ட வரியீடு | 29 | 715,268 | 541,753 | 753,562 | - | - | - |
| | | 517,133,478 | 492,131,419 | 446,279,959 | 491,549,011 | 483,826,727 | 433,604,497 |
| **நடைமுறைப் பரிப்புக்கள** | | | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 30 | 220,801,095 | 187,337,415 | 195,261,270 | 197,241,656 | 176,476,320 | 185,930,922 |
| செலுத்தவேண்டிய பங்கிலாபம் | | 1,618,534 | 905,038 | 2,303,810 | - | - | - |
| தொடர்புடைய தரப்பினருக்கு சென்மதி | 31 | - | - | - | 6,214,208 | 4,213,940 | 2,989,787 |
| வட்டிக் கடன்கன், கடன்படுகைகள் | 24 | 55,652,643 | 53,038,697 | 36,492,272 | 44,303,939 | 26,486,421 | 28,411,544 |
| செலுத்தவேண்டிய வருமானவரி | | 3,986,837 | 2,987,196 | 2,215,573 | 1,270,766 | 1,270,766 | 1,270,766 |
| | | 282,059,109 | 244,268,346 | 236,272,925 | 249,030,569 | 208,447,447 | 218,603,019 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **1,140,225,757** | **1,066,915,350** | **1,007,255,934** | **1,005,382,480** | **957,019,638** | **916,659,818** |

பக்கங்கள் 08 முதல 73 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக உள்ளன.


**தலைவர் னுசைநஉவழச**


**உப தலைவர்**


**பொது முகாமையாளர்**


**நிதி முகாமையாளர்**

**கொழும்பு**
2022.08.16

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

| குழுமம் | பங்களித்த மூலதனம் | மூலதன ஒதுக்கம் | தேய்மான ஒதுக்கம் |
|---|---|---|---|
| 2019 சனவரி 01 இல் மீதி | **323,194,038** | **19,197,852** | **24,000** |
| ஆண்டின் போதான முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | - |
| 2020 சனவரி 01 இல் மீதி (மீளமைக்கபட்டது) | **323,194,038** | **19,197,852** | **24,000** |
| ஆண்டிற்கான இலாப/ (நட்டம்) | - | - | - |
| ஓய்வூதிய நல கட்டுப்பாடுகள் மீதான உள்ளவாறான நட்டம் | - | - | - |
| நியாய பெறுமதி ஊடான ஓஸிஐ முதலீடு மீதான தேறிய இலாப நட்டம் | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | 103,426 | - |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | **-** | **103,426** | **-** |
| கடன் மூலதன மாற்றத்துக்கான ஒதுக்கம் | 17,361,455 | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 3,175,091 | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - |
| எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியத்திலிருந்தான மேலதிக உரிமைத்துவ முதலீடு (FPSF) | 48,000,000 | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | 36,601 | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - |
| லெக்கோ சிறுபான்மை ஆர்வத்துக்கான சீராக்கம் | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - எல்ரீஎல் | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - லெகோ | - | - | - |
| 2021 சனவரி 01 இல் மீதி (மீளமைக்கபட்டது) | **391,730,584** | **19,337,879** | **25,000** |
| காலப்பகுதிக்கு இலாப/ (நட்டம்) | - | - | - |
| ஓய்வூதிய நலனாளிகள் மீதான உள்ளபடியான ஆதாயம்/(இழப்பு) | - | - | - |
| நியாய பெறுமதி ஊடான ஓஸிஐ முதலீடு மீதான தேறிய இலாப நட்டம் | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | 306,670 | - |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | **-** | **306,670** | **-** |
| உரிமைத்துவத்திற்கான கடன்களின் மாற்றம் | 17,915,014 | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 3,408,971 | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | 24,558 | - |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - |
| சொத்து மாற்றல்களுக்கான ஒதுக்கம் | - | - | - |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - |
| பங்கிலாபம் வழங்கல் - எல்டிஎல் | - | - | - |
| பங்கிலாபம் வழங்கல் லெகோ | - | - | - |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **413,054,569** | **19,669,107** | **26,000** |

பக்கங்கள் 08 முதல் 76 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| சொத்து மீள்வைப்பு ஒதுக்கம் | முதலீட்டு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நியாய பெறுமதி ஒதுக்கம் | அபிவிருத்தி ஒதுக்கம் | நிறுத்திவைத்த வருமானம் | கட்டுப்பாடற்ற வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **312,494** | **5,930,351** | **18,540,372** | **6,060,529** | **17,325** | **(88,317,951)** | **31,655,307** | **316,614,317** |
| **-** | **-** | **-** | **-** | **-** | **8,088,733** | **-** | **8,088,733** |
| **312,494** | **5,930,351** | **18,540,372** | **6,060,529** | **17,325** | **(80,229,218)** | **31,655,307** | **324,703,050** |
| - | - | - | - | - | (58,040,771) | 4,106,611 | (53,934,160) |
| - | - | - | - | - | (8,757,641) | (64,349) | (8,821,990) |
| - | - | - | 66,155 | - | - | 60,244 | 126,399 |
| - | - | - | - | - | - | 233,374 | 336,800 |
| **-** | **-** | **-** | **66,155** | **-** | **(66,798,412)** | **4,335,880** | **(62,292,951)** |
| - | - | - | - | - | - | - | 17,361,455 |
| - | - | - | - | - | - | - | 3,175,091 |
| - | - | 884,104 | - | - | - | - | 884,104 |
| - | - | - | - | - | - | - | 48,000,000 |
| - | - | 1,222,714 | - | - | (1,222,714) | - | - |
| - | - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | - | 36,601 |
| - | 400,192 | - | - | - | (400,192) | - | - |
| - | - | - | - | 10,000 | (10,000) | - | - |
| - | - | - | - | - | - | 119,925 | 119,925 |
| - | - | - | - | - | (12,163) | (20,096) | (32,259) |
| - | - | - | - | - | - | (1,100,731) | (1,100,731) |
| - | - | - | - | - | - | (338,700) | (338,700) |
| **312,494** | **6,330,543** | **20,647,190** | **6,126,684** | **27,325** | **(148,673,699)** | **34,651,585** | **330,515,585** |
| - | - | - | - | - | (16,572,106) | 7,319,237 | (9,252,869) |
| - | - | - | - | - | (449,693) | 38,586 | (411,107) |
| - | - | - | 540,767 | - | - | 449,422 | 990,189 |
| - | - | - | - | - | - | 629,175 | 935,845 |
| **-** | **-** | **-** | **540,767** | **-** | **(17,021,799)** | **8,436,420** | **(7,737,942)** |
| - | - | - | - | - | - | - | 17,915,014 |
| - | - | - | - | - | - | - | 3,408,971 |
| - | - | 663,841 | - | - | - | - | 663,841 |
| - | - | 1,279,214 | - | - | (1,279,214) | - | - |
| - | - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | - | 24,558 |
| - | 3,671,322 | - | - | - | (3,671,322) | - | - |
| (223,968) | - | - | - | - | 223,968 | - | - |
| - | - | - | - | 10,000 | (10,000) | - | - |
| - | - | - | - | - | - | 28,350 | 28,350 |
| - | - | - | - | - | - | (3,285,207) | (3,285,207) |
| - | - | - | - | - | - | (500,000) | (500,000) |
| **88,526** | **10,001,865** | **22,590,245** | **6,667,451** | **37,325** | **(170,433,066)** | **39,331,148** | **341,033,170** |

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று (தொடர்ச்சி..)

## 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| சபை | பங்களித்த மூலதனம் | ஏனைய மூலதன ஒதுக்கம் | ஆர்எச்சீப ஒதுக்கம் | கடன் மீட்பு ஒதுக்கம் | பெறுமானத்தேய்வு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நிறுத்திவைத்த வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2019 சனவரி 01 இல் மீதி | **323,194,038** | **165,446** | **948,639** | **17,447,062** | **24,000** | **18,524,421** | **(103,940,037)** | **256,363,569** |
| **ஆண்டின் போதான முன்னைய ஆண்டுச் சீராக்கம்** | - | - | - | - | - | - | 8,088,733 | 8,088,733 |
| 2020 சனவரி 01 இல் மீதி (மீளமைத்த) | **323,194,038** | **165,446** | **948,639** | **17,447,062** | **24,000** | **18,524,421** | **(95,851,304)** | **264,452,302** |
| ஆண்டிற்கான இலாப/(நட்டம்) | - | - | | - | - | - | (69,164,089) | (69,164,089) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | | - | - | 884,104 | - | 884,104 |
| கடன் மூலதன மாற்றத்துக்கான ஒதுக்கம் | 17,361,455 | | | | | | | 17,361,455 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 3,175,091 | | | | | | | 3,175,091 |
| எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியத்திலிருந்தான மேலதிக உரிமைத்துவ முதலீடு (FPSF) | 48,000,000 | | | | | | | 48,000,000 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | | | | 1,000 | | (1,000) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | | - | - | 1,222,714 | (1,222,714) | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | | 36,601 | - | - | - | - | 36,601 |
| 2021 சனவரி 01 இல் மீதி (மீளமைத்த) | **391,730,584** | **165,446** | **985,240** | **17,447,062** | **25,000** | **20,631,239** | **(166,239,107)** | **264,745,464** |
| காலப்பகுதிக்கு இலாப/(நட்டம்) | - | - | | - | - | - | (21,954,948) | (21,954,948) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | | - | - | 663,841 | - | 663,841 |
| உரிமைத்துவத்திற்கு கடன்களை மாற்றுதல் | 17,915,014 | - | | - | - | - | - | 17,915,014 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 3,408,971 | - | | - | - | - | - | 3,408,971 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | | - | 1,000 | - | (1,000) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | | - | - | 1,279,214 | (1,279,214) | - |
| **வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி** | - | | 24,558 | - | - | - | - | 24,558 |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **413,054,569** | **165,446** | **1,009,798** | **17,447,062** | **26,000** | **22,574,294** | **(189,474,269)** | **264,802,900** |

பக்கங்கள் 08 முதல 73 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# காசுப்பாய்ச்சல் கூற்று

## 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | (6,016,120) | (51,529,989) | (21,450,369) | (60,433,492) |
| **சீராக்கம்:** | | | | |
| ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | 34,771,183 | 34,469,546 | 33,095,688 | 32,107,297 |
| பாவனையாளர் பங்களிப்பின் காலத்தேய்மானம் | (4,487,145) | (3,841,968) | (4,058,249) | (3,440,050) |
| அரசாங்க மானியம் மீதான காலத்தேய்மானம் | (15,068) | (20,511) | (15,068) | (14,718) |
| முதலீடுகளில் இருந்தான வருமானம் | (1,359,813) | - | - | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை இலாபம்/(நட்டம்) | 149,507 | (48,658) | 135,046 | (31,285) |
| நிதிக் கிரயம் | 22,661,291 | 21,441,905 | 20,430,643 | 19,705,300 |
| குத்தகை வட்டி | 12,775 | - | 12,775 | 14,332 |
| பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்பு ஏற்பாடு | 337,770 | 15,069 | 331,159 | 71,706 |
| விலை முரண் ஏற்பாடு | (2,037,510) | 347,263 | (2,037,510) | 347,263 |
| கடன்பட்டோர் நட்டக்கடன் ஏற்பாடு | 1,649,777 | 1,842,072 | 1,747,552 | 1,343,916 |
| பதிவழித்த ஐயக் கடன் | 345,653 | - | 345,653 | - |
| மின்சார வாகன உயிர்ப்பித்தல் வருமானம் | (2,696) | (2,836) | (2,696) | (2,836) |
| கூட்டுத்தொழில் முயற்சி இலாப/(நட்டப்) பங்கு | 5,080 | 6,143 | - | - |
| கற்புலனாகச் சொத்துக்களின் காலத்தேய்மானம் | 60,832 | 46,752 | 48,442 | - |
| நிதி வருமானம் | (2,041,285) | (2,942,471) | (1,131,378) | (1,337,772) |
| பங்கிலாப வருமானம் | (6,908,775) | (807,188) | (2,519,496) | (1,129,505) |
| அந்நியச் செலாவணி இலாபம்/(நட்டம்) | (1,353,047) | 51,963 | - | - |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை மீதான வருமானச் சீராக்கம் | 1,600,538 | 1,461,389 | - | - |
| குறித்துரைத்த நலத் திட்டங்கள் | 1,301,341 | 1,148,638 | 1,067,140 | 1,117,957 |
| ஓய்வூதிய நிதியம் மீதான தனியாள் கிரயம் | 717,208 | 534,584 | 717,208 | 534,584 |
| முற்செலுத்திய பதவியினர் கிரயம் | 556,360 | 770,928 | 556,360 | 770,928 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் இலாபம்/(நட்டம்)** | **39,947,856** | **2,942,631** | **27,272,900** | **(10,376,375)** |
| இருப்புக்களில் (அதிகரிப்பு)/குறைவு | (20,679,002) | 2,716,231 | (17,579,672) | 3,941,964 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | (4,766,748) | (25,898,417) | 9,673,323 | (9,623,794) |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | 30,408,639 | (7,894,835) | 18,544,716 | (4,213,535) |
| **செயற்பாடுகளிலிருந்து உருவான காசு** | **44,910,745** | **(28,134,390)** | **37,911,267** | **(20,271,740)** |
| செலுத்திய நிதிக் கிரயம் | (22,661,291) | (21,427,573) | (20,430,643) | (19,705,300) |
| ஓய்வூதிய நிதியக் கடப்பாடுகள் | (921,523) | (740,303) | (794,325) | (691,714) |
| செலுத்திய வருமான வரி | (2,190,520) | (1,886,702) | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | **19,137,411** | **(52,188,968)** | **16,686,299** | **(40,668,754)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவும் மூலதன முடிவுறா வேலைகளும் | (73,357,083) | (71,511,025) | (70,650,630) | (68,699,432) |
| துணைக் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய நிதிக் குத்தகை கையேற்பு | - | (68,224) | - | - |
| கற்புலனாகாச் சொத்துக்களின் கையேற்றல் | (21,088) | (89,732) | (20,930) | (89,732) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் மீள் முதலீடு | (676,868) | (983,837) | (676,868) | (983,837) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | 884,104 | - | - |
| காப்புறுதி எஸ்கிரோ நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | 663,841 | - | 663,841 | 884,104 |
| நிதி சொத்துக்களில் முதலீடு | (140,931) | 12,607,086 | - | - |
| கையகப்படுத்திய கட்டுப்பாடற்ற நாட்டம் | 51,975 | 96,300 | - | - |
| பெற்ற பங்கிலாபம் | 6,908,775 | 807,188 | 3,119,790 | 2,204,559 |
| பெற்ற வட்டி | 2,746,863 | 1,564,393 | 575,018 | 566,843 |
| நிலையான சொத்து கைதவிர்த்தல் காசு சேகரிப்பு | (131,759) | 36,009 | (135,046) | 31,322 |
| செலுத்திய பங்கிலாபம் | (2,660,372) | (3,209,977) | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | **66,616,641** | **(59,867,715)** | **(67,124,825)** | **(66,086,173)** |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| பங்களிப்பு மூலதனத்திலிருந்து வருமானம் | 3,408,971 | 57,882,718 | 3,408,969 | 57,882,722 |
| பாவனையாளர் பங்களிப்பு | 10,669,518 | 5,964,166 | 10,669,518 | 5,445,429 |
| மின்சார வாகன ஈ-அட்டை கொடுப்பனவுகள் | 2,791 | 2,977 | 2,796 | 2,977 |
| ஆர்எச்சீபி செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதி | 24,558 | 36,601 | 24,558 | 36,601 |
| மானியம் - பெறப்பட்டவை | 3,082 | 1,749 | 3,082 | 1,749 |
| பாவனையாளர் வைப்பு - மீளளிக்கத்தக்க | (146,050) | (101,908) | (146,050) | (101,908) |
| பெற்ற பாவனையாளர் வைப்புக்கள் | 805,345 | 728,688 | 805,345 | 728,688 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர்/(குத்தகைக் கொடுப்பனவு) தேறிய அசைவு | (172,675) | (101,288) | (64,099) | (64,629) |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 75,824,340 | 83,540,078 | 64,829,950 | 63,196,153 |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகளை மீளளித்தல் | (38,330,162) | (34,068,909) | (28,201,288) | (20,656,692) |
| முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்தல் | (732,087) | (689,475) | - | - |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | **51,357,631** | **113,195,397** | **51,332,781** | **106,471,090** |
| **காசினதும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | **3,878,395** | **1,138,714** | **894,255** | **(283,837)** |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | **(69,816,202)** | **(8,054,916)** | **(9,596,222)** | **(9,312,387)** |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | **(3,037,807)** | **(6,916,202)** | **(8,701,967)** | **(9,596,222)** |

பக்கங்கள் 08 முதல 73 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்
## டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது

### 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

#### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை மின்சார சபையானது 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. சபையின் தலைமை பணிமனை இல 50. சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

#### 1.2 ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை மின்சார சபை (சபை) மற்றும் அதன் சகல துணைக் கம்பனிகள் (குழுமம்) உள்ளிட்ட அவ்வாறு ஒன்றிப்புச் செய்யப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது.

#### 1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

**சபை**

மின்சாரத்தின் பிறப்பாக்கம், கொள்வனவு, மின்பரிமாற்றம், விளைவுதிறனான விநியோகம் மற்றும் விற்பனை போன்றன இந்த ஆண்டின்போது சபையின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன.

சபையின் துணைக் கம்பனிகளினதும் கூட்டுத்தொழில் முயற்சியினதும் பிரதான செயற்பாடுகள் கீழ்வருமாறு:

#### 1.3.1 துணைக் கம்பனிகள்

**அ) வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி**

இலங்கை மின்சார சபையிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்து காலி, களுத்துறை, மொறட்டுவை, களனி, நுகேகொடை, கோட்டே மற்றும் நீர்கொழும்பில் அமைந்துள்ள கம்பனியின் கிளைகள் ஊடாக, வீட்டு மற்றும் கைத்தொழில் வாடிக்கையாளருக்கு சில்லறையாக விற்பனை செய்வதே இந்த ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன. குழுமத்தின் துணை கம்பனிகள் மின் மானிகளின் உற்பத்தி மற்றும் வியாபாரம் உள்ளிட்ட மின் விநியோகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

**ஆ) வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

ஆண்டின் போது, கம்பனியின் முக்கிய செயல்பாடுகள் அதன் கீழுள்ள துணை கம்பனிகளின் முதலீடுகளை வைத்திருப்பதாகும். குழுமத்தின் துணை கம்பனிகள் மின் பிறப்பாக்கம், மின் பிறப்பாக்கத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்,மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்களை உற்பத்தி செய்தல் மற்றும் கால்வனைசிங் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

**இ) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

நுரைச்சோலையில் உள்ள நிலக்கரி மின்வலு ஆலையில் மின்வலு பிறப்பாக்கத்திற்காக உயர்தரமான, குறைந்த கந்தக நிலக்கரியினை வழங்குதல்.

**ஈ) வரையறுக்கப்பட்ட சிறீலங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி**

பரிமாற்றக் கம்பிவழிகளையும் துணை மின்நிலையங்களையும் நிர்மாணித்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களை நிர்மாணித்துப் பராமரித்தல் மற்றும் மின் எரிசக்தி பிறப்பாக்கத்துக்குத் தேவையான வேலைகளிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்திக்குத் தேவையான செயல்பாடுகளிலும் ஈடுபடுதல், மின்மானி பெட்டிகளை உற்பத்திசெய்தல் மற்றும் சபையின் சேவைகளுக்காக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு மனிதவளத்தை வழங்குதல் என்பன கம்பனியின் பிரதான செயற்பாடுகள் ஆகும்.

குழுமத்தின் துணை கம்பனிகள் சபை மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கச்சேவைகளுக்கான ஆட்சேர்ப்பை மேற்கொண்டு மனிதவளத்தை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

#### 1.3.2 கூட்டுத்தொழில் முயற்சி

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனி**

இலங்கை மின்சார சபையின் தேசிய கட்டகத்திற்கு மின் சக்தியை பிறப்பித்து விற்பனை செய்தலே கம்பனியின் பிரதான செயற்பாடாகும். .கம்பனி தற்போது நிலக்கரி மின் நிலையம் அமைக்கும் செயற்திட்டத்தை கைவிட்டுள்ளது. இருப்பினும், சம்பூரில் 50 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

#### 1.4 தாய்க் கம்பனி மற்றும் சபையின் இறுதியான தாய்க் கம்பனி

சபை மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு கீழ் இயங்குகின்றது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி, சபையின் இறுதியான தாய்க் கம்பனியும் கட்டுப்பாட்டு அதிகாரியுமாக இலங்கை அரசாங்கம் காணப்படுகின்றது.

#### 1.5 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இலங்கை மின்சார சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்காக 2022.08.16 ஆந் திகதி பணிப்பாளர் சபையால் அதிகாரம் வழங்கப்பட்டது.

### 2. தயாரிப்பு அடிப்படையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

#### 2.1 தயாரிப்பின் அடிப்படை

குழுவின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் நிதிச் சாதனங்கள் இலாப அல்லது இழப்பு மூலம் நியாயமான மதிப்பு மற்றும் விரிவான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நிதிக் கருவிகள தவிர வரலாற்று செலவு முறையின் கீழ் திரட்டப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன் ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் வழங்கப்படுகின்றன. வேறுவிதமாக குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ரூபா ஆயிரத்திற்கு (ரூ.000) சுறுக்கப்படுகின்றன.

ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் முன்னைய காலத்துடன் தொடர்புடைய ஒப்பீட்டுத் தகவல்களை வழங்குகின்றன. அத்துடன், ஒரு கணக்கீட்டுக் கொள்கையின் பின்னோக்கிய பிரயோகம் காணப்படுகையில், முன்னைய காலத்தின் தொடக்கத்தில் குழுமம் மேலதிக நிதி நிலைமை கூற்றொன்றை சமர்ப்பிக்கின்றது. குறிப்பு 34 இல் வெளிப்படுத்தப்பட்ட காரணங்களால் 2020 சனவரி 1 ஆம் திகதியில் உள்ளவாறான ஒரு மேலதிக நிதிநிலைமை கூற்றை இந்த நிதிக் கூற்றுக்கள் வழங்குகின்றன.

#### 2.2 இணக்கப்பாட்டு அறிக்கை

இலாபம் அல்லது நட்டக்கூற்று, முற்றுமடங்கிய வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடனும் குறிப்புக்களுடனும் கூடிய குழுமத்தின்

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் ("நிதிக்கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRS/LKAS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. (சீஏ இலங்கை)

### 2.3 தொடர்ந்தியங்கும்எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படி குழுமத்தின் தொடர்ந்தியங்கு நிலை மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டதுடன் பின்வருன தவிர்த்து வியாபாரத்தை கலைப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கான எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - வரையறுக்கப்பட்ட ஹெலதனவி கம்பனி**

ஹெலதனவி கம்பனிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2009 மே 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள மின்சார கொள்வனவு உடன்படிக்கை 2014 டிசம்பர் 08 ஆம் திகதி காலாவதியாகியது. உடன்படிக்கை காலாவதியானதன் பின்னர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை தொடர்பில் நிறுவனத்தின் பார்வையில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது.

அறிக்கை திகதியில் உள்ளவாறான தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படியான நிறுவனததின் தொடர்ந்தியங்கும் ஆற்றல் பணிப்பாளர்கள் அவர்கள் தீர்மானித்தார்கள் தொடர்ந்தியங்கம் எண்ணக்கருவிற்கு அமைய நிறுவனத்தின் தொடர்ந்தியங்கம் இயலுமை மீது குறிப்பிடத்தக்க அளவு சந்தேகம் காணப்பட்டுவதனை அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகையால் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வரையறுக்கப்பட்ட ஹெலதனவியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பொருத்தமானதாக காணப்படவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்கஸன் இன்ஜினியரிங் தனியார் கம்பனி**

2015 நவம்பர், 01 ஆம் திகதியில் இருந்து செயல்வலுப்பெறும் வண்ணம் அதன் இயக்கப்பாட்டை முடிவுருத்துவதற்கு பணிப்பாளர்கள் தீர்மானித்தார்கள் அத்துடன் அதன் இயக்கப்பாட்டை எல்.ரி.எல் டிரான்ஸ்போர்மஸ் தனியார் கம்பனிக்கு மாற்றுவதற்கு தீர்மானித்தார்கள் ஆகவே, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவானது லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்சன் இன்ஜினியரிங் பிரைவட் லிமிடட்டினது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் பொருந்தவில்லை

**தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு - ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (பிரைவட்) லிமிடட்**

இக்கம்பனியின் பெரும்பான்மையான மனித சக்தி ஊழியர்கள் இலங்கை மின்சார சபையின் கீழ் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானத்தின் காரணமாக, இந்த இடமாற்றத்திற்குப் பிறகு கம்பனியின் வருவாய் வெகுவாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், அறிக்கையிடல் தேதியின்போது கம்பனி தொடர்பில் அவர்கள் என்ன செய்ய எண்ணுகிறார்கள் என்பது குறித்து பணிப்பாளர்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதாலும் கம்பனியைக் கலைக்க எந்த நோக்கமும் இல்லை என்பதாலும் கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணம் கொண்டுள்ளது என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன தேவைப்படுமிடத்து பின்வருவன உட்பட சிறந்த சமர்ப்பித்தல் மற்றும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடத்தக்க விதத்தில் திருத்தப்பட்டுள்ளன.

### 2.5 ஒன்றித்தலின் அடிப்படை

ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குழுமத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கும். முதலீடு செய்யப்பட்டவர்களுடனான ஈடுபாடுகளிலிருந்து பல்வேறு திரும்பல்களை தொகுதி வெளிப்படுத்துகின்ற போதும் அல்லது உரிமையைக் கொண்டுள்ள போதும் முதலீடு செய்யப்பட்டவர்களின் மீது அதன் வலுவின் ஊடாக அத் திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கு ஆற்றல் உள்ளபோதும் கட்டுப்பாடு அடையப்படுகின்றது. விசேடமாக, குழுமக் கட்டுப்பாடுகள் மற்றும் முதலீடு செய்யப்பட்டவர்கள் இருப்பின்,குழுமம்:

- முதலீட்டாளர் மீது வலுவைக் கொண்டிருக்கும். (அதாவது முதலீட்டாளர் தொடர்புடைய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு நடைமுறை ஆற்றலை தற்போதுள்ள உரிமைகள் வழங்கும்)

- முதலீடர்களுடனான ஈடுபாடு மூலம் மாறுபடும் வருவாய்கள் மீது கொண்டுள்ள உரிமை முதலீட்டாளர் மீது அதிகாரம் செலுத்த கூடிய, யலுமை மூலம் அவர்களது வருவாய்கள் மீது தாக்கம் செலுத்துதல்

வாக்களித்தல் உரிமைகளில் அதிகமானவை பொதுவாக கட்டுப்பாட்டை கொடுக்கிறது இந்த எடுகோளிற்கு உதவுவதற்காகவும் குழுமம் வாக்களித்தலில் பெரும்பான்மைக்கு குறைவாக கொண்டிருக்கின்ற அல்லது ஒத்த உரிமை முதலீட்டாளர் மீது காணப்படுகின்ற போது குழுமத்திற்கு முதலீடு செய்யப்பட்டவர்கள் மீது அதிகாரம் உள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்காக பின்வருவன உள்ளடங்கலாக அந்த சகல தொடர்புடைய விடயங்களையும் நிலமைகளையும் குழுமம் கருத்திற்கொள்கின்றது.

- முதலீட்டாளர்களில் ஏனைய வாக்குரிமை கொண்டுள்ளவர்களுடன் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள்

- ஏனைய ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற உரிமைகள்

- குழுமத்தின் வாக்களித்தல் உரிமைகள் மற்றும் எதிர்கால வாக்களித்தல் உரிமைகள்

துணைக் கம்பனிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- முதலீட்டாளர்களில் ஏனைய வாக்குரிமை கொண்டுள்ளவர்களுடன் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள்

- ஏனைய ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற உரிமைகள்

- குழுமத்தின் வாக்களித்தல் உரிமைகள் மற்றும் எதிர்கால வாக்களித்தல் உரிமைகள்

துணைக் கம்பனிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

# ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்
# டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு | பிடிப்பு விகிதாசாரம் |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி | இலங்கை | 63% |
| வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி (LECO) | இலங்கை | 55.2% |
| வரையறுக்கப்பட்டலங்கா நிலக்கரி (தனி) கம்பனி (LCC) | இலங்கை | 60% |
| வரையறுக்கப்பட்டசிறீ லங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி | இலங்கை | 100% |
| **கூட்டுத்தொழில் முயற்சியின் பெயர்** | **கூட்டிணைக்கப்பட்ட நாடு** | **பிடிப்பு விகிதாசாரம** |
| திருகோணமலை கோல் பவர் கம்பெனி லிமிடெட் (TPCL) | இலங்கை | 50% |

வரை. ஏல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனியின் பின்வரும் உப துணைக் கம்பனிகள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு |
|---|---|
| பிரைட் இன்டர்நெ'னல் பிரைவட் லிமிடட் | சிங்கப்பூர் |
| ராஜ் லங்கா பவர் கொம்பனி லிமிடட் | பங்காலதேசம் |
| லக்தனவி பங்லா பவர் கம்பனி லிமிடட் | பங்காலதேசம் |
| மகரிகாட் ஹைட்ரோபவர் பிரைவட் லிமிடட் | நேபாளம் |
| ஆசியாரிக் இலக்ரிகல் ரூ சுவிட்ச்கியர் பிரைவட் லிமிடட் | இந்தியா |
| ∴பர்னி லங்கா பவர் லிமிடட் | பங்காலதேசம் |

இலங்கை மின்சார சபை, **LECO**, வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை எனர்ஜீஸ் (தனி) கம்பனி ஆகியவை 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும்,வரையறுக்கப்பட்ட **LTL** ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி மற்றும திருகோணமலை கோல் பவர் கம்பனி லிமிடட் ஆகியவை மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும் கொண்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்கள் சான்றுபடுத்திய 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

துணைக்கம்பனிகளின் மொத்த இலாப, நட்டம் ஒன்றித்த வருமானக் கூற்றில் உட்படுத்தப்பட்டு உள்ளதுடன், வெளிவாரி பங்குதாரர்களுக்கு உரிய வரிக்குப் பிந்திய இலாப, நட்டமானது இலங்கை மின்சார சபையின் பங்குதாரர்களுக்கு உரிய இலாப, நட்டத்தை கணித்தலில் “சிறுபான்மையினர் ஆர்வம்” என்ற தலைப்பின் கீழ் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சபை மற்றும் அதன் உபகம்பனிகளின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ளன. உப கம்பனிகளின் நிகரச் சொத்துக்களில் வெளிவாரி பங்குதாரர்களின் நாட்டம் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் கட்டுப்படுத்தப்படாத ஆர்வம் என்ற தலைப்பின் கீழ் வேறாக காட்டுப்பட்டுள்ளது. ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் குழுமக் கம்பனிகளுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளும் குழுமக் கம்பனிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களின் விளைவும் தேறாத இலாபங்களும் நீக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டை இழக்காது, துணைக் கம்பனியொன்றில் உரிமைநாட்ட மாற்றம், ஒரு உரிமையாண்மை கொடுக்கல் வாங்கலாக கொள்ளப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குழுமம் துணைக் கம்பனிமீதான கட்டுப்பாட்டை இழக்கும்பட்சத்தில் அது:

- துணைக் கம்பனியின் சொத்துக்கள் (நன்மதிப்பு உட்பட) மற்றும் பொறுப்புக்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- கட்டுப்பாடற்ற ஆர்வம் ஏதுமிருப்பின் அதன் முன்கொணரற் தொகையை அங்கீகரிக்காதிருக்கும்.
- உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்ட திரண்ட நாணயமாற்று வித்தியாசங்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- நியாய பெறுமதிகளை பெறுமதிகளை கவனத்திற் கொண்டு பெறப்பட்ட பெறுமதியை அங்கீகரிக்கும்.
- தொடர்ந்து வைத்திருக்கும் முதலீடு ஏதுமிருப்பின், நியாய பெறுமதியை பெறுமதியை அங்கீகரிக்கும்.
- மிகை அல்லது பற்றாக்குறை ஏதுமிருப்பின் அதனை இலாப, நட்டத்தில் அங்கீகரிக்கும்.
- முன்னர் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் அங்கீகரித்த கூறுகளின் மேன்னிலை உரிமத்தின் பங்கினை பொருத்தமான வகையில் இலாப, நட்டத்தில் அல்லது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் மீள்வகைப்படுத்தும்.

மூன்று கட்டுப்பாட்டுக் கூறுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் 'மாற்றங்களைக் காட்டுகின்ற நிலைமைகள் காணப்படுமாயின் உண்மையில் முதலீடு செய்யப்பட்டவர்கள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளனவா அல்லது இல்லையா என்பதனை குழுமம் மீள்மதிப்பீடு செய்யும். துணைக் கம்பனிகள் மீது கட்டுப்பாட்டினை குழுமம் பெறுகின்றபோதே துணைக் கம்பனிகளின் ஒன்றிணைத்தல் இடம்பெறுவதுடன் துணைக் கம்பனியின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்கின்ற போது அது கைவிடப்படுகின்றது.ஆண்டின் போது துணைக் கம்பனியொன்றின் ஈட்டுதல் அல்லது கைதவிர்த்தலின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் என்பன துணைக் கம்பனியின் கட்டுப்பாட்டை குழுமம் ஈட்டிய திகதியிலிருந்து குழுமம் கட்டுப்பாட்டை இழக்கும் வரை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் **(OCT)** ஒவ்வொரு கூறும் இதன் விளைவாக கட்டுப்பாடற்ற ஆர்வத்தில் பற்றாக்குறை மீதி ஏற்படினும் குழுமத்தின் தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களுக்கும் கட்டுப்பாடற்ற ஆர்வமுள்ளவர்களிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. கூட்டிணைப்பின் நிமித்தம் குழுமம் முற்றாக இல்லாதொழிகையில் அங்கத்தவர்களிடையிலான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், உரிமைத்துவம், வருமானம், செலவினம் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் அவசியமானவிடத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுகின்றது. கட்டுப்பாடொன்றின் இழப்பல்லாத துணைக் கம்பனியின் உரிமைத்துவ ஆர்வத்திலான மாற்றம் உரிமைத்துவக் கொடுக்கல் வாங்கலொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது.

துணைக்கம்பனி ஒன்றின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்குமாயின் தொடர்புடைய சொத்துக்கள் (நன்மதிப்பு உள்ளடங்கலாக), பொறுப்புக்கள், கட்டுப்பாடற்ற ஆர்வம் மற்றும்

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் அங்கீகரிக்காதிருப்பதுடன் இலாப நட்ட விளைவுகள் ஏதுமிருப்பின் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் காணப்படுகின்ற எவையேனும் முதலீடுகள் நியாய பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.6 முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பிரயோகிக்கப்பட்ட அடிப்படை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆண்டுகளிலும் நிலையானதாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.6.1 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

சபை நடைமுறை/நடைமுறையல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் அதனுடைய நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களை முன்னிலைப்படுத்துகின்றது. சொத்தொன்று நடைமுறைச் சொத்தாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது நுகரப்படுகின்றவையாக இருத்தல்.
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக இருத்தல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தேறுமென எதிர்பார்க்கப்படுவையாக இருத்தல். அல்லது,
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான குறைந்தபட்சம் பன்னிரெண்டு மாதத்தினுள் பரிமாற்றம் செய்தல் அல்லது பொறுப்பொன்றை தீர்ப்பதிலிருந்து விடுபட்டதாகவுள்ள காசும் காசுக்கு சமனானவையும்.

ஏனைய அனைத்துச் சொத்துக்களும் குழுமத்தினால் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

பொறுப்பொன்று நடைமுறைப் பொறுப்பாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றவையாக இருத்தல்.
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுதல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுதல்.
- குறைந்தபட்சம் அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்திற்க் பொறுப்பொன்றின் தீர்ப்பனவை பிற்போடுவதற்கு நிபந்தனை அற்ற உரிமை காணப்படாதிருக்கையில்.

ஏனைய அனைத்துப் பொறுப்புக்களையும் சபை நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றது.

பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.6.2 வணிக சேர்க்கைகள், கட்டுப்பாடற்ற ஆர்வங்கள் மற்றும் நன்மதிப்பை கையகப்படுத்தல்

வணிகச் சேர்க்கைகள் கட்டம் கட்டமாக அடையப்படுகையில்,முன்பு வைத்திருக்கப்பட்ட எந்தவொருஉரிமைத்துவ ஆர்வமும் அதன் கையகப்படுத்தல்-திகதியில் நியாயமான பெறுமதியில் மீண்டும் அளவிடப்படுவதுடன் அதனால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிகச் சேர்க்கைகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. கையகப்படுத்தல் கிரயமானது, கையகப்படுத்தல் திகதியிலுள்ள நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பரிமாற்றப்பட்ட உருப்படிகளின் ஒட்டுமொத்தமாகவும் கையகப்படுத்துபவர் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வத்தின் ஏதேனும் தொகையிலும் அளவிடப்படுகின்றது. ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துபவரின் கட்டுப்பாடற்ற ஆர்வத்தை நியாயமான பெறுமதியில் அளவிடுவதா அல்லது கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துகளின் விகிதாசார பங்கை அளவிடுவதா என்பதை குழுமம்தெரிவு செய்கின்றது. கையகப்படுத்தல் தொடர்பான கிரயங்கள் இடம் பெற்ற செலவுகளாகக் கருதப்பட்டு நிர்வாக செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

குழுமம் ஒரு வணிகத்தை கையகப்படுத்தும்போது, பொருத்தமான வகைப்படுத்தல் எடுகோள்களைப் பயன்படுத்தி நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக அது மதிப்பிடப்படுவதுடன், கையகப்படுத்தல் தேதியின்படியான ஒப்பந்த விதிமுறைகள், பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் தொடர்புடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகின்றன.

மாற்றப்பட்ட பரிசீலனையின் மொத்த தொகை கட்டுப்படுத்தப்படாத ஆர்வத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொகை முன்னர் வைத்திருந்த ஆர்வம் என்பவற்றை விட கையகப்படுத்திய தேறிய அடையாளம் காணக்கூடிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அதிகமாக காணப்படுமாயின் அந்த நன்மதிப்பானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. ,ந்த கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதியானது மாற்றப்பட்ட ஒட்டுமொத்த விடயங்களின் பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக ,ருந்தால்,அந்த ஆதாயம் ,லாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதி மாற்றப்பட்ட மொத்த பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால், குழுமம் அனைத்து சொத்துகளையும் சரியாக அடையாளம் கண்டுள்ளதா மற்றும் அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டுள்ளதா என்பதை மறுபரிசீலனை செய்து,கையகப்படுத்தல் தேதியில் அங்கீகரிக்கப்பதற்காக தொகைகளை அளவிடுவதற்குப் பயன்படுத்திய நடைமுறையை மீளாய்வு செய்கின்றது. மறுபரிசீலனையின பின் இதுவரை மாற்றப்பட்ட ஒட்டுமொத்த விடயங்களின பெறுமதியானது பெறப்பட்ட நிகர சொத்துக்களின் நியாயமான பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்,அந்த ஆதாயம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர்,நன்மதிப்பானது ஏதேனும் திரட்டப்பட்ட நட்ட, இழப்புகள், ருப்பின் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகிறது. நட்ட,

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

இழப்பு பரிசோதனை நோக்கத்திற்காக, ஒரு வணிகச் சேர்க்கையின் போது கையேற்கப்பட்ட நன்மதிப்பானது, கையகப்படுத்துபவரின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் அந்த அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றதா என்பது கவனத்தில் எடுக்காமல் கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து,,ந்தச் சேர்க்கையினால் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற குழுமத்தின் ஒவ்வொரு காசு உருவாக்கும் அலகுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

காசு உருவாக்கும் அலகுகளுக்கு நன்மதிப்பு ஒதுக்கப்பட்டு, அந்த அலகுக்கு உட்பட்ட செயற்பாட்டின் ஒரு பகுதி கைதவிர்க்கப்பட்டால், கைதவிர்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை நிர்ணயிக்கும் போது கைதவிர்ப்புச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நன்மதிப்பானது செயற்பாட்டின் முன்கொண்டு செல் தொகையில் உள்ளடக்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் கைதவிர்க்கப்பட்ட நன்மதிப்பானது கைதவிர்க்கப்பட்ட செயற்பாட்டின் ஒப்பீட்டு பெறுமதிகள் மற்றும் காசு உருவாக்கும் அலகு வைத்திருந்த பகுதியின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

### 2.6.3 கூட்டுத்தொழில் முயற்சியில் முதலீடு

கூட்டுத்தொழில் முயற்சி என்பது கூட்டாக ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள தரப்பினர்களின் கூட்டுத்தொழில் முயற்சிக்கான தேறிய சொத்துக்களை வைத்துள்ள ஒரு கூட்டு ஒழுங்குமுறையாகும். கூட்டுக் கட்டுப்பாடென்பது ஏற்பாடொன்றின் கட்டுப்பாட்டினை பங்கிடுவதற்கான ஒப்பந்தரீதியான இணக்கப்பாடாகும். தொடர்புடைய செயற்பாடுகளின் தீர்மானத்தின் போது கட்டுப்பாட்டினை பங்கிடும் தரப்பினர்களின் கருத்து தேவையாயிருப்பின் மாத்திரம் இவ்விணக்கப்பபாடு காணப்படும். திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் ஆனது இலங்கை மின்சார சபைக்கும் NTPC லிமிடட் இற்கும் இடையே கூட்டாக கட்டுப்படுத்தப்படுகின்றதோர் நிறுவகமாகும். கூட்டுக் கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதில் மேற்கொள்ளப்பட்ட கருதுகோள்கள் துணைக் கம்பனிகளின் மீதான கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதற்கு தேவையானவற்றை ஒத்திருந்தன.

அதன் கூட்டுத்தொழில்முயற்சி மீதான சபையினது முதலீடு, உரிமைத்துவ முறையினைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றது. உரிமைத்துவ முறையின் கீழ், கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றின் மீதான முதலீடு, ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முதலீட்டின் முன்கொண்டுசெல் தொகை,கையேற்கப்பட்ட திகதியிருந்து கூட்டுத்தொழில்முயற்சியினது தேறிய சொத்துக்களில் சபையின் பங்கில் மாற்றங்களை அங்கீகரிப்பதற்காக சீராக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியுடன் தொடர்புடைய நன்மதிப்பு, முதலீட்டின் முன்கொண்டு சென்ற தொகையில் உள்ளடக்கப்படுவதுடன் அது தனிப்பட்ட ரீதியில் காலத்தேய்மானத்திற்காக சோதிக்கப்படுவதில்லை. இலாபம் அல்லது நட்டக் கூற்று, கூட்டுத் தொழில் முயற்சியினது செயற்பாட்டு விளைவுகளின் சபையின் பங்கைப் பிரதிபலிக்கின்றது. முதலீடு மேற்கொள்ளப்படவரின் **OCI** இலாப ஏதேனும் மாற்றம் சபையினது **OCI** இன் பகுதியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

அத்துடன், மாற்றமொன்று நேரடியாக கூட்டுத்தொழில் முயற்சியினது உரிமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கையில், அது பிரயோகிக்கத்தக்கதாக இருப்பின் எந்தவொரு மாற்றத்தினையும் உரிமைத்துவ மாற்றக் கூற்றிலுள்ள அதனது பங்கில் சபை அங்கீகரிக்கின்றது. சபைக்கும் கூட்டுத் தொழில் முயறிச்சிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான தேறப்படாத ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள், கூட்டுத்தொழில் முயற்சியின் ஆர்வத்திலிருந்து நீக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியொன்றின் இலாபம் அல்லது நட்டத்தில் சபைக்குரிய மொத்தப் பங்கானது இலாபம் அல்லது நட்டக் கூற்றின் முகப்பில் செயற்பாட்டு இலாபமல்லாது காண்பிக்கப்படுவதுடன் வரிக்குப் பிந்திய இலாபம் அல்லது நட்டத்திலும் கூட்டுத்தொழில் முயற்சியின் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வங்களிலும் பிரிதிபலிக்கின்றது.

### 2.6.4 அந்நியச் செலாவணி பரிவர்த்தனை,அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

**(அ) தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்**

குழுமத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபா இல் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**(ஆ) கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்**

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதங்களை உபயோகித்து சபை பதிவு செய்யும். அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள வெளிநாட்டு நாணயங்களில் எடுத்துரைக்கப்பட்ட நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அத்தகைய திகதியில் செயல்வலுப்பெறும் அதேவிடத்து நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி புழக்கத்திலுள்ள இலங்கை ரூபாவுக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. வர்த்தகம் சாராத செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற சகல வித்தியாசங்களும் இலாப அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படுகின்றன.

அந்நியச் செலாவணியொன்றில் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற நிதி சாராத விடயங்கள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தேதிகளில் நிலவிய நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாராத விடயங்களின் பரிவர்த்தனையால் ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டமானது பரிவர்த்தனை வேறுபாட்டிற்கு வழிவகுத்த விடயத்தின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகிறது. (ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்ற விடயங்களின் பரிவர்த்தனை வேறுபாடுகளும் கூட முறையே ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன).

1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 42 ஆம் பிரிவின் 6 ஆம் உபபிரிவுக்கு அமைவாக அந்நியச் செலாவணிக் கடன் மற்றும் வட்டி தொடர்பில் நாணயமாற்று ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு உரியதாகையினால் இலங்கை மின்சார சபை அவற்றை கருத்திற் கொள்வதில்லை. சென்மதியாகவுள்ள கடன் நிலுவைகள் சபையினால் கடன் பெறப்பட்டபோது

# ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

இணங்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

**இ) வெளிநாட்டுச் செயற்பாடுகள்**

வெளிநாட்டுச் செயற்பாடுகள் எனக் கருதப்படுகின்ற வெளிநாட்டு துணைக் கம்பனிகளினதும் கூட்டுத் தொழில் முயற்சிகளினதும் நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று என்பன முறையே அறிக்கையிடல் தேதியில் நிலவுகின்ற மற்றும் சராசரி வருடாந்த நாணயமாற்று விகிதத்தில்இலங்கை ரூபாய்க்கு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

பரிவர்த்தனையில் எழுகின்ற நாணயமாற்று வேறுபாடுகள் நேரடியாக ஏனைய விரிவான வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஒரு வெளிநாட்டு நிறுவனத்தை கைதவிர்க்கும்போது, குறிப்பிட்ட அந்த வெளிநாட்டு செயற்பாட்டுடன் தொடர்புடைய ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிற்போட்ட ஒட்டுமொத்த தொகையானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.5 வரிகள்

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன.பிற முற்றுமடங்கிய வருமானமாக அங்கீகரித்த வருமான அல்லது செலவு உருப்படியொன்று தொடர்புபட்ட மாற்றங்கள் நேரடியாக பிற முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிப்புச இலாபம் அல்லது நட்டம் , வரிகள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

**அ) நடப்பு வரிகள்**

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன. மீளாய்வுகளுள் மற்றும் முன்னய காலப்பகுதிக்கான தற்போதைய வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிட அல்லது அவருக்கு செலுத்தவேண்டிய தொகைகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. தொகைகளை கணிக்க உபயோகித்த வரி விகிதங்களும் வரிச் சட்டங்களும் கம்பனி தொழிற்பட்டு வரிவிதி வருமானத்தை பிறப்பிக்கும் நாட்டில் அறிக்கையிடற் திகதியில் சட்டமாக்கியுள்ள அல்லது கிட்டத்தட்ட சட்டமாக்கிய சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். உரிமைத்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்படைய நடப்பு வருமான வரி உரிமைத்துவத்தில் அங்கிகரிக்கப்படுகின்றதேயன்றி வருமானக் கூற்றுக்களில் அல்லை.

வருமான வரிக்கான ஏற்பாடானது வரி நோக்கத்திற்காக சீராக்கப்பட்டவாறு, 2018 ஏப்ரல் 01 முதல் அமுலாகும் வகையில், 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆ) பிற்போடப்பட்ட வரி**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் முன் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கும் இடையில் ஏற்படும் சகல தற்காலிக வித்தியாசங்கள் மீது பொறுப்பு முறையை உபயோகித்து பிற்போட்ட வருமான வரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றைத் தவிர்த்து, அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளிற்கும் பிற்போட்ட வரிப் பொறுப்புகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(i) வனிக இணைப்பாக அமையாத கொடுக்கல் வாங்கலொன்றில் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காதபோது எழுகின்ற பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது ஏற்படும் பிற்போட்ட வருமான வரிப் பொறுப்பு நீங்கலாக சகல தற்காலிக வரிவிதி வித்தியாசங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(ii) துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட வரிவிதிப்புக்கு உள்ளாகும் தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில், தற்காலிக வித்தியாசத்தின் எதிர்ப்பதிவுக்கான கால அட்டவணையினை கட்டுப்படுத்தக்கூடியவை தவிர்ந்து, மற்றும் அது சாத்தியமானபோது, தற்காலிக வித்தியாசங்கள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் எதிர்ப்பதிவு செய்யப்படமாட்டாது.

பின்வருவனவற்றை தவிர்த்து கழிக்கக்கூடிய வரி இழப்புக்களை எதிரீடு செய்வதற்காக வரிவிதிக்கத்தக்க இலாபம் காணப்படுகையிலும் பயன்படுத்தக்கூடிய போதிலும் அவ்வாறு பயன்படுத்தாத வரிச் செலவு மீதிகள் மற்றும் வரி இழப்புக்கள் முன்கொண்டு செல்லப்படுகையிலும் அனைத்து கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தப்படாத வரி செலவு மீதிகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் ஆகியவற்றிற்காக பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(i) பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு, கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளை பயன்படுத்த வரி விதி இலாபம் கிடைப்பது சாத்தியமான அளவுக்கு, சகல கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு பிற்போட்ட வருமானவரிச் சொத்து அங்கீகரிக்கப்படும்.

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

(ii) துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள், தற்காலிக வித்தியாசங்களை பயன்படுத்துவதற்கு வரிவிதி இலாபங்கள் கிடைத்து, எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் அது எதிர்ப்பதிவு செய்யக்கூடிய அளவுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படும்.

பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் முன் கொணரப்படும் தொகையானது அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு,பயன்படுத்தப்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை அல்லது அவற்றின் பாகத்தை அனுமதிக்கும் வகையில் கிடைக்கக்கூடிய போதிய வரிவிதிக்கத்தகு இலாபம் இல்லையென்ற அளவுக்கு குறைக்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள மதிப்பிடப்பட்டு,பிற்போட்ட வரி சொத்துக்களை மீட்பதற்கு அனுமதிக்கும் சாத்தியமான எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்களிற்கு அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதியிலுள்ளவாறு சட்டமாக்கப்பட்ட அல்லது அதன்பின்னர் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் (வரிசார்ந்த சட்டங்கள்) அடிப்படையில் சொத்து மாற்றப்படுகின்ற அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்ற போதுள்ள ஆண்டிற்கு ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு வெளியே அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரியானதுஇலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு வெளியே அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரி ஏனைய முழுமையான வருமானத்தில் அல்லது நேரடியாக உரிமைத்துவத்தில் காணப்படும் முக்கியமான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அங்கீகரிக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட அந்த வரிகள் அதே வரிவிதிக்கத்தகு நிறுவனத்துடனும் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரத்துடனும் சம்பந்தப்படும் பட்சத்தில் நடைமுறை வரிப்பொறுப்புக்களுக்கு எதிரான நடைமுறை வரிச் சொத்துக்களை சமப்படுத்துவதற்கு சட்ட ரீதியில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன.

### பங்கிலாப வருமானம் மீதான வரி

துணைக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் பங்கிலாப வருமானம் மீதான வரி,இலாபம் அல்லது நட்டக் கூற்றில் செலவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### விற்பனைகள் வரி

பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்துவருமானம், செலவினம் மற்றும் சொத்து விற்பனை வரிகள் அவற்றின் தேறிய தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன:

- சொத்தை அல்லது சேவையினை கொள்வனவு செய்கையில் ஏற்படுகின்ற விற்பனை வரி விதித்தல்களை அதிகாரத்தரப்பிடமிருந்து வசூலிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில்,விற்பனை வரியானதுபொருந்துகின்றவாறு ஒன்றில் சொத்தின் கொள்வனவுக் கிரயத்தில் ஒரு பகுதியாக அல்லது குறித்த உருப்படிச் செலவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்படுகையில்.

- விற்பனை வரித் தொகையினை உள்ளடக்கி குறிப்பிடப்படும் பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை காணப்படுகையில்.

வசூலிக்கக்கூடிய விற்பனை வரி மற்றும் அதிகாரிகளிற்கு செலுத்த வேண்டிய தொகை என்பன நிதி நிலைமைக் கூற்றின் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகையில்.

### 2.6.6 இருப்புக்கள்

இருப்புக்கள் வழக்கிழந்த மற்றும் குறைவாக அசைவுருகின்ற விடயங்களுக்கு ஏற்பாடாகவுள்ள கொடுப்பனவுகளின் பின்னர் இருப்புக்காக உரிய கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். நிகர தேறுகைப் பெறுமதி வழமையான வியாபாரத்தின்போது விற்கக்கூடிய பெறுமதியிலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான கிரயங்களை கழிக்க வரும் தொகையாகும். இருப்புக்கள் தற்போதைய அமைவிடம் மற்றும் நிலைக்கு கொண்டுவருவதற்கு இறுக்கப்படும் கிரயங்களில் கீழ்வருமாறு கணக்கிடப்படும்.

#### இலங்கை மின்சார சபை

பெரும்பாலும் பயன்படுத்தப்படும் மற்றும் வருடாந்த விலைப்பட்டியலில் நிரற்படுத்தப்படும் தொக்குகள் விநியோக பிரிவுகளில் நியம விலைகளிலும், ஏனைய (பிறப்பாக்க மற்றும் பரிமாற்றப் பிரிவுகள்) நுகர்பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள் போன்றவை முதல் உள் முதல் வெளி முறையிலுள்ள விலைகளிலும் மதிப்பிடப்படுகின்றன.

எனினும், இ.மி.ச. நியம விலைகளில் மதிப்பிடப்பட்ட தொக்குகளை கிரயப் பெறுமதிக்கு குறைப்பதற்கு ஏதுவாக தேறாத இலாபங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது

| வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி | |
|---|---|
| தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள் | - நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகளும் ஏனையவையும் | - உண்மைக் கிரயத்தில் |
| மூலப் பொருட்கள் | - நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில் |
| முடிவுப் பொருட்கள் மற்றும் முடிவுறா வேலைகள் | - சாதாரண நிலமைகளில் பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில். |

# ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

| வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி | |
|---|---|
| மூலப் பொருட்கள் | - முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில். |
| முடிவுறா வேலையும் | - நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில். |
| வழிச்சரக்குகள் | - நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி |
| நுகர்வுப் பொருட்களும் உதிரிப் பாகங்களும் | - முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகள் | - உண்மைக் கிரயத்தில |

### 2.6.7 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

#### அ இனங்காணல் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுவுக்கு கிடைக்கும் என்றிருந்தால் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் அவை இனங்காணப்படுகின்றன.

#### ஆ) அளவிடுதல் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு ஏதுமிருப்பின் அவற்றை கழித்த தொகையில் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய கிரயம் பிரதியீட்டுக் கூறுகளின் கிரயம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உதிரிப் பாகங்களின் கிரயம் மற்றும் தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யப்படும் பட்சத்தில், நீண்டகால நிர்மான செயற்திட்டங்களின் கடன் படுகைக் கிரயம் ஆகியவற்றை உள்ளடக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை ஆதனம், பொறி மற்றும் உபகரண கணிசமான பகுதிகள் பிரதியீடு செய்ய வேண்டியிருப்பின், குழுமம் பிரதியீடு செய்யும் பகுதியின் நிகர ஏட்டுப் பெறுமதியை அங்கீகரிக்காதிருப்பதுடன், புதிய பகுதியை அதன் தொடர்புடைய பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் அங்கீகரிக்கும். அவ்வாறே, பாரிய பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும் போது அதன் கிரயம், அங்கீகரிப்பு நிபந்தனைகளை திருப்தி செய்தால் ஆதனம், பொறி மற்றும் உபகரண முன்கொணரற் தொகையில் அங்கீகரிக்கப்படும். ஏற்பட்ட ஏனைய அனைத்து திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்களும் இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு சாட்டப்படுகின்றது.

.ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் தேறாதிருப்பதற்கான நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் மாற்றங்கள் காணப்படுகையில் அந்த முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் நட்டக்கழிவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

#### (இ) மூலதன முடிவுறா வேலை

அறிக்கையிடல் தேதியில் பூரணப்படுத்தப்படாதுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட மூலதனச் செலவுகள் மூலதன முடிவுறா வேலைகளாகக் காட்டப்பட்டு கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. அவை பூரணப்படுத்தப்பட்டவுடன், தொடர்புடைய சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்படுகின்றன.

#### (ஈ) இனங்காணாதிருத்தல்

ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதியானது அதன் அகற்றலின் அல்லது அந்தச்சொத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் ஏதுமில்லை என்பதன் பேரில் இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஒருசொத்தின் இனங்காணாது விட்டு விடுவதிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுல் பெறுமதிக்கும் சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படுகிறது) அத்தகைய சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் போது இலாப அல்லது நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது

#### (உ) பெறுமானத்தேய்வு

குறித்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார பாவனை காலத்திற்கு பொருத்தமான காலப்பகு முழுவதற்கும் பதிவழிக்கக்கூடிய விதத்தில், நேர்கோட்டு அடிப்படையினைப் பயன்படுத்தி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகின்றது. இறையிலகாணிகள் தொடர்பில் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை. குறிப்பு 2.6.7 இல் விபரிக்கப்பட்டவாறு ஒரு சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்து விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் திகதி அல்லது அந்தச் சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் திகதி திகதி இதில் எது முன்னரோ் அப்போது நிறுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலம் கீழே தரப்பட்டுள்ளது.

**இலங்கை மின்சார சபை**

| | |
|---|---|
| இறையிலி கட்டடம் மற்றும் குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| **சிவில் வேலைகள்:** | |
| வழிந்தோடும் கான்கள் மற்றும் அணைக்கட்டுகள் | 100 ஆண்டுகள் |
| உருக்கு நீர்க்குழாய்கள் மற்றும் அது சார்ந்த தொக்குகள் | 40 ஆண்டுகள் |
| உபநிலையமும் ஆளித்தொகுதியும் | 35 ஆண்டுகள் |
| **மின் பிறப்பாக்க பொறிகள்:** | |
| பொறி உட்பட்டசக்திவலு நிலையங்கள் (நீர்மின்) | 35 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (அனல்மின்) | 25 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (டீசல்) | 15 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (வாயுஅமுக்கி) | 12 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (நிலக்கரி) | 30 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள்(காற்று) | 15 ஆண்டுகள் |
| **மின்கடத்தி கம்பி வழிகள்:** | |
| 220kv,132kv மற்றும் 66kv | 35 ஆண்டுகள் |

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்
## டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

**வினியோகக் கம்பி வழிகள்:**

| | |
|---|---|
| HT நிலக்கீழ் - 33 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 132 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 11 kv | 40 ஆண்டுகள் |
| HT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| LT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT ஊட்டும் தூண்கள் | 35 ஆண்டுகள் |
| நுகர்வோர் உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| HT ஆளித்தொகுதி | 35 ஆண்டுகள் |
| முதன்மை, கட்டக உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| பிரதான சேவை வழி | 35 ஆண்டுகள் |
| சேவை வழி - நிலக்கீழ் | 40ஆண்டுகள் |
| SCADA மத்திய நிலையம் மற்றும் தொடர்பாடல் உபகரணம் | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் - பயணிகள் போக்குவரத்து - இரு அல்லது மூன்று சக்கர வாகனங்கள்* | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் - பயணிகள் போக்குவரத்து - மற்றவை* | 14 ஆண்டுகள் |
| கனரக வாகனங்கள்* | 20 ஆண்டுகள் |
| மோட்டார் படகுகள் | 07 ஆண்டுகள் |
| ,யந்திரங்களும் ஆயுதங்களும் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| தளபாட பொருத்துக்கள் | 05 ஆண்டுகள் |
| சூரிய மின்வலு திட்டம் | 10 - 25 ஆண்டுகள் |

*குறிப்பு: மோட்டார் வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் 2021 இல் திருத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டுக்கு முன், அனைத்து மோட்டார் வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் 07 ஆண்டுகளாகக் கருதப்பட்டது

**வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி)**

| | |
|---|---|
| கம்பனி கட்டடங்கள் | 25 - 50 ஆண்டுகள் |
| பொறி மற்றும், யந்திரம் | 08 - 15 ஆண்டுகள் |
| மின்சாரப் பொறி | 10 - 15 ஆண்டுகள் |
| தொழிற்சாலை உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அகத் தொடர்பாடல் உபகரணம் | 10 ஆண்டுகள் |
| தீயணைப்பு உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03 - 10 ஆண்டுகள் |
| தளபாடமும் பொருத்துக்களும் | 03 - 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| வெப்ப மீள்பெறுகை அலகு | 06 ஆண்டுகள் |
| தொழிற்பாட்டு, பராமரிப்பு உதிரிப்பாகங்கள் | உள்ளபடியான பாவனை |
| சூரிய மின்சார PV பொறி | 15 ஆண்டுகளிற்கு மேல் |

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி.**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| குத்தகைக் காணி | குத்தகைக் காலம் வரை |

**உட்கட்டமைப்பு வழங்குதல்:**

| | |
|---|---|
| உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் CEB, டமிருந்துபெற்றுக்கொண்ட உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 10 ஆண்டுகள் |
| LECO நிருமானித்த உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 20-25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 - 07 ஆண்டுகள் |
| கணனிகள | 03 - 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03 - 07 ஆண்டுகள் |
| பொறியும், யந்திரமும் | 03 - 04 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, ணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| உபகரணங்கள் | 04 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| கணனிகள் | 04 ஆண்டுகள |
| குத்தகையிலுள்ள மேம்படுத்தல்கள் | 02 ஆண்டுகள் |
| வலைதள முறைமை | 02 ஆண்டுகள் |

**ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட்**

| | |
|---|---|
| பொறி மற்றும், யந்திரம் | 05 ஆண்டுகள் |
| தளபாடம், உபகரணம் மற்றும் கருவிகள் | 02 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை பவர் கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, ணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| உபகரணம் | 05 ஆண்டுகள். |
| மடி கணனி மற்றும் கணனிகள் | 03 ஆண்டுகள் |

ரூபா 15,000 ற்கு மேற்பட்ட சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டன.

இறுதி அறிக்கையிடல் தேதியிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான அறிகுறிகள் காணப்பட்டு, அது பொருத்தமானதாக, ருந்தால் சொத்துகளின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள வாழ்க்கை காலம் மற்றும் தேய்மான முறைகள் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டு,அதற்கேற்ப சீராக்கப்படுகின்றன.

**(ஊ) கடன்பெறுதல் கிரயங்கள்**

கடன்பெறுகை கிரயங்கள் நிதி பெறுவது தொடர்பில் சபை செலுத்தும் வட்டி மற்றும் கிரயங்களை கொண்டிருக்கும். எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்கு தயாராக்க கணிசமான காலம் தேவைப்படும் சொத்துக்களான தகைமை பெறும் சொத்துக்களின் கொள்வனவு, நிருமானம் அல்லது உற்பத்தியுடன் தொடர்புபட்ட பொதுவான மற்றும் குறிப்பான கடன்படுகைக் கிரயங்கள் அந்தச் சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்காக கணிசமான அளவில் தயார்படுத்தப்படும் வரையில் அந்தச் சொத்துக்களின் கிரயத்துடன் கூட்டப்படும். ஏனைய சகல கடன்படுகைக் கிரயங்களும் செலுத்தப்படும் காலத்திலேயே செலவாகக் கொள்ளப்படும்.

தகுதிவாய்ந்த சொத்துக்களுடன் தொடர்புடைய அவற்றின் நிலுவையிலுள்செலவினங்களின் குறிப்பிட்ட கடன்பெறுகைகளின் தற்காலிக முதலீட்டின் மீது உழைக்கப்பட்ட முதலீட்டு வருமானம், மூலதனமாக்கலுக்கு தகுதியான கடன்பெறுதல் கிரயங்களிலிருந்து கழிக்கப்படுகின்றது.

### 2.6.8 விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்கள்

தொடர்ச்சியான பாவனையின் ஊடாக அன்றி,அடிப்படை ரீதியாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் முன்கொண்டுசெல் தொகை அறவிடப்படுமாயின் குழுமம் அந்த நடைமுறையல்லாச் சொத்துக்களை விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்துகின்றது. அவ்வாறு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்திய நடைமுறையல்லாச் சொத்துக்கள், அவற்றின் முன்கொண்டுசெல் தொகை மற்றும் சந்தைப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டுவரும் தொகை ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது. விற்பனைக்கான கிரயங்கள் எனப்படுபவை, நிதிக் கிரயங்கள் மற்றும் வருமான வரிச் செலவுகளைத் தவிர்த்து, ஒரு சொத்தை அகற்றுவதற்கு நேரடியாக பகிரக்கூடிய கிரயங்களாகும்.

முகாமைத்துவத்தால் (பணிப்பாளர் சபை) வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மீது விற்பனை மிகவும் சாத்தியமானதாக இருக்கையில் மாத்திரமே விற்பனைக்காக வைத்திருக்கப்படுதலின் வகைப்படுத்தலிற்கான

# ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

அளவுகோள்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன மற்றும் தற்போதுள்ள நிலையில் உடனடியாக விற்பனை செய்வதற்கு காணப்படும் சொத்தாகும்.
விற்பனையை பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்பில்லை என்பதை அல்லது விற்பனைக்கான தீர்மானம் மீளப்பெறப்படாது என்பதைக் குறித்தல் வேண்டும். சொத்துக்களை விற்கும் திட்டத்திற்கு முகாமைத்துவம் கடப்பாடுடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் விற்பனை பூரணப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வகைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எதிர்பார்க்கப்படும் விற்பனையை பூரணப்படுத்தும் கடப்பாடு முகாமைத்துவத்துக்கு உள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உாபரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட பின்னர் அவற்றிற்கான பெறுமானத்தேய்வு செய்தல் நிறுத்தப்படுகின்றது.

விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்திய சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றில் புறம்பான நடைமுறை விடயங்களாக முன்வைக்கப்படுகின்றன.

### அங்கீகரிக்காமை

விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டவற்றை சபைத் தீர்மானத் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் கைதவிக்கப்பதற்கு தவறும் பட்சத்தில் அவை மீண்டும் அவற்றின் இடைநிறுத்திய காலப்பகுதிக்கான பெறுமானத்தேய்வுச் சீராக்கத்துடன் சேர்த்து ஆதனம், பொறி உபகரணங்களுக்கு மீள-வகைப்படுத்தப்படும்.

### 2.6.9 நிதிசாராத சொத்துக்களின் கழிவுநட்டம்

ஒரு சொத்துக்கு நட்டம் ஏற்படலாம் என்பதற்கான ஒரு அறிகுறிதென்படுகின்றதா என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, குழு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மதிப்பீடு செய்யும. சொத்தொன்றின் நட்டக்கழிவு தொடர்பில் ஏதாவதொரு அறிகுறிதென்படுகின்றது எனில்,அச்சொத்தின் முன்கொண்டு செல்லல் பெறுமதி(அல்லது குறித்த சொத்து ஒதுக்கப்பட்டுள்ள காசு ஈட்டும் அலகு (CGU) நட்டக்கழிவுக்காக பரீட்சிக்கப்படுகின்றது. சொத்தென்றின் மீளப்பெறும் தொகையைக் காட்டிலும் அதன் முன்கொண்டு செல்லும் தொகை அதிகமாக இருப்பின் ஒரு நட்டக்கழிவு இனங்காணப்படுகிறது. திரும்பப் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் (அல்லது ஊபுரு இன்) நியாயமான மதிப்பை விட அதிகமாக இருப்பது,சொத்தின் சந்தைப் பெறுமதியிலிருந்து அதனை விற்பதற்கான செலவுகளை மற்றும் பயன்பாட்டிலுள்ள பெறுமதியை கழிப்பதனாலாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடுகையில்,வரிக்கு முந்தைய கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி, பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்கான குறிப்பிட்ட அபாயங்களின் தற்போதைய சந்தை மதிப்பீட்டை பிரதிபலிக்கின்ற அவற்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசோட்டங்களின் தற்போதைய பெறுமதிக்குகழிவுநீக்கம் செய்யப்படுகின்றன,

நட்டக்கழிவின் மதிப்பீட்டு நோக்கத்திற்காக, சபை முழுவதும் ஒரு தனிப்பட்ட காசு உருவாக்கல் அலகாக கருதப்படுகின்றது.

.தொடரும் செயற்பாடுகளின் நட்டக்கழிவு இழப்புகள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆகையால், சொத்தின் கொணரப்படும் தொகை அதன் மீளறவிடப்பட வேண்டிய தொகையை விஞ்சாது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற அந்தக் கொணரப்படும் தொகையையும் விஞ்சாது. அவ்வாறான நிலையில், சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் மீளப்பெறும் தொகைக்கு அதிகரிக்கப்படும். முன்னைய ஆண்டுகளில் சொத்துகளுக்கு எந்த நட்டக்கழிவு இழப்பும் அங்கீகரிக்கப்பட்டிருக்காவிட்டால்,அந்த அதிகரித்த தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முன்கொண்டு செல்லும் தொகையை விட அதிகமாக இருக்க முடியாது. அவ்வாறான மீளவைத்தல்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.10 குத்தகைகள்

ஒரு ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், அந்த ஒப்பந்தத்தில் அல்லது உள்ளடக்கத்தில் ஒரு குத்தகை உள்ளதா என்பதை சபை மதிப்பிடுகிறது. அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை ஒரு ஒப்பந்தம் உள்ளடக்கி இருப்பின், அந்த ஒப்பந்தம் என்பது ஒருகுத்தகை ஆகும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு, சபை SLFRS 16 இல் உள்ள குத்தகைக்கான வரைவிலக்கணத்தை பயன்படுத்துகிறது.

### 2.6.10.1 குத்தகைதாரராக குழுமம்

குறுங்கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியடைய சொத்துக்களின் குத்தகைகளைத் தவிர, அனைத்து குத்தகைகளுக்கும் ஒற்றை அங்கீகார மற்றும் அளவீட்டு அணுகுமுறையை குழுமம்பிரயோகிக்கின்றது. குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான குத்தகைப் பொறுப்புக்களையும் குறித்துரைத்த சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை பிரதிநித்துவப்படுத்துகின்ற பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களையும் குழுமம் அங்கீகரிக்கிறது.

#### பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

குறித்துரைத்த சொத்துக்கள் பயன்படுத்துவதற்காக கிடைக்கும் போது குழுமம் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களை அங்கீகரிக்கின்றது. ஏதேனும் திரண்ட தேய்மானம் மற்றும் நட்டக்கழிவு இழப்புக்கள் கழிக்கப்பட்டும் குத்தகைப் பொறுப்புக்களின் சீராக்கத்தின் பின்னரும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் கிரயத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புத் தொகை, ஏற்பட்ட ஆரம்ப நேரடி கிரயங்கள் மற்றும் குத்தகை தொடக்க திகதியில் பெறப்பட்ட குத்தகை சலுகைகள் கழிக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் ஆகியவை உள்ளடங்குகின்றது. குத்தகை காலத்தின் முடிவில், குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் உரிமையைப் பெறுவதற்கு சபை நியாயமான உறுதிப்பாட்டை கொண்டிருக்காவிட்டால்,அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு உரிமை சொத்துகள் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள

# ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

ஆயுட்காலம் அல்லது குத்தகை காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றன. பயன்பாட்டு உரிமை சொத்துகள் நட்டக்கழிவுக்கு உட்பட்டவையாகும்.

குழுமத்தின் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடங்கியுள்ளன.

### குத்தகைப் பொறுப்புக்கள்

குத்தகையின் தொடக்க தேதியில், குத்தகை காலத்தின் மீது செய்யப்பட வேண்டிய குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் குத்தகைப் பொறுப்புக்களை குழுமம் அங்கீகரிக்கிறது. குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியை கணிப்பிடுகையில்,குத்தகையில் உள்ளடங்கியுள்ள வட்டி வீதத்தை உடனடியாக நிச்சயிக்க முடியாதிருக்கும் போது சபை குத்தகையின் தொடக்க திகதியிலுள்ள அதிகரிக்கும் கடன் வட்டி விகிதத்தைப் பயன்படுத்துகிறது. குத்தகையின் தொடக்க திகதிக்குப் பின்னர், குத்தகைப் பொறுப்புக்களின் அளவானது வட்டியின்அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு ஏற்ப குறைக்கப்படுகிறது. அத்துடன்குத்தகையில் திருத்தமொன்று, குத்தகைக் காலத்தில் மாற்றமொன்று, நிலையான குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று அல்லது குறித்த சொத்தை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீட்டில் மாற்றமொன்று காணப்பட்டால் குத்தகைப் பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லும் தொகை மீள அளவிடப்படுகின்றது.

குழுமத்தின் குத்தகைப் பொறுப்புக்கள் வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும்கடன்பெறுவனவுகளில் உள்ளடங்குகின்றன.

### 2.6.10.2 குத்தகை தருனராக குழுமம் - LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்

### செயற்பாட்டுக் குத்தகை

குழுமம் சொத்துக்களின் உரிமை சம்பந்தமான கிட்டத்தட்ட முழுமையான இடர் மற்றும் பயன்களை மாற்றாத நீர்மின், காற்றாலை மின் மற்றும் அனல் மின் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், சொத்துக்கள் செயற்பாட்டுக்குத்தகையாக வகைப்படுத்தப்படும். சகல மின்வலுப் பொறிகளிலும் இருந்து குத்தகை வருமானமானது, குத்தகைச் சொத்துக்களிலிருந்து பெறப்படும் பயன்களின் காலஅட்டவணை தீர்மானிக்கப்படும் மிகப் பொருத்தமான மின்வலு உற்பத்தி அடிப்படையில்,அங்கீகரிக்கப்படும். குத்தகை வருமானத்தை உழைப்பதில் ஏற்படும் தேய்மானம் உள்ளிட்ட கிரயங்கள் செலவுகளாக அங்கீகரிக்கப்படும். தேய்மானம் செய்யக்கூடிய குத்தகைச் சொத்துக்களுக்கான தேய்மானக் கொள்கை, ஒத்த சொத்துக்களுக்கு குழுமத்தின் தேய்மானக் கொள்கையாகவே இருக்கும

### நிதிக்குத்தகை

ராஜ் லங்கா பவர் கம்பெனி லிமிடெட் மற்றும் பங்களாதே‘ பவர் டெவலப்மென்ட் சபை மற்றும் லக்தனவி பங்களா பவர் லிமிடெட் மற்றும் பங்களாதே‘ பவர் டெவலப்மென்ட் சபை ஆகியவற்றுக்கு இடையிலான உடன்படிக்கை ஏற்பாடுகளின் கீழ் - IFRIC இன் படிகுத்தகை ஏற்பாடு ஒன்று உள்ளதா என்பதைத் தீர்மானித்தல்” பின்வரும் அளவுகோல்களின் திருப்திப்படுதல் காரணமாக “SLFRS-16 குத்தகைகள்” இன் கீழ் குத்தகைக்கு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டுமென குழுமம் கருதுகின்றதுஞ

- மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவது என்பது பங்களாதேஷில் அமைந்துள்ள குழுமத்தின் குறிப்பிட்ட மின்நிலையத்தின் பிரத்தியேக பயன்பாட்டைப் பொறுத்தது.
- மின் நிலையத்தை இயக்குவதற்கு பங்களாதேஷ் மின்சாரச பைக்கு உரிமை உண்டு அல்லது மின் உற்பத்தி நிலையத்தை இயக்க மற்றவர்களை அச்சபை வழிநடத்தும்.
- பங்களாதேஷ் மின் அபிவிருத்தி சபையைத் தவிர வேறு எந்தக் கட்சியும் நிறுவனத்தின் மின் உற்பத்தி நிலையத்தால் உற்பத்தி செய்யப்படும் எந்தவொரு உற்பத்தியையும் எடுப்பதற்கு முடியாதுள்ளதுடன் பங்களாதே‘ மின் மேம்பாட்டு சபை செலுத்தும் ஒரு யூனிட்டிற்கான திறன் கட்டணம் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டதல்ல.

இந்த ஏற்பாடு “எஸ்.எல்.எ.்.ப்.ஆர்.எஸ் 16” இன் கீழ் ”நிதிகுத்தகை” என்று கணக்கீடு செய்யப்படுவதுடன் அதில் ராஜ் லங்கா கம்பெனி லிமிடெட் மற்றும் லக்தனவி பங்களா பவர் லிமிடெட் குத்தகைதாரராகவும், பங்களாதே‘ பவர் டெவலப்மென்ட் சபை குத்தகைதாரராகவும் உள்ளன. குழுமத்தின் மின்வலு ஆலை பங்களாதே‘ மின் மேம்பாட்டு சபைக்கு மாற்றப்படுகிறது.

### 2.6.11 அருவச் சொத்துக்கள்: இனங்காணல் அடிப்படை

அருவச் சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுமத்துக்கு கிடைக்கும் என்றிருந்தால் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் அவை இனங்காணப்படுகின்றன.

### அளவீட்டு அடிப்படை

தனியாக கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பின் போது கிரயத்தில் அளவிடப்படும். வியாபார இணைப்பு ஒன்றின் போது கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்களின் கிரயம் கொள்வனவுத் திகதியில் உள்ள அவற்றின் சந்தைப் பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து அருவச் சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து திரண்ட காலத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்களை கழித்த தொகையில் முன் கொணரப்படும். அகத்தே உருவாக்கப்படும், மூலதனப்படுத்திய அபிவிருத்திச் செலவுகள் தவிர்ந்த, அருவச் சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாது ஏற்பட்ட ஆண்டில் செலவாகக் கொள்ளப்படும்..

### காலத்தேய்மானம் / நட்டக்கழிவு

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் முடிவுள்ளதாகவோ அல்லது முடிவற்றதாகவோ மதிப்பிடப்படும்.

முடிவுள்ள ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலம் முழுவதற்கும் காலத் தேய்மானம் செய்யப்படுவதுடன் அவை சேத இழப்பிற்கு

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

ஆளாகியமைக்கான குறிகாட்டிகள் இருக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் சேத இழப்பிற்காக மதிப்பிடப்படும். அருவச் சொத்து ஒன்றிற்கான காலத் தேய்மானக் காலமும், முறையும் குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடற்கால முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் அடங்கிய எதிர்கால பொருளியற் பயன்களின் எதிர்பார்க்கும் நுகர்வு முறையில் மாற்றங்கள், ஏற்றவாறு காலத் தேய்மானக் காலம் அல்லது முறையை மாற்றி கணக்கில் கொள்ளப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகக் கொள்ளப்படும். முடிவுக் காலத்தை கொண்ட அருவச் சொத்துக்களின் காலத் தேய்மான செலவுகள் அருவச் சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இசைய வருமானக் கூற்றில் செலவாக வகைப்படுத்தப்படும்

#### சபை

மென்பாகங்கள் அவற்றின் பயனுள்ள 5 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுவதுடன் அனுமதிப்பத்திரங்கள் அதற்கான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் முழுவதற்கும் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

#### எல்.ரீ.எல். ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்.

கனணி மென்மாகங்கள் அவை கையகப்படுத்திய மற்றும் அபிவிருத்திசெய்த திகதியிலிருந்து 4 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

#### லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்

கணனி மென்பாக அனுமதிப்பத்திரங்கள் பயனுள்ள 5 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன. தொழில்நுட்ப திறன்கள் அவற்றின் 15 வருட ஒப்பந்த காலத்திற்குகாலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

முடிவற்ற பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் காலத் தேய்மானம் செய்யப்படுவதில்லை. அவை தனியாகவோ அல்லது காசு பிறப்பாக்க அலகு மட்டத்திலோ ஆண்டு தோறும் சேத இழப்புச் சோதனைக்கு ஆளாகும். முடிவற்ற ஆயுட்கால மதிப்பீடு முடிவற்ற ஆயுட்காலம் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறு உறுதி செய்ய முடியாத போது, பயன்தரு ஆயுட் காலத்தின் முடிவற்ற காலத்திலிருந்து முடிவுள்ள காலத்திற்கான மாற்றம் பொருத்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

#### அங்கீகரிக்காதிருத்தல்

அருவச் சொத்தொன்றின் அங்கீகரிப்பின்மையால் ஏற்படும் பெறுகை அல்லது இழப்பு அதன் நிகர விற்பனைப் பெறுவனவுக்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணித்து சொத்து அங்கீகரிக்காதிருக்கையில் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 2.6.12 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

### 2.6.12.1 நிதிச் சொத்துக்கள்

#### நிதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பில் வகைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர், ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதி (FVOCI) யிலும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதி FVPL யிலும் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

ஒரு நிதிச் சொத்து (ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறு அல்லாத வியாபார பெறவேண்டியவையாக இல்லாதிவிடத்து) அல்லது நிதிப் பொறுப்பும்எ.ஃ.ப்வீபிஎல் இல் இல்லாத ஒரு விடயத்தின் கையகப்படுத்தலுக்காக அல்லது வழங்கலுக்காக நேரடியாக பகிரத்தக்க அவ்வாறான கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறு அற்ற ஒரு வியாபாரப் பெறவேண்டியவை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையில் அளவிடப்படுகிறது.

#### பிந்திய அளவீடு

பிந்திய அளவீட்டு நோக்கத்திற்காக,நிதிசார்ந்த சொத்துக்கள் பின்வருமாறு நான்கு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

- காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- அங்கீகரிக்காதிருக்கும் திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிச்சயிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ கருவிகள்)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்

காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின், கம்பனி நிதிச் சொத்துக்களை காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடுகின்றது.

- ஓப்பந்த காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் ஒரு நிதிச் சொத்ததாக காணப்படுதல், மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டிவீத (ஈஐஆர்) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் அவை நட்டக்கழிவிற்கு உட்படுகின்றன. சொத்தானது அங்கீகரிக்காது, மாற்றியமைக்கப்படாது அல்லது நட்டக்கழிவு அடையும் போது இலாபம் அல்லது நட்டத்தில் நயங்களும் நட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்களில், வியாபார பெறவேண்டியவை, ஊழியர்களுக்கான கடன்கள், ஏனைய தரப்பினருக்கான

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

கடன்கள் மற்றும்ஏனைய நிதிச் சொத்துக்களின் கீழுள்ள ஏனைய முதலீடுகள் என்பன உள்ளடங்குகின்றன.
ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின், குழுமம்கடன் கருவிகளை ஓசீஐ இன் ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடுகின்றது.

- ஓப்பந்த காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்ததாக காணப்படுதல், மற்றும்

- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள கடன் கருவிகளுக்கான வட்டி வருமானம், அந்நிய செலாவணி மறுமதிப்பீடு மற்றும் நட்டக்கழிவுகள் அல்லது மீளவைத்தல்கள் என்பனஇலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு,கட்டக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களைப் போன்றே இதுவும் கணிப்பிடப்படுகிறது. மீதமுள்ள நியாய பெறுமதி மாற்றங்கள் ஓசீஐ இல் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்காதிருப்பதன் மீது, ஓசீஐ இல் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட நியாய பெறுமதி மாற்றமானது இலாபம் அல்லது நட்டத்திற்கு மீழ்சுழற்சி செய்யப்படுகிறது.

ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ முதலீடுகள்)

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், குழுமம் அதன் உரிமைத்துவ முதலீடுகளை எஸ்எல்எ/ப்ஆர்எஸ் 3 -இன் கீழ் விற்பனைக்காக வைத்திருக்காத அல்லது நிகழத்தக்கவையற்றாதாக ஓசீஐ இன் ஊடான நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிகளாக வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்யலாம். வகைப்படுத்தலானது கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிச்சயிக்கப்படுகின்றது.

இந்த நிதிச் சொத்துக்களின் நயங்களும் நட்டங்களும் ஒருபோதும் இலாபம் நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. நிதிச் சொத்தின் ஒரு பகுதியை மீட்டெடுத்தல் போன்ற வருமானங்களிலிருந்து குழுமம் நலன் பெறுவது தவிர்ந்த,கொடுப்பனவுக்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பங்கிலாபம் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுவதுடன்,அத்தகைய ஆதாயங்கள் ஓசீஐ இல் பதிவுசெய்யப்படுகின்றது. ஓசீஐ ஊடாக நியாயமான பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிக் நட்டக்ழிவு மதிப்பீட்டிற்கு உட்படுவதில்லை.

### நிதி சொத்துக்களின் மீள வகைப்படுத்தல்

நிதி சொத்துக்களை நிர்வகிப்பதற்காக குழுமம் அதன் வணிக மாதிரியை மாற்றுகின்ற போது மற்றும் அவ்வாறான நிலையின் போது மாத்திரம் குழுமம் அதன் நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்துகின்றது. காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள, ஏனைய விரிவான வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதி சொத்துக்களை குழுமம் மீள வகைப்படுத்துமாயின்,முன்னைய மீள வகைப்படுத்தல் தேதியிலிருந்து அவ்வாறான மீள வகைப்படுத்தலை குழும் பிரயோக்கின்றது. அதன்போது குழுமம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஆதாயங்கள்,நட்டங்கள் (குறைபாடு நட்டக்கழிவு இலாபங்கள் அல்லது நட்டங்கள் உட்பட) அல்லது வட்டி ஆகியவற்றை மீண்டும் வைப்பதில்லை.

காலத்தேய்மானக் கிரய அளவீட்டு வகையின் கீழ் மற்றும் இலாப அல்லது நட்ட அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால்,மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தின் முன்னைய காலத்தேய்மானப் பெறுமதிக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டிலிருந்து எழுகின்ற எந்த இலாபமும் அல்லதுநட்டமும்இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

காலத்தேய்மானக் கிரய அளவீட்டு வகையின் கீழ் மற்றும் ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால், மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தின் முன்னைய காலத்தேய்மானப் பெறுமதிக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டிலிருந்து எழுகின்ற எந்த இலாபமும் அல்லது நட்டமும் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் மற்றும் காலத்தேய்மான கிரய அளவீட்டு வகையின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால், மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதியில் அந்த நிதிச் சொத்து மீள வகைப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும்,முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட ஆதாயம் அல்லது நட்டம் உரிமைத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டு மீள வகைப்படுத்தல் தேதியிலுள்ள நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதிக்கு எதிராக சீராக்கப்படுகிறது. இதன் விளைவாக, நிதிச் சொத்து எப்போதும் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்டிருக்குமாயின்,மீள வகைப்படுத்தல் தேதியிலும் அது அளவிடப்படுகிறது. இந்த சீராக்கம் விரிவான வருமானத்தை பாதிக்கின்ற போதிலும், இலாபம் அல்லது நட்டத்தை பாதிப்பதில்லை. ஆகையால், இது மீள வகைப்படுத்தல் சீராக்கமாக காணப்படுவதில்லை. மீள வகைப்படுத்தல் விளைவொன்றாக பயனுள்ள வட்டி விகிதம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அளவீடு என்பன சீராக்கப்படுவதில்லை.

ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் மற்றும் இலாபம் அல்லது நட்ட அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால்,நிதி சொத்தானது நியாயமான பெறுமதியிலேயே தொடர்ந்தும் அளவிடப்படுகிறது. முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட ஆதாயம் அல்லது நட்டமானதுமீள வகைப்படுத்தல் தேதியில் மீள வகைப்படுத்தல் சீராக்கமொன்றாக உரிமைத்துவத்தில் இருந்து இலாபம் அல்லது நட்டத்துக்கு மீள மீள வகைப்படுத்தப்படுகிறது.

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்தது (தொடர்ச்சி..)

**இனங்காணாது விட்டுவிடுதல்**

நிதிச் சொத்தொன்று பின்வரும் நிலமைகளில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

i) காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இருக்கின்ற போதும்

ii) குழுமம், அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது ஒரு பாரப்படுத்தலுடான' ஏற்பாட்டின் கீழ், ஒரு மூன்றாந்தரப்புக்கு பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற் கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், இல்லையெனில் பின்வரும் இரண்டிலொரு விதத்தில்,

- குழுமம், சொத்தின் சகல விதமான பொறுப்புக்களையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுத்துள்ளது, அல்லது.

- குழுமம், அவ்வாறு சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுக்கவோ அல்லது பித்துவைக்க வோ இல்லையென்றாலும், சொத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை மாற்றிக் கையளித்துள்ளது எனும் போதும்,

**இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது.**

| லங்கா எனர்ஜீஸ் HR (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | ஸ்ரீலங்கா எனெர்ஜிஸ் பொது முகாமையாளர் சம்பளத்தை மீள செலுத்துதல் | 10,333 | 7,562 |
| கும்பலங்கமுவ மினிஹைட்ரோ (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | மின்சாரக் கொள்வனவு | 116,108 | 115,197 |
| திருகோணமலை பவர் கம்பனி லிமிடெட் | கூட்டு முயற்சி | கொடுக்கப்பட்ட கடன் | - | 1,092 |

# இலங்கை மின்சார சபை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி..)
## 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்

### 39.3 குழுமத்திலுள்ள கம்பனிகளிடையிலன உறவு முறை தரப்பு கொடுக்கல் வாங்கலகள்

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | LTL ஹோல்டிங் மற்றும் துணைக் கம்பனிகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| மின்மாற்று விற்பனை | 254,939 | 254,939 | 151,723 |
| செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு சேவைகள் | 3,812,889 | 3,812,889 | 4,777,494 |

### 39.4 குழுமத்திலுள்ள பிரதான முகாமைத்துவத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் செயற்பாடுகளை திட்டமிட்டு, நெறிப்படுத்தி கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரமுள்ள தரப்பினரே சபையின் பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களாவர். சபையின் அவ்வாறான பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களாக அதன் பணிப்பாளர் சபையினரும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும் காணப்படுகின்றனர்.

துணைக் கம்பனிகள், கூட்டுத்தொழில் முயற்சி மற்றும் தாய்க் கம்பனி என்ற வகையில் இமி.ச. ஆகியவற்றின் பணிப்பாளர் சபையினர், குழுமத்தின் பிரதான முகாமையாளர்களாக கருதப்படுகின்றனர்.

பிரதான முகாமைத்துவத் தரப்பினர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஏதுமிருப்பின் அவைகளும் பின்வரும் வெளிப்படுத்தலிற்காக கருத்திற்கொள்ளப்பட்டது.

அ) பிரதான முகாமைத்துவத் தரப்பினரின் உள்ளடக்கம்

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| குறுங்கால ஊழியர் நலன்கள் | 132,017 | 149,498 | 4,061 | 3,471 |
| தொழிலின் பின்னரான நலன்கள் | 13,941 | 13,941 | - | |
| | **145,958** | **163,439** | **4,061** | **3,471** |

மேற்படி வேதனங்களிற்கு மேலதிகமாக, பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களுடன் கைச்சாத்திட்டுள்ள தொழில் ஒப்பந்தங்களிற்கமைய காசற்ற நலன்களையும் கம்பனி அவர்களிற்கு வழங்குகின்றது.

## 40 நிதிசார் இடர் முகாமைமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்

### 40.1 கண்ணோட்டம்

குழுமம் அதன் நிதிசார் கருவிகளின் பயன்பாட்டிலிருந்து பின்வரும் இடர்களை கண்டறிந்துள்ளது.

கடன் இடர்

திரவத்தன்மை இடர்

சந்தை இடர்

இந்தக் குறிப்பு மேலே உள்ள ஒவ்வொரு இடர்களுக்கும் குழுவின் வெளிப்பாடு குழுவின் நோக்கங்கள் இடர்களை அளவிடுதல் மற்றும் நிர்வகிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் குழுவின் மூலதன மேலாண்மை பற்றிய தகவல்களை வழங்குகிறது.

### 40.2 இடர் முகாமைத்துவ செயன்முறை

குழுமத்தின் இடர் முகாமைத்தவ செயன்முறையினை தாபித்து பயனுள்ள விதத்தில் கண்காணிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு ஒட்டுமொத்த பொறுப்புள்ளது. குழுமத்தினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்களை இனங்கண்டு பகுப்பாய்வு செய்தல், பொருத்தமான இடர் எல்லைகளை உருவாக்கி கட்டுப்படுத்துதல் மற்றும் எல்லைகளுடன் இணங்குதல் என்பவற்றிற்காக குழுமத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் தாபிக்கப்படுகின்றன.

குழுமத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகளுடன் இணங்கியொழுகுதலை எவ்வாறு முகாமைத்துவம் கண்காணிக்கின்றது என்பதனை பணிப்பாளர் சபை மேற்பார்வை செய்து குழுமத்தினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ செயன்முறையின் போதுமான தன்மையினை மீளாய்வு செய்கின்றது. மேற்பார்வை செய்வதற்காக உயர்மட்ட முகாமையினால் குழுமத்தின் பணிப்பாளரிற்கு உதவப்படுகின்றது.

### 40.3 கடன் இடர்

கடப்பாட்டினை நிறைவேற்றத் தவறுகின்றமையால் நிதிக் கருவிகளின் ஒருதரப்பு இன்னொரு தரப்பிற்காக நிதி நட்டத்தினை ஏற்படுத்துவதே கடன் இடராகும்.

**சபையினதும் வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனியினதும் கடன் கொள்கை வருமாறு.**

மொத்தமாக நுகர்வோருக்கு பட்டியல்களைத் தீர்ப்பதற்காக 15 நாட்கள் கடன் தவணைக்காலம் அனுமதிக்கப்படுவதுடன் அதன்பின்னர், மின்துண்டித்தல் அறிவித்தல் வழங்கப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படத்தவறும் பட்சத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும்.

சாதாரண வாடிக்கையாளருக்கு பட்டியல்களைத் தீர்ப்பதற்காக 30 நாட்கள் கடன் தவணைக்காலம் அனுமதிக்கப்படுவதுடன் அதன்பின்னர், சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படத்தவறும் பட்சத்தில் மொத்தமாக 40 நாட்களின் பின்னர் மின்சாரத்தை துண்டிப்பதற்கான அறிவித்தல் வழங்கப்படும்.

# இலங்கை மின்சார சபை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி..)
## 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்

கடன் வசதியினை வழங்குவதற்கு முன்னர் கடன் தீர்ப்பினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு வாடிக்கையாளரதும் தனிப்பட்ட பண்புகள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. பயனுள்ள கட்டுப்பாடு மற்றும் உரிய நேரத்தில் சேகரித்தலிற்காக நிலுவை கடன்படுனர்களிற்கு காலப்பகுப்பாய்வினை மேற்கொள்வதன் மூலம் குழுமம் தாக்கமுள்ள கடன் கட்டுப்பாட்டு செயன்முறையினை அமுல்படுத்தியது.

### 40.4 திரவத்தன்மை இடர்

குழுவின் திரவத்தன்மை ஆபத்து கடப்பாடுகள் எழும்போது அதனை நிறைவேற்ற போதுமான பண வளங்கள் இல்லாததால் எழுகிறது.போதுமற்ற திரவத்தன்மை வளங்கள் குழுமத்தின் செயற்பாடுகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அதேவேளை முதலீட்டாளர், வாடிக்கையாளர் மற்றும் வழங்குனரின் நம்பகத் தன்மையினை தேய்வடையச் செய்து போட்டி நிலைமையினை நலிவாக்குகின்றது.

அனைத்து துறைகளிற்குமாக உபாய தொழிற்படு மூலதன முகாமைத்துவ திட்டமொன்றை குழுமம் அமுல்படுத்தியிருந்தமையால் பெறவேண்டியவைகள் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு கடன்படுனர் காலம் குறைக்கப்படுகின்றது. அவதானமான வியாபார மதிப்பீடுகள் மற்றும் கொள்வனவு உபாயங்கள் என்பன உள்ளீடுகளிற்கு சரியான தொகை செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன் தொழிற்படு மூலதன சுழற்சியினை உத்தமப்படுத்துவதற்காக கடன் காலம் கலந்தாலோசிக்கப்படுகின்றது.

செயற்பாட்டு மற்றும் ஏனைய நிதியீட்டத் தேவைகளிற்கு உதவுவதற்காக குறுங்கால மற்றும் நடுத்தரகால நிதிக் கருவிகளில் முதலீடு செய்வதன் மூலம் திரவத்தன்மை பேணப்படுகின்றது என்பதனை குழுமம் உறுதிப்படுத்துகின்றது. சகாய வட்டி வீதத்தில் மேலதிகப்பற்று எல்லைகளை அதிகரிப்பதற்கு வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் குறுங்கால திரவத்தன்மை சிக்கல்கள் குறைத்துக் கொள்ளப்படுகின்றன.

### 40.5 சந்தை இடர்

சந்தை விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாய் பெறுமதி தளம்பலடைவதற்கான இடரே சந்தை இடராகும். சந்தை இடரானது செலாவணி இடர் மற்றும் வட்டி வீத இடர் என்பவற்றை உள்ளடக்குகின்றது. சந்தை இடரினால் தாக்கமுற்ற நிதிக் கருவிகளில் கடன்களும் பெறுகைகளும், சேமிப்புகள் விற்பனைக்காக உள்ள முதலீடுகளும் உள்ளடங்குகின்றன.

### 40.5.1 அந்நியச் செலாவணி இடர்

குழுமத்திலுள்ள கம்பனிகளின் குறித்துரைத்த தொழிற்பாட்டு நாணயமல்லாத நாணயத்தில் இடம்பெறுகின்ற விற்பனைகள் / கொள்வனவுகள் மீதான செலாவணி இடரை குழுமம் எதிர்கொள்கிறது. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் யூஎஸ்டொலர் அல்லது யூரோ நாணயத்தில் இடம்பெறுகின்றன. எந்தவொரு பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களிற்கும் எதிரான உள்ளக இடர்குறைத்தல் மூலம் குழுவினால் செலாவணி இடர் குறைக்கப்படுகிறது . எதிர்கால கொடுப்பனவுகளிற்குச் சமமான தொகை பொருத்தமான நாணயங்களில் குறுங்கால வருமானமீட்டல் கருவிகளில் வைக்கப்பட்டு அவ்வாறானவை எப்பொழுது ஏற்படுகின்றதோ அப்போது கொடுப்பனவுகளிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

### 40.5.2 வட்டி வீத இடர்

வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாய பெறுமதி தளம்பலடைவதற்கான இடரே வட்டி வீத இடராகும். மிதக்கும் வட்டி வீதங்களுடன் உள்ள் குழுமத்தின் நீண்டகால கடன் கடப்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற சந்தை வட்டி வீதங்களின் மாற்றங்களின் இடரை குழுமம் எதிர்கொள்கிறது. சந்தை தளம்பல்களை ஈடுசெய்யக்கூடிய நிலையான ' மற்றும் மிதக்கும் வீதம் கலந்த வசதிகளைப் பேணுதல் அவ்வாறே வைப்புக்களைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் குழுமம் அதன் பெறுகைகள் மீதான வட்டி வீத இடரை முகாமைத்துவம் செய்கின்றது. இலங்கை மின்சார சபை அரசாங்க நிறுவனமொன்றாக இருப்பதனால் வட்டி வீத இடரை குறைப்பதற்குச் சாதகமான வட்டி வீதங்களிற்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது.

## 41 நியாயப் பெறுமதி

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியானது பலவந்தப்படுத்தப்பட்ட அல்லது கலைத்தல் விற்பனை தவிர்ந்த எதிர்பார்க்கப்பட்ட விலைகளிடையே தற்போதைய கொடுக்கல் வாங்கல்களின் போது விருப்பம் உள்ள இரு தரப்பினரிடையே பரிமாற்றத்தக்க நிதிக் கருவிகளின் பெறுமதியை உள்ளடக்குகின்றது.

நியாயப் பெறுமதியை மதிப்பிடுவதற்காக பின்வரும் முறைகளும் எடுகோல்களும் பயன்படுத்தப்பட்டன.

*a)* குறைந்த முதிர்ச்சிக் காலத்தை கொண்டுள்ளமையால் காசும் காசுக்கு சமமானவைகளும், வியாபாரப் பெறவேண்டியவை,வியாபார செலுத்த வேண்டியவை வங்கி மேலதிகப் பற்றுக்கள் மற்றும் ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களை பெரும்பாலும் அண்ணளவாக அவற்றின் முக்கொண்டுசெல் தொகைகளில் முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது.

*b)* நீண்டகால நிலையான வீதங்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் மாறும் வீதங்கள் என்பன வட்டி வீதங்கள், குறித்துரைத்த இடர் காரணிகள், வாடிக்கையாளரின் தனிப்பட்ட கடன் மதிப்பு மற்றும் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் இடர் பண்புகள் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், இந்த பெறவேண்டியவைகளின் எதிர்பார்த்த இழப்புக்களிற்கான கொடுப்பனவுகள் கருத்திலெடுக்கப்படுகின்றன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, அவ்வாறான பெறவேண்டியவைகளின் முன்கொண்டுசெல் தொகைகள், கொடுப்பனவுகளின் தேறியவை என்பன அவற்றின் கணிக்கப்பட்ட நியாயப் பெறுமதிகளிலிருந்து பொருண்மையாக வேறுபட்டிருக்கவில்லை.

# இலங்கை மின்சார சபை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி..)
## 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்

### 41.1 நியாயப் பெறுமதியில் முன்கொணரப்பட்ட நிதிக் கருவிகள்

குழுமம் நியாயப் பெறுமதியில் முன்கொணரப்பட்ட பின்வரும் நிதிக் கருவிகளை வைத்துள்ளது.

ஓ சி ஐ இன் ஊடான நியாயப் பெறுமதி (குறிப்பு - 15)

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி (குறிப்பு - 15)

### 41.2 நியாயப் பெறுமதியில் முன்கொணரப்படாத நிதிக் கருவிகள்

நியாயபூர்வமான நியாயப் பெறுமதிகளின் அண்ணளவான முன்கொண்டுசெல் தொகைகளில் உள்ளவை தவிர்ந்த, நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் முன்கொணரப்படாதுள்ள குழுமத்தின் நிதிக் கருவிகளினது முன்கொண்டு கொண்டுசெல் தொகைகளும் நியாயப் பெறுமதிகளும் வகைப்படுத்தப்பட்டு, கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | முன்கொண்டுசெல் பெறுமதி | | நியாயப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | **2021** | **2020** | **2021** | **2020** |
| மீளப்பெறும் வைப்புக்கள் | 82,646 | 68,676 | 82,646 | 68,676 |
| நிலையான வைப்புக்களின் முதலீடு | 23,500,045 | 28,485,598 | 23,500,045 | 28,485,598 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் முதலீடு | 3,350,369 | 199,700 | 3,350,369 | 199,700 |
| ஏனைய வைப்புகளின் முதலீடுகள் | 125,945 | 1,759,276 | 125,945 | 1,759,276 |
| கம்பணி உத்தியோகத்தர்களுக்கான கடன் | 10,519,701 | 10,454,647 | 10,519,701 | 10,454,647 |
| வாடிக்கையாளர் கடன்கள் | 1,237,538 | 2,771,005 | 1,237,538 | 2,771,005 |
| தொகுதிக்கடன்களில் முதலீடுகள் | 62,406 | 202,117 | 54,828 | 193,168 |
| | **38,878,650** | **43,941,019** | **38,871,072** | **43,932,070** |

### 41.3 நியாயப் பெறுமதி உயர்வரிசை

கூறப்பட்ட விலைகள் அல்லது முறைகளிற்கான அவதானிக்கப்படத்தக்க விலையிடல் உள்ளீடுகள், சுயாதீன விலை நிர்ணயம் அல்லது பெற்றுக்கொள்கின்ற ஏற்றுக்கொள்ளல் ஆகியவைகளை ஆராய்ந்து அனைத்து நிதிக் கருவிகளினதும் நியாயப் பெறுமதிகள் நிச்சயிக்கப்படுகின்றன. செயற்படு சந்தையொன்றில் விற்பனை விலையொன்றை நேரடியாக அவதானித்தல் சாத்தியமற்றதாகும். அவ்வாறான நிலைமைகளில், நிதிக் கருவிகளின் நியாய விலைப் பெறுமதியினை நிச்சயிப்பதற்காக மிகவும் தொடர்புடையதும் நம்பகரமானதும் எனக் கருதப்படுகின்ற தகவல்களிற்கு உயர்மட்ட நிறையினை வழங்கி குழுமம் மாற்றுவழி சந்தைத் தகவல்களை பயன்படுத்துகின்றது.

பின்வரும் உயர்வரிசைக்கமைய நியாயப் பெறுமதி நிச்சயிக்கப்படுகின்றது.

**மட்டம் 1 :** ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிற்காக செயற்படு சந்தையிலுள்ள கூறப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

**மட்டம் 2 :** பதிவுசெய்யப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய அனைத்து உள்ளீடுகளினதும் ஏனைய பெறுமதியிடல் நுட்பங்கள்.

**மட்டம் 3 :** பதிவுசெய்யப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்ற அவதானிக்கப்படத்தக்க சந்தை தரவுகளின் அடிப்படையில் இல்லாத மதிப்பிடுதல் நுட்பங்கள்.

2021 திசெம்பர் 31 ,ல் உள்ளவாறு, நிதிநிலைமைக் கூற்றில் முன்னெடுத்துவரப்பட்ட நியாயப் பெறுமதியிலுள்ள பின்வரும் நிதி கருவிகளை குழுமம் வைத்திருந்தது.

| நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட சொத்துக்கள் | மதிப்பீட்டுத் திகதி | 2021 | மட்டம் 1 | மட்டம் 2 | மட்டம் 3 |
|---|---|---|---|---|---|
| **ஒ.சி.ஐ. இன் ஊடாக நியாயப் பெறுமதிலுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| விலைகூறாத உரிமைத்துவப் பங்குகள் | 31 டிசம்பர் 21 | 14,931,752 | - | - | 14,931,752 |
| **இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| உரிமைத்துவப் பிணையங்களில் முதலீடு | 31 டிசம்பர் 21 | 338,548 | 338,548 | - | - |
| **நியாயப் பெறுமதி வெளிப்படுத்தப்படுகின்ற சொத்தக்கள்** | | | | | |
| தொகுதிக்கடன்களில் முதலீடு | 31 டிசம்பர் 21 | 54,828 | 54,828 | - | - |

# இலங்கை மின்சார சபை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி..)
## 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்

### எஃப்வீ ஓசீஐ இன் மதிப்பீட்டிற்காக குறிப்பிடத்தக்களவில் அவதானிக்கப்பட இயலாத உள்ளீடுகள் - நிதிச் சொத்துக்கள்

### லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிடட்

விலைகூறப்படாத உரிமைத்துவ முதலீடுகளின் நியாயப் பெறுமதி சந்தைப் பெருக்கி முறையினை (Market Multiple Methodology) பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் கீழான பெறுமதியானது வணிகமொன்றிற்கான எதிர்கால உழைப்புக்களின் (பேணத்தக்க உழைப்புக்கள்) பொருத்தமான மட்டங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் இந்த உழைப்புக்களிற்கு பொருத்தமான பெருக்கியொன்றைப் பிரயோகித்து, வணிகத்திற்கான பெறுமதியொன்றில் மூலதனமாக்கப்படுகின்றது. கம்பனி வரிக்கு முன்னரான உழைப்புக்களை (EBIT) அதன் உழைப்பு அடிப்படையாக பிரயோகிக்கின்றது. வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இன் நியாயப் பெறுமதியினை மீளாய்வு செய்கையில் பயன்படுத்துவதற்கு ஒரு பொருத்தமான முறையினை இனங்காண்பதற்காக, ஆசிய வலயத்தில் பொசில் எண்ணெய் இனைப் பயன்படுத்தி மின்சார விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிறுவனத்தின் செயற்பாட்டுத் தன்மை மற்றும் அவற்றின் பருமண் என்பவற்றின் வேறுபாடுகளின் அடிப்படையில் விலகல்கள் மதிப்பிடப்பட்டன.

வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இன் சிறுபாண்மை தரப்பு காரணமாக, நேரடியான முகாமைத்துவத்தினை பிரயோகிக்க மற்றும் உள்ளகத் தகவல்களை பெறமுடியாத நிலையில் முகாமைத்துவம் உள்ளது. இருப்பினும், தொழிலின் தன்மை மற்றும் மின்வலு கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள பொதுவான பண்புகளைக் கருத்திற்கொண்டு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்டுள்ள முன்கொண்டுசெல் பெறுமதிகளை ஒத்தவையாகவே காணப்பட்டன. கம்பெனி 18.8% உரிமையை வெஸ்ட் கோஸ்ட் பிரைவேட் லிமிடெட் இல் வைத்துள்ளது

### எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்

விலைகூறப்படாத சாதாரண பங்குகளின் நியாயப் பெறுமதியானது கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (டீசீஎப்) முறையினைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வுகூறப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் உள்ளிட்ட இந்த முறைக்கான உள்ளீடுகளுடன் சம்பந்தப்பட்ட சில எடுகோல்களை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டுமென மதிப்பீடுகள் தேவைப்படுத்துகின்றன. வீச்சுக்குட்பட்ட பல்வேறு மதிப்பீடுகளின் சாத்தியங்களை, விலைகூறப்படாத உரிமைத்துவ முதலீட்டிற்கான நியாயப் பெறுமதியின் முகாமைத்துவ மதிப்பீட்டின் போது நியாயபூர்வமாக மதிப்பீடுசெய்து பயன்படுத்த முடியும்.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல
My no

PWR/A/CEB/FA/1/21/18

දිනය
திகதி
Date

2022 ஒக்தோபர் 27

தலைவர்
இலங்கை மின்சார சபை

**இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியானதும் பிரமாண ரீதியுமான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மின்சார சபையினதும் (இ.மி.ச) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் ஆகியவற்றின் நிதிக்கூற்றுக்கள், அந்தந்த துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இ.மி.ச. இனதும் குழுமத்தினதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை**

**1.2.1.1 பின்வரும் கம்பனிகளின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவானிப்புக்களின் அடிப்படையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்**

(i) வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017/2018 மற்றும் 2018/2019 மதிப்பீட்டு ஆண்டிற்கான பெறுமதிசேர் வரியுடன் தொடர்புடைய ரூபா 287,139,348 செலுத்த வேண்டிய மேலதிக வரி மற்றும் ரூபா 220,628,092 அபராதங்கள் குறித்த தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள 154 கப்பலேற்றல்களுடன் தொடர்புடைய ரூபா 33,317,325 மீதி மற்றும் இ.மி.ச. இடமிருந்து நிலக்கரி கொள்வனவு முற்பணமாக பெறப்பட வேண்டிய ரூபா 1,760,500 மீதி என்பன தொங்கல் கணக்கில் வைத்திருக்கப்பட்டுள்ளதுடன் கம்பனி இவற்றை தீர்வு செய்திருக்கவில்லை.

(iii) நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி ரூபா 5,324,423,778 என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(iv) நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 197,452,711 தொகையான பெ.சே.வரி (VAT) மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவை இ.மி.ச. ஆல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இ.மி.ச. இவற்றை அதன் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக அங்கீகரிக்கவுமில்லை. எனவே, அவற்றின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

(v) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 22,502,205 தொகையான முகாமைத்துவக் கட்டணம் 3 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. இருப்பினும், இது தொடர்பில் ஐயப்பாட்டிற்காக எந்தவொரு ஏற்பாடும் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205,000,000 தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் வெற் (VAT) கணக்கிற்கும், வெற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205,000,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தின் வெற் கணக்கு, வெற் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கு என்பன முறையே ரூபா 158,186,165, ரூபா 39,970,418 மற்றும் ரூபா 6,843,417 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

(vii) டவுரியன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பனி லிமிடெட் (TISCL) இலிருந்து அறவிடப்படாது நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 539,192,079, தொகையினை சிலோன் ஷிப்பிங் கார்ப்பரே'ன் லிமிடெட் (CSCL) இன் ஊடாக அறவிடுவதற்கு கம்பனி உரிய நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நட்டக்கடனுக்காக எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவுமில்லை. மேலும், TISCL/CSCL என்பன நிலுவைத் தொகையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகையால், மேற்படி மீதியின் சரியான தன்மை மற்றும் காணப்படு தன்மையினை கண்டறிய முடிந்திருக்கவில்லை

(viii) நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987, வியாபாரக் கடன் கொடுத்தோர் - என்ற வகையில் நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறவேண்டிய ரூபா 85,887,776 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் இடமிருந்து பெறப்பட வேண்டிய 50 சதவீத எஸ்ஜிஎஸ் கட்டணமான ரூபா 8,048,531 தொகை என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 18,075,801 தொகையான நானாவிதக் கடன்பட்டோரை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை

(ix) கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106,969,404 ஆகும். எனவே, கம்பனி மேலதிகமாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 29,266,965 என்பது அவதானிக்கப்பட்டது.

(x) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு லங்கா கோல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த மீதித் தொகைக்கும் இடையே ரூபா 4,003,372 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்ய கம்பனி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

(xi) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2,362,129 தொகையான செலுத்த வேண்டிய மீதித் தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

### (ஆ) லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட்

(i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மின்சார சபை (CEB) இடமிருந்து நானாவித சேவைகளுக்காக பெறப்பட வேண்டிய மீதி ரூபா 1,343,821,164 ஆனதுடன் இதில் நிகர கணக்கீடு மற்றும் நிகர பிளஸ் முறைகளைப் பயன்படுத்தி CEB ஆல் ரூ. 2017,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட எரிசக்தி கிரயமான ரூபா 1,336,859,095 உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், அந்தத் தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைத்திருக் கவில்லை. மேலும், CEB அதன் நிதிக் கூற்றுக்களில் இந்தப் பொறுப்பை அங்கீகரித்திருக்கவில்லை.

(ii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிராட் பேண்ட் நெட்வொர்க் (பிரைவேட்) லிமிடெட்டின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 5,000,000 தொகைக்கான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(iii) நிராகரிக்கப்பட்ட கணக்கிலிருந்து மாற்றப்பட்டிருந்த வாடிக்கையாளர் களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இனங்காணப்படாத ரூபா 14,731,287 தொகையான சேகரிப்புகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(iv) இலங்கை மின்சார சபையின் ஆரம்ப துணை மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்திய காணிகள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 206,924,712 தொகையானது CEB யிடமிருந்து பெற வேண்டிய மீதியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் காணிகளில் முதன்மை துணை மின் நிலையங்களை அமைப்பதற்கும் மேற்கூறிய காணிகள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்தியமைக்காக CEB ஆல் செலுத்த வேண்டிய கட்டணங்கள் தொடர்பாகவும் கம்பனிக்கும் CEB க்கும் இடையில் முறையான உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(v) 2021 நவம்பர் 16 ஆந் தேதியிட்ட PED/01/2021 ஆம் இலக்க அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 6.9 இன் படி, பதிவழிப்பதற்காக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையளித்தல் உள்ளிட்ட உரிய செயல்முறையை மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் பணிப்பாளர் சபைக்கு இழப்புக்களை பதிவழிக்கலாம். எவ்வாறாயினும், கம்பனி இது சம்பந்தமாக கூறப்பட்டுள்ள செயல்முறையைப் பின்பற்றாது மாநகர சபைகள் மற்றும் மாகாண சபைகளில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 387,806,335 தெரு விளக்குக்கான கடன்பட்டோர் தொகையை 2021 நவம்பர் 31 அன்று வழங்கப்பட்ட பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில் மீளாய்வாண்டில் கம்பனி பதிவழிப்புச் செய்திருந்தது.

(vi) ஒரு வருடத்தின் இறுதி மாதத்தில் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்ந்துவரும் ஆண்டின் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றப்பட்ட வருமானமாக அங்கீகரிக்க பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் இல் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் 2021 சனவரி இல் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் இதே நடைமுறை ஏனைய ஆண்டுகளிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே, மொத்தமற்ற வாடிக்கையாளர் களிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை சரியாக மதிப்பிட முடிந்திருக்கவில்லை.

### 1.2.2 இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

#### (அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்

(i) சபையின் கீழ் தனிப்பட்ட ஒரு பிரிவாக இயங்குகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் (ஊ.சே.நி.) ரூபா 53.63 மில்லியன் தொகையான செலவுகள் சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ii) சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்குச் சொந்தமான ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் ஊ.சே.நி. இன் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

#### (ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட சாதக மேந்தலை விலை மற்றும் பொருள் விலை முரண்கள் ரூபா 4.04 பில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அத்துடன் ரூபா 1.78 பில்லியன் கூட்டுத்தொகையான பாதக களஞ்சிய விலை முரணும் காணப்பட்டது. எனினும், அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு சொத்துகள் உரிமையாண்மைக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை மதிப்பிட முடியாதிருந்தது.

#### (இ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்

இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது கணக்கீட்டுக் கொள்கை 2.4.6(உ) மற்றும் 3(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காதுடன் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. அதற்கமைய, ரூபா 197.21 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பிடப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சபை அதனது வாகன அணியின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கைக் காலத்தை மீளாய்வாண்டில் மாற்றியமைத்திருந்ததுடன், அதற்கமைய முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 3.17 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது.

#### (ஈ) LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பரிமாற்றல் பிரிவிலுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 202.9 பில்லியன் ஆகும். அச்சொத்துக்களில் ரூபா 201.01 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

### 1.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டும். அதற்கமைய, எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். மேலும், திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட PE/EN/CEB/Equity/2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி, இக்கடன்கள் சபையின் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். இருப்பினும், சபை இக்கடன்களை பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்திருந்தது. அதன்படி, நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக நடைமுறையல்லாத மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கடன் மீதியின் நீண்ட கால மற்றும் குறுங்கால தொகைகளை அங்கீகரிப்பதற்கான கணக்கீட்டுப் பரிகாரம் காணப்படுவதை சபை உறுதி செய்தல் வேண்டும். வருடத்திற்கு சபை செலுத்த வேண்டிய வட்டியை முறையாக அங்கீகரித்திருக்க வேண்டும் என்றாலும், சபையால் எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 61 பில்லியன் கடனின் திருப்பிச் செலுத்தும் தொகை சபையின் நிதிக் கூற்றுக்களில் உரிமைத்துவமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவின் படி சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சபை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதன் விரிவான வருமான கூற்றில் முறையே ரூபா 6,700 மில்லியன் மற்றும் ரூபா 676.37 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே முறையே ரூபா 6,700 மில்லியன் மற்றும் ரூபா 676.37 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இருப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடைய ரூபா 123.86 மில்லியன் வரவு மீதி மற்றும் இருப்பு மிகையுடன் தொடர்புடைய ரூபா 32.65 மில்லியன் செலவு மீதி என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான வெளிநாட்டுக் கடன்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 25.23 பில்லியன் தொகை திறைசேரியிடமிருந்து கிடைத்த உப கடன்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இந்தக் கடன்கள் குடியரசின் கணக்குகளில் உப கடன்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15.'.0228.'.613.'.012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் சபை செலுத்தவுமில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவுமில்லை. எனவே, இந்தக் கடன்களின் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பாய்வுசெய்ய முடியவில்லை.

(ஈ) ரூபா 66.83 பில்லியன் பெறுமதியான MW வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்கவில்லை. அதன்படி, அந்தக் கடன்களை மீளளிப்பதற்கான கடப்பாடு உரிய விதத்தில் சபையால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த கடன்களை தீர்ப்பதற்கான ஏற்பாடுகளையும் அல்லது மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பிலான எவ்வித ஏற்பாடுகளையும் சபை செய்திருக்கவில்லை. எனவே, இந்தக் கடன்களின் முழுமையான மற்றும் சரியான தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பாய்வுசெய்ய முடிந்திருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36.8 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டின் போதான இந்த நிலுவையிலுள்ள மீதிகளின் தீர்ப்பனவு விபரங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5,000 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 2,000 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டிற்கான முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 2,500 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இந்தக் கொடுக்கல் வாங்களின் தன்மையையும் அதனை கணக்கீடு செய்யவேண்டிய முறையினையும் சபை தெளிவாக உணர்ந்திருக்கவிலலை என்பது அவதானிக்கப்பட்டது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.34 பில்லியன் பெறுமதியுடைய 8,094 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் நிதிக் கூற்றுக்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் 2014 இல் இச்செயற்திட்டம் நிறைவடைந்த பின்னரும் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த வாகனங்கள் தொடர்பான தேய்மானம் செயற்திட்டம் முடிவடைந்த காலம் முதல் இதுவரை நிதிக் கூற்றுக்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) விநியோகப் பிரிவு 4 இற்குரிய ரூபா 32.32 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான பொருத்தமானதோர் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 41.48 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஓ) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 2.7 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ESC) செலவினமொன்றாக விரிவான வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்விளைவாக, அதே அளவு தொகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஔ) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 871.2 மில்லியன் தொகையான வழிச்சரக்குகள் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட கால வீச்சில் வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 5.1 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. வழிச்சரக்கு மீதிகளிற்குரிய ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவில்லை.

(ஃ) தெஹிவளை கல்கிஸ்ஸ மின்சார விநியோக அபிவிருத்தித் செயற்திட்டக் கிரயமான ரூபா 39 மில்லியன் தொகை மூலதனமாக்கப்படாது 2010 முதல் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(க) அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் தொகையான ரூபா 14 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் பரிமாற்றப் பிரிவின் கீழ் நிலையான சொத்துகளாகக் காட்டப்பட்டுள்ளது.

(கா) மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்பட்ட பொருண்மையான தவறான கூற்றுக்களை கண்டறிந்து, சரிசெய்து, தடுப்பதற்காக சரியான உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையை வடிவமைத்துச் செயற்படுத்துவதற்கும் பராமரித்துச் செல்வதற்கும் சபை தவறியமையால், 2013 முதல் சபையின் நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் திருத்தி மீளமைக்கப்பட்டு வருகின்றன.

(கி) பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றிமையின் விளைவாக ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(கீ) 2019 செப்தெம்பர் 24 ஆந் தேதியிட்ட 19/2622/113/074 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி லக்விஜய மின்வலு உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக சபை செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றை நிறுவியிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 167.31 மில்லியன் தொகையை செலிவிடப்பட்ட பின்னர், 2021 ஒக்தோபர் 26 அன்று எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் அதை மூடுவதற்கான தீர்மானத்தை பணிப்பாளர் சபை எடுத்திருந்தது. இருந்தபோதிலும், அந்தத் தொகையை பதிவழிப்புச் செய்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(கு) லக்விஜய மின்வலு நிலையத்தின் சொத்துப் பதிவேட்டில் 28 வாகனங்களின் பெறுமதியும் அதன் மீதான தேய்மானமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அந்த வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.

(கூ) சபையின் தலைமை அலுவலகக் கட்டிடம் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான காணி சபையின் நிதிக்கூற்றுக்களில் சபையின் சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, சபையின் சொத்துக்கள் ரூபா 105.62 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டுள்ளது.

### 1.2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

(அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் (சீபிசீ) செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் சபையிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 1,235 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்படி தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் ஏய்ப்புச் செய்யப்பட்ட ரூபா 753.61 மில்லியன் தொகையும் காணப்படுவதுடன், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அத்துடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 469.11 மில்லியன் கணக்கிணக்கம் செய்யப்படாத மீதியும் காணப்பட்டது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(ஆ) ரூபா 423.76 மில்லியன் இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதி விநியோக பிரிவு 1 இல் 2012 முதல் அறவிடப்படாமல் வைத்திருக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதில் ரூபா 181.42 மில்லியன் தொகை தெளிவுபடுத்தப்படாமல் விநியோக பிரிவு 3 இற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) DD1 இலுள்ள சாதாரண கடன்பட்டோர் தொடர்பில் கணினி மயப்படுத்திய மீதிகளிற்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. அதன்படி, கணனி மயப்படுத்திய மீதிகளிற்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்யாததன் விளைவாக மீளாய்வாண்டில் சாதாரண கடன்பட்டோரில் ரூபா 6.77 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.

(ஈ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 297.33 மில்லியன் வரவு மீதியும் ரூபா 1,409.57 மில்லியன் செலவு மீதியும் காணப்பட்டன. இருப்பினும், இந்த தீர்க்கப்படாதுள்ள மீதிகளிற்கான கணக்கிணக்கம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. அத்துடன், ரூபா 166.45 மில்லியன் இனங்காணப்படாத ஆரம்ப மீதியொன்று சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) 1998 முதல் 2021 வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 68.99 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு எரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து, சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குழுமத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் குழுமத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் குழுமத்தின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்த ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் குழுமம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின மீதி ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்த குழுமத்திலுள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதித் தகவல் தொடர்பான போதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கும். குழுமத்தின் கணக்காய்வின் திசை, கண்காணிப்பு மற்றும் செயல்பாட்டிற்கு நாங்கள் பொறுப்புடையவர்கள். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு மட்டுமே நான் பொறுப்பாக உள்ளேன்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது இந்த அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படுகின்ற தாக்கத்தைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 இந்த அறிக்கையின் 1.2.1.1 (அ), (i), (ii, (iii), (iv), (vi), (vii) , (viii), (x), 1.2.2.1 (அ) (i), (ii), (ஆ) (இ) (ஈ) 1.2.2.2 (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (கா) (கி) ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 6.02 பில்லியன் பெறுமதியான 261.32 Gwh எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 3 சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,657 மில்லியன் தொகையை மாத்திரம் இ.மி.ச. முதலீடு செய்திருந்தது. கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி, மீளாய்வாண்டில் ரூபா 852.87 மில்லியன் தொகை மேலதிகமாக முதலீடு செய்யப்படுதல் வேண்டுமென்பது வெளிப்படுத்தப்பட்டது. |
| (இ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 3.5 ஆம் பிரிவு | ஏற்பாடுகளுக்கு முரணாக, அவ்வப்போது வரிசை அமைச்சுக்கும் சேமலாப நிதியத்துக்கும் விடுவிக்கப்பட்டிருந்த 65 ஊழியர்களிற்காக ரூபா 105.22 மில்லியன் தொகையினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. |
| (ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அமைச்சின் கணக்காய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்கப்பட்ட தீர்மானம் | ஏற்பாடுகள் மற்றும் தீர்மானங்களிற்கு முரணாக ரூபா 1.2 பில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் விடுமுறை காசாக்கல் என்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பின்னிணைப்பு "அ" | ஏற்பாட்டுக்கு முரணாக, உழைப்புக்களை கணிப்பிடுகையில் எக்சோடஸ் கொடுப்பனவு, முதுமானிப் பட்டக் கொடுப்பனவு மற்றும் உயர்தொழில் கொடுப்பனவு / பகுதி உயர் தொழில் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து ஆகக்கூடிய கொடுப்பனவை சபை கருத்தில் கொண்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் ஊ.சே.நி. உதவுதொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் 6.1.3 ஆம் பிரிவு | 220kv வலுவில் சபையினால் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இற்கு வழங்கப்பட்ட மின்சக்தியானது 220kv வலுவில் வழங்கப்படுவ தற்கு எந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் இல்லை என்றால், அத்தகைய விநியோகத்தின் போது சபை அறவிடுகின்ற விலை மின்சக்திக்கான கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். இந்த விதிமுறைக்கு மாறாக, கம்பனிக்கு சபையினால் வழங்கிய மின் சக்தி கட்டண வீதத்தை கணிப்பிடுகையில் இயலளவுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை கருத்தில் கொள்ளாமல் எரிசக்தி கட்டணத்தை மட்டுமே சபை கருத்தில் கொண்டிருந்தது. |
| (எ) 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கிகளை பயன்படுத் துவதன் மீதான அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. |
| (ஏ) 2015 ஜுன் 17 ஆந் திகதிய PED/03/2015 ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 27 ஆம் திகதிய PED/01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | மேலதிகமாக நடாத்தப்பட்ட சபை கூட்டங்களிற்கான அமர்வுப் படிகள் மற்றும் போக்குவரத்துப் படிகளிற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை |
| (ஐ) 2018 ஜுலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் அலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படாது இரண்டு ஓய்வுபெற்ற ஊழியர்கள் சபையின் மதியுரைஞர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ஒ) 2021 நவம்பர் 21 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகளிற்கான கையேட்டின் 5.1 ஆம் பிரிவு | சபை தொடர்ச்சியாக நட்டம் ஈட்டி வருகின்ற போதிலும், வரைவு கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் சபை மீளாய்வாண்டின் போது ரூபா 2.7 பில்லியன் தொகையினை உபகாரச் சம்பளமாக செலுத்தியிருந்தது. |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

**2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,**

(அ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது சபையின் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,134.9 மில்லியன் மற்றும் ரூபா 1,544.4 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் BM/2021/22/01 ஆம் இலக்க சபை தீர்மானம் ஆகியவற்றுக்கு முரணாக 323 ஊழியர்களிற்காக செலுத்தப்பட்டிருந்த படிகள் அவர்களது சம்பளத்தைக் காட்டிலும் 65 சதவீதத்தை விஞ்சியிருந்தது.

(ஆ) உழைக்கும் போதே செலுத்தும் (APIT) வரி/முன்கூட்டிய தனிப்பட்ட வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை/முன்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் சபை அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 4.98 பில்லியன் தொகையை அவ்வாறு செலுத்தியிருந்தது.

(இ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்கள் வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், சபை எதிர்கொண்டுள்ள திரவ பிரச்சனைகளை கருத்திற் கொள்ளாது 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை சபை வழங்கியிருந்தது.

(ஈ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சட்டத்தின் 24 (1) (இ) பிரிவின் படி, மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், நீண்டகால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம் மின்வலு ஆலைகள் நிறுவப்பட்டிருக்காமை காரணமாக மேலதிக கிரயத்தில் குறுங்கால அடிப்படையில் அனல் மின்வலுவை கொள்வனவு செய்யவேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது.

(உ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்புகளிற்கான வட்டியை செலுத்தியிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,357.60 மில்லியனாக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 8,089.50 மில்லியனாக இருந்தது.

(ஊ) தொடர்புடைய தரப்பினர்கள், தொழில்கொள்வோர் மற்றும் தொழிற்சங்கங்களால் கைச்சாத்திடப்பட்டிருக்காத வரைவு கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் ஊழியர்களின் சம்பளத்தை 25 சதவீதத்தினால் சபை 2021 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்தது. அதற்கமைய, ஏறத்தாழ ரூபா 9.6 பில்லியன் அதிகாரமற்ற கொடுப்பனவு காரணமாக சபைக்கு எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

(எ) 2017 மே 16 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சீஎம்ஈசீ பொறியியலாளர்களை சபைக்கு இடமாற்றம் செய்வதற்காக சாத்தியமான தொழில்நுட்ப வேலைத்திட்டமொன்றின் முக்கியத்துவம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த தீர்மானத்தை கருத்திற்கொள்ளாதும் அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமலும் லக்விஜய மின்வலு நிலையத்தை இயக்குதல் மற்றும் பேணுதலுக்கான இரண்டாவது மற்றும் மூன்றாவது தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் முறையே 2017 நவம்பர் 23 மற்றும் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதிகளில் சபை கைச்சாத்திட்டிருந்தது. மேற்படி இரண்டு உடன்படிக்கைகளினதும் மொத்தப் பட்டியல் பெறுமதி (2017 ஒக்தோபர் 01 முதல் 2021 செப்தெம்பர் 30 வரை) யூஎஸ்டொலர் 13,766,367 ஆகும். மேலும், இந்த ஆலையை 2022 சனவரி 01 முதல் ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைச் சேவையை பெற்றுக் கொள்வதற்காக சீஎம்ஈசீ லங்கா (பிரைவட்) லிமிடட் உடன் 2021 திசெம்பர் 27 ஆந் திகதி ரூபா 435.64 மில்லியன் தொகைக்கு (பெ.சே.வ. உள்ளடங்கலாக) மேலுமொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த மின்வலு ஆலையை இயக்குதல் மற்றும் பராமரிப்பத்தல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட பின்னரும், 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் 758,587 mwh எரிசக்தி இழப்பு மற்றும் 105 நாட்கள் செயலிழப்புடன் 16 மின்சாரத் தடைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த மின்சாரத் தடங்கல்கள் நாட்டின் மின்வலு விநியோகத்தில் குறிப்பிடத்தக்களவு எதிர்மறையான தாக்கத்தை விளைவித்திருந்தன.

**2.2.4 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என.**

(அ) 2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யு) 2016 செப்டம்பர் இல் நிறுவப்பட்டதுடன் சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்விமனு ஆவணங்களின் வரைபினைத் தயாரித்தல் போன்ற

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 301.19 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 பெப்ரவரி 23 அன்று நடைபெற்ற சபை கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்தை எஸ்எல்இக்கு "ஒற்றை மூல கொள்வனவு" என்ற அடிப்படையில் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்த செயற்திட்டத்திற்கான முதலீட்டை முதலீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், இந்த செயற்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 301.19 மில்லியன் செலவை வேறொறு முதலீட்டாளரால் ஏற்க முடியாத சூழ்நிலை காணப்படுவதால் இந்தச் செலவு சபைக்கான செலவாகவே காணப்படக்கூடிய ஆபத்து உள்ளது.

(ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்களின் கொள்வனவுகளிற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதைப் பொருட்படுத்தாமல், கழிவுகளிலிருந்து எரிசக்தி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு கிலேவொட்சுக்கு ரூபா 36.20 வீதத்தில் (20 ஆண்டுகளுக்கு சமவிகித கட்டணம்) ஐந்து மாநகரசபைகளின் திடக்கழிவு மின்வலு ஆலைகளை செயல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன்படி, ஒரு திடக்கழிவு ஆலைக்கான மின்சாரம் கொள்வனவு உடன்படிக்கை 2020 திசெம்பரில் ஒரு சுயாதீன மின்வலு உற்பத்தியாளருடன் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 வீதமான மொத்த கட்டணத்தை சபை ஏற்றிருந்தது. இருப்பினும், அமைச்சரவை தீர்மானத்தின் படி கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 13.10 வீத கட்டணம் பொது திறைசேரியினால் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2021 திசெம்பர் 31 வரை 390 மெகாவாட் இயலளவுடைய 7 என்சிஆர்இ செயற்திட்டங்களுக்கான கொள்வனவுகள் மாத்திரமே தொடங்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட மின்வலு ஆலைகளில் 49 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஒரு மின் நிலையம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தன.

(இ) 2011 முதல் 2021 வரை செயற்திட்டப்பணியை முடிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் மேலதிக இடத் தேவை, நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் பணவீக்கம் என்பன காரணமாக உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,000 மில்லியன் இலிருந்து ரூபா 6,161.87 மில்லியன் (மதியுரைச்சேவை மற்றும் முந்தைய ஒப்பந்ததாரருக்காக செலுத்தப்பட்ட பணம் உட்பட) வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டில் ஒரு புதிய கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட பின்னரும் 2017 முதல் 2020 வரையான காலப்பகுதியில் ரூபா 284.41 மில்லியன் செலவில் தற்போதைய தலைமை அலுவலகக் கட்டிடம் புனரமைக்கப்பட்டிருந்ததுடன், தற்போதைய கட்டிடத்தின் உரிமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2018 - 2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தின் படி, 500 MW, 657MW, 430MW மற்றும் 445MW புதிய மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய 2032MW மேலதிக இயலளவில் 661MW இயலளவுடைய மின்வலு ஆலைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால், புதிய பின்பிறப்பாக்க ஆலைகளை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றம் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ரூபா 6.54 பில்லியன் பெறுமதியான 267.17Ghw எரிசக்தி, மேலதிக மின்வலுவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் மூன்று ஓய்வுபெற்ற IPP மின்வலு உற்பத்தி நிலையங்களிலிருந்தும் 24MW மேலதிக் மின்வலு உற்பத்தி நிலையத்திலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மின்வலு அலகு ஒன்றுக்கான கிரயங்கள் முறையே (மறுா அலகொன்றுக்கு) ரூபா 21.75, ரூபா 25.26, ரூபா 24.97, மற்றும் ரூபா 88.85 ஆகக் காணப்பட்டதுடன், சராசரி விற்பனை விலை ரூபா 16.37 ஆகும். எனவே, அதிக செலவில் அவசர மின்வலு நிலையங்களை பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, நிகழ்நேரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், குறைந்த கிரயத்திலமைந்த நீண்ட கால மின்வலு உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின்வலு உற்பத்தி நிலையங்களை இயக்கிச்செல்ல முடிந்திருந்தால், எரிசக்தி கொள்வனவுக்கான இந்த அதிகப்படியான செலவைக் குறைத்திருக்கலாம்.

(ஊ) சீஎம்ஈசீ ஆல் சமர்ப்பிக்கப்பட்ட பயிற்சியளிப்பு ஆவணங்களின் படி, உபகரணங்களின் செயலாற்றலை பராமரிப்பதற்கு, மீட்டெடுப்பதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு விரிவானதோர் பிரித்தெடுக்கும் களப்பரிசோதனை மற்றும் அலகு பழுதுபார்த்தல் ஆகியவற்றைக் குறிக்கும் "யு" நிலை பராமரிப்பு இடைவெளியானது 4 முதல் 6 ஆண்டுகளிற்கு இடைப்பட்டதாக காணப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் 02 மற்றும் 03 அலகுகளுக்கான "யு" நிலை பராமரிப்பானது அந்த அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்த பின்னரும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் 02 மற்றும் 03 அலகுகள் தொடர்பாக 663,510Mwh எரிசக்தி ஆற்றல் இழப்புடன் கூடிய 14 மின்தடங்கல் சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டில் ஏற்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(எ) தீர்க்கப்படாதுள்ள ஆட்சேபனைகள் காரணமாக "லைட்டிங் ஸ்ரீலங்கா" ஹம்பாந்தோட்டை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்த பின்னரும் கூட தங்காலை கேன்ட்ரி இன் நோனாகம கேன்ட்ரி லைன் (டவர் 13 முதல் 36 வரை) மின்வழங்கல் செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளை பூரணப்படுத்த சபையால் முடிந்திருக்கவில்லை.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

## 2.3 ஏனைய அவதானிப்புகள்

(அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 44,079 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 6,839 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதிலுள்ள ரூபா 2,928 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

(ஆ) ரூபா 1.67 பில்லியன் மற்றும் ரூபா 897 மில்லியன் கூட்டுத்தொகையான சில்லறைக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது.

(இ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 83.68 மில்லியன் தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714.96 மில்லியன் மீதி தொடர்ந்தும் அறவிடப்பாது வைக்கப்பட்டுள்ளது.

(உ) பின்வரும் ரூபா 4.01 பில்லியன் கூட்டுத்தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.

| கடன்கொடுத்தோர் பெயர் | தொகை ரூபா |
|---|---|
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,820,562,372 |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 |

(ஊ) நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் நிதிக் கூற்றுக்களில் வியாபார கடன்கொடுத்தோராக வைக்கப்பட்டுள்ளது.

(எ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானக் கூற்றில் ரூபா 571.34 மில்லியன் பெறுமதியான (27,049.71 மெற்றிக் தொன்) நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ளது. இருப்பினும், பின்வருவன காரணமாக அந்த நிலக்கரி இருப்பு பெறுமதியின் சரியான தன்மையினை கணக்காய்வில் மெய்மைப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(i) அதிக அளவு நிலக்கரிக்குரிய அடர்த்தியை மெய்மைப்படுத்துவதற்காக ஒரு கனமீற்றர் நிலக்கரியின் களத்திலுள்ள அடர்த்தியை அளவிடுவதற்கு கிடங்குகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட சுமார் 35 கிலோ நிலக்கரி மாத்திரமே நிறையிடப்பட்டிருந்தமை.

(ii) கிடங்குகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட ஒரு கன மீற்றர் நிலக்கரியின் அர்த்திக்கும் களத்திலுள்ள அடர்த்திக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டமை.

(iii) நிலக்கரி குவியல்கள் காணப்பட்டமையால் “டீ” இறங்குதுறையிலுள்ள சராசரி நிலக்கரியின் மேற்பரப்பு அளவிடப்பட்டிருக்காமை.

(iv) வரைவு கணக்கெடுப்பில் இருந்து மாத்திரம் ஏற்றப்பட்ட அளவும் வெளியேற்றப்பட்ட அளவும் அளவிடப்பட்டிருந்தமை

(v) வெளியேற்றப்பட்ட நிலக்கரியை அளவிடப் பயன்படுத்தப்படும் பூச்சிய பெல்ட் அளவுகோல் சரியான அளவை வழங்கியிருக்காமை.

(vi) மூன்று பிரிவுகளில் நிலக்கரியின் பயன்பாட்டை அளவிடப் பயன்படுத்தப்படும் பெல்ட் அளவுகோல் சரியான அளவை வழங்கியிருக்காமை.

(vii) நிலக்கரியை வெளியேற்றும் மற்றும் உட்கொள்ளும் தருணத்தில் நிலக்கரியின் அடர்த்தி வேறுபட்டிருக்கலாம் என்பதுடன் நிலக்கரி இருப்பு மீது அந்த அடர்த்தியின் தாக்கம் சீராக்கப்பட்டிருக்காமை.

(ஏ) சபை பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(ஐ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக அந்தக் கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 61.39 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. அநேகமான செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் அமுல்படுத்தப்பட்டிருக்காமையால் மேலதிக கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி..)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(ஒ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் சபையின் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் முன்னைய மோசடியைக் கருத்திற் கொள்ளாது மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 மாத்திரம் அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(ஓ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3.79 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்தித்ததுடன் அந்த நபருக்கு எதிராக எவ்வித ஒழுங்காற்று நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகையினை பதிவழிக்கும் செயற்பாட்டில் சபை ஈடுபட்டுள்ளது.

(ஔ) மின்பிறப்பாக்கப் பிரிவிலுள்ள மூலதன முடிவுறா வேலைகளில் 2018 திசெம்பர் 31 முதல் காணப்பட்ட ரூபா 22.88 மில்லியன் மீதி நகர்த்தப்படாமல் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது.

(ஃ) ரூபா 62.95 பில்லியன் மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(க) ரூபா 28.79 பில்லியன் மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 8.5 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 2.46 பில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக காட்டப்பட்டுள்ளது. இந்தளவு அதிகமாக நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை பராமரிப்பதனால் அது சேதங்கள், இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் மற்றும் மோசடி போன்றன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

(கா) சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான விலை வீதம் உண்மைக் கிரய முறையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த விலை வீதமானது சிற்றளவு நீர் மின் நிலையங்களின் உண்மைக் கிரயத்துடன் எந்தவித தொடர்பும் இல்லாத தவிர்க்கப்பட்ட கிரய முறையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தவிர்க்கப்பட்ட கிரய முறையானது அனல் மின் ஆலைகளின் வெளியேற்றத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன், அது எரிபொருள் கிரயத்திலிருந்து வேறுபட்டிருந்தது. பிரதிப் பொது முகாமையாளர் (DGM - முறைமைக் கட்டுப்பாடு) இன் DGM/SYC/TCH/41 கடிதத்தின் படி, சிற்றளவு நீர் மின் ஆலைகளின் அலகு விலை வீதமானது ரூபா 10.00 இற்கும் குறைவாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டிற்காக சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையில் நிர்ணயிக்கப்பட்ட விலை வீதமானது மழைக்காலத்திற்கு ரூபா 19.11 ஆகவும் வறண்ட பருவத்திற்கு ரூபா 20.59 ஆகவும் காணப்பட்டது. மேலும், புள்ளி விவர அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில் சபையின் ஒரு அலகு நீர் மின்சாரத்திற்கான கிரயம் ரூபா 2.49 ஆகும்.

(கி) சபைக்குச் சொந்தமான நிலங்களை அடையாளம் காணுதல், அளவீடு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகளிற்காக 2020 யூன் 01 முதல் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்ததுடன், அதாவது அளவீடு செய்தல் 34 சதவீதமாகவும் மதிப்பீடு செய்தல் 0.4 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டது.

(கீ) லக்விஜய மின் நிலையத்திலுள்ள சில சரக்கிருப்புகள் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், அந்த சரக்கிருப்புகள் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கு) லக்விஜய மின் நிலையத்தில் எரிபொருள் பெறுவனவுகள் மற்றும் நுகர்வு பற்றிய பதிவேடுகள் 2021 திசெம்பர் 04 முதல் 2022 சனவரி 11 வரை கையிருப்புப் புத்தகங்களில் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை2021 திசெம்பர் 04 முதல் 2022 சனவரி 11 வரையிலான காலத்தில் மாதாந்த சராசரி எரிபொருள் பெறுவனவுகள் மற்றும் நுகர்வுகள் முறையே 442,200 லிட்டர்கள் மற்றும் 725,521 லிட்டர்கள் ஆகக் காணப்பட்டது.

(கூ) அமைச்சரவை தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் வாழைச்சேனை காகித கூட்டுத்தாபனம் தொடர்பான ரூபா 361,992,685 தொகையான மிகை அறவீடு மற்றும் வட்டிகளை தள்ளுபடி செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

**இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியானதும் பிரமாண ரீதியுமான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தகவல் பந்தி

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

பின்வரும் கம்பனிகளின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவானிப்புக்களின் அடிப்படையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்**

(i) **வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017/2018 மற்றும் 2018/2019 மதிப்பீட்டு ஆண்டிற்கான பெறுமதிசேர் வரியுடன் தொடர்புடைய ரூபா 287,139,348 செலுத்த வேண்டிய மேலதிக வரி மற்றும் ரூபா 220,628,092 அபராதங்கள் குறித்த தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

பெறப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி (VAT) மதிப்பீட்டிற்கான மேல்முறையீட்டுடன் இணைத்து 04 திருத்தப்பட்ட VAT கணிப்பீடுகளை IRD க்கு LCC சமர்ப்பித்துள்ளதுடன் அதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. வரி ஆலோசகரின் உதவியுடன் 2022/06/06 அன்று முதல் சந்திப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தேவைப்பட்டால், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, அடுத்துவரும் நிதியாண்டில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

**(ii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள 154 கப்பலேற்றல்களுடன் தொடர்புடைய ரூபா 33,317,325 மீதி மற்றும் இ.மி.ச. இடமிருந்து நிலக்கரி கொள்வனவு முற்பணமாக பெறப்பட வேண்டிய ரூபா 1,760,500 மீதி என்பன தொங்கல் கணக்கில் வைத்திருக்கப்பட்டுள்ளதுடன் கம்பனி இவற்றை தீர்வு செய்திருக்கவில்லை.**

**தொங்கல் கணக்கின் உள்ளடக்கம் பின்வருமாறு தரப்படுகின்றது.**

| | | |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | : | 4,323,787.00 |
| 2021 ஆம் ஆண்டின் போது மாற்றப்பட்ட தொகை | : | 30,757,506.00 |
| 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள மீதி | : | 35,081,293.00 |

**தொங்கல் கணக்கின் ஆரம்ப மீதியின் உள்ளடக்கம்:**

இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டியவை ரூபா 4,323,787.00 2017 இல் இ.மி.ச. உடனான கணக்கின் மீதியை தீர்வு செய்ததன் பின்னர் இந்தத் தொகை மீதமாக உள்ளது. இந்த மீதியின் மூலாதாரம்.்.மூலம் ஆகியவற்றைக் கண்டறிய மேலும் ஆராயப்பட்டு வருவதுடன், தொங்கல் கணக்கிலிருந்து நிலுவைத் தொகையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**2021 ஆம் ஆண்டின் போது மாற்றப்பட்ட தொகையின் உள்ளடக்கம்:**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வழிகாட்டுதலுடன் 2022 ஆம் நிதியாண்டில் தொங்கல் கணக்கை நீக்குவதற்காக இந்த மீதியின் மூலாதாரம்/மூலம் ஆகியவற்றைக் கண்டறிய மேலும் ஆராயப்பட்டு வருகின்றது.

**(iii) நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி ரூபா 5,324,423,778 என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.**

இ.மி.ச. இற்கு வெற் விலைப்பட்டியல்களை வழங்குகையில் சுங்கத் தீர்வையினை கிரயத்துடன் சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எல்சீசீ இற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றலுடன் 2018 ஜூன் 28 அன்று அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலை நிர்ணய முறை பின்பற்றப்பட்டது.

இ.மி.ச. இற்கான விலைப்பட்டியலிலுள்ள வெற் வரிக்கான எல்சிசி இன் பெறுமதி அடிப்படையானது சுங்க நோக்கங்களுக்கான பெறுமதியை விட குறைவாக இருக்கக்கூடாது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தரால் கூறப்பட்டமை பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 10% தொகை உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உத்தரவின் பேரிலேயே சேர்க்கப்படுகின்றது. அன்றுமுதல், இ.மி.ச. இந்த உத்தரவை சவாலுக்குட்படுத்தி, 2018-09-07 திகதிய அதனது கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும்,

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அதுவரையிலும் நாங்கள் விலைப்பட்டியலில் 10% கற்பனை தீர்வையைச் சேர்த்துள்ளோம். ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கப்பட்டுள்ளமையால் மேலதிக வெளியீட்டு வெற் தொகை அனுப்பப்படவில்லை. வருமானத்தில் உள்ளடங்கியுள்ள 10% சுங்கத்தீர்வை எல்லையினை நீக்கி, வெளியீட்டு VAT இனைக் கணிப்பிடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் LCC விசாரித்துள்ளது ஆனால் அதற்கு, இன்னும் பதில் கிடைக்கவில்லை.

LCC இன் நிதிக் கூற்றுக்களில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி கற்பனை வரி எல்லை பதிவுகள் தொடர்பான கணக்கீட்டுச் சிக்கலை சரிசெய்வதற்கு லங்கா நிலக்கரி கம்பனிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(iv)** **நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 197,452,711 தொகையான பெ.சே.வரி (VAT) மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவை இ.மி.ச. ஆல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இ.மி.ச. இவற்றை அதன் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக அங்கீகரிக்கவுமில்லை. எனவே, அவற்றின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை.**

செலுத்த வேண்டிய தொகையை இறுதி செய்ததன் பின்னர் மீதி உறுதிப்படுத்தலை உரிய நேரத்தில் லங்கா நிலக்கரி கம்பனிக்கு அனுப்பிவைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(v)** **மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 22,502,205 தொகையான முகாமைத்துவக் கட்டணம் 3 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. இருப்பினும், இது தொடர்பில் ஐயப்பாட்டிற்காக எந்தவொரு ஏற்பாடும் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.**

மேலதிக பொது முகாமையாளர் (பிறப்பாக்கம்) இடமிருந்து உறுதிப்படுத்தப்பாட்டை பெற்றுக் கொண்ட பின்னர் அவ்வாறான செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் ஏதும் நிலுவையில் இருந்தால், நிதிக்கூற்றுக்களில் ஒரு ஏற்பாட்டை உள்ளடக்குமாறு லங்கா நிலக்கரி கம்பனிக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**(vi)** **கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205,000,000 தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் வெற் (VAT) கணக்கிற்கும், வெற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205,000,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தின் வெற் கணக்கு, வெற் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கு என்பன முறையே ரூபா 158,186,165, ரூபா 39,970,418 மற்றும் ரூபா 6,843,417 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.**

இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை. அக்காலத்தில் அனைத்து சுங்க விடயங்களையும் சிலோன் ஷிப்பிங் காாப்பரேஷன் (சி.எஸ்.சி) கையாண்டிருந்ததுடன் அதற்காக ஒரு கப்பலேற்றலுக்கு ரூபா 1,000,000 கட்டணம் வசூலித்திருந்தது. மேற்படி தவறான வெளிப்படுத்தலுக்காக இலங்கைச் சுங்கம் எல்சிசி இற்கு ரூபா 205,000,000 அபராதம் விதித்ததுடன் இலங்கைச் சுங்கத்தின் விசாரணை அதிகாரிகள் எல்சிசி அதிகாரிகளுக்கு இந்த கட்டணத்திற்குப் பின்னர் இறுதி வெற் கட்டணம் எதனையும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருந்தனர். மேலும், மேற்குறிப்பிட்ட தவறான வெளிப்படுத்தலின் காரணமாக ரூபா 6,843,417.00 உண்மையான அபராதத்தை லங்கா கோல் கம்பனி இனங்கண்டிருந்ததுடன் அது சி.எஸ்.சி பொறுப்புக்கு எதிராகப் வரவு வைக்கப்பட்டது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுடன் கலந்தாலோசித்து இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி இது தொடர்பில் சரியான கணக்கீட்டுப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு லங்கா கோல் கம்பனிக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**(vii)** **டவுரியன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பனி லிமிடெட் (TISCL) இலிருந்து அறவிடப்படாது நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 539,192,079, தொகையினை சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (CSCL) இன் ஊடாக அறவிடுவதற்கு கம்பனி உரிய நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நட்டக்கடனுக்காக எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவுமில்லை. மேலும், TISCL/CSCL என்பன நிலுவைத் தொகையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகையால், மேற்படி மீதியின் சரியான தன்மை மற்றும் காணப்படு தன்மையினை கண்டறிய முடிந்திருக்கவில்லை.**

தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் தீர்ப்பனவுகள் ஒரு உயர் மட்டக் குழுவால் கையாளப்பட்டது. இக்கடன் ஐயக்கடன் என்பதாக குழு கருத்து தெரிவிக்காததுடன் நிலக்கரியை வழங்குவதன் மூலம் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு கொள்வனவாளர் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எங்கள் வசம் உள்ள தகவல்களின்படி, இதனைத் தீர்மானிப்பதற்காக அமைச்சரவைக்கு தீர்வுத்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் இடமிருந்து (தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடெட்) பெற வேண்டிய நிலுவைத் தொகையின் தற்போதைய நிலை அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திறைசேரி (தலைவர்), சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன், லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மற்றும் லங்கா கோல் கம்பனி ஆகியவற்றின் நான்கு உறுப்பினர்களை அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும், குழுவின் பரிந்துரைகளை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு மூலம் மீண்டும்

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

அமைச்சரவையில் சமர்ப்பிக்க அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதுடன் அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. 2022 ஜூன் 21 ஆந் தேதியிட்ட பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் ரூபா 539 மில்லியன் பெறுமதியான நிலக்கரி கையிருப்பு வழங்கப்படாததற்கு காரணமான தரப்பினரைக் கண்டறிய உள்ளக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி, 2022.09.15 ஆந்தேதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின்படி, உள்ளக விசாரணை நடத்துவதற்கான விசாரணை அதிகாரிகளை நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**(viii) நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987 வியாபாரக் கடன் கொடுத்தோர் - என்ற வகையில் நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறவேண்டிய ரூபா 85,887,776 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் இடமிருந்து பெறப்பட வேண்டிய 50 சதவீத எஸ்ஜிஎஸ் கட்டணமான ரூபா 8,048,531 தொகை என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 18,075,801 தொகையான நானாவிதக் கடன்பட்டோரை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை**

(அ) சில்லறைக் கடன்பட்டோர் ரூபா 18,075,802

அறவிட முடியாத டேவு மற்றும் PAL இன் தொகை ரூபா 17,839,949 ஆகுமென ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்தது. மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளுமாறு லங்கா நிலக்கரி கம்பனி இற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நோபல் ரிசோர்சஸ் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987

நோபல் ரிசோர்சஸ் இற்காக ரூபா 85,887,776 செலவு மீதி காணப்படுவதுடன் அதற்கு எதிராக இந்த கடன்பட்டோர் மீதியை எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) வியாபார கடன்கொடுத்தோர் நோபல் வளம் ரூபா 85,997,77

நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் காலாவதியானதன் காரணமாக நோபல் ரிசோர்சஸ் இன்டெல் பிரைவேட் லிமிடெட் இனால் குறைவாகப் பற்றிய மீதியை பிரதானமாக இத்தொகை கொண்டுள்ளது.

(ஈ) லிபர்ட்டி கமாடிடிஸ் லிமிடெட்டில் இருந்து பெறப்பட வேண்டிய 50% SGS கட்டணங்கள்: ரூபா 8,048,541

2015/16 பருவத்தில் 17 கப்பல்களுக்கான வெளியேற்ற துறைமுகத்தில் விதிக்கப்பட்ட வரைவு கணக்கெடுப்பு கட்டணத்தை இது உள்ளடக்குகின்றது. கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு லிபர்ட்டி கமாடிடிஸ் லிமிடெட்டிற்கு ஒரு மின்னஞ்சல் 2019 இல் அனுப்பப்பட்டது. இந்த விவகாரத்தில் நடுவர் தீர்ப்பு செயல்முறை இடம்பெற்று வருகின்றது.

**(ix) கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106,969,404 ஆகும். எனவே, கம்பனி மேலதிகமாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 29,266,965 என்பது அவதானிக்கப்பட்டது.**

சிலோன் சிப்பிங் கோர்பரேசன் இனால் மேற்கொள்ளப்பட்ட பிழையான கணிப்பீடு காரணமாக, கப்பலேற்றல் இல. 123 இற்காக இலங்கை சுங்கத்திற்கு லங்கா கோல் கம்பனி மேலதிகமாகச் செலுத்திய பெ.சே.வ. ரூபா 29,266,965 ஆகும். LCC ஏற்கனவே பணத்தை மீளப்பெறுதல் கோரிக்கையை தாக்கல் செய்துள்ளதுடன், LCC இன் நிலுவையாகவுள்ள சுங்க தீர்வைத் தொகைகளுக்கு எதிராக இத்தொகையை எதிரீடு செய்வதற்கு அல்லது திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ற வழிமுறைகள் குறித்து சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. மீளப்பெறுதல் கோரிக்கை தீர்க்கப்படும் வரை சி.எஸ்.சி நிலுவைத் தொகைக்குச் சமமான தொகையை LCC வைத்திருக்கும்.

**(x) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு லங்கா கோல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த மீதித் தொகைக்கும் இடையே ரூபா 4,003,372 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்ய கம்பனி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் உள்ள வேறுபாட்டிற்கான விடயங்களை அடையாளம் கண்டு அதற்காக ஓர் கணக்கிணக்கக் கூற்றை LCC தயாரித்தது. அவற்றில் பெரும்பாலான விடயங்கள் நியாயமான காரணங்களுக்காக LCC ஆல் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அவை குறிப்பு இல. 24 “கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள்” என்பதன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டின் இறுதியில் நிலுவையாக காணப்படுகின்ற முரண்பாடுகள் மற்றும் அடையாளம் காணப்படாத வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு LCC மற்றும் CSC ஆகியவை தற்போது கலந்துரையாடி வருகின்றன

**(xi) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2,362,129 தொகையான செலுத்த வேண்டிய மீதித் தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள் 2018 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட தவறான கணக்கீட்டுப் பதிவுகளால் ஏற்பட்டவையாகும். மேற்குறித்த பிழைகளைத் திருத்துவதற்குத் தேவையான பதிவுகளைச் செய்வதற்காக LCC இற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(ஆ) லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட்

(i) **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மின்சார சபை (CEB) இடமிருந்து நானாவித சேவைகளுக்காக பெறப்பட வேண்டிய மீதி ரூபா 1,343,821,164 ஆனதுடன் இதில் நிகர கணக்கீடு மற்றும் நிகர பிளஸ் முறைகளைப் பயன்படுத்தி CEB ஆல் ரூ. 2017, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட எரிசக்தி கிரயமான ரூபா 1,336,859,095 உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், அந்தத் தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைத்திருக் கவில்லை. மேலும், CEB அதன் நிதிக் கூற்றுக்களில் இந்தப் பொறுப்பை அங்கீகரித்திருக்கவில்லை.**

2021 ஆம் ஆண்டுக்கான பெறத்தக்க தொகை ஏற்கனவே 2021 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டிற்கான ருவே கட்டண சீராக்கலுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் நிலுவைகளை தீர்ப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

(ii) **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிராட் பேண்ட் நெட்வொர்க் (பிரைவேட்) லிமிடெட்டின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 5,000,000 தொகைக்கான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.**

இந்த விவகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அவ்வப்போது சில தகவல்கள்/விளக்கங்களைக் கோரியுள்ளனர், மேலும் அந்தத் தகவல் மற்றும் தெளிவுபடுத்தல்களை வழங்க கம்பனி செயல்பட்டு வருகிறது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் இறுதி அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) **நிராகரிக்கப்பட்ட கணக்கிலிருந்து மாற்றப்பட்டிருந்த வாடிக்கையாளர் களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இனங்காணப்படாத ரூபா 14,731,287 தொகையான சேகரிப்புகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.**

சேகரிப்பு முகவர்கள் மற்றும் வங்கிகளுடன் ஒருங்கிணைந்து திறைசேரியின் பிரிவால் இந்த நிலுவைகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்த சிக்கலைத் தணிப்பதற்காக தொடர்புடைய அனைத்து முயற்சிகளையும் LECO எடுத்துள்ளது. தற்போது ரூபா 1,746,780.92 அடையாளம் காணப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.

மேலும், இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும் என்பதையும், வைப்பாளர்கள் செய்த தவறுகள் மற்றும் சேகரிப்பாளர்களின் பிழைகள்/தவறுகளால் பல வங்கிக் கணக்குகளில் அடையாளம் காணப்படாத சேகரிப்புகள் காணப்படுகின்றன என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். வங்கிக் கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படும் போது, தொடர்புடைய சேகரிப்பாளர்களுடன் குறுக்கு பரிசோதனை செய்து இந்த அடையாளம் தெரியாத சேகரிப்புகளை நீக்கப்படும்.

(iv) **இலங்கை மின்சார சபையின் ஆரம்ப துணை மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்திய காணிகள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 206,924,712 தொகையானது CEB யிடமிருந்து பெற வேண்டிய மீதியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் காணிகளில் முதன்மை துணை மின் நிலையங்களை அமைப்பதற்கும் மேற்கூறிய காணிகள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்தியமைக்காக CEB ஆல் செலுத்த வேண்டிய கட்டணங்கள் தொடர்பாகவும் கம்பனிக்கும் CEB க்கும் இடையில் முறையான உடன்படிக்கைகள் காணப்படவில்லை.**

இது பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(v) **2021 நவம்பர் 16 ஆந் தேதியிட்ட PED/01/2021 ஆம் இலக்க அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 6.9 இன் படி, பதிவழிப்பதற்காக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையளித்தல் உள்ளிட்ட உரிய செயல்முறையை மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் பணிப்பாளர் சபைக்கு இழப்புக்களை பதிவழிக்கலாம். எவ்வாறாயினும், கம்பனி இது சம்பந்தமாக கூறப்பட்டுள்ள செயல்முறையைப் பின்பற்றாது மாநகர சபைகள் மற்றும் மாகாண சபைகளில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 387,806,335 தெரு விளக்குக்கான கடன்பட்டோர் தொகையை 2021 நவம்பர் 31 அன்று வழங்கப்பட்ட பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில் மீளாய்வாண்டில் கம்பனி பதிவழிப்புச் செய்திருந்தது.**

இந்த பதிவழப்புகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டன. பதிவழிப்புச் செய்வதற்கான நடைமுறையை ஸ்தாபிப்பதற்கு LECO க்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் எதிர்காலத்தில், பணிப்பாளர் சபைக்கு பதிவழித்தலை அனுப்புவதற்கு முன் கணக்காய்வுக் குழுவின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(vi) ஒரு வருடத்தின் இறுதி மாதத்தில் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்ந்துவரும் ஆண்டின் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றப்பட்ட வருமானமாக அங்கீகரிக்க பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் இல் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் 2021 சனவரி இல் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் இதே நடைமுறை ஏனைய ஆண்டுகளிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே, மொத்தமற்ற வாடிக்கையாளர் களிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை சரியாக மதிப்பிட முடிந்திருக்கவில்லை.**

அனைத்து மொத்த பட்டியல்களும் ஒவ்வொரு மாதத்தினதும் முதல் நாளில் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, திசெம்பர் பட்டியலிடல் சுழற்சி விற்பனையானது அதே ஆண்டின் விற்பனையாக கருதப்படுகிறது. இருப்பினும், சில்லறை (மொத்தம் அல்லாத) பட்டியல்கள் ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை விநியோகிக்கப்படுகின்றன. ஆகையால், திசெம்பர் மற்றும் சனவரி மாத நுகர்வுகள் திசெம்பர் மாத பட்டியலிடல் சுழற்சியுடன் கலந்துள்ளதுடன் அவற்றைப் இரண்டு மாதங்களுக்கு தனித்தனியாக பிரித்தெடுப்பது கடினமானதாகும். எனவே, பட்டியலிடல் தேதிகளில் உள்ள வேறுபாட்டின் காரணமாக, மொத்த அல்லாத சில்லறை பட்டியல் வருமானம் அடுத்த மாதத்திலேயே எப்போதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 1.2.2 இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

**(அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்**

**(i) சபையின் கீழ் தனிப்பட்ட ஒரு பிரிவாக இயங்குகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் (ஊ.சே.நி.) ரூபா 53.63 மில்லியன் தொகையான செலவுகள் சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.**

அறிக்கையிடப்படும் நிறுவகத்தின் நிதிசார் செயலாற்றலுடன் "வருமானம் மற்றும் செலவுகள்" தொடர்புபட்டுள்ளன என்பதாகவே நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகத்தின் 4.1 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்படுகின்றது.

2003 திசெம்பர் 31 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகின்றது.

மேலும், மேற்படி விதிகளின் 20 (i) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.

இந்த விடயம் நிதியத்தின் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் 2021 பெப்ரவரி 11 அன்று முன்வைக்கப்பட்டது, அதற்கமைய தற்போதைய நடைமுறையினை தொடர்வதற்கு குழு தீர்மானித்ததுடன், அதற்காக சபையின் ஒப்புதலை பெறவும் முடிவு செய்யப்பட்டது. அதற்கமைய, ஒரு சபை விஞ்ஞாபனம் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த விடயத்தை விரிவாகக் கருத்தில் கொண்டு, நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்கான தற்போதைய கொள்கையைத் தொடர்வதற்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், 2022 பெப்ரவரி 24 மற்றும் 2022 மே 26 ஆகிய தேதிகளில் நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு இந்த விடயம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டதுடன், வீட்டுக் கடன் களப்பரிசோதனை தொடர்பான செலவுகளைத் தவிர, ஏனைய அனைத்து நிர்வாகச் செலவுகளையும் இ.மி.ச. இன் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு குழு முடிவு செய்தது.

**(ii) சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்குச் சொந்தமான ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் ஊ.சே.நி. இன் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.**

அறிக்கையிடப்படும் நிறுவகத்தின் நிதிசார் செயலாற்றலுடன் "வருமானம் மற்றும் செலவுகள் - தொடர்புபட்டுள்ளன என்பதாகவே நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகத்தின் 4.1 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்படுகின்றது.

2003 திசெம்பர் 31 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகின்றது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

மேலும், மேற்படி விதிகளின் 20 (i) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.

இந்த விடயம் நிதியத்தின் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் 2021 பெப்ரவரி 11 அன்று முன்வைக்கப்பட்டது, அதற்கமைய தற்போதைய நடைமுறையினை தொடர்வதற்கு குழு தீர்மானித்ததுடன், அதற்காக சபையின் ஒப்புதலை பெறவும் முடிவு செய்யப்பட்டது. ஆதற்கமைய, ஒரு சபை விஞ்ஞாபனம் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த விடயத்தை விரிவாகக் கருத்தில் கொண்டு, நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்கான தற்போதைய கொள்கையைத் தொடர்வதற்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், 2022 பெப்ரவரி 24 மற்றும் 2022 மே 26 ஆகிய தேதிகளில் நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு இந்த விடயம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டதுடன், வீட்டுக் கடன் களப்பரிசோதனை தொடர்பான செலவுகளைத் தவிர, ஏனைய அனைத்து நிர்வாகச் செலவுகளையும் இ.மி.ச. இன் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு குழு முடிவு செய்தது.

(ஆ) **எல்கேஏஎஸ் 2 - இருப்புகள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம் சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட சாதக மேந்தலை விலை மற்றும் பொருள் விலை முரண்கள் ரூபா 4.04 பில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அத்துடன் ரூபா 1.78 பில்லியன் கூட்டுத்தொகையான பாதக களஞ்சிய விலை முரணும் காணப்பட்டது. எனினும், அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை மதிப்பிட முடியாதிருந்தது.**

எல்கேஏஎஸ் - 2 இருப்புக்கள் என்பதன் 25 ஆம் பந்தியின் படி இருப்பினை அளவிடுவதற்காக நியமக் கிரய முறை முதல் வந்தது முதல் செல்லல் முறை (FIFO) அல்லது நிறையளித்த சராசரி முறை பரிந்துரைக்கப்படுகின்றது. ஒரு நிறுவனம், அந்த நிறுவனத்திற்கு ஒத்த தன்மையுடைய மற்றும் பயன்பாடுடைய அனைத்து இருப்புகளுக்கும் ஒரே கிரய சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். அதன்படி, இ.மி.ச. அதன் இருப்புகளை மதிப்பிடுவதற்கு FIFO முறையைப் பயன்படுத்துவதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75% முடிவுறா வேலைகள், 61% ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் 55% இருப்புக்களை உள்ளடக்கிய இ.மி.ச. இன் பிறப்பாக்கம், பரிமாற்றம், சொத்து முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பிரிவிலுள்ள ஊழியக் கிரயத்தை பதிவு செய்ய உண்மையான கிரய முறை பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஆதனம், பொறி மற்றும் உபகரணம், இருப்புகள் மற்றும் முடிவுறா வேலைகள் ஆகியவற்றின் பெரும்பகுதி தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க கிரயத்தில் காட்டப்படுகிறது.

இருப்பினும், இருப்புகளின் சிக்கலான தன்மை மற்றும் பெரிய அளவுகள் காரணமாக, இ.மி.ச. இல் உள்ள விநியோக பிரிவுகள் நியமக் கிரய முறையை பயன்படுத்துகின்றன.

விளைவுகள் கிரயத்திற்கு கிட்டியதாக காணப்படுமாயின் ("விளைவுகள் கிரயத்திற்கு கிட்டியதாக காணப்படுமாயின் சரக்கிருப்புகளின் கிரயத்தை அளவிடுவதற்கான நுட்பங்களிற்காக நியமக் கிரய முறை போன்றவற்றைப் பயன்படுத்தலாம்") எல்கேஏஎஸ் - 2 இருப்புக்கள் என்பதன் 25 ஆம் பந்தியானது சரக்கிருப்புகளின் மதிப்பீட்டிற்காக நியமக் கிரய முறையைப் பயன்படுத்த அனுமதித்துள்ளது. இ.மி.ச. இன் சரக்கிருப்புகளை மதிப்பிடுவதற்கு நியமக் கிரய முறையைப் பயன்படுத்துவதற்கான மற்றொரு காரணம் என்னவென்றால், பொருட்களின் விலை மாற்றங்களைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு பகுதியிலும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஒரு நியமக் கிரய அடிப்படை இருக்க வேண்டும் என்பதனாலாகும். இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் (PUCSL) "கட்டணங்களுக்கான வழிமுறை" க்கான வழிகாட்டுதல்களின் படியும் "ஒவ்வொரு உரிமதாரரும் அவர்கள் செயற்படும் பகுதிகளில் மின்சார வழங்கல் சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களினதும் விலைகளைக் கணக்கிட நியமக் கிரய முறையை பயன்படுத்த வேண்டும்" என்று வரையறுத்துள்ளது.

இருப்பினும், பொருள் மற்றும் பிற கட்டணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக முரண்கள் ஏற்படலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பராமரிப்புச் செலவானது வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டால், நியமக் கிரயத்திற்கும் உண்மைக் கிரயத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு அதே வருமானக் கூற்றிலுள்ள முரண்கள் கணக்குகளில் பிரதிபலிப்புச் செய்யப்பட்டு முடிவுகள் பூச்சியமாக காட்டப்படும்.

மேலும், எல்கேஏஎஸ் - 2 (பந்தி 21) இன் படி, தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தத்திற்கு உட்பட்டதாக சரக்கிருப்புகளை மதிப்பிடுவதற்கு நியமக் கிரய முறையைப் பரிந்துரைக்கின்றது. அதன்படி, நியமக் கிரயத்திற்கும் உண்மைக் கிரயத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக ஆண்டுக்கு இருமுறை நியமக் கிரயத்தை மீளாய்வு செய்ய விலை நிர்ணயக் குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேற்கூறியவற்றைத் தவிர, இ.மி.ச. நிறையளித்த சராசரி சரக்கிருப்பு மதிப்பீட்டு முறையுடன் இணைந்ததாக ERP முறையை நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இ.மி.ச. இல் ERP முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

மேலும், மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளின் மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுவதற்கான ஒதுக்கீட்டு முறையொன்று காணப்படுதல் வேண்டும்.

மேந்தலைக் கிரய விகிதமானது அந்தந்த மூலதன அல்லது பராமரிப்பு வேலைகளிற்கு குறித்த மேந்தலையை நேரடியாக பகிரத்தக்க முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதுடன் அந்த வேலைகளுக்கு அது உறிஞ்சப்படுகின்றது.

**(இ) எல்கேஏஎஸ் 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**

**இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது கணக்கீட்டுக் கொள்கை 2.4.6(உ) மற்றும் 3(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காதுதடன் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. அதற்கமைய, ரூபா 197.21 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பிடப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சபை அதனது வாகன அணியின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கைக் காலத்தை மீளாய்வாண்டில் மாற்றியமைத்திருந்ததுடன், அதற்கமைய முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 3.17 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது.**

முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் அதிகமானவை மின்வலு பிறப்பாக்க பொறிகள் மற்றும் தொடர்புடைய சொத்துக்களைக் கொண்டுள்ளன. முழுமையாக தேய்விடப்பட்ட மின் நிலையங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மின் நிலையத்தின் சிக்கலான தன்மை மற்றும் தனித்துவத் தன்மை காரணமாக, மதிப்பீட்டிற்கு கணிசமான காலம் தேவைப்படுகின்றது.

எஞ்சிய சொத்துக்களின் பிரதான கூறுகள் பரிமாற்ற மற்றும் விநியோக வழிகளாக காணப்படுகின்றன. கணக்காய்வு அவதானிப்பை தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(ஈ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பரிமாற்றல் பிரிவிலுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 202.9 பில்லியன் ஆகும். அச்சொத்துக்களில் ரூபா 201.01 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரிமாற்றல் பிரிவிலுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 202.9 பில்லியனாகும்.

அனைத்து அசையும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வின் தேவைக்காக பதிவேடுகள் வழங்கப்பட்டன.

ரூபா 201.01 பில்லியன் தொகைக்குரிய அசைவுறாத சொத்துக்கள் பிரதானமாக தற்போதுள்ள பரிமாற்று வழிகளுடன் சம்பந்தப்பட்ட மின்சார பரிமாற்ற வலைப்பின்னலின் ஒரு பகுதியாக உள்ள பொறிகள் மற்றும் இயந்திரங்களாக காணப்படுவதுடன் அவை இனங்காணப்பட்டு சொத்து முகாமைத்துவ மற்றும் நிலைமைக் கண்காணிப்பு கிளையிலுள்ள கணனிமயப்படுத்திய பராமரிப்பு முகாமைத்துவ முறைமையின் (CMMS) சொத்துக்கள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, பரிமாற்றல் வலைப்பின்னலின் அசையாத சொத்துக்கள் அட்டவணைகள் 01 மற்றும் 02 இல் காட்டப்பட்டுள்ளபடி உப மின்வலு நிலையங்கள், தலைக்கு மேலான மற்றும் நிலக்கீழ் கேபிள்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

**அட்டவணை - 01 - உப மின்வலு நிலையங்கள்**

| உப மின்வலு நிலையங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | மொத்த இயலளவு (MVA) |
|---|---|---|
| 132/33 kV | 60 | 4758 |
| 220/132/33 kV | 4 | 1600/380 |
| 220/33 kV | 5 | 498 |
| 132/11 kV | 8 | 792 |
| 220/132kV | 7 | 3010 |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**அட்டவணை - 02 தலைக்கு மேலான மற்றும் நிலக்கீழ் கேபிள்கள்**

| தலைக்கு மேலான(OH) /நிலக்கீழ் (UG) கேபிள் வழிகள் | நீளம் (km) |
|---|---|
| 220kV, OH | 807 |
| 220kV, UG | 22 |
| 132kV, OH | 2335 |
| 132kV, UG | 55 |

(1) **மேற்கூறிய பிரதான சொத்துகள் பிரிவுகள் கீழே காட்டப்பட்டவாறு உப வகைப்படுத்திய கூறுகளிலுள்ள உப மின்வலு நிலைய உபகரணங்களை உள்ளடக்கியுள்ளது.**

அ. முதன்மை உபகரணங்கள் - 220kV, 132kV, 33/11kV கிரிட் சொத்துக்கள்

ஆ. கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்

உ. தகவல் தொடர்பாடல் சாதனங்கள்

ஈ. அளவீட்டு உபகரணங்கள்

இ. இரண்டாம் நிலை உபகரணங்கள்

(2) **கம்பிவழி உபகரணங்கள்**

அ. தலைக்கு மேலுள்ள கம்பி வழிகள் - 220kV மற்றும் 132kV கோபுரங்கள், கடத்திகள் போன்றவை

ஆ. நிலக்கீழ் கம்பி வழிகள் - 220kV மற்றும் 132kV கேபிள்கள், கூட்டு பெட்டிகள்

தற்போது பிரதானமாக உப மின்வலு நிலைய உபகரணங்களுடன் தொடர்புடைய 24,000 க்கும் மேற்பட்ட தனிப்பட்ட சொத்து விடயங்கள் இனங்காணப்பட்டு சொத்து முகாமைத்துவ கிளையால் பராமரிக்கப்படும் கணனிமயப்படுத்திய பராமரிப்பு முகாமைத்துவ முறைமையில் (CMMS) உள்ள சொத்து தரவுத் தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், 9000 க்கும் மேற்பட்ட தனிப்பட்ட கோபுரங்கள் மற்றும் அட்டவணை 2 இல் பட்டியலிடப்பட்டுள்ள கேபிள்கள் உள்ளிட்ட தலைக்கு மேலுள்ள பரிமாற்றக் கம்பி வழிகள் பரிமாற்றல் வழிச் சொத்துகளாகவும், கணினிமயமாக்கப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமையின் (CMMS) சொத்து தரவுத் தளத்திலுள்ள சொத்துக்கள் நிலக்கீழ் கேபிள்களாகவும் அடையாளம் காணப்படுகின்றன.

எனவே, பரிமாற்றப் பிரிவுடன் தொடர்புடைய இந்த சொத்துக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டும். அதற்கமைய, எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். மேலும், திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட PE/EN/CEB/ Equity/2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி, இக்கடன்கள் சபையின் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். இருப்பினும், சபை இக்கடன்களை பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்திருந்தது. அதன்படி, நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக நடைமுறையல்லாத மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கடன் மீதியின் நீண்ட கால மற்றும் குறுங்கால தொகைகளை அங்கீகரிப்பதற்கான கணக்கீட்டுப் பரிகாரம் காணப்படுவதை சபை உறுதி செய்தல் வேண்டும். வருடத்திற்கு சபை செலுத்த வேண்டிய வட்டியை முறையாக அங்கீகரித்திருக்க வேண்டும் என்றாலும், சபையால் எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(i) 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 61 பில்லியன் கடனின் திருப்பிச் செலுத்தும் தொகை சபையின் நிதிக் கூற்றுக்களில் உரிமைத்துவமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.**

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் -2014 இனை அமுல்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட PE/EN/CEB/Equity/2014 ஆம் இலக்க 2014-09-30 தேதியிட்ட கடிதத்தின் படி, திறைசேரி செயலாளரால் கடனை உரிமைத்துவத்துக்கு மாற்றுதல் கையொப்பமிடப்பட்டது. புத்தளம் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்காக பெறப்பட்ட அனைத்து கடன்களும் இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதப்பட வேண்டுமென இ.மி.ச. அறிவுறுத்தப்பட்டதுடன் இந்த

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

கடன்களுக்கான கடன்சேவையினை வழங்குவதற்கு நிலவுகின்ற திரவத்தன்மை பிரச்சினை காரணமாக இ.மி.ச. இற்கு கடன் சேவைச் செலவைச் சமாளிக்கும் நிலை ஏற்படும் வரை திறைசேரியினால் இந்நடவடிக்கை தொடரப்படும்.

மேலும், இக்கடனுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகிய இரண்டும் இ.மி.ச. இன் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் 2018-01-11 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி கடன்களைச் இ.மி.ச. இற்கு வழங்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டது. அதன்பிறகு, 2019 முதல் கடன் கொடுப்பனவுகளை இ.மி.ச. இன் உரிமைத்துவமாக மாற்றுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

அரசுக்கு சொந்தமான நிறுவனமொன்றாக இருப்பதால் இ.மி.ச. திறைசேரியால் எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். அதற்கமைய திறைசேரியால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி இ.மி.ச. இன் புத்தகங்கள் சீராக்கப்படும். 2018 க்கு முன்னைய கடன் திருப்பிச் செலுத்துதல்கள் பொது திறைசேரியிடமிருந்து அத்தகைய வழிகாட்டுதலைப் பெற்றவுடன் இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும்.

**(iii)** **1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவின் படி சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சபை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதன் விரிவான வருமான கூற்றில் முறையே ரூபா 6,700 மில்லியன் மற்றும் ரூபா 676.37 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே முறையே ரூபா 6,700 மில்லியன் மற்றும் ரூபா 676.37 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.**

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் மேற்படி பிரிவு 42 இலுள்ள உப பிரிவு 6 இன் படி, சபையால் கடன்கள் பெறப்படும் போது ஒப்புக்கொள்ளப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகள் மதிப்பிடப்படுகின்றன.

எவ்வாறாயினும், இந்த செலவினத்தை ஈடுசெய்வதற்காக, இ.மி.ச. இற்காக அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்களின் இழப்புகளை ஈடுசெய்யும் வட்டி விகிதத்தில் இ.மி.ச. உடன் துணைக் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது.

இக்கடன்களை இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதுவதற்கு திறைசேரி தீர்மானித்துள்ளமையால், அத்தகைய உப கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை. இ.மி.ச. இன் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காரணமாக திறைசேரியால் கடன் சேவை செலவுகள் செய்யப்படுவதால், நாணயமாற்று வீத நட்டம் உள்ளடங்கலாக கடன் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட உண்மையான பணத்தொகை கடன் உரிமைத்துவமாக இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, உரிமைத்துவமாக மாற்றப்பட்ட கடன்களின் மூலதன மீளளித்தலுடன் தொடர்புடைய நாணயமாற்று நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஆ) இருப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடைய ரூபா 123.86 மில்லியன் வரவு மீதி மற்றும் இருப்பு மிகையுடன் தொடர்புடைய ரூபா 32.65 மில்லியன் செலவு மீதி என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

| பிரிவுகள் | இருப்பு மிகை/ பற்றாக்குறை - தேறியது - 1 ஆண்டிற்கு மேற்பட்டவை | பதிலளிப்பு |
|---|---|---|
| DD-02 | (1,670,231.44) | நிலுவை மீதிகளை அகற்றுவதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| DD-03 | (54,258,690.00) | சப்ரகமுவ மாகாணத்தில் ரூபா 421,712.50 தொகை 2022 மே மாதத்தில் தீர்க்கப்பட்டது. மேலும், மீதமுள்ள நிலுவைகளை மதிப்பாய்வு செய்ய குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டு நிலுவைகள் அகற்றப்படும்.<br>WPSII இன் விடயத்தில், நிலுவையில் உள்ள தொகையை பரீட்சப்பதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஒரு குழு நியமிக்கப்படும்.<br>பணிப்பாளர் சபைக்கு ஒரு விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் சபை அங்கீகாரத்துடன் மீதமாகவுள்ள தொகைகள் (லக்விஜய தொகுதி) 2022 இல் அகற்றப்படும் |
| பிறப்பாக்கம | (35,280,314.00) | சமனல தொகுதி தொடர்பில் DGM(SC) இன் தலைமையின் கீழ் அனைத்து மின்வலு நிலையங்களினதும் களஞ்சியக் காப்பாளர்களின் ஒருங்கிணைப்புடன் இதனை மேற்கொள்வதற்கு கணக்குகள் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதுடன் அதற்கமைய இருப்பு மிகை மற்றும் பற்றாக்குறைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை ஆம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏனைய தொகுதிகளிலுள்ள இருப்புச் சீராக்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **மொத்தம்** | **(91,209,235.44)** | |

**(இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான வெளிநாட்டுக் கடன்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 25.23 பில்லியன் தொகை திறைசேரியிடமிருந்து கிடைத்த உப கடன்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இந்தக் கடன்கள் குடியரசின் கணக்குகளில் உப கடன்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் சபை செலுத்தவுமில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவுமில்லை. எனவே, இந்தக் கடன்களின் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பாய்வுசெய்ய முடியவில்லை.**

2015-03-18 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு முதல் கடன்சேவை மேற்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இ.மி.ச. எதிர்பார்க்கின்றது.

இருப்பினும், இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டிருப்பதாலும் கடன் பெறும் நிறுவனமாக திறைசேரி காணப்படுவதாலும் இந்தக் கடன்களிற்கான கடன்சேவைக் கொடுப்பனவுகள் திறைசேரியால் மேற்கொள்ளப்படுகின்றன. இ.மி.ச. இற்கும் கடன் வழங்கும் முகவர்களுக்கும் இடையே கடன் உடன்படிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால், கடன் வழங்குபவருக்கு நேரடிப் பொறுப்பை இ.மி.ச. கொண்டிருக்காததன் காரணமாக இந்த கடன் வழங்கல்கள் திறைசேரிக்கான ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதைத் தொடர்ந்து, பொது முயற்சிகள் திணைக்களத்தில் 2018-01-11 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2014.12.31 இற்குப் பின்னர் பொது திறைசேரியின் ஊடாக இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட கடன்களை அமைச்சரவை ஒப்புதலுடன் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக ஆலோசனைகள் 2021.07.14 ஆந் திகதிய (FM/AFM (HQ)/Treasury Loans) கடிதத்தின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கோரப்பட்டது. ஆகையால், திறைசேரியிடமிருந்து பணிப்புரை கிடைக்கும் வரை இந்த மீதி உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டு, திறைசேரிக்கான பொறுப்பொன்றாக இ.மி.ச. இதனை பதிவுசெய்துள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(ஈ) **ரூபா 66.83 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்கவில்லை. அதன்படி, அந்தக் கடன்களை மீளளிப்பதற்கான கடப்பாடு உரிய விதத்தில் சபையால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த கடன்களை தீர்ப்பதற்கான ஏற்பாடுகளையும் அல்லது மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பிலான எவ்வித ஏற்பாடுகளையும் சபை செய்திருக்கவில்லை. எனவே, இந்தக் கடன்களின் முழுமையான மற்றும் சரியான தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பாய்வுசெய்ய முடிந்திருக்கவில்லை.**

திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகள் முடிவாக்கப்பட்டிருக்காத போதிலும், திறைசேரியின் ஊடாக இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டுள்ளன.

இருப்பினும், இ.மி.ச. சார்பாக கடன்கள் பெறப்பட்டதால், இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன. மேலும், இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளன. ஆகையால், திறைசேரியினாலும் கடன்களிற்கான மீளளித்தல்கள் செய்யப்படுகின்றன. இது தொடர்பில் மேலதிக ஆலோசனைகள் 2021.07.14 ஆந் திகதிய FM/AFM (HQ)/Treasury Loans ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கோரப்பட்டது.

(உ) **2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிடடைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36.8 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டின் போதான இந்த நிலுவையிலுள்ள மீதிகளின் தீர்ப்பனவு விபரங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.**

2021-12-31 நிலவரப்படி, அரசு நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்படும் வேலைகளின் உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 43,421,695.18 ஆனதுடன் அது 2021.12.31 இல் ரூபா 36,811,013.41 ஆகும்.

2021.01.01 முதல் 2021.12.31 வரைக்குமான தீர்ப்பனவு விவரங்கள் கணக்காய்வாளர்களால் கோரப்பட்டதுடன் அந்த விபரங்கள் 2022 மே 18 ஆந் தேதியிட்ட WAS/ACCT/EX/2022/AA1/15 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர்களுக்கு அனுப்பப்பட்டது. இந்த நிலுவையில் உள்ள மீதிகளில் மத விழாக்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் போன்ற ஏனைய செயற்பாடுகளுக்கு நடமாடும் மின் பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக மத நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 33,784,518.05 இனை அறவிடுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் இந்த மீதிகள் நீண்ட காலமாக நிலுவையில் காணப்படுகின்றமையால் இதனை பதிவழிப்புச் செய்வதற்கு 2021 ஆகஸ்ட் இல் பணிப்பாளர் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ஊ) **2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5,000 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 2,000 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டிற்கான முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 2,500 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இந்தக் கொடுக்கல் வாங்களின் தன்மையையும் அதனை கணக்கீடு செய்யவேண்டிய முறையினையும் சபை தெளிவாக உணர்ந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.**

2019.10.16 ஆந் தேதியிட்ட PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவு திறைசேரிக்கு செலுத்தப்பட்ட “முகாமைத்துவக் கட்டணம்” என்று கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியில் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.34 பில்லியன் பெறுமதியுடைய 8,094 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் நிதிக் கூற்றுக்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.**

| பிரிவுகள் | 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட முடிவுறா வேலை மீதிகளின் மொத்தப் பெறுமதி | பதிலளிப்பு |
|---|---|---|
| DD-01 | 1,124,556,867.00 | 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட முடிவுறா வேலைகளின் சரியான பெறுமதி ரூபா 1,119,910,733 ஆனதுடன் மேற்குறிப்பிட்ட 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 406 வேலைகளில் ரூபா 351.06 மில்லியன் பெறுமதியான 218 வேலைகள் உரிய மாகாணங்களால் 2022 மே 31 இல் சொத்துக்களிற்கு மாற்றப்பட்டது. அதற்கமைய முடிவடைந்த அனைத்து வேலைகளையும் சொத்துக்களிற்கு மாற்றுவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நடைபெறுவரும் வேலைகள் கணக்கிலுள்ள 3 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட வேலைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு, 2022 செப்தெம்பர் 30 இற்கு முன் இந்த வேலைகளை சொத்துக்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| DD-02 | 1,099,759,554.00 | இந்த வேலைகளில் ரூபா 331.93 மில்லியன கிரயமான 194 வேலைகள் 2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு சொத்துக்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.<br><br>மேலும், மூன்றாம் தரப்பினரின் ஆட்சேபனைகள், வழி அனுமதி பெறாதது, நுகர்வோரின் தேவைகளை மாற்றுவது போன்ற பல்வேறு காரணங்களால் முடிக்கப்படாது முடிவுறா வேலைகளின் கீழ் காட்டப்படும் வேலைகளும் உள்ளன. . |
| DD-03 | 2,385,892,793.00 | இந்த வேலைகளிலுள்ள 8,878 நடைபெற்று வரும் வேலைகளின் பெறுமதியான ரூபா 1,960.13 மில்லியன் 2022 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டு நிலை யான சொத்துக்கு மாற்றப்பட்டது.முடிக்கப்பட்ட வேலைகளை மாதாந்த அடிப்படையில் சொத்துக் கணக்கிற்கு மாற்றுவது உட்பட நீண்ட காலமாக நிலுவையிலுள்ள மீதமுள்ள வேலைகளை மதிப்பாய்வு செய்து முடிக்க குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. |
| DD-04 | 1,728,878,518.00 | நிறைவுசெய்தல் அறிக்கைகள் பெறப்பட்டவுடன் அனைத்து முடிக்கப்பட்ட வேலைகளும் சொத்துக்களுக்கு மாற்றப்படும். நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மூலதன வேலைகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கும், ஒப்படைப்பதற்கும் மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டன. எனவே, 2021 உடன் ஒப்பிடும்போது தற்போது (ஆகஸ்ட் 2022 இல்) பிரிவின் நிலுவையில் உள்ள முடிவுறா வேலைகளில் 35% கணிசமான குறைவைக் காணலாம். |
| **மொத்தம்** | **6,339,087,732.00** | |

**(ஏ) புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் 2014 இல் இச்செயற்திட்டம் நிறைவடைந்த பின்னரும் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த வாகனங்கள் தொடர்பான தேய்மானம் செயற்திட்டம் முடிவடைந்த காலம் முதல் இதுவரை நிதிக் கூற்றுக்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.**

புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்திற்காக (Phase-02) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான 06 வாகனங்களின் உரிமையானது 2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கூட இ.மி.ச. இற்கு மாற்றப்படவில்லை. வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டவுடன் மூலதனமாக்கல் மேற்கொள்ளப்படும்.

**(ஐ) விநியோகப் பிரிவு 4 இற்குரிய ரூபா 32.32 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான பொருத்தமானதோர் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

வீதி விளக்கு பராமரிப்புச் செலவினத்திற்கான ரூபா 32.32 மில்லியன் தொகையான அறவிடப்பட முடியாத கணக்குகளிற்காக ஏற்பாடொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஓ) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்ததமையால், சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 41.48 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.**

| பிரிவு | 2021.12.31 இல் உள்ளவாறான சில்லறைக் கடன்பட்டோர் செலவு மீதிகள் | பதிலளிப்பு |
|---|---|---|
| DD-01 | | ரூபா 41.48 மில்லியனில், DD1 ரூபா 37.65 மில்லியன் தொகையான சில்லறைக் கடன்பட்டோர் மீதியைக் கொண்டுள்ளதுடன் அது 2021 இல் அசாதாரண கடன் நிலுவைகளுக்கு எதிரீடு செய்யப்பட்டது. இந்த மீதியில் ரூபா 32.21 மில்லியன் தொகையான செலவு மீதி ஏற்கனவே சீராக்கப்பட்டு 2022 நிதிக்கூற்றுக்களில் திருத்தப்பட்டதுடன் செலவு மீதிகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்படாமல் சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ரூபா 5.44 மில்லியன் தொகையானது 2022 செப்டம்பர் இற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| கொழும்பு சிட்டி | (968,929.00) | |
| நோர்த் சென்ட்ரல் ப்ரோவின்ஸ் | (271,130.00) | |
| நொர்தேர்ன் ப்ரோவின்ஸ் | (182,333.00) | |
| நோர்த் வெஸ்டர்ன் ப்ரோவின்ஸ் | (28,249,234.00) | |
| ஏனைய கிளைகள் | (8,084,029.00) | |
| DD-03 | (3,731,851.00) | LRDD லைட்டிங் இரத்தினபுரி செயற்திட்டத்தின் சில்லறைக் கடன்பட்டோர் மீதியானது அதிலுள்ள செலவு மீதித் தொகை காரணமாக குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில் லைட்டிங் இரத்தினபுரி கடன்பட்டோரிலுள்ள செலவு மீதியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| **மொத்தம்** | **(41,487,506.00)** | |

**(ஓ) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 2.7 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ESC) செலவினமொன்றாக விரிவான வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்விளைவாக, அதே அளவு தொகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.**

பெறவேண்டிய ஈஎஸ்சி ஆனது 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதவிழிக்கப்பட்ட மற்றும் பதிவழிக்கப்பட வேண்டிய தொகையைக் குறிக்கின்றது. இதனை பதிவழிப்பதற்குத் தேவையான சபை பத்திரங்கள், அங்கீகாரத்திற்காக 2019 ஆம் ஆண்டில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், இந்த ஈஎஸ்சி நிலுவைகளை பதிவழிப்புச் செய்யாமல், மின்வலு அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அறிவிப்பதன் மூலம் இந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது வேறு ஏதேனும் செலுத்த வேண்டியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கான மாற்றுவழிகளை நிச்சயிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்துள்ளது. மூன்று ஆண்டுகளிற்கு மேற்பட்டு இ.மி.ச. இற்கு சுமையாகக் காணப்படுகின்ற இந்த ஈஎஸ்சி ஆனது 2018 இன் தேசிய பாதீட்டு பிரேரணைகளின் ஒரு பகுதியாக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரி நிவாரணத்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் மின்வலு அமைச்சின் ஊடாக பொது திறைசேரிக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டது.

நிலைமையை தெளிவுபடுத்தி ரூபா 2.7 பில்லியனை பதிவழிப்புச் செய்வதற்கான சபை குறிப்பொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(ஓள) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 871.2 மில்லியன் தொகையான வழிச்சரக்குகள் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட கால வீச்சில் வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 5.1 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. வழிச்சரக்கு மீதிகளிற்குரிய ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவில்லை.

<table>
<tr><th>பிரிவுகள்</th><th>1 ஆண்டிற்கு மேற்பட்ட GIT மீதி</th><th>பதிலளிப்பு</th></tr>
<tr><td>DD-01</td><td>423,708,579.00</td><td>2021.12.31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 242.37 மில்லியன் (ரூபா 242,376,020) தொகையை DD-01 பிரதிநிதித்துவம் செய்ககின்றது.
<table>
<tr><th>மாகாணம்/கிளை</th><th>தொகை (ரூபா)</th></tr>
<tr><td>DGM (கொழும்பு நகரம்)</td><td>11,620</td></tr>
<tr><td>DGM (NWP 1)</td><td>20,090</td></tr>
<tr><td>DGM (NP)</td><td>1,309,000</td></tr>
<tr><td>கூட்டிணைப்பு அலுவலகம் (DD1)</td><td>241,035,310</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>242,376,020</td></tr>
</table>
ரூபா 241,035,310 கூட்டிணைப்பு அலுவலக் கணக்கு மீதியானது அகற்றப்பட்ட மின்மாற்றிகள் கணக்கு மீதியைக் குறிக்கின்றது. 2021 ஆம் ஆண்டில், கணக்குகளில் ரூபா 59,872,376.68 சீராக்கப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட மின்மாற்றிகளின் விவரங்கள் சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகங்களால் பெறப்பட்டவுடன், புத்தகங்களில் சீராக்கப்பட்டு, பொருத்தமான கணக்கீட்டு குறியீட்டிற்கு இத்தொகையை மீள வகைப்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், பொது முகாமையாளரின் 2017-04-07 ஆந் தேதியிட்ட 2017/GM/20/FM ஆம் இலக்க சுற்றறிக்கையை கடைபிடிக்குமாறும் இனிமேலும் தாமதப்படுத்தாது அத்தகைய கொடுக்கல் வாங்கல் மீதிகளை அகற்றுமாறும் மேற்குறித்த கணக்காளர் (சொத்துகள் மற்றும் MI) இற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>DD-02</td><td>106,046,035.00</td><td>வெளிநாட்டு கொள்வனவுகளின் போது, கொள்வனவு செய்யப்பட்டு முடியும் வரை ஏற்பட்ட செலவுகள், வழிச்சரக்குக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றன.<br><br>இதில் நாணயக்கடிதச் செலவுகள், 85% முற்பண செலுத்துதல்கள், போக்குவரத்து கட்டணம், உள்நாட்டு முகவர் கட்டணம், சுங்க மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட வரி போன்ற பிற தொடர்புடைய செலவுகள் அடங்கும். இறுதி 15% கட்டணம் மற்றும் பிற தொடர்புடைய கட்டணங்களுக்குப் பின்னர், பொருளின் கிரயமானது சரக்கிருப்பாக மாற்றப்படும். அதுவரை அந்த பெறுமதிகள் தற்காலிகமாக வழிச்சரக்குக் கணக்கில் கணக்கீடு செய்யப்படும்.<br><br>உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கால்வனைசிங் செய்வதற்காக LTL கால்வனிசர்களிடம் ஒப்படைக்கப்படுகையில், அந்தப் பங்குப் பொருட்கள் இ.மி.ச. இற்கு திருப்பி அனுப்பப்படும் வரை வழிச்சரக்குக் கணக்கில் கணக்கீடு செய்யப்படுகின்றது.அதன்படி, மேற்கூறியபடி, வழிச்சரக்குக் கணக்கில் மீதிகள் காணப்படுகின்றன.<br><br>ஒவ்வொரு கேள்வி கோரலின் பிரகாரம் தயரிக்கப்பட்ட வழிச்சரக்குக் கணக்கில் உள்ள பொருட்களின் விரிவான பட்டியல் 2021 திசெம்பர் இல் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>DD-03</td><td>337,317,365.00</td><td>2022 நிதியாண்டின் போது, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, வழிச்சரக்குச் கணக்கில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இருப்புகள் (99%) அகற்றப்பட்டது. மேலும், மீதமுள்ள நிலுவைத் தொகை மதிப்பாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் இருந்து அகற்றப்படும் பணி இடம்பெற்று வருகின்றது.</td></tr>
<tr><td>DD-04</td><td>4,181,331.00</td><td>குறிப்பிடப்பட்ட மீதித் தொகையில் (ரூபா 4,181,331), ரூபா 1.8 மில்லியன் வரவு மீதியைத் தவிர்த்து மேற்கு மாகாணம் தெற்கு 1 இல் உள்ள ஏனைய அனைத்து மீதிகளும் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அகற்றப்பட்டன.</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>871,253,310.00</td><td></td></tr>
</table>

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(ஃ) **தெஹிவளை கல்கிஸ்ஸ மின்சார விநியோக அபிவிருத்தித் செயற்திட்டக் கிரயமான ரூபா 39 மில்லியன் தொகை மூலதனமாக்கப்படாது 2010 முதல் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

NTDND&EIP செயற்திட்டப் பிரிவின் கீழுள்ள தெஹிவளை கல்கிசை மின்சார விநியோக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ரூபா 39,075,308 தொகையான நடைபெற்றுவரும் வேலைகளின் நிலுவை தொகையை மூலதனமாக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன் செயற்திட்டப் பிரிவின் நடைபெற்றுவரும் வேலைகளை 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் மூலதனமாக்குவதற்காக விநியோக பிரிவு 4 மூலம் செயற்திட்டப் பிரிவுக்கு ஏற்கனவே மாற்றப்பட்டுள்ளது.

(க) **அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் தொகையான ரூபா 14 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் பரிமாற்றப் பிரிவின் கீழ் நிலையான சொத்துகளாகக் காட்டப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் புதுப்பிப்பதற்கும் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகளை நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(கா) **மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்பட்ட பொருண்மையான தவறான கூற்றுக்களை கண்டறிந்து, சரிசெய்து, தடுப்பதற்காக சரியான உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையை வடிவமைத்துச் செயற்படுத்துவதற்கும் பராமரித்துச் செல்வதற்கும் சபை தவறியமையால், 2013 முதல் சபையின் நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் திருத்தி மீளமைக்கப்பட்டு வருகின்றன.**

எதிர்காலங்களில் மீளக்கூறப்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது இலங்கை மின்சார சபையின் செயல்பாடுகளின் கடினத்தன்மை மற்றும் பரிவர்த்தனைகளின் கடினத்தன்மை காரணமாக சில சந்தர்ப்பங்களின் பொருண்மையான வழுக்கள் இல்லாமல் நிதிக்கூற்றுகள் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் முன்னைய ஆண்டுகளில் ஏற்படட பொருண்மையான வழுக்கல் ஏதேனும் இருப்பின் அதனை சரி செய்வதற்கும் நிதி கூற்றுகள் மீள் கூறப்படுவது அவசியமாகிறது.

(கி) **பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றிமையின் விளைவாக ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.**

2004 ஆம் ஆண்டு விநியோக பிரிவுகள் பரவலாக்கப்படுகையில் DD1 மற்றும் DD2 தொடர்பில் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியும் ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியும் காணப்பட்டன. அத்துடன், இந்த செலவு மற்றும் வரவு மீதிகளின் தன்மை மற்றும் விவரங்களை சரிபார்க்க ஆவண சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்களின் சிறப்பாக சமர்ப்பிப்பதற்காக, அது வியாபார கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த நிலுவையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும

(கீ) **2019 செப்தெம்பர் 24 ஆந் தேதியிட்ட 19/2622/113/074 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி லக்விஜய மின்வலு உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக சபை செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றை நிறுவியிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 167.31 மில்லியன் தொகையை செலிவிடப்பட்ட பின்னர், 2021 ஒக்தோபர் 26 அன்று எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் அதை மூடுவதற்கான தீர்மானத்தை பணிப்பாளர் சபை எடுத்திருந்தது. இருந்தபோதிலும், அந்தத் தொகையை பதிவழிப்புச் செய்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.**

ஏற்பட்ட செலவினங்களை பதிவழிப்புதற்காக பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெறுவதற்காக சபை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சபை தீர்மானத்தின் படி கணக்குகளில் ஒரு ஏற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

(கு) **லக்விஜய மின்வலு நிலையத்தின் சொத்துப் பதிவேட்டில் 28 வாகனங்களின் பெறுமதியும் அதன் மீதான தேய்மானமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அந்த வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.**

இந்த வாகனங்கள் LVPP செயற்திட்டத்தின் I மற்றும் II ஆம் கட்டங்களின் கீழ் பெறப்பட்டனவாகும். இப்பிரச்னைக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்

(கூ) **சபையின் தலைமை அலுவலகக் கட்டிடம் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான காணி சபையின் நிதிக்கூற்றுக்களில் சபையின் சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, சபையின் சொத்துக்கள் ரூபா 105.62 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டுள்ளது.**

இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் காணியின் உரிமைக்கான உரிய ஆவணங்கள் இல்லாதிருப்பதன் காரணமாக இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு இ.மி.ச. காணி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. உரிய உரிமை ஆவணத்தை வழங்காமல் நீண்ட கால குத்தகைக்கு ஏற்பாடு செய்யுமாறு காணி ஆணையாளர் கொழும்பு பிரதேச செயலாளருக்கு அறிவித்துள்ளார். எவ்வாறாயினும், இ.மி.ச. குத்தகைக்கு எடுப்பதற்கு செல்ல விரும்பவில்லை என்பதுடன் சொத்தின் உரிமைக்காக காத்திருக்கின்றது.

மேலும், 2022-08-23 அன்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் ஒரு சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது. இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காண்பது என அக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

### 1.2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

**(அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் (சீபிசீ) செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் சபையிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 1,235 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்படி தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் ஏய்ப்புச் செய்யப்பட்ட ரூபா 753.61 மில்லியன் தொகையும் காணப்படுவதுடன், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அத்துடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 469.11 மில்லியன் கணக்கிணக்கம் செய்யப்படாத மீதியும் காணப்பட்டது.**

இ.மி.ச., சீபிசீ, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் திறைசேரி பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் சர்ச்சைக்குரிய ரூபா 735.61 மில்லியன் தொகை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அதனை தீர்த்துவைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. 2021 திசெம்பர் இறுதியிலும் இது வரையிலும் காணப்படுகின்ற வேறுபாடான ரூபா 469.11 மில்லியன் தொகை இ.மி.ச. இன் பட்டியல்களைத் தீர்க்கையில் முன்னுரிமையின் மீது தாமத வட்டியை நிர்ணயிப்பதன் மூலம் ஒருதலைப்பட்சமாக சீபிசீ ஆல் செய்யப்பட்ட நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக இன்றுவரை இது ஏற்பட்டுள்ளது.

**(ஆ) ரூபா 423.76 மில்லியன் இனங்காணப்படாத வரவு மீதி விநியோக பிரிவு 1 இல் 2012 முதல் அறவிடப்படாமல் வைத்திருக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதில் ரூபா 181.42 மில்லியன் தெகை தெளிவுபடுத்தப்படாமல் விநியோக பிரிவு 3 இற்கு மாற்றப்பட்டிருந்தது.**

ரூபா 423.76 மில்லியன் கடன்பட்டோர் மீதியிலுள்ள ரூபா 241.22 மில்லியன் புத்தகங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இந்த மீதித் தொகையை வசூலிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கிடைக்கப்பெறும் தகவல்களின்படி, 2015 ஆம் ஆண்டு முதல் AFM கிரய நிலையத்தின் புத்தகங்களின் கீழ் ரூபா 423 மில்லியன் மீதி காணப்படுவதற்கான காரணம் யாதெனில், இந்த தொகை நிர்வாக பரவலாக்கத்தின் போது மாற்றப்பட்டிருக்கவில்லை. அனைத்து பிரதேச AFM களுக்கும் ஏதேனும் மீதி உள்ளதா என்பதைச் சரிபார்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச AFM களிடமிருந்தும் பெறப்பட்ட பதில்களுக்குப் பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) DD1 இலுள்ள சாதாரண கடன்பட்டோர் தொடர்பில் பட்டியலிடல் முறைமை மீதிகளிற்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. அதன்படி, பட்டியலிடல் முறைமை மீதிகளிற்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்யாததன் விளைவாக மீளாய்வாண்டில் சாதாரண கடன்பட்டோரில் ரூபா 6.77 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.**

தொங்கல் கணக்குகளில் உள்ள ரூபா 6.77 மில்லியன் சாதாரண வழங்கல் வேறுபாடானது பட்டியலிடல் முறைமை மீதியில் உள்ளட்டக்கப்பட்ட போதிலும் பேரேட்டு மீதியில் உள்ளடக்கப்படவில்லை. தொங்கல் கணக்குத் தொகைகள் பட்டியலிடல் முறைமையில் கருதப்படுகின்ற போதிலும், கடன்பட்டோர் பேரேட்டு மீதியில் தொங்கல் கணக்கு மீதி சேர்க்கப்படாது அது தொங்கல் கணக்கில் தனியாக கணக்கீடு செய்யப்படுகின்றது. பட்டியலிடல் முறைமை மீதிக்கும் பேரேட்டு மீதிக்கும் இடையிலான கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்டு கணக்கிணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஈ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 297.33 மில்லியன் வரவு மீதியும் ரூபா 1,409.57 மில்லியன் செலவு மீதியும் காணப்பட்டன. இருப்பினும், இந்த தீர்க்கப்படாதுள்ள மீதிகளிற்கான கணக்கிணக்கம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. அத்துடன், ரூபா 166.45 மில்லியன் இனங்காணப்படாத ஆரம்ப மீதியொன்று சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.**

| பிரிவு | செலவு மீதி | வரவு மீதி | பதிலளிப்பு |
|---|---|---|---|
| DD-01 | 105,823,157.78 | (398,179,897.06) | சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு வழக்கமான அடிப்படையில் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டுமென்பதுடன் தகவல் தொழில்நுட்பக் கிளை யின் (IT Branch) உதவியுடன் கூடிய விரைவில் அத்தகைய கணக்குகளை சீர்செய்யுமாறு மாகாண வருவாய் கணக்காளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. வேறுபாட்டை இனங்கண்டு கணக்கிணக்கம் செய்யும் செயல் முறை இடம்பெற்று வருகின்றது. |
| DD-02 | 191.508,556.91 | (600,379,371.64) | சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிணக்கத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| DD-03 | - | (98,757,289.00) | அனைத்து மாகாணங்களின் வருவாய் மையங்களும் ஒரே தேதியில் வசூலிக்கப்படாமல் இருப்பதன் காரணமாக, கடந்த ஓரிரு நாள் அறவீடுகள் பட்டியல் முறைமைக்கு எடுக்கப்படாமையால், அந்தந்த கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்படாத அறவீட்டு கட்டுப்பாட்டுக் கணக்குக் கடனபட்டோர் மீதிப் பொழிப்புகள் இருக்கக்கூடும். இது அடுத்த மாதத்திற்குள் அகற்றப்படுவதுடன், தொடர்ந்து முன்னோக்கி எடுத்துச் செல்லப்படுகின்றது. எவ்வாறாயினும், கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படுவ துடன், ஒவ்வொரு மாகாணங்களிலும் இனங்காண்பதற்கான மீதிகள் கிடைக்கக்கூடியதாக உள்ளன. |
| DD-04 | - | (375,576,200.86) | தென் மாகாணம் 1-2021 டிசம்பர் 31 ஆம் தேதியில் உள்ளவாறு SP1 இலுள்ள சேகரிப்புக் கட்டுப்பாட்டின் ரூபா 148 மில்லியன் வரவு மீதிக்கான கணக்கிணக்கம் நடைபெற்று வருகின்றது. ஜுலை 31 நிலவரப்படி மீதி ரூபா 11 மில்லியன் ஆகும்.<br><br>தென் மாகாணம் 2-சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு, அது தொடர்பான கணக்கிணக்கம் உரிய நேரத்தில் அனுப்பப்படும். |
| HQ | (38,049,717.00) | | திருத்தம் செய்வதற்காக ஏனைய பிரிவுகளுடன் கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| **மொத்தம்** | **297,331,714.69** | **(1,510,942,475.56)** | |

**(உ) 1998 முதல் 2021 வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 68.99 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு எரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

வாடிக்கையாளரின் முறைப்பாடுகள் பெறப்பட்ட பின்னர் தொங்கல் கணக்கு மீதிகளை அகற்ற முடியும். வாடிக்கையாளர் சரியான வாடிக்கையாளர் கணக்கு இலக்கத்தை அறிவிக்கையில் தொடர்புடைய தொகையை வாடிக்கையாளர் கணக்கிற்கு மாற்ற முடியும். மேலும், வசூலித்தல் முகவர்களிடமிருந்து விவரங்களைப் பெறுவதன் மூலம் தொங்கல் கணக்கு அறவீட்டு மீதியை அகற்றுவதற்கு தொடர் நடவடிக்கை செயல்படுத்தப்படுகின்றது.

வணிக வங்கிகள் மற்றும் பிற வணிகர்களால் பண வைப்பு இயந்திரங்களை (சிடிஎம்) அறிமுகப்படுத்தியதன் மூலம், தொங்கல் கணக்கு ஏற்படும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், சிடிஎம் இயந்திரம் நுகர்வோரால் இயக்கப்படுவதாலும், சரியான கணக்கு இலக்கத்தை நிரூபிப்பதற்கு வேறு எந்த ஆவண ஆதாரமும் இல்லாததாலும், தொங்கல் கணக்குகளை வங்கிகளால் அகற்றுவதற்குத் தேவையான மேலதிக தகவல்களை எங்களுக்கு வழங்க முடியாதுள்ளது.

நீண்டகாலமாக நிலுவையிலுள்ள தொங்கல் கணக்கு மீதிகள் தொடர்பில், ஏனைய வருமானத்திற்கு இந்த நீண்டகால தொங்கல் கணக்கு மீதிகள உறிஞ்சுவதற்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இ.மி.ச. இன் பட்டியல்களில் நாங்கள் இதனை தெளிவாகக் கூறியிருப்பதால், பணம் செலுத்தும் தேதியிலிருந்து 2 ஆண்டுகள் வரை மட்டுமே கட்டண வினவல்கள் கோரப்படுகின்றமையால் இது சாத்தியமாகும்.

**(ஊ) சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது.**

இந்த விடயம் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் 28 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டக்குறிப்பின் படி, மின் கொள்வனவு உடன்படிக்கை மற்றும் AES Kelanitissa (Pvt) Ltd உடன் தொடர்புடைய மொத்தக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பான பரிந்துரையை மீளாய்வு செய்து சமர்ப்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட குழுவின் அறிக்கையை இறுதி செய்ய கணக்காய்வுக் குழு உத்தரவிட்டது. குழுவின் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

தகவல் பந்தி

1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

தகவல் பந்தி

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தகவல் பந்தி

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

தகவல் பந்தி

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் | பதில் |
|---|---|---|
| அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 6.02 பில்லியன் பெறுமதியான 261.32 புறா எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 3 சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2021 இல் ஓய்வுவழங்கப்பட்ட 3 IPP ஆலைகள்: ஏஸ் எம்பிலிபிடிய, ஏஸ் பவர் ஜெனரேசன் மாத்தறை மற்றும் ஆசியா பவர்<br><br>நாட்பட்ட IPP மின் நிலையங்களில் இருந்து மின்சக்தியை கொள்வனவு செய்வதற்காக எந்தவொரு பரிமாற்றல் அனுமதிப்பத்திரத் தையும் பெறுவதற்கு, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் (மின்சாரச் சட்டம்) பிரிவு 7 (1) அல்லது 43 (1) இல் தடைகளும் இல்லை. இந்த மூன்று நாட்பட்ட IPP மின் நிலையங்களின் காலாவதியான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை (பிபிஏ) நீடிக்க இ.மி.ச. பியூசிஎஸ்எல் இன் ஒப்புதலை கோரியதுடன் கால நீடிப்புச் செய்யப்பட்ட பிபிஏக்களை அதன் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தது.<br><br>மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமைக்கு இணங்க எதிர்வுகூறப்பட்ட மின்சாரத் தேவையினை பூர்த்திசெய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக இ.மி.ச. இந்த மின் நிலையங்களின் பிபிஏ களை காலநீடிப்புச் செய்தல் வேண்டும். மின் வெட்டு ஏதேனும் விதிக்கப்பட்டால், தொழிற்சாலைகள்/ஹோட்ட ல்கள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு மின்சக்தி வழங்கப்படாததன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தை இ.மி.ச. மேலும் கருத்தில் கொண்டது. அமைச்சரவையின் அங்கீக ாரத் துடன் இ.மி.ச. இதனை செய்துள்ளது. |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் | பதில் |
|---|---|---|
| (ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஐஐ ஆம் பகுதியின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,657 மில்லியன் தொகையை மாத்திரம் இ.மி.ச. முதலீடு செய்திருந்தது. கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி, மீளாய்வாண்டில் ரூபா 852.87 மில்லியன் தொகை மேலதிகமாக முதலீடு செய்யப்படுதல் வேண்டுமென்பது வெளிப்படுத்தப்ப ட்டது. | இ.மி.ச. பல ஆண்டுகளாக மோசமான திரவத்தன்மை சூழ்நிலையை சந்தித்துள்ளமையால் காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் இந்த வேறுபாடு முக்கியமாக எழுந்துள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் எரிபொருள் மற்றும் நிலக்கரி விலைகள் அதிகரித்திருந்தமையால் மின் பிறப்பாக்கக் கிரயங்கள் அதிகரித்த போதிலும், மின் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்படவில்லை. இருப்பினும், இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான சொத்துகளில் 1மூ க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 3.5 ஆம் பிரிவு | ஏற்பாடுகளுக்கு முரணாக, அவ்வப்போது வரிசை அமைச்சுக்கும் சேமலாப நிதியத்துக்கும் விடுவிக்கப்பட்டிருந்த 65 ஊழியர்களிற்காக ரூபா 105.22 மில்லியன் தொகையினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. | ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை இ.மி.ச.இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமையால், ஏற்பட்டுள்ள செலவினத்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இருப்பினும், அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சார்பாக இ.மி.ச. செலுத்திய சம்பளங்கள் மற்றும் ஏனைய நலன்களை மீளளிப்புச் செய்யுமாறு கோரி ஒரு கடிம் மின்வலு அமைச்சிற்கு இ.மி.ச. இன் பொது முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அமைச்சின் கணக்காய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்கப்பட்ட தீர்மானம் | ஏற்பாடுகள் மற்றும் தீர்மானங்களிற்கு முரணாக ரூபா 1.2 பில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் விடுமுறை காசாக்கல் என்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, முகாமைத்துவத்துடனான கூட்டு உடன்படிக்கையின் ஊடாக இ.மி.ச. இன் ஊழியர்களிற்கு சம்பளம் மற்றும் ஏனை படிகள் செலுத்தப்பட்டுள்ளன. தொழில் ஆணையாளர் நாயகத்தினால் 2018 ஏப்ரல் 23 ஆந் திகதிய 2068/5 ஆம் ,லக்க வர்த்தமானியில் இறுதியாக வெளியிடப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் 13 ஆம் பிரிவு கூறுவது யாதெனில், "அந்தந்த படிகளுக்குப் பொருந்தக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்த உடன்படிக்கை அமுலுக்கு வரும் தேதியில் நடைமுறையிலிருந்த படிகளை இந்த உடன்படிக்கையின் காலப்பகுதியில் ஊழியர்கள் தொடர்ந்தும் பெறுவார்கள்" என்பதாகும். ("ඒ ඒ දීමනාවලට අදාලවන කොන්දේසිවලට යටත්ව, මෙම ගිවිසුම බලාත්මක වන දිනයෙහි වලංගුව ක්‍රියාත්මක වෙමින් පවතින දීමනා අඛණ්ඩව මෙම ගිවිසුම් කාල සීමාව තුළ ඉදිරියටත් සේවා නියුක්තිකයින්ට ලැබෙනු ඇත".) விடுமுறை காசாக்கலுக்கான படி 1984 ஆம் ஆண்டு முதல் இ.மி.ச. இன் ஊழியர்களிற்கு வழங்கப்பட்டுள்ளமையால், முகாமைத்துவத்தால் சட்டப்பூர்வமாக கைச்சாத்திட்ட ஒரு கூட்டு உடன்படிக்கையில் வழங்குவதாக உறுதியளித்ததுள்ள இந்த நலனை மறுக்க முடியவில்லை.<br><br>இருப்பினும், 2022.07.14 ஆந் திகதிய 03/2022(ஐ) ஆம் இலக்க PED சுற்றறிக்கைக்கு அமைவாக 2022 இற்கான பயனப்டுத்தப்படாத விடுமுறை களின் காசாக்கல் கொடுப்பன வை நிறுத்துவதற்கு சபை தீர்மானித்தது. |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் | பதில் |
|---|---|---|
| (உ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பின்னிணைப்பு "அ" | ஏற்பாட்டுக்கு முரணாக, உழைப்புக்களை கணிப்பிடுகையில் எக்சோடஸ் கொடுப்பனவு, முதுமானிப் பட்டக் கொடுப்பனவு மற்றும் உயர்தொழில் கொடுப்பனவு / பகுதி உயர் தொழில் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து ஆகக்கூடிய கொடுப்பனவை சபை கருத்தில் கொண்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் ஊ.சே.நி. உதவுதொகை செலுத்தப்பட்டிருந்தது. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரிவு 47 இன் துணைப்பிரிவு (ஊ) இன் படி, ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையை கணக்கிடுவதற்காக "பரிந்துரைக்கப்படக்கூடிய ஏனைய வகையான ஊதியங்கள்" பயன்படுத்தப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த விதிக்கு இணங்க, ஊழியர் சேமலாப நிதிக்கான வருவாயைக் கணக்கிடும்போது, வருகைக் கொடுப்பனவு, முதுகலை பட்டப்படிப்பு கொடுப்பனவுகள் அல்லது தொழில்முறை கொடுப்பனவு ∴ அரை-தொழில்முறை கொடுப்பனவுகளில் மிக உயர்ந்ததைக் கருத்தில் கொள்ள பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதன்படி, இது சட்டத்திற்கு எதிரானது அல்ல. |
| (ஊ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் 6.1.3 ஆம் பிரிவு | 220மெ வலுவில் சபையினால் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இற்கு வழங்கப்பட்ட மின்சக்தியானது 220மெ வலுவில் வழங்கப்படுவதற்கு எந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் இல்லை என்றால், அத்தகைய விநியோகத்தின் போது சபை அறவிடுகின்ற விலை மின்சக்திக்கான கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். இந்த விதிமுறைக்கு மாறாக, கம்பனிக்கு சபையினால் வழங்கிய மின் சக்தி கட்டண வீதத்தை கணிப்பிடுகையில் இயலளவுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை கருத்தில் கொள்ளாமல் எரிசக்தி கட்டணத்தை மட்டுமே சபை கருத்தில் கொண்டிருந்தது. | கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலுள்ள வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் 220 மஶ மின்னழுத்த மட்டத்தில் இ.மி.ச. இன் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அதே மின்னழுத்த மட்டத்தில் மின் மானி அளவீட்டு முறைமை நிறுவப்பட்டுள்ளது. 2021-12-16 ஆந் தேதியிட்ட யுபுஆ (DD 2) கடிதத்தின் மூலம் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இனை டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளராகக் கருதுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது. இது தொடர்பாக 2022-01-24 அன்று DGM (EM) கிளையில் இந்த விடயத்தைப் பற்றி கலந்துரையாட ஒரு கூட்டம் நடத்தப்பட்டதுடன், அக்கூட்டத்தில் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது,<br><br>அ) இப்போது நடைமுறையிலுள்ள எதிரீடு செய்தல் முறையைப் பின்பற்றுவதற்கு வழங்கப்பட்ட உத்தரவுகளைத் தேடுதல் மற்றும்ஸ்ரீ<br><br>ஆ) சம்மந்தப்பட்ட முழு காலத்திற்குமான எதிரீடு செய்தல் முறை மற்றும் ஐ3 கட்டணத்திலிருந்து இ.மி.ச. ஆல் வெஸ்ட் கோஸ்ட் இற்கு விதிக்கப்படும் கட்டணங்களை ஒப்பிடுதல்.<br><br>மின்சார கொள்முதல் உடன்படிக்கையின் பிரிவு 6.1.3 இன்படி, 2014-11-12 ஆந் தேதியிட்ட AGM (கூட்டிணைப்பு உபாயம்) கடிதத்தின் மூலம், இ.மி.ச. இல் இருந்து நுகரப்படும் மின்சார சக்தியின் எதிரீட்டை, வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இற்கு செலுத்த வேண்டிய எரிசக்தி கட்டணத்தில் இருந்து மட்டுமே ஈடுசெய்ய முடியும். அந்த திசையில் இருந்து இ.மி.ச 2014 ஒக்தோபர் முதல் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் மின் உற்பத்தி நிலையத்தால் இறக்குமதி செய்யப்படும் எரிசக்தியின் அளவை இ.மி.ச. எதிரீடு செய்யத் தொடங்கியது.<br><br>ஒப்பீட்டின்படி, ஐ3 கட்டண முறையின் ஊடாக சம்பந்தப்பட்ட முழு காலத்திற்கும் இ.மி.ச. ஆல் வெஸ்ட் கோஸ்ட்டிற்கு விதிக்கப்பட்ட கட்டணத் தொகையை காட்டிலும் எதிரீடு செய்தல் தொகையானது அதிகமாகும். எனவே, தற்போது டிரான்ஸ்மி'ன் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறையைத் தொடர்வதற்கும், வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட்டை டிரான்ஸ்மி'ன் வாடிக்கையாளராகக் கருதுவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளர் கட்டணம் கிடைக்கும் பட்சத்தில் டிரான்ஸ்மிஷன் பிரிவுக்கு அதனை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. |
| (எ) 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கிகளை பயன்படுத் துவதன் மீதான அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | பல்வேறு காரணங்களால் மேற்படி தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் | பதில் |
|---|---|---|
| (ஏ) 2015 ஜுன் 17 ஆந் திகதிய PED/03/2015 ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 27 ஆம் திகதிய PED/01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | மேலதிகமாக நடாத்தப்பட்ட சபை கூட்டங்களிற்கான அமர்வுப் படிகள் மற்றும் போக்குவரத்துப் படிகளிற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | பொதுவாக, ஒரு மாதத்திற்கு 02 சபைக் கூட்டங்கள் மட்டுமே நடத்தப்படுகிறது. எவ்வாறாயினும், அவசரம் மற்றும் விடயத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு விசேட சபைக் கூட்டம் நடத்தப்பட்டால், ஒவ்வொரு மேலதிக கூட்டத்திற்கும் சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் சபை உறுப்பினர்கள் மற்றும் வரிசை அமைச்சின் அவதானிப்பாளருக்கு அமர்வுப் படிகள் / போக்குவரத்து படிகள் வழங்கப்பட்டது. |
| (ஐ) 2018 ஜுலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் அலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படாது இரண்டு ஓய்வுபெற்ற ஊழியர்கள் சபையின் மதியுரைஞர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். | 1969 இன் 17 ஆம் இலக்க இ.மி.ச. சட்டத்தின் பிரிவு 13 இன் கீழ் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, “தற்போதைய புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 70% உறிஞ்சுதல் திட்டத்திற்கு இணங்க, பரிமாற்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான கொள்கை விடயங்களில் உதவுவதற்காக தலைவர் மற்றும் சபையால் மதியுரைஞர்கள் நியமனம் செய்யப்பட்டனர். |
| (ஒ) 2021 நவம்பர் 21 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகளிற்கான கையேட்டின் 5.1 ஆம் பிரிவு | சபை தொடர்ச்சியாக நட்டம் ஈட்டி வருகின்ற போதிலும், வரைவு கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் சபை மீளாய்வாண்டின் போது ரூபா 2.7 பில்லியன் தொகையினை உபகாரச் சம்பளமாக செலுத்தியிருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்குவது தொடர்பாக தொழிற்சங்கங்களிட மிருந்து இ.மி.ச. இன் முகாமைத்துவத்திற்கு கிடைக்கப்பெற்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில், இதற்காக பணிப்பாளர் சபையிடம் 2021 திசெம்பர் 06 அன்று முகாமைத்துவம் ஆலோசனையைக் கோரியது இதன் விளைவாக, போனஸ் செலுத்த சபை தீர்மானித்து அதனை 2021 திசெம்பர் 17 அன்று இ.மி.ச. இன் GM இற்குத் தெரிவித்தது. அதன்படி, சபையின் தீர்மானத்திற்கு அமைய இ.மி.ச. இன் GM இனால் 2021 ஆம் ஆண்டிற்கான போனஸ் செலுத்துவதற்கான ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |

**2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,**

**(அ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது சபையின் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,134.9 மில்லியன் மற்றும் ரூபா 1,544.4 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் BM/2021/22/01 ஆம் இலக்க சபை தீர்மானம் ஆகியவற்றுக்கு முரணாக 323 ஊழியர்களிற்காக செலுத்தப்பட்டிருந்த படிகள் அவர்களது சம்பளத்தைக் காட்டிலும் 65 சதவீதத்தை விஞ்சியிருந்தது.**

2022 ஜுலை 27 முதல் அமுலுக்குவரும் வகையில் சம்பளத்தில் 65 சதவீத எல்லைக்கு பதவியணியினர் கொடுப்பனவுகளை மட்டுப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

**(ஆ) உழைக்கும் போதே செலுத்தும் (APIT) வரி / முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை / முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் சபை அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 4.98 பில்லியன் தொகையை அவ்வாறு செலுத்தியிருந்தது.**

2020 நவம்பர் மாதம் முதல், இ.மி.ச. இன் ஊழியர்களால் முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரி (APIT) செலுத்தப்படுகின்றது.

## குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(இ) **1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்கள் வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், சபை எதிர்கொண்டுள்ள திரவ பிரச்சனைகளை கருத்திற் கொள்ளாது 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை சபை வழங்கியிருந்தது. 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.**

- பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்
- பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு

அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

(ஈ) **2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சட்டத்தின் 24 (1) (இ) பிரிவின் படி, மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், நீண்டகால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம் மின்வலு ஆலைகள் நிறுவப்பட்டிருக்காமை காரணமாக மேலதிக கிரயத்தில் குறுங்கால அடிப்படையில் அனல் மின்வலுவை கொள்வனவு செய்யவேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது.**

இ.மி.ச. இன் நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்க செயற்திட்டங்கள் (LTGEP) 20 ஆண்டுகளுக்கான குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால மின் இயலளவு தேவைகளைக் கொண்டுள்ளது. எனவே, அடிப்படை ரீதியாக அல்லது தற்செயல் பகுப்பாய்வின் கீழ் சில வருடங்களிற்கான உடனடி குறுகிய கால இயலளவு தேவைப்பாடுகள் கூட LTGEP களில் குறிப்பிடப்படுகின்றது. நீண்ட கால, குறைந்த விலை மின்வலு நிலையங்கள் சரியான நேரத்தில் எதிர்பார்த்தபடி உருவாக்கப்படாத போது, (இதற்குப் பல காரணங்கள் உள்ளன, அவற்றில் பெரும்பாலானவை இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை), மின்சார பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காகவும் மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்) கடமைக்கு இணங்க, முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்குப் போதுமான மின் இயலளவு இருப்பதை உறுதி செய்வதற்காகவும் குறுகிய கால குறைநிரப்பு இயலளவை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயம் இ.மி.ச. இற்கு ஏற்படுகின்றது.

எனவே, குறிப்பிடப்பட்டுள்ள இந்த கொள்வனவு, பிரிவு 24 (1) (இ) உடன் இணங்குவதனால் இது சட்டத்தை மீறிய செயல் அல்ல.

மேலும், இ.மி.ச. நீண்ட கால தலைமுறை விரிவாக்கத் திட்டங்களைத் தயாரித்திருந்த போதிலும், LTGEP களில் இனங்காணப்பட்ட இத்தகைய நிலையங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள இ.மி.ச. இற்கு எவ்வித அதிகாரம் இல்லை. இ.மி.ச. ஏனைய முகவர் நிலையங்களை பெரிதும் சார்ந்துள்ளதுடன் PUCSL இனால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க "மின்சாரம் (கொள்வனவு) விதிகள் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளில் சில ஒன்றை ஒன்று விஞ்சுவதாக உள்ளன.

10 வருட காலத்திற்கு 200 MW உலை எண்ணெய் எரித்தல் நடுத்தர கால மின்வலு இயலளவை இரத்துச் செய்தல்.

எங்கள் பதிவுகளின்படி, LTGEP 2018-2037 இல் இனங்காணப்பட்டிருந்த 320 MW நடுத்தர கால இயலளவுத் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதற்காக இ.மி.ச. 200 MW நடுத்தர கால மின்வலுக் கொள்வனவைச் செய்திருந்தது. இந்த கொள்வனவானது ஆரம்பத்தில் அதாவது 2016 இல் 170 MW ஆலையாக (LTGEP 2015-2034 இல் இனங்காணப்பட்டவாறு) தொடங்கப்பட்டதுடன் பின்னர் அது (LTGEP 2018-2037 இன் சமர்ப்பிப்புடன்) காலியில் 100 MW நில அடிப்படையிலான ஆலையாகவும், நான்கு உப மின் நிலையங்களில் மற்றுமொரு 4x24 MW ஆலையாகவும் மாற்றப்பட்டது. இந்த காலி GSS இல் உள்ள 100 MW ஆலையினதும் 4x24 MW ஆலையினதும் தேவை குறிப்பாக LTGEP 2020-2039 வரைவில் அடையாளம் காணப்பட்டவையாகும்.

TEC இன் நியமனம், SCAPC இடமிருந்து அனுமதியைப் பெறுதல், PUCSL இன் ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்தல் போன்றவை உள்ளிட்ட கொள்வனவுச் செயல்முறைகள் ஊடாக கொள்வனவு இடம்பெற்றுள்ளது. ஆனால் 2020-11-02 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்வனவுத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டது.

(I) **අමාත්‍ය මණ්ඩල පත්‍රිකා - ප්‍රතිපත්තිමය කරුණු:**

15. අමාත්‍ය මණ්ඩල පත්‍රිකා අංක 20/1660/318/024 වූ, **"වර්තමාන විදුලි ජනන සැලසුම් සහ සිදුවිය හැකි අඩුපාඩු (Lapses) අවම කිරීම සඳහා යෝජනා"** යන මැයෙන් විදුලිබල ඇමතිතුමා ඉදිරිපත් කළ 2020-10-19 දිනැති සංදේශය - ඉහත සඳහන් සංදේශය, මුදල් ඇමතිතුමාගේ සහ ජලසම්පාදන ඇමතිතුමාගේ නිරීක්ෂණ සහ

## குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**Proposals/ Requests** : Approval of the Cabinet of Ministers is sought for the following proposal;

I. **Proposal 5.1**

To direct Ceylon Electricity Board (CEB) to initiate procurement to add medium term furnace oil fired power capacity up to 200 MW for a term of ten years with the approval of the Attorney General and the Public Utilities Commission of Sri Lanka (PUCSL).

II. **Proposal 5.2**

a) To direct CEB to first obtain the approval of the PUCSL to negotiate to extend the period of the power purchase agreements of three furnace oil fired IPP plants (ACE Power Embilipitiya, ACE Power Matara, and Asia Power) till 2023.

b) To instruct the Secretary to the Treasury to appoint a Project Committee and a Cabinet Appointed Negotiating Committee for the above purpose

அதன்படி, 2020 திசெம்பர் 30 அன்று இடம்பெற்ற கூட்டத்தில் CMT அதனை இரத்துச் செய்தது.

**கௌரவ நிதி அமைச்சரின் அவதானிப்புகள்.**

**Observations** : **I & II** **Proposal 5.1 and 5.2**

I observe that the current policy of the Government on power generation reiterate the need for enhancement of renewable energy while minimizing use of thermal energy. Therefore Ceylon Electricity Board need to expedite implementation of the power plants that are highlighted in the Cabinet Memorandum without further delay. It is noted that some of these plants are almost ready to be installed into the national grid. At the same time, apart from its inconsistency with the county's power generation policy in terms of environmental implications, procuring of emergency power from diesel based independent power producers will add significant burden to the economy As a more feasible solution CEB may explore the possibility of acquiring some of these diesel power plants at a reasonable cost. Therefore, I am not in agreement with the proposals.

**அமைச்சரவைத் தீர்மானம்**

(ii) මුදල් අමාත්‍යතුමාගේ නිරීක්ෂණවල පළමු ඡේදයෙහි දක්වා ඇති කරුණු හේතු කොට, සංදේශයේ 5 ඡේදයෙහි සඳහන් (5.1) සහ (5.2) යෝජනා සම්බන්ධයෙන් ඉදිරි ක්‍රියාමාර්ග ගැනීම අවශ්‍ය නොවන බව.

(உ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்பபுக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,357.60 மில்லியனாக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 8,089.50 மில்லியனாக இருந்தது.

இ.மி.ச. இன் DG (CS&RA)/GEN/1 ஆம் இலக்க 2021.05.28 ஆந் திகதிய கடிதத்திற்கு மின்வலு அமைச்சின் பதிலுக்காக காத்திருக்கப்படுகின்றது. அதற்கான ஞாபகப்படுத்தல் கடிதம் CEB/GM/CEB/03/Vol.1 ஆம் இலக்கத்தின் கீழ் 2022.06.09 ஆந் திகதி மின்வலு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது.

மேலே உள்ளவைக்கு மேலதிகமாக, பாவனையாளர் பாதுகாப்பு வைப்புக்கள் மீது வட்டிக் கொடுப்பனவை தொடங்குவதற்கு சபையிடமிருந்து அனுமதி கோரி சபைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(ஊ) **தொடர்புடைய தரப்பினர்கள், தொழில்கொள்வோர் மற்றும் தொழிற்சங்கங்களால் கைச்சாத்திடப்பட்டிருக்காத வரைவு கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் ஊழியர்களின் சம்பளத்தை 25 சதவீதத்தினால் சபை 2021 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்தது. அதற்கமைய, ஏறத்தாழ ரூபா 9.6 பில்லியன் அதிகாரமற்ற கொடுப்பனவு காரணமாக சபைக்கு எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளது.**

2021 ஜூன் 15 இல் இடம்பெற்ற விசேட சபைக் கூட்டத்தின் போது, 2021 சனவரி முதல் அமுலுக்குவரும் வகையில் 2021 - 2023 காலத்திற்கான இ.மி.ச. ஊழியர்களின் சம்பளத்தை 25 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு சபை தீர்மானித்திருந்தது. மேலும், இது தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை வெளியிடுமாறு இ.மி.ச. இன் பொது முகாமையாளருக்கு சபை ஆலோசனை வழங்கியது. சபையின் தீர்மானத்தின் படி இ.மி.ச. இன் பொது முகாமையாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

மேலும், காலக்கிரமத்தில் கூட்டுப்பேரம்பேசல் உடன்படிக்கையில் கைச்சாத்தி டுமாறு அனைத்து தொழிற்சங்கங்களிற்கும் அறிவிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது.

(எ) **2017 மே 16 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சீஎம்ஈசீ பொறியியலாளர்களை சபைக்கு இடமாற்றம் செயவ்தற்காக சாத்தியமான தொழில்நுட்ப வேலைத்திட்டமொன்றின் முக்கியத்துவம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த தீர்மானத்தை கருத்திற்கொள்ளாதும் அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமலும் லக்விஜய மின்வலு நிலையத்தை இயக்குதல் மற்றும் பேணுதலுக்கான இரண்டாவது மற்றும் மூன்றாவது தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் முறையே 2017 நவம்பர் 23 மற்றும் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதிகளில் சபை கைச்சாத்திட்டிருந்தது. மேற்படி இரண்டு உடன்படிக்கைகளினதும் மொத்தப் பட்டியல் பெறுமதி (2017 ஒக்தோபர் 01 முதல் 2021 செப்தெம்பர் 30 வரை) யூஎஸ்டொலர் 13,766,367 ஆகும். மேலும், இந்த ஆலையை 2022 சனவரி 01 முதல் ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைச் சேவையை பெற்றுக் கொள்வதற்காக சீஎம்ஈசீ லங்கா (பிரைவட்) லிமிடட் உடன் 2021 திசெம்பர் 27 ஆந் திகதி ரூபா 435.64 மில்லியன் தொகைக்கு (பெ.சே.வ. உள்ளடங்கலாக) மேலுமொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த மின்வலு ஆலையை இயக்குதல் மற்றும் பராமரிப்பத்தல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட பின்னரும், 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் 758,587 அறா எரிசக்தி இழப்பு மற்றும் 105 நாட்கள் செயலிழப்புடன் 16 மின்சாரத் தடைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த மின்சாரத் தடங்கல்கள் நாட்டின் மின்வலு விநியோகத்தில் குறிப்பிடத்தக்களவு எதிர்மறையான தாக்கத்தை விளைவித்திருந்தன.**

2017 இன் ஆரம்பத்தில், சுமார் 170 CMEC ஊழியர்கள் பணியாற்றினர். காலப்போக்கில் இ.மி.ச. ஊழியர்களுக்கு அவர்களின் அறிவை மாற்றியதன் மூலம் அந்த எண்ணிக்கை 15 ஆகக் குறைக்கப்பட்டது.

CMEC ஊழியர்களின் குறைப்பானது, இ.மி.ச. இன் ஊழியர்களுக்கு அறிவு மாற்றப்பட்டதை தெளிவாகக் குறிக்கின்றது.

தற்போதைய நிலை பின்வருமாறாகும்.

கௌரவ மின்வலு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை (82/2921/E) கருத்தில் கொண்டு, O&M ஆலோசனை சேவையை வழங்கியமைக்காக CMEC க்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்துவதற்கு 2021 திசெம்பர் 29 அன்று அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. தொடர்புடைய தீர்மானத்தின் தொடர்பு இலக்கம் PE/TEN/SCAPC/SJ/2021/18 ஆகும்.

செயலிழப்புகளின் எண்ணிக்கை ஆலையின் செயலாற்றலை பிரதிபலிப்பதில்லை. உள்வாரி மற்றும் வெளிவாரியான சிக்கல்களால் ஆலையில் செயலிழப்புகள் இடம்பெறுகின்றன. வெளிவாரி சிக்கல்களை கட்டுப்படுத்துவதற்கு LVPP க்கு முடியாதுள்ளது. மின்வலு உற்பத்தி நிலையங்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு பொறியின் கிடைப்பனவுக் காரணீ மற்றும் பொறிக் காரணி ஆகியவை பொருத்தமான குறியீடுகளாகும். ஐயவினா இல. 2.2.4 (ஊ) இல் வழங்கப்பட்டுள்ள பிரிவு 2 மற்றும் பிரிவு 3 பொறியின் கிடைப்பனவுக் காரணி மற்றும் பொறிக் காரணி விபரங்கள் தொடர்பான பதிலை தயவுசெய்து கவனிக்கவும்.

2.2.4 **பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என.**

(அ) **2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யு) 2016 செப்டம்பர் இல் நிறுவப்பட்டதுடன் சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்விமனு ஆவணங்களின் வரைபினைத் தயாரித்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 301.19 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 பெப்ரவரி 23 அன்று நடைபெற்ற சபை கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்தை எஸ்எல்இக்கு "ஒற்றை மூல கொள்வனவு" என்ற அடிப்படையில் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்த செயற்திட்டத்திற்கான முதலீட்டை முதலீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், இந்த செயற்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 301.19 மில்லியன் செலவை வேறொரு முதலீட்டாளரால் ஏற்க முடியாத சூழ்நிலை காணப்படுவதால் இந்தச் செலவு சபைக்கான செலவாகவே காணப்படக்கூடிய ஆபத்து உள்ளது.**

கணக்காய்வுக் குழுவின் அவதானிப்புக்காக சபைப் பத்திரம் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

## குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்களின் கொள்வனவுகளிற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(i) அதைப் பொருட்படுத்தாமல், கழிவுகளிலிருந்து எரிசக்தி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு கிலேவொட்சுக்கு ரூபா 36.20 வீதத்தில் (20 ஆண்டுகளுக்கு சமவிகித கட்டணம்) ஐந்து மாநகரசபைகளின் திடக்கழிவு மின்வலு ஆலைகளை செயல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன்படி, ஒரு திடக்கழிவு ஆலைக்கான மின்சாரம் கொள்வனவு உடன்படிக்கை 2020 திசெம்பரில் ஒரு சுயாதீன மின்வலு உற்பத்தியாளருடன் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 வீதமான மொத்த கட்டணத்தை சபை ஏற்றிருந்தது. இருப்பினும், அமைச்சரவை தீர்மானத்தின் படி கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 13.10 வீத கட்டணம் பொது திறைசேரியினால் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.**

என்சிஆர், செயற்திட்டங்களை செயல்படுத்துவதில் கேள்விகோரல் நடைமுறையின் நம்பகத்தன்மை தொடர்பில் தொழில்துறையிலுள்ள ஆர்வமுடைய தரப்பினர்களிடையே தெளிவின்மை உள்ளது. எனவே, என்சிஆர்இ-அடிப்படையிலான மின்வலு இயலளவுக் கொள்வனவானது தரப்படுத்தப்பட்ட கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜுலை வரை தொடர்ந்து நடத்தப்பட்டது. மின்சக்தி கொள்வனவானது போட்டி கேள்விகோரல் அடிப்படையில் அமைவேண்டுமென சட்டமா அதிபர் தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், கொழும்பு (மாநகரசபை) கழிவுகளை எரிசக்தி மின்வலு செயற்திட்டத்திற்கும் தும்போவில கரடியான (மாநகரசபை) கழிவுகளை எரிசக்தி செயற்திட்டத்திற்கும் மாற்றுவதற்காக PPA களில் கைச்சாத்திடுவதற்கான 2017-10-10 மற்றும் 2019-02-12 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானங்களுடன் இ.மி.ச. இணங்கியுள்ளது.

அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி, ஒரு கிலோவாட்க்கான மொத்த கட்டணமான ரூபா 36.20 தொகையில் ரூபா 13.10 தொகை பொது திறைசேரியிலிருந்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் மீதமுள்ள பகுதியை திருப்பிச் செலுத்துவதற்காக பொது திறைசேரிக்கு பட்டியல் செய்யப்பட்டது. 2020 திசெம்பர் முதல் 2021 ஆகஸ்ட் வரை மொத்தம் ரூபா 633,260,550.00 பட்டியல்கள் இ.மி.ச ஆல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், இன்று வரை எந்தத் திருப்பிச் செலுத்தும் கோரிக்கையும் பொது திறைசேரியில் இருந்து திருப்பிச் செலுத்தபடவில்லை.

**(ii) 2021 திசெம்பர் 31 வரை 390 மெகாவாட் இயலளவுடைய 7 என்சிஆர், செயற்திட்டங்களுக்கான கொள்வனவுகள் மாத்திரமே தொடங்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட மின்வலு ஆலைகளில் 49 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஒரு மின் நிலையம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தன.**

2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 43(4) (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றிறிலுள்ள ஏற்பாடுகளை பிரயோகிப்பது தொடர்பில் 2013 நவம்பர் தேதியிட்ட கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் வழங்கியிருந்த சட்ட அபிப்பிராயத்தின் படி, 2013.08.06 ஆம் தேதிக்குப் பின்னர் கேள்விகோரல் செயல்முறையை ஏற்றுக்கொள்வதன் மூலம் மின்பரிமாற்ற உரிமம் பெற்றவர்களால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை கொள்வனவு செய்வதற்கான கேள்விகோரல் முறையை தொடங்குவது அவசியமானதாகும். அதன்படி, என்சிஆர்இ செயற்திட்டங்களிலிருந்து 390 மெகாவாட் மொத்த இயலளவுடைய எரிசக்தியைக் கொள்வனவு செய்வதற்கு ஏழு கேள்வி கோரல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவது கேள்விகோரல் குறித்த விவரங்கள் DGM (எரிசக்தி கொள்வனவு) கிளையில் காணப்படுகின்றன. மீதமுள்ள 6 கேள்விகோரல்களின் நிலைமை பின்வருமாறு.

- 10 மெகாவாட் வவுணதீவு சூரியசக்தி PV ஆலையின் கேள்விகோரல்: 2017 செப்தெம்பரில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டதுடன், 2018 மே மாதம் LOI வழங்கப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஞடுஉளுயு ஆல் அடையாளம் காணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்க அபிவிருத்தியாளருக்கு இயலாதிருந்தமை மற்றும் தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெற முடிந்திருக்காமை காணரமாக, PPA யில் கைச்சாத்திடுதல் தாமதிக்கப்பட்டு 2021 மார்ச் இல் கையெழுத்திடப்பட்டதுடன் செயற்திட்டமானது 2021 டிசம்பர் 31 இல் முடிவடையாதிருந்தது. தற்போது, ஆலையில் நிர்மாணம் இறுதிக் கட்டத்தில் உள்ளது. பொறியானது 2022 செப்தெம்பர் 28 அன்று செயற்பாட்டை தொடங்கியது.
- 10 மெகாவாட் பொலன்னறுவை சூரியசக்தி PV ஆலையின் கேள்விகோரல்: 2017 செப்தெம்பரில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டதுடன், 2018 செப்தெம்பர் மாதம் LOI வழங்கப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஞடுஉளுயு ஆல் அடையாளம் காணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்க அபிவிருத்தியாளருக்கு இயலாதிருந்தமை மற்றும் தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெற முடிந்திருக்காமை காணரமாக, PPA யில் கைச்சாத்திடுதல் தாமதிக்கப்பட்டு 2021 மார்ச் இல் கையெழுத்திடப்பட்டதுடன் செயற்திட்டமானது 2021 டிசம்பர் 31 இல் முடிவடையாதிருந்தது. தற்போது, உபமின்நிலைய இணைப்பு நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (சுமார் 9 கி.மீ.)
- 1 MW x 90 சூரியசக்தி PV ஆலையின் கேள்விகோரல்: 2018 ஏப்ரல் இல் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டதுடன், அமைச்சரவை ஒப்புதல் கிடைத்த பின்னர் 84 கம்பனிகளுக்கு 2018 அக்டோபர் முதல் 2019 ஆகஸ்ட் வரை ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டன. கேள்விப்பத்திர பிணைகள் காலாவதியானதாலும், அவற்றின் காலம் நீடிக்கப்படாததாலும் 6 கேள்விதாரர்களுக்கான ஒப்பந்தங்களை வழங்க முடியவில்லை. 14 கேள்விப்பத்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் (84 ஒப்பந்தகங்களில்) 70 LOI மட்டுமே வழங்கப்பட்டன. 2 செயலாற்றல் பிணைமுறிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் செயலாற்றல் இல்லாததால் செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டன. 65 பிபிஏ (PPAs) க்கள் கைச்சாத்திடப்பட்டதுடன்

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

மீதமுள்ள 3 அபிவிருத்தியாளர்களால் தேவையான அனுமதிகளைச் சமர்ப்பிக்க முடிந்திருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இற்குள் 15 மின் உற்பத்தி நிலையங்கள் (மொத்தம் 15 மெகாவாட்) இயக்கப்பட்டன. தற்போது, 31 மின் உற்பத்தி நிலையங்கள் (மொத்தம் 31 மெகாவாட்) இயக்கப்பட்டுள்ளது. மற்றும் 68 PPAs கைச்சாத்திடப்பட்டன. இந்த கேள்விகோரலுக்கான இறுதி PPA 2022 மார்ச் 10 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- விவசாயம்/பன்னையுடன் கூடிய 10 மெகாவாட் சூரியசக்தி PV ஆலையின் கேள்விகோரல்: 2019 மே மாதம் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டதுடன், 2020 யூன் மாதம் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. 2021 பெப்ரவரியில் LOI இல் கையொப்பமிடப்பட்டதுடன் 2021 டிசம்பர் 31 இல் பிபிஏ இல் கையொப்பமிடுவதற்கு தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுதல் நிலுவையில் உள்ளது. பிபிஏவில் கையொப்பமிட தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டதால், தற்போது அழைப்புக் கடிதம் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- 1-10 MW வீச்சில் 60 MW காற்றாலை மின்வலு நிலையங்கள்: ஐந்து கிரிட் உப மின்வலு நிலையங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் 2020 இல் திறக்கப்பட்டது. போலவத்தை மற்றும் கப்பல்துறை கிரிட் உப மின்வலு நிலையங்களுக்காக (ஜிஎஸ்எஸ்) கேள்விப்பத்திரம் எதுவும் கிடைத்திருக்காததன் விளைவாக 25MW வழங்கப்படவில்லை.

- 10 MW திருகோணமலை GSS ஐ வழங்குவதற்கான அமைச்சரவை ஒப்புதல் 2021 சனவரி இல் பெறப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. 2021 ஏப்ரல் மாதத்தில் LOI இல் கையொப்பமிடப்பட்டதுடன் 2021 டிசம்பர் 31 இல் பிபிஏ இல் கையொப்பமிடுவதற்கு தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுதல் நிலுவையில் உள்ளது. தற்போது, பிபிஏவில் கையொப்பமிட சம்பந்தப்பட்ட ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுதல் செயல்முறை இடம்பெற்றுவருகின்றது.

- 15 MW மன்னார் GSS ஐ வழங்குவதற்கான அமைச்சரவை ஒப்புதல் 2021 ஜூலை இல் பெறப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. 2021 ஏப்ரல் மாதத்தில் LOI இல் கையொப்பமிடப்பட்டதுடன் 2021 டிசம்பர் 31 இல் பிபிஏ இல் கையொப்பமிடுவதற்கு தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுதல் நிலுவையில் உள்ளது. தற்போது, அபிவிருத்தியாளர்கள் தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனைத்து அனுமதிகளையும் பெற்றுள்ளனர். அத்துடன், இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையின் (SLSEA) எரிசக்தி அனுமதியும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து (PUCSL) வழங்கப்படுகின்ற ஆட்சேபனை தெரிவிக்காத கடிதமும் கிடைத்தவுடன் PPA இல் கையொப்பமிடப்படும். தற்போது அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளதுடன் தற்போது 2 PPA களில் கையெழுத்திடும் பணி இடம்பெற்று வருகின்றது. மின்வலு உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதுடன் இது 2022 திசெம்பர் இறுதிக்குள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மாதம்பை GSS 10 MW இயலளவுக்காக மீளக் கேள்விமனு கோரப்பட்டதுடன் கேள்வியை கையளிக்க அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு LOI இன்னும் வழங்கப்பவில்லை. 2022 சனவரி மாதத்தில் கையளித்தல் கடிதம் வழங்கப்பட்டதுடன் பிபிஏவில் கையொப்பமிட அபிவிருத்தியாளர்களால் சம்பந்தப்பட்ட ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுதல் செயல்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- 150 MW சூரியசக்தி PV ஆலைகள் கேள்விப்பத்திரம் (1-10 MW வீச்சு): 147MW (23 மின் உற்பத்தி நிலையங்கள்) 2021 பெப்ரவரி இல் வழங்கப்பட்டது. 3 MW க்கான கொலன்னாவ (வெளிப்புற) GSS க்கு கேள்விப்பத்திரங்கள் கிடைத்திருக்கவில்லை. 18 மின் உற்பத்தி நிலையங்களில் (104 MW) கையொப்பமிடப்பட்டதுடன் 5 LOI களின் கையொப்பம் 2021 திசெம்பர் 31 இல் நிலுவையில் உள்ளது. தற்போது, 21 மின் உற்பத்தி நிலையங்களில் (131 MW) LOI கள் கையெழுத்திடப்பட்டுள்ளதுடன் 2 மின் உற்பத்தி நிலையங்களிலுள்ள (16 MW) LOI இல் கையெழுத்திடுதல் நிலுவையில் உள்ளன.

2020 மார்ச் முதல் கோவிட் 19 தொற்றுநோய் நாட்டில் முதன்முதலில் வெடித்ததுடன் 2021 வரை அவ்வப்போது பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக பெரும்பாலான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு, கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் தாமதம் ஏற்பட்டது. தற்போது, FOREX, வங்கி வட்டி விகிதங்கள், பணவீக்க விகிதம், பொருள் பற்றாக்குறை, நாணயக் கடிதங்களை திறப்பதில் உள்ள தடைகள் போன்ற பல அளவுருக்களில் காணப்படுகின்ற ஏற்ற இறக்கம் காரணமாக, பெரும்பாலான செயற்திட்டங்கள் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது கையளிக்கப்பட்டுள்ள அனைத்து 23 மின் உற்பத்தி நிலையங்களின் (147 MW) LOI கள் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன் PPA களில் கையெழுத்திடுவது மட்டுமே நிலுவையில் உள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(இ) 2011 முதல் 2021 வரை செயற்திட்டப்பணியை முடிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் மேலதிக இடத் தேவை, நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் பணவீக்கம் என்பன காரணமாக உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,000 மில்லியன் இலிருந்து ரூபா 6,161.87 மில்லியன் (மதியுரைச்சேவை மற்றும் முந்தைய ஒப்பந்ததாரருக்காக செலுத்தப்பட்ட பணம் உட்பட) வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 முதல் 2020 வரையான காலப்பகுதியில் ரூபா 284.41 மில்லியன் செலவில் தற்போதைய தலைமை அலுவலகக் கட்டிடம் புனரமைக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் ஒரு புதிய கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட பின்னரும்தற்போதைய கட்டிடத்தின் உரிமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

1. தலைமை அலுவலகக் கட்டிட செயற்திட்டம் - நாரஹேன்பிட்ட ஆரம்பத்தில் இ.மி.ச. இன் சொத்து முகாமைத்துவப் பிரிவினால் கையாளப்பட்டதுடன் மொரட்டுவ பல்கலைக்கழக கட்டிடக்கலை பீடத்தின் செயற்திட்ட ஆலோசனைப் பிரிவின் (PCU) ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையின் படி 2011 ஆம் ஆண்டில் இதற்கான ஆரம்ப கிரயம் (ஏறத்தாழ) ரூபா 1000 மில்லியன் ஆகும்.
2. ரூபா 1936 மில்லியன் மொத்த மதிப்பீட்டுக் கிரயத்திற்காக 2011 மார்ச் 23 ஆம் தேதி அமைச்சரவையின் அங்கீகாரம் (அமைச்சரவை பத்திர இல. 11/063/516/013, 2011 மார்ச் 04 ஆம் தேதியிட்ட குறிப்பாணை) கிடைத்திருந்தது. தரைப் பகுதியின் விஸ்தீரணம் ஸ்ரீ 23,000 சதுர மீ.
3. 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடானது ரூபா 2542 மில்லியன் வரை திருத்தியமைக்கப்பட்டது (2019 மார்ச் 23 ஆந் தேதியிட்ட அமைச்சரவை குறிப்பில் குறிப்பிடப்பட்ட தொகை) தரைப் பகுதியின் விஸ்தீரணம் ஸ்ரீ 27,750 ச.மீ (பரப்பளவு 4,750 சதுர மீட்டர் அதிகரித்துள்ளது)
4. 2018 ஆம் ஆண்டில் மதிப்பீடு ரூபா 3149 மில்லியன் வரை திருத்தப்பட்டது. (23 மார்ச் 2019 மார்ச் 23 ஆந் தேதியிட்ட அமைச்சரவை குறிப்பில் குறிப்பிடப்பட்ட தொகை)
5. 2020 ஆம் ஆண்டில் (பெப்ரவரி) செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும் விரைவுபடுத்துவதற்கும் மேலதிக பொது முகாமையாளர் DD04 க்கு செயற்திட்டம் ஒப்படைக்கப்பட்டது.
6. 2021 ஆம் ஆண்டில், மொத்தம் ரூபா 5672 மில்லியன் தொகைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது (கையளித்த தொகை ரூபா 4,772 மில்லியன் + 10% நிகழத்தக்கவை + 08% VAT)

   (2021-07-08 ஆந் தேதியிட்ட 21/1278/318/034/TBR ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்ததைப் பார்க்கவும்) (தரைப் பகுதியின் விஸ்தீரணம் ஸ்ரீ 33,818 ச.மீ (பரப்பளவு 6068 சதுர மீட்டர் அதிகரித்துள்ளது)

**உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் அதிகரிப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.**

I. கட்டிடத்தின் உள்ளேயுள்ள ஏட்ரியம் கிணற்றை மூடுவதன் மூலம் அலுவலகத்திற்கு அதிகபட்ச இடத்தைப் பயன்படுத்தும் நோக்கத்திற்காக கட்டிட தளத்தின் விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டது. எனவே கட்டிடத்தின் தளப்பரப்பு 27,750 சதுர மீட்டரிலிருந்து 33,818 சதுர மீட்டராக அதிகரிக்கப்பட்டதுடன் மொத்த தளப்பரப்பு 6,068 சதுர மீட்டர் (65,290 சதுர அடி) ஆக அதிகரிக்கப்பட்டது. அதன்படி, “பைலிங்” வேலைகள், கட்டமைப்பு வேலைகள், மெருகுபடுத்தல் மற்றும் மறைப்பு வேலைகள் காரணமாக கிரயம் அதிகரித்துள்ளது. அதைத் தொடர்ந்து, தேவையான பிற கட்டிட சேவைகளின் கிரயம் அதிகரித்துள்ளது. மேலும், 4 வது மாடியில் உள்ள மொட்டை மாடியின் ஒரு பகுதி பயன்படுத்தக்கூடிய இடமாக மாற்றப்பட்டது.

II. 2018 திசெம்பர் முதல் 2021 மார்ச் வரையான காலத்தில் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

III. அனைத்து அலுவலகங்களுக்கும் உட்பிரித்தல் ஏற்பாட்டை அறிமுகப்படுத்தியமை.

IV. கட்டிட மற்றும் நிர்மாணத்திற்கான முன்னைய வடிவமைப்பில் சேர்க்கப்படாத அத்தியாவசிய கட்டிட சேவைகளான கட்டிட சுத்திகரித்தல் முறைமை, அணுகல் கட்டுப்பாட்டு முறைமை, CCTV கேமரா முறைமை, எரிவாயு வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு போன்றன அறிமுகப்படுத்தப்பட்டமை.

தற்போதுள்ள தலைமை அலுவலக கட்டிடம் ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு இன்றும் இயங்கி வருகின்றது. கட்டிடத்தின் பழமை காரணமாக CECB இனது மதியுரைஞரின் பரிந்துரையின்படி மேலும் இருபது ஆண்டுகளுக்குத் தாங்கும் வகையில் பல்வேறு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, தற்போதுள்ள கட்டிடத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் இ.மி.ச. இன் சொத்து முகாமைத்துவ பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சிவில் விமான போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக, இ.மி.ச. இன் நாரஹேன்பிட்ட உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மாடிகளின் எண்ணிக்கை பதினொரு மாடிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இ.மி.ச. இன் தற்போதைய தலைமை அலுவலக கட்டிடத்தை கொழும்பு நகர மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அலுவலகங்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

## குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஈ) 2018 - 2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தின் படி, 500 MW, 657 MW, 430 MW மற்றும் 445 MW புதிய மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய 2032 MW மேலதிக இயலளவில் 661 MW இயலளவுடைய மின்வலு ஆலைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால், புதிய பின்பிறப்பாக்க ஆலைகளை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றம் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ரூபா 6.54 பில்லியன் பெறுமதியான 267.17Ghw எரிசக்தி, மேலதிக மின்வலுவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.**

இ.மி.ச. இன் நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்க செயற்திட்டங்கள் (LTGEP) 20 ஆண்டுகளுக்கான குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால மின் இயலளவு தேவைகளைக் கொண்டுள்ளது. எனவே, அடிப்படை ரீதியாக அல்லது தற்செயல் பகுப்பாய்வின் கீழ் சில வருடங்களிற்கான உடனடி குறுகிய கால இயலளவு தேவைப்பாடுகள் கூட LTGEP களில் குறிப்பிடப்படுகின்றது. நீண்ட கால, குறைந்த விலை மின்வலு நிலையங்கள் சரியான நேரத்தில் எதிர்பார்த்தபடி உருவாக்கப்படாத போது, (இதற்குப் பல காரணங்கள் உள்ளன, அவற்றில் பெரும்பாலானவை இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை), மின்சார பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காகவும் மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்) கடமைக்கு இணங்க, முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்குப் போதுமான மின் இயலளவு இருப்பதை உறுதி செய்வதற்காகவும் குறுகிய கால குறைநிரப்பு இயலளவை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயம் இ.மி.ச. இற்கு ஏற்படுகின்றது.

எனவே, குறிப்பிடப்பட்டுள்ள இந்த கொள்வனவு, பிரிவு 24 (1) (இ) உடன் இணங்குவதனால் இது சட்டத்தை மீறிய செயல் அல்ல.

மேலும், இ.மி.ச. நீண்ட கால தலைமுறை விரிவாக்கத் திட்டங்களைத் தயாரித்திருந்த போதிலும், LTGEP களில் இனங்காணப்பட்ட இத்தகைய நிலையங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள இ.மி.ச. இற்கு எவ்வித அதிகாரம் இல்லை. இ.மி.ச. ஏனைய முகவர் நிலையங்களை பெரிதும் சார்ந்துள்ளதுடன் PUCSL இனால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க "மின்சாரம் (கொள்வனவு) விதிகள் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளில் சில ஒன்றை ஒன்று விஞ்சுவதாக உள்ளன.

10 வருட காலத்திற்கு 200 MW உலை எண்ணெய் எரித்தல் நடுத்தர கால மின்வலு இயலளவை இரத்துச் செய்தல்.

எங்கள் பதிவுகளின்படி, LTGEP 2018-2037 இல் இனங்காணப்பட்டிருந்த 320 MW நடுத்தர கால இயலளவுத் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதற்காக இ.மி.ச. 200 MW நடுத்தர கால மின்வலுக் கொள்வனவைச் செய்திருந்தது. இந்த கொள்வனவானது ஆரம்பத்தில் அதாவது 2016 இல் 170MW ஆலையாக (LTGEP 2015-2034 இல் இனங்காணப்பட்டவாறு) தொடங்கப்பட்டதுடன் பின்னர் அது (LTGEP 2018-2037 இன் சமர்ப்பிப்புடன்) காலியில் 100 MW நில அடிப்படையிலான ஆலையாகவும், நான்கு உப மின் நிலையங்களில் மற்றுமொரு 4x24 MW ஆலையாகவும் மாற்றப்பட்டது. இந்த காலி GSS இல் உள்ள 100 MW ஆலையினதும் 4x24 MW ஆலையினதும் தேவை குறிப்பாக LTGEP 2020-2039 வரைவில் அடையாளம் காணப்பட்டவையாகும்.

TEC இன் நியமனம், SCAPC இடமிருந்து அனுமதியைப் பெறுதல், PUCSL இன் ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்தல் போன்றவை உள்ளிட்ட கொள்வனவுச் செயல்முறைகள் ஊடாக கொள்வனவு இடம்பெற்றுள்ளது. ஆனால் 2020-11-02 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்வனவுத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டது.

(I) **අමාත්‍ය මණ්ඩල පත්‍රිකා - ප්‍රතිපත්තිමය කරුණු:**

15. අමාත්‍ය මණ්ඩල පත්‍රිකා අංක 20/1660/318/024 වූ, "**වර්තමාන විදුලි ජනන සැලසුම් සහ සිදුවිය හැකි අඩුපාඩු (Lapses) අවම කිරීම සඳහා යෝජනා**" යන මැයෙන් විදුලිබල ඇමතිතුමා ඉදිරිපත් කළ 2020-10-19 දිනැති සංදේශය - ඉහත සඳහන් සංදේශය, මුදල් ඇමතිතුමාගේ සහ ජලසම්පාදන ඇමතිතුමාගේ නිරීක්ෂණ සහ

**Proposals/ Requests** : Approval of the Cabinet of Ministers is sought for the following proposal;

I. **Proposal 5.1**

To direct Ceylon Electricity Board (CEB) to initiate procurement to add medium term furnace oil fired power capacity up to 200 MW for a term of ten years with the approval of the Attorney General and the Public Utilities Commission of Sri Lanka (PUCSL).

II. **Proposal 5.2**

a) To direct CEB to first obtain the approval of the PUCSL to negotiate to extend the period of the power purchase agreements of three furnace oil fired IPP plants (ACE Power Embilipitiya, ACE Power Matara, and Asia Power) till 2023.

b) To instruct the Secretary to the Treasury to appoint a Project Committee and a Cabinet Appointed Negotiating Committee for the above purpose

அதன்படி, 2020 திசெம்பர் 30 அன்று இடம்பெற்ற கூட்டத்தில் CMT அதனை இரத்துச் செய்தது.

**கௌரவ நிதி அமைச்சரின் அவதானிப்புகள்.**

## குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**Observations : I & II Proposal 5.1 and 5.2**

I observe that the current policy of the Government on power generation reiterate the need for enhancement of renewable energy while minimizing use of thermal energy. Therefore Ceylon Electricity Board need to expedite implementation of the power plants that are highlighted in the Cabinet Memorandum without further delay. It is noted that some of these plants are almost ready to be installed into the national grid. At the same time, apart from its inconsistency with the county's power generation policy in terms of environmental implications, procuring of emergency power from diesel based independent power producers will add significant burden to the economy As a more feasible solution CEB may explore the possibility of acquiring some of these diesel power plants at a reasonable cost. Therefore, I am not in agreement with the proposals.

**அமைச்சரவைத் தீர்மானம்**

(ii) මුදල් ඇමතිතුමාගේ නිරීක්ෂණවල පළමු ඡේදයෙහි දක්වා ඇති කරුණු හේතු කොට, සංදේශයේ 5 ඡේදයෙහි සඳහන් (5.1) සහ (5.2) යෝජනා සම්බන්ධයෙන් ඉදිරි ක්‍රියාමාර්ග ගැනීම අවශ්‍ය නොවන බව.

(உ) **மீளாய்வாண்டில் மூன்று ஓய்வுபெற்ற IPP மின்வலு உற்பத்தி நிலையங்களிலிருந்தும் 24 MW மேலதிக் மின்வலு உற்பத்தி நிலையத்திலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மின்வலு அலகு ஒன்றுக்கான கிரயங்கள் முறையே (kWh அலகொன்றுக்கு) ரூபா 21.75, ரூபா 25.26, ரூபா 24.97, மற்றும் ரூபா 88.85 ஆகக் காணப்பட்டதுடன், சராசரி விற்பனை விலை ரூபா 16.37 ஆகும். எனவே, அதிக செலவில் அவசர மின்வலு நிலையங்களை பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, நிகழ்நேரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், குறைந்த கிரயத்திலமைந்த நீண்ட கால மின்வலு உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின்வலு உற்பத்தி நிலையங்களை இயக்கிச்செல்ல முடிந்திருந்தால், எரிசக்தி கொள்வனவுக்கான இந்த அதிகப்படியான செலவைக் குறைத்திருக்கலாம்.**

வருடத்தின் முதல் 04 மாதங்களின் போது வறட்சியான காலநிலை நிலவுகின்றமையால் நீர்மின் உற்பத்தி குறைவடைந்து முறைமையின் தேவைப்பாடு அதிகரிப்பதன் காரணமாக இக்காலப்பகுதியில் அனைத்து அனல்மின் ஆலைகளும் உச்ச இயலளவில் இயங்குகின்றன. ஆகையால், அந்த காலகட்டத்தில் அனைத்து அனல் மின் நிலையங்களிலும் மின்சார உற்பத்திக்கான அலகுக் கிரயம் (இயலளவு மற்றும் எரிசக்தி கட்டணங்கள் இரண்டையும் கருத்தில் கொள்கையில்) ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. பின்னர், மழைக்காலம் தொடங்கியவுடன் முறைமை தேவைப்பாடு குறைவடைந்து, நீர் மின்வலு உற்பத்தி நிலையங்கள் அதிகபட்ச இயலளவுடன் இயக்கப்படுவதன் காரணமாக அனல் மின் நிலையங்களின் தேவைப்பாடு குறைவடைகின்றது. அந்தக் காலத்தில் எரிபொருளின் விலையானது செலுத்த வேண்டிய இயலளவுக் கட்டணம் மற்றும் எரிசக்தி கட்டணத்தைக் காட்டிலும் குறைவாக இருக்கும். மேலும், இந்த மின் உற்பத்தி நிலையங்களை மழைக்காலங்களில் கூட இரவுகால உச்ச தேவையை பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்த வேண்டும். வருடத்தின் வெவ்வேறு காலங்களில் மின்சாரம் கொள்வனவு செய்யப்படுவதால், மேலே குறிப்பிட்டுள்ள எந்த ஒரு முறையிலும் மின்சார உற்பத்திக்கான அலகுக் கிரயம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும்.

ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட், ஏஸ் பவர் ஜெனரே'ன் மாத்தறை (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஏசியா பவர் (பிரைவேட்) லிமிடெட் ஆகிய மின்வலு உற்பத்தி நிலையங்களின் ஒப்பந்த காலம் வறட்சி காலத்தில் காலாவதியானதுடன் மற்றும் உச்ச இயலளவு ஆலைக் காரணியின் கீழ் ஆகக்குறைந்த அலகுக் கிரயம் (50% - 70%) (கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 21.00 - ரூபா 25.00 வரை) காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொவிட் 19 தாக்கத்தினால் மின் தேவை குறைவடைந்தமை மற்றும் குறித்த காலத்தில் நிலவிய அதிக மழைவீழ்ச்சி காரணமாக வாழைச்சேனை அனல்மின் நிலையம் ஒட்டுமொத்தமாக மிகக் குறைந்த ஆலை இயலளவுக் காரணியின் கீழ் (5.4%) இயக்கப்பட்டது. எனவே, இந்த அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கான அலகுக் கிரயம் ரூபா 88.00 ஆகக் காணப்பட்டு உயர் அலகுக் கிரயத்தை காண்பித்தது.

இந்த விடயத்தை பொறுத்தவரை, அலகு கிரயத்தை நிர்ணயிப்பதற்காக இயலளவுக் கட்டணத்தின் அளவு கருத்திற் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், இயலளவுக் கட்டணம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட காலத்திற்கான கடப்பாட்டுக் கிரயமாக உள்ளதுடன், இது இ.மி.ச. இற்கான எரிசக்தி விநியோகத்துடன் எந்த தொடர்பையும் கொண்டிருக்கவில்லை.

(ஊ) **சீஎம்ஈசீ ஆல் சமர்ப்பிக்கப்பட்ட பயிற்சியளிப்பு ஆவணங்களின் படி, உபகரணங்களின் செயலாற்றலை பராமரிப்பதற்கு, மீட்டெடுப்பதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு விரிவானதோர் பிரித்தெடுக்கும் களப்பரிசோதனை மற்றும் அலகு பழுதுபார்த்தல் ஆகியவற்றைக் குறிக்கும் "யு" நிலை பராமரிப்பு இடைவெளியானது 4 முதல் 6 ஆண்டுகளிற்கு இடைப்பட்டதாக காணப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் 02 மற்றும் 03 அலகுகளுக்கான "யு" நிலை பராமரிப்பானது அந்த அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்த பின்னரும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் 02 மற்றும் 03 அலகுகள் தொடர்பாக 663,510Mwh எரிசக்தி ஆற்றல் இழப்புடன் கூடிய 14 மின்தடங்கல் சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டில் ஏற்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.**

பிரிவு 2 இன் மட்டம் "ஏ" இற்கான மறுசீரமைப்பு 2020 இல் திட்டமிடப்பட்டது. இந்த சேவையின் பெறுகைக்காக SCAPCஐ நியமிக்குமாறு இ.மி.ச. 2020 பெப்ரவரி மாதத்தில் கோரிக்கை விடுத்தது. SCAPC மற்றும் TEC நியமிக்கப்பட்டமையால் நிபுணத்துவ சேவையைப் பெறுவதற்கான பெறுகை செயல்முறை 2020 இல் தொடங்கப்பட்டது. CMEC இனால் ஆர்வ வெளிப்படுத்தல் அழைக்கப்பட்டதுடன் தொடர்புடைய அமைச்சரவை ஒப்புதல் 2021 ஜுலை 01 இல் பெறப்பட்டது. பிரதான சேவை வழங்கல் ஒப்பந்தம் 2021 ஜுலை 16 அன்று CMEC க்கு வழங்கப்பட்டது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

- 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பெறுகை செயல்முறையை செயல்படுத்த முடியவில்லை. இரு நாடுகளிலும் நிலவிய நாடு முடக்கல் நிலைமை பெறுகை செயல்முறையில் பாதிப்பை ஏற்படுத்தியது.
- இ.மி.ச. இற்கும் CMEC இற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும், சீன நிபுணர்களை அவர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக CMEC ஆல் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, மறுசீரமைப்பு பணிகளை 2021 செப்தெம்பர் இல் மேற்கொள்வதற்கு மீண்டும் திட்டமிடப்பட்டது. இரு நாடுகளிலும் விதிக்கப்பட்டுள்ள கோவிட்-19 கட்டுப்பாடுகள் குறிப்பாக தனிமைப்படுத்தல் நியதி காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும். ஆகையால் இப்பணிகள் 2022 க்கு ஒத்திவைக்கப்பட்டது. கால மாற்றங்கள் SCAPC க்கு அறிவிக்கப்பட்டதுடன், SCAPC அந்த மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- CMEC இன் கோரிக்கையை SCAPC அங்கீகரித்துள்ளதுடன், இப்பணிகளை 2022 ஏப்ரல் 23 இல் மேற்கொள்வதற்கு மீண்டும் திட்டமிடப்பட்டது. இ.மி.ச. இன் பணிப்பாளர் சபை இந்த மாற்றியமைப்பை 2022 ஜூன் வரை ஒத்திவைக்க முடிவு செய்தது.
- 2022 ஜூன் 18 ஆந் திகதி மட்டம் “ஏ” இன் மறுசீரமைப்புக்காக பிரிவு 2 இடைநிறுத்தப்பட்டது.

  கணக்காய்வு அறிக்கையில் 14 மின்தடங்கல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. உள்வாரி மற்றும் வெளிப்புற நிகழ்வுகள் காரணமாக ஏற்படும் தடங்கல்களைக் கருத்தில் கொண்டு இந்த மின்தடைகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. உள்ளக நிகழ்வுகள் என்பது ஆலையிலுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் ஏற்படும் கோளாறுகளாகும். ஆலைக்கு வெளியே தேசிய மின்வழங்கல் முறைமையில் ஏற்படுகின்ற பிரச்சனைகளே வெளிப்புற தவறுகளாகும்.

மிகக் குறுகிய காலத்திற்குள் ஏற்படுகின்ற உட்புறக் குறைபாடுகள் காரணமாக சில தடங்கல்கள் ஏற்படுவதுடன், அதைச் சரிசெய்து சில மணிநேரங்களில் ஆலையை மீண்டும் செயற்படுத்த முடியும். இந்த வகையான தடங்கல்கள் ஒட்டுமொத்த ஆலையின் செயலாற்றலை பாதிப்பதில்லை. பிரிவு 02 மற்றும் பிரிவு 03 மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த தேறிய எரிசக்தியின் அளவானது ஆலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து முறையே 15,482.01 GWh மற்றும் 14,087.50 GWh ஆகக் காணப்பட்டது.

**பிரிவு 2 மற்றும் பிரிவு 3 இலுள்ள ஆலைகளின் செயலாற்றல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

**பிரிவு 2 மற்றும் பிரிவு 3 ஆலைகளின் கிடைக்கக்கூடிய காரணி மற்றும் இயலளவுக் காரணி**

| ஆண்டு | அலகு 02 மற்றும் அலகு 03 இன் கிடைக்கும் காரணி மற்றும் கொள்ளளவு காரணி | | | | கருத்துக்கள் |
|---|---|---|---|---|---|
| | கொள்ளளவு காரணி (%) | | கிடைக்கும் காரணி (%) | | |
| | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 2 | பிரிவு 3 | |
| 2014 | 51.27 | 46.88 | 91.45 | 100.00 | |
| 2015 | 73.67 | 75.10 | 93.57 | 94.64 | |
| 2016 | 90.43 | 89.76 | 93.63 | 92.70 | |
| 2017 | 78.66 | 70.36 | 81.66 | 75.60 | |
| 2018 | 62.68 | 79.48 | 87.15 | 93.97 | |
| 2019 | 90.07 | 76.77 | 98.44 | 96.32 | |
| 2020 | 85.68 | 74.17 | 94.83 | 89.60 | |
| 2021 | 79.25 | 73.26 | 96.15 | 86.87 | |
| 2022 | 98.54 | 77.20 | 99.93 | 79.17 | *மே வரை |

| ஆண்டு | பிரிவு 2 | | பிரிவு 3 | | மொத்தம் | | கருத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த ஆற்றல் (GWH) | நிகர ஆற்றல் (GWH) | மொத்த ஆற்றல் (GWH) | நிகர ஆற்றல் (GWH) | மொத்த ஆற்றல் (GWH) | நிகர ஆற்றல் (GWH) | |
| 2014 | 1,347.44 | 1,204.17 | 516.38 | 459.86 | 1,863.82 | 1,664.03 | |
| 2015 | 1,936.09 | 1,741.18 | 973.67 | 1,790.07 | 3,909.76 | 3,531.25 | |
| 2016 | 2,383.01 | 2,158.52 | 2,365.48 | 2,158.08 | 4,748.49 | 4,316.60 | |
| 2017 | 2,067.17 | 1,864.45 | 1,849.13 | 1,687.72 | 3,916.30 | 3,552.17 | |
| 2018 | 1,647.30 | 1,480.34 | 2,088.85 | 1,889.06 | 3,736.15 | 3,369.40 | |
| 2019 | 2,366.91 | 2,150.18 | 2,017.45 | 1,829.95 | 4,384.36 | 3,980.13 | |
| 2020 | 2,257.82 | 2,036.50 | 1,954.65 | 1,769.97 | 4,212.47 | 3,806.47 | |
| 2021 | 2,082.59 | 1,876.56 | 1,925.31 | 1,740.55 | 4,007.90 | 3,617.11 | |
| 2022 | 1,071.34 | 970.12 | 839.27 | 762.24 | 1,910.61 | 1,732.36 | *மே வரை |
| **Total** | **17,159.67** | **15,482.02** | **15,530.19** | **14,087.50** | **32,689.86** | **29,569.52** | |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

(எ) **தீர்க்கப்படாதுள்ள ஆட்சேபனைகள் காரணமாக “லைட்டிங் ஸ்ரீலங்கா" ஹம்பாந்தோட்டை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்த பின்னரும் கூட தங்காலை கேன்ட்ரி இன் நோனாகம கேன்ட்ரி லைன் (டவர் 13 முதல் 36 வரை) மின்வழங்கல் செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளை பூரணப்படுத்த சபையால் முடிந்திருக்கவில்லை.**

பல ஆட்சேபனைகள் பெறப்பட்டுள்ளன. PHM கிளையானது PUCSL வழிகாட்டுதல்களுக்கு இணங்க முறையான விடுப்பு அனுமதிக்கான செயல்முறையைத் தொடங்கியது. நிலைமையை அறிந்து கொள்வதற்காக அண்மையில் தங்காலை சட்டமா அதிபர் மற்றும் தொடர்புடைய ஜி.எஸ். களுடன் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 ஏனைய அவதானிப்புகள்

அ) **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 44,079 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 6,839 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதிலுள்ள ரூபா 2,928 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.**

| பிரிவு | 1 ஆண்டிற்கு மேற்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் | பதில் |
|---|---|---|
| DD-01 | 2318.21 மில். | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள ரூபா 1,208 மில்லியன் (5 ஆண்டுகளுக்கு மேல்) கடன்பட்டோர் மீதி 2022 ஏப்ரல் 30 நிலவரப்படி ரூபா 1,132 மில்லியனாகக் குறைந்துள்ளது. மேலும், AGM DD1, நீண்ட கால நிலுவைத் தொகைகளை (வியாபாரக் கடன்பட்டோர் மீதியை) கூடிய விரைவில் வசூலிக்குமாறு அல்லது இது போன்ற நீண்ட நிலுவைத் தொகைகளை பதவிழிப்பத்றகுத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். |
| DD-02 | 3474.91 மில். | 5 ஆண்டுகளுக்கும் மேலாகவுள்ள மொத்த வழங்கல் இறுதி செய்யப்பட்ட கணக்கின் மொத்த நிலுவைத் தொகையில், ரூபா 3,294,126.64 தொகை DD2 ஆல் 2022 மே இல் அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 4,712,865.46 அறவிமுடியாத இறுதி கடன்பட்டோரை பதிவழிப்பதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.<br><br>மேலும், வெஸ்ட் கோஸ்ட் (பிரைவேட்) லிமிடெட்டின் மொத்த நிலுவைத் தொகையான (A/C No. 27799003538) ரூபா 1,397,841,678.43 (1 வருடத்திற்கு மேற்பட்ட வயது) கட்டணச் சர்ச்சை காரணமாக இது வரையில் தீர்க்கப்படவில்லை. இ.மி.ச. இன் எரிசக்தி கொள்வனவுக் கிளை ஏற்கனவே வெஸ்ட் கோஸ்ட் (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்தான எரிசக்தி கொள்வனவுக் கொடுப்பனவுகளிலிருந்து அதன் இறக்குமதிகளை மேற்கொண்டுள்ளதால், அந்தப் பிரிவின் கீழ் இதனை பட்டியல் செய்வதற்கு பரிமாற்றல் உரிமம் பெற்றவருடன் கலந்துரையாடல் நடத்தப்படுகிறது.<br><br>வாழைச்சேனை பேப்பர் கம்பனி லிமிடெட் அனைப் பொறுத்தமட்டில் ரூபா 361,992,685.22 தொகையை பதிவழிப்புச்செய்வதற்கு சபை அனுமதி வழங்கியுள்ளதுடன் மீதித் தொகையானது (ரூபா 122,004,390.45) செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருடங்களின் பின்னர் ஆறு மாத காலத்திற்குள் தவணை அடிப்படையில் வசூலிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்தச் சபைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வாழைச்சேனை பேப்பர் கம்பனி லிமிடெட் உடன் இ.மி.ச. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.<br><br>கந்தளாய் சீனி கூட்டுத்தாபனத்தின் (கணக்கு இல. 3470100217) ரூபா 76,331,246.03 தொகையை பொறுத்தமட்டில் நிலுவைத் தொகையைத் தீர்த்த பின்னர் ரூபா 44,839,186.53 இனை பதிவழிப்பதற்கு சபை ஒப்புக்கொண்டது. எவ்வாறாயினும், இ.மி.ச. இனால் முன்வைக்கப்பட்ட இந்த தீர்வு முன்மொழிவுக்கு சீனிக் கூட்டுத்தாபனம் இதுவரை பதிலளிக்கவில்லை.<br><br>மேலும், 2022 நவம்பர் 12 தேதியிட்ட DGM(CS)2002-13 சுற்றறிக்கையின் படி, AGM(DD02) இன் ஒப்புதலுடன், 2022 ஆம் ஆண்டில் கடின வழங்கல் நிலுவைகளிலிருந்து ரூபா 4,253,487.47 நீக்கப்பட்டது.<br><br>மேற்கூறிய செயல்பாடுகளிற்கு மேலதிகமாக, அந்தந்த பகுதி பொறியாளர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் நிலுவைத் தொகையை வசூலிப்பதன் மீதான மாதாந்த செயல்முன்னேற்ற விவரங்கள் மாகாண DGM மற்றும் கணக்காளர் (வருவாய்) பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும், இறுதி செய்யப்பட்ட கணக்குகளைப் பொறுத்தவரை, DCC/COH/03/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தலின்படி, பாதுகாப்பு வைப்புத் தொகையை விட நிலுவைத் தொகை குறைவாக இருக்குமாயின், பாதுகாப்பு வைப்புத்தொகைகளுக்கு எதிராக நிலுவைத் தொகைகளை எதிரீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

<table>
<tr><th>பிரிவு</th><th>1 ஆண்டிற்கு மேற்பட்ட வியாபாரக் கடன்பட்டோர்</th><th>பதில்</th></tr>
<tr><td>DD-03</td><td>572.95 மில்.</td><td>
2021.12.31 இல் உள்ளவாறான DD3 இன் மொத்தக் வியாபாரக் கடன்பட்டோர் நிலுவைத் தொகையில் 2022.04.30 வரை கீழே காட்டப்பட்டவாறு 80% அறவிடப்பட்டுள்ளது.
<table>
<tr><th>விபரம்</th><th>31.12.2021 இல் உள்ளவாறான மீதி</th><th>30.04.2022 இல் பெறப்பட்ட நிலுவை</th><th>பெறப்பட்ட நிலுவை (%)</th></tr>
<tr><td colspan="4">மொத்த பாவனையாளர் மீதி (இறுதி செய்யப்பட்டது உட்பட)</td></tr>
<tr><td>ஒரு வருடத்துக்கும் குறைந்தது</td><td>2,528,598,322.51</td><td>2,318,398,753.43</td><td>92%</td></tr>
<tr><td>1-5 வருடங்கள்</td><td>96,052,805.48</td><td>83,724,189.96</td><td>87%</td></tr>
<tr><td>5 வருடங்கள் மேறபட்டது</td><td>85,133,802.96</td><td>1,463,366.80</td><td>2%</td></tr>
<tr><td colspan="4">சாதாரண பாவனையாளர் மீதி (இறுதி செய்யப்பட்டது செய்யப்பட்டது உட்பட)</td></tr>
<tr><td>ஒரு வருடத்துக்கும் குறைந்தது</td><td>2,932,638,336.34</td><td>2,365,999,305.16</td><td>81%</td></tr>
<tr><td>1-5 வருடங்கள்</td><td>158,386,485.31</td><td>38,655,915.31</td><td>24%</td></tr>
<tr><td>5 வருடங்கள் மேறபட்டது</td><td>233,373,071.62</td><td>33,360,632.10</td><td>14%</td></tr>
<tr><td>சஸ்பென்ஸ் மீதி</td><td>(3,103,753.25)</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>மொத்த கடன்படுநர் மீதி</td><td>6,031,079,070.97</td><td>4,841,602,162.76</td><td>80%</td></tr>
</table>
5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட - மொத்த<br>
இதில் முக்கியமாக எம்பிலிபிட்டிய காகித கூட்டுத்தாபனத்தின் இறுதிப்படுத்திய மீதியான ரூபா 64 மில்லியன் காணப்படுகின்றது. அதில் ரூபா 15 மில்லியனை பதிவழிப்பதற்கும், மீதித் தொகையை 24 தவணைகளில் அறவிடுவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சபை தீர்மானத்திற்கு இணங்கி ஒழுகுவதற்கு காத்திருக்கப்படுகிறது.<br><br>
ஒரு வருடத்திற்கும் குறைவானது<br>
மேலும், ஷான்பே ஜீன்ஸ் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட் - ரூபா 2,203,813.95, சூப்பர் பேக் (பிரைவேட்) லிமிடெட் - ரூபா 3,875,593.79, பீக் கிளாதிங் (பிரைவேட்) லிமிடெட் - ரூபா 629,623.56.620 தொகைகள் 2022.01.01 முதல் 2022.06.15 வரையான காலத்தில் அறவிடப்பட்டன.<br><br>
ஏஜிஎம் (செயற்திட்டம்) கிளையால் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் செலுத்தப்படும் ஒவ்வொரு கொடுப்பனவுகளின் மீதும் உமா ஓயா பட்டியல் நிலுவைத் தொகையிலிருந்து அறவிடுவதற்கான திட்டம் இ.மி.ச. இன் செயற்திட்டக் கிளையுடன் இணங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த காலகட்டத்தில் உமா ஓயாவிலிருந்து பெற வேண்டிய ரூபா 104 மில்லியன் தொகை AGM (செயற்திட்டம்) கிளையிலிருந்து செலுத்தப்பட்டது.<br><br>
அதற்கு மேலதிகமாக, மாகாணங்கள் மூலம் பின்வரும் அறவிடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>
- முப்படையினரிடமிருந்தான நிலுவைத் தொகையை வசூலிக்க பாதுகாப்பு அமைச்சகிற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதுடன் பட்டியல்களை தீர்ப்பதற்கு ஏனையோருக்கு 15 நாடகளே வழங்கப்படுகின்ற போதிலும் இதற்காக 60 நாட்கள் கடன் காலம் வழங்கப்பட்டது.<br>
- நுகர்வோர் பாதுகாப்பு வைப்புத் தொகையிலிருந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>
- மின்சார துண்டிப்பை விரைவுபடுத்தி, தாமதமான நுகர்வோருக்கு உடனடியாக சிவப்பு அறிவிப்பை வழங்குதல்.<br>
- நீண்டகாலமாக நிலுவையிலுள்ள மீதிகள் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இ.மி.ச. இன் சட்டப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.<br>
- சாதாரண விநியோகத் தீர்க்கப்படாத தொகையை அறவிடுவதற்காக, தீர்க்கப்படாத சாதாரண விநியோக நிலுவைகளை அவர்களின் செயற்பாட்டிலுள்ள மொத்த விநியோக கணக்குகளுக்கு மாற்றுதல்.<br>
- கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு சபை அனுமதியைப் பெறுதல்
</td></tr>
<tr><td>DD-04</td><td>473.41 மில்.</td><td>
1 வருடத்திற்கு மேற்பட்ட மீதியானது 8% மாத்திரமேயாகும், அதாவது ரூபா 473.41 மில்லியன் ஆவதுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 179.81 மில்லியன் அல்லது மொத்த கடன்பட்டோரில் 3% மட்டுமேயாகும். நிலுவைகளை குறைப்பதற்கும் அறவிடத்தக்க மீதிகளை அதிகரிப்பதற்கும் பிரிவின் அனைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஈடுபாட்டுடன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், சாதாரண வாடிக்கையாளர்களிடமிருந்து (4,244) 10 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 30,186,122.06 தொகையை பதிவழிப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் WPS1 ஒரு சபை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது<br><br>
மேலதிகமாக, அறவிடுதல் செயல்முறையை நடைமுறைப்படுத்த குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இ.மி.ச. இற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக தீர்ப்பதற்கு வாடிக்கையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.
</td></tr>
<tr><td>த.அ.</td><td>10 மில்.</td><td>சாத்தியமான மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஆ) ரூபா 1.67 பில்லியன் மற்றும் ரூபா 897 மில்லியன் கூட்டுத்தொகையான சில்லறைக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது.**

| பிரிவு | சில்லறைக் கடன்பட்டோர் மீதி | பதில் |
|---|---:|---|
| மின் பிறப்பாக்கம் | 14,816,859.00 | பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவுக்கான ரூபா 2.4 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு லக்விஜய மின்வலு ஆலையின் 1-2 ஆண்டு காலத்தின் சில்லறைக் கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்கியுள்ளது. உரிய ஆவணங்கள் கிடைத்தவுடன் இத்தொகை தீர்க்கப்படும்.<br>மகாவலி தொகுதியின் 1 ஆண்டிற்கு மேற்பட்ட சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 77,230.08 ஆகும். இத்தொகை மொத்த சில்லறைக் கடன்பட்டோர் மீதியில் 0.004 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. |
| பரிமாற்றம் | 1,389,862,725.00 | கீழே உள்ள அட்டவணையை பார்க்கவும். |
| DD-01 | 203,722,181.00 | ஐந்து ஆண்டுகளிற்கு மேற்பட்ட அதிகளவான பெறவேண்டியவைகள் அரசாங்க பொருத்துதல் வேலைகளிற்காக (GI works) அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டியவற்றை உள்ளடக்குகின்றது. இந்த பெற வேண்டிய தொகைகளை முடிந்தளவு விரைவாக அறவிடுவதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| DD-02 | 19,128,108.00 | DD 02 இன் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள சில்லறைக் கடன்கொடுத்தோரில் அதிகமானவற்றை 2000 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சீஎ/ப்எல் மின்குமிழ் கடன்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இருப்புப் பற்றாக்குறை மீதிகள் உள்ளடக்குகின்றன. |
| DD-03 | 14,369,445.00 | DD3 இன் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட சில்லறைக் கடன்கொடுத்தோரில் அதிகமானவை ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் இடம்பெற்ற இருப்புப் பற்றாக்குறைகள் / காசு மோசடிகளின் மீது அறவிடப்பட வேண்டிய தொகைகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன. சட்டரீதியான வழக்குகள் நிலுவையில் உள்ளமையால், நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய எதிர்காலத்தில் சபையின் அங்கீகாரத்தை பெற்று இந்த மீதிகளை கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| DD-04 | 11,112,638.00 | இந்தக் கடன்பட்டோர் மீதியானது பிரதானமாக பொருட்களை இறக்குமதி செய்து கொள்வனவு செய்வதற்காக வழங்கிய முற்பணத்தை உள்ளடக்குவதுடன் அது 90 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இறக்குமதி முற்பணங்கள் வியாபாரத்தின் தன்மையின் அடிப்படையில் காணப்படுவதால் அதனை முழுமையாக அகற்ற முடியாதுள்ளது. மேலும், இந்த சில்லறைக் கடன்பட்டோர் மீதியில் கிளைகள் மட்டத்திலான வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள், வாடகை முற்பணங்கள் மற்றும் ஏனைய நானாவித முற்பணங்கள் உள்ளடங்குகின்றன. |
| HQ | 22,889,143.00 | சாத்தியமான மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | **1,675,901,099.00** | |

**டிரான்ஸ்மிஷன் சண்ட்ரி கடனாளி 5 ஆண்டுகளுக்கும் மேலாக பெறத்தக்கது**

| கடன்பட்டோரின் பெயர் | தொகை | பதில் |
|---|---|---|
| வுட் குரூப் காஸ் தர்பைன் லிமிட்டெட் | 8,264,352 | இந்த கம்பனியான வூட் குரூப் கேஸ் டர்பைன் லிமிடெட்ஷ இனிமேலும் இலங்கையில் இயங்கமாட்டாது. எனவே, இந்த பிரச்சினை 2012 இல் இ.மி.ச. இன் தலைமை சட்ட அதிகாரியின் அபிப்பிராயத்திற்காக முன்வைக்கப்பட்டது.<br>தலைமை சட்ட அதிகாரியின் கூற்றுப்படி, அவர் கூறினார். “பிரிஸ்கிரிபஷ்ன் ஒர்டினன்ஸ் சட்டத்தின்படி, அத்தகைய ஒப்பந்தம்/உடன்படிக்கை முடிவடைந்த நாளிலிருந்து அல்லது அத்தகைய ஒப்பந்தம்/ உடன்படிக்கையின் நடவடிக்கைக்கான காரணம் எழுந்த தேதியிலிருந்து 6 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பின் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட முடியாது”<br>இலங்கையில் தற்போது அவ்வாறான பெயரில் எந்தவொரு நிறுவனமும் இல்லை என்பதாலும், மேலே குறிப்பிடப்பட்ட சட்ட அதிகாரியின் பதிலிற்கு அமையவும் இந்த மீதியை கணக்குப் புத்தகங்களில் இருந்து பதவழிக்க தீர்மானிக்கப்பட்டது.<br>பதிவழிப்புச் செய்வதற்கான சபை பத்திரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

| கடன்பட்டோரின் பெயர் | தொகை | பதில் |
|---|---|---|
| மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு | 6,142,277/- | 2008.09.09 அன்று மின்வலு அமைச்சிலிருந்து பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் கெரவலப்பிட்டியவில் டீயல் எரிபொருள் ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தின் திறப்பு விழா தொடர்பான செலவுகளை இ.மி.ச. ஏற்றுக்கொண்டது. அதை மீளச் செலுத்துவதற்காக திறப்பு விழாவின் செலவினங்களுடன் தொடர்புடைய பட்டியல்களை அமைச்சிற்கு அனுப்புமாறு குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இ.மி.ச. பட்டியல்களை அனுப்பியதுடன் செலவினங்களை மீளளிக்குமாறு 03-01-2011, 01-10-2013 08-10-2015, மற்றும் 25-07-2017 ஆந் தேதியிட்ட கடிதங்கள் மூலம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.<br><br>கெரவலப்பிட்டி ஒருங்கிணைந்த மின் உற்பத்தி நிலையம் திறப்பு விழா தொடர்பான நிலுவைத் தொகையை இ.மி.ச. இற்குத் திருப்பிச் செலுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் பெறுகை) அவரது 2018-01-04 ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திடம் கோரியுள்ளார்.<br><br>வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் அவரது 30.01.2018 ஆம் தேதியிட்ட தனது கடிதத்தின் மூலம் மேற்குறித்த கோரிக்கைக்கு பின்வருமாறு பதிலளித்திருந்தார் □இந்த செலவினத்தை மின் உற்பத்தி நிலையத்தின் பயனாளியான இ.மி.ச. ஏற்க வேண்டுமென்பதுடன், கொடுக்கல் வாங்கலின் உரிமையை நிறுவ முடியாதுள்ளதால், இந்த செலவினத்தை நிறுவனம் பொறுப்பேதற்காக பணிப்பாளர் சபையிடமிருந்து ஆலோசனையை பெற வாய்ப்பில்லை" என்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தா<br><br>எவ்வாறாயினும், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு 2017 ஆகஸ்ட் 16 மற்றும் 2018 ஜனவரி 04 ஆகிய தேதிகளில் வெஸ்ட் காஸ்ட் பவர் லிமிடெட்க்கு அனுப்பிய கடிதங்களை மேற்கோள்காட்டி, 2022 ஆகஸ்ட் 22 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம், செலவினத்தை மீளளிக்குமாறு வெஸ்ட் கோஸ்ட் பவர் லிமிடெட் நிறுவனத்திடம் இ.மி.ச. மீண்டும் கோரியுள்ளது.. |
| ஏ/எஸ் கெலனிதிஸ்ஸ (பிரைவேட்) லிமிடெட் | 1,368,964,445/- | AES கெலனிதிஸ்ஸ (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு குறைந்த விலையில் எரிபொருளை வழங்குமாறு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உபகுழு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு (CPC) அறிவித்தது. எனினும், CPC விலையை குறைக்காததுடன் முன்னைய அதே விலையின் கீழ் விலைப்பட்டியல் செய்திருந்தது.<br><br>CPC எரிபொருள் விலை வேறுபாட்டை சரிசெய்து நிறுவனத்திற்கு கடன் வழங்கினால் மட்டுமே AES கெலனிதிஸ்ஸ (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து இந்தத் தொகை திரும்பப் பெறப்படும்.<br><br>DGM - (எரிசக்தி கொள்வனவு) தனது 24.11.2011 கடிதத்தின் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் முன்னைய பட்டியல்களை அதற்கேற்ப மாற்றியமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியுள்ளார்.<br><br>மேற்குறித்த கடிதத்திற்கான நினைவூட்டல்கள் 21.12.2011 மற்றும் 20.01.2012, 18.08.2022 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்டிருந்த போதிலும், இன்றுவரை எந்த பதிலும் CPC யிடம இருந்து கிடைத்திருக்கவில்லை. |
| நொதர்ன் பவர் (பிரைவேட்) லிமிடெட் | 358,739/- | இந்தத் தொகை 2011 இல் நொதர்ன் பவர் (பிரைவேட்) லிமிடெட் இற்காக மேற்கொள்ளப்பட்ட விரிவாக்க வேலைகளிற்காக பெறப்பட வேண்டியதாகும். இ.மி.ச. இன் புத்தகங்களில் இக்கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகள் உள்ளதால் இந்த மீதி தீர்க்கப்படாமல் உள்ளது. |

**(இ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 83.68 மில்லியன் தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது.**

பெறவேண்டியவற்றில் பெரும்பாலானவை அரசு மருத்துவமனைகள், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு உரியனவாகும். கடிதங்களை அனுப்புவதன் மூலமும் பிற வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், பெறவேண்டியவற்றை அறவிடுதல் கேள்விக்குறியாக உள்ளது. அந்த அறவிட முடியாத நிலுவைகளை பதிவழிப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஈ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714.96 மில்லியன் மீதி தொடர்ந்தும் அறவிடப்பாது வைக்கப்பட்டுள்ளது.**

இந்த மீதியானது தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் ரூபா 478,179,795.00 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் இன் ரூபா 236,785,639.43 தொகைகளை உள்ளடக்குகின்றது.

தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் நிலுவை தொடர்பில் ஒரு அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் விடயத்தில் லங்கா கோல் கம்பனி ஒரு நடுவர்தீர்ப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா கோல் கம்பனியினால் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த மீதி நீக்கப்படும்.

**(உ) பின்வரும் ரூபா 4.01 பில்லியன் கூட்டுத்தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.**

| கடன்கொடுத்தோர் பெயர் | தொகை ரூபா |
|---|---|
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,820,562,372 |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 |

| கடன்கொடுத்தோர் பெயர் | தொகை ரூபா | பதில் |
|---|---|---|
| சீன இயந்திர பொறியியல் கம்பனி | 2,820,562,372 | அமைச்சரவை ஒப்புதலின் அடிப்படையில் 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு கட்டணம் தவணைக் கட்டண அடிப்படையில் CMEC இற்குச் செலுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொகை 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய செயல்பாட்டு மற்றும் பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக்குகின்றது. இ.மி.ச. 2022 மே மாதத்தில் யூஎஸ் டொலர் 1.25 மில்லியன் தொகையை செலுத்தியுள்ளது. |
| செலுத்த வேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 | 2013/2014 வரி ஆண்டுக்கான ரூபா 1,270,766,413 பிடித்துவைத்த பங்கிலாப வரியானது 2009/2010 மற்றும் 2010/2011 க்கு கோரப்பட்ட திரும்ப பெறவேண்டிய்பிடித்துவைத்த பங்கிலாப வரிக்கு எதிரீடு செய்ய வேண்டிய பங்கிலாப வரியை பிரதிநிதித்துவம் செய்கின்றது. கணக்குகளில் இந்த பொறுப்பைத் எதிரீடு செய்ய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் திரும்பப் பெறும் கோரிக்கைகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இருப்பினும், குறித்த சட்ட வியாக்கியாணத்தில் சர்ச்சை காணப்படுகின்றமையால் இந்த தொகையை தீர்ப்பதற்கு இ.மி.ச. இற்கு உடன்பாடு இல்லை. இது தொடர்பில் இ.மி.ச. தொடர்ந்து பின்தொடர் நடவடிக்கை எடுத்து வருகின்றது. |

**(ஊ) நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் நிதிக் கூற்றுக்களில் வியாபார கடன்கொடுத்தோராக வைக்கப்பட்டுள்ளது.**

மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு காரணமாக வடக்கு மின் நிலையம் 2015-01-27 முதல் மூடப்பட்டது. எவ்வாறாயினும், இது ஒரு வலுவூட்டப்பட்ட சூழ்நிலை என்று அறிவித்து இயலளவுக் கட்டணங்களுக்காக கம்பனி மாதாந்த விலைப்பட்டியல்களை வழங்கியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு நிலுவையில் இருந்ததால், இந்த விலைப்பட்டியல் பெறுமதிகளை இ.மி.ச. கணக்கிட்டுள்ளது. மின்வலு நிலையம் சுற்றுச்சூழல் சட்டத்தை மீறி இயங்குகிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையால், இந்த விலைப்பட்டியல்களைத் தீர்ப்பதற்கு இ.மி.ச. இற்கு எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த தொகைகளை பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும்.

**(எ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானக் கூற்றில் ரூபா 571.34 மில்லியன் பெறுமதியான (27,049.71 மெற்றிக் தொன்) நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ளது. இருப்பினும், பின்வருவன காரணமாக அந்த நிலக்கரி இருப்பு பெறுமதியின் சரியான தன்மையினை கணக்காய்வில் மெய்மைப்படுத்த முடிந்திருக்கவில்லை.**

ரீ-க்ளைமர் மற்றும் டோசர்களைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட அளவிற்கு களஞ்சியத்திலுள்ள பயன்படுத்தக்கூடிய நிலக்கரியை அகற்றுவதன் மூலம் லக்விஜய மின்வலு ஆலையின் (LVPP) நிலக்கரி களஞ்சியத்தை மெய்மையாய்வு செய்தல் தற்போதைய நடைமுறையாக உள்ளது. களஞ்சியத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நிலக்கரி அகற்றப்பட்டவுடன், நிலக்கரி களஞ்சியம் சமமாக சீரமைக்கப்பட்டு மெய்மையாய்வு ஆரம்பிக்கப்படுகின்றது. நிலக்கரி களஞ்சியத்தின் கீழ்ப்பகுதியில் அடுக்குகளாக இருக்கும் பச்சை நிலக்கரிக்கும் திரட்டுகளுக்கும் போசாக்களிப்பதைத் தவிர்ப்பதற்காக இந்த தயாரிப்பு நடவடிக்கை செய்யப்படுகிறது. குறைந்தபட்ச பிழையுடன் துல்லியமான முடிவைப் பெறுவதற்கான சரியான கணக்கெடுப்பு இதுவாகும். அடிப்படையில், மிகப் பெரிய கையிருப்பு குவியல்களுடன் கணக்கெடுப்பு செய்யப்படும்போது, அது மிகவும் பிழையான முடிவைத் தருகின்றது. எனவே, அளவீட்டுப் பிழைகளைக் குறைப்பதற்காக, சபை ஒப்புதலின்படி மேற்குறித்த முறை பின்பற்றப்படுகிறது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(i) அதிக அளவு நிலக்கரிக்குரிய அடர்த்தியை மெய்மைப்படுத்துவதற்காக ஒரு கனமீற்றர் நிலக்கரியின் களத்திலுள்ள அடர்த்தியை அளவிடுவதற்கு கிடங்குகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட சுமார் 35 கிலோ நிலக்கரி மாத்திரமே நிறையிடப்பட்டிருந்தமை.**

அளவிடப்பட்ட நிலக்கரி களஞ்சிய மேற்பரப்பின் பரப்பளவு ஏறக்குறைய சமமாக, அவ்வாறே சுருக்கப்பட்டு ஒரே மாதிரியாக இருந்தது. மேலும், புலத்தின் அடர்த்தியை அளவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முறை மிகவும் துல்லியமானதாகும். எனவே, அகழ்வு செய்யப்பட்ட அளவானது அமைவிட அடர்த்தியை அளவிடுவதற்கு போதுமானதாகக் கருதப்பட்டது.

**(iii) கிடங்குகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட ஒரு கன மீற்றர் நிலக்கரியின் அர்த்திக்கும் களத்திலுள்ள அடர்த்திக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டமை.**

அடர்த்தியினது மாதிரி புள்ளிகளின் அமைவிடங்கள் ஒரு பெரிய பரப்பளவில் பரவியுள்ளன. அதிகபட்ச/குறைந்தபட்ச (1193.33/1380.95 kg/m3) சராசரி கள அடர்த்திக்கு (1294.88 kg/m3) அளவிடப்பட்ட கள அடர்த்தியில் உள்ள வேறுபாடு அதிகபட்ச வழுச் சதவீதமாகக் கருதப்படலாம். எனவே அதிகபட்ச வழுச் சதவீதத்தை 7.8 சதவீதம் என கணக்கிடலாம். கணக்கெடுப்புக்காகக் கருதப்பட்ட பௌதீக சரக்கிருப்பு 114,290 MT மாத்திரமே என்பதால், அதிகபட்ச வழு 114,290 x 7.8% ஆகக் கருதப்படலாம். இது 8963 MT ஆகும். இந்த வகையான வழு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றாலும், நிலக்கரி களஞ்சியத்தில் கையாளப்படும் நிலக்கரியின் மொத்த அளவு 2 மில்லியன் மெட்ரிக் தொன்னைத் தாண்டியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, மேலே உள்ள வழுச் சதவீதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்பிற்குள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

**(iv) நிலக்கரி குவியல்கள் காணப்பட்டமையால் "டீ" இறங்குதுறையிலுள்ள சராசரி நிலக்கரியின் மேற்பரப்பு அளவிடப்பட்டிருக்காமை.**

நிலக்கரி மேற்தளத்தின் தொடர்ச்சியான செயல்பாடுகள் காரணமாக இறங்குதுறை A மற்றும் C ஐ போன்று இறங்குதுறை B இன் மேற்பரப்பு சமப்படுத்தப்பட்டிருக்கா மையால் இறங்குதுறை B இன் நிலக்கரி மேற்பரப்பை அளவிட முடிந்திருக்கவில்லை.

**(v) வரைவு கணக்கெடுப்பில் இருந்து மாத்திரம் ஏற்றப்பட்ட அளவும் வெளியேற்றப்பட்ட அளவும் அளவிடப்பட்டிருந்தமை.**

இந்த அளவீடுதான் இந்த வகையான சரக்கிருப்புகளை அளவிடுவதற்கு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரியான முறையாகும். ஆர்க்கிமிடீஸின் கொள்கையின்படி, ஒரு திரவத்தில் மூழ்கியிருக்கும் உடலில் செலுத்தப்படும் மேல்நோக்கி மிதக்கும் விசையானது, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருந்தாலும், உடல் இடம்பெயர்க்கும் திரவத்தின் நிறைக்கு சமமானதாகும். எனவே, இடம்பெயர்ந்த கடல் நீரின் நிறை நிலக்கரியின் நிறைக்குச் சமமாகும்.

**(vi) வெளியேற்றப்பட்ட நிலக்கரியை அளவிடப் பயன்படுத்தப்படும் பூச்சிய பெல்ட் அளவுகோல் சரியான அளவை வழங்கியிருக்காமை.**

இந்த பூச்சிய-பெல்ட் அளவை நாம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றோம். LVPP இன் நிலக்கரி கையாளுதல் பராமரிப்பு பிரிவு ஒவ்வொரு கப்பலேற்றுதல் முடிந்த பின்னரும் இந்த அளவை அளவீடு செய்கின்றது. எவ்வாறாயினும், மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் இவ்வாறு வெளியேற்றப்படுவதாலும், பூச்சிய பெல்ட்டில் நிலக்கரியின் ஈரப்பதம் அளவுகளில் சிறிய மாற்றம் ஏற்படுவதாலும் மிகக் குறைந்த சதவீத அளவில் நிறையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

**(vii) மூன்று பிரிவுகளில் நிலக்கரியின் பயன்பாட்டை அளவிடப் பயன்படுத்தப்படும் பெல்ட் அளவுகோல் சரியான அளவை வழங்கியிருக்காமை.**

இந்த நிலக்கரி ஆலைகள் மற்றும் பெல்ட் அளவுகள் என்பன நிலக்கரி ஆலைகளில் நுகரப்படும் நிலக்கரியின் மிகத் துல்லியமான அளவீடுகளைப் பெறுவதற்காக பரிந்துரைக்கப்பட்ட காலகட்டங்களில் அவ்வப்போது அளவீடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

**(viii) நிலக்கரியை வெளியேற்றும் மற்றும் உட்கொள்ளும் தருணத்தில் நிலக்கரியின் அடர்த்தி வேறுபட்டிருக்கலாம் என்பதுடன் நிலக்கரி இருப்பு மீது அந்த அடர்த்தியின் தாக்கம் சீராக்கப்பட்டிருக்காமை.**

நிலக்கரியின் சுய-எரிதல், ஆவியாகும் பொருட்களின் ஆவியாதல் மற்றும் நிலக்கரி குதத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் நிலக்கரியின் ஈரப்பத அளவுகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக மிகக் குறைந்த சதவீத நிறை இழப்பு ஏற்படலாம். சபை ஒப்புதலிற்கு அமைய வருடாந்த மெய்மையாய்வின் போது சீராக்கப்பட்டுள்ளது.

**(ஏ) சபை பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.**

1. இ.மி.ச. மற்றும் லெகோ ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் ஒரு வரைவு உடன்படிக்கையை குழவொன்று தயாரித்துள்ளதுடன் அது குறித்து சட்டமா அதிபரின் (AG) கருத்து கோரப்பட்டுள்ளது.
2. AG யின் கருத்துப்படி இந்த குழு தேவையான திருத்தங்களை செய்துள்ளதுடன் (இறுதி மின் விற்பனை உடன்படிக்கை AGM (டிரான்ஸ்மிஷன்) க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3. ஆனால் LECO இன் அதிகாரிகள்/பிரதிநிதிகள், கீழே தரப்பட்டுள்ள PSA வரைவில் LECO ஆல் கருத்திற்கொள்ளப்பட்ட சில அவதானிப்புக்களை மேற்கோள் காட்டி, இறுதியாக்கப்பட்ட PSA இல் கையெழுத்திட மறுத்துள்ளனர்.

   இது விநியோக உரிமதாரர்களுக்கு (DLs) சொந்தமான LECO விநியோக தளங்கள் என்பதால் இந்த சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்.

## குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

4. இ.மி.ச. இன் பொது முகாமையாளர், குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் லெகோ இன் 03 அதிகாரிகளால் செய்யப்பட்ட சில ஒப்புதல்கள் குறித்து (2015 மார்ச் 26 ஆந் திகதிய கடிதத்தினால்) லெகோவின் பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளார். இ.மி.ச. பொது முகாமையாளரின் அக் கடிதத்தில், இந்த விடயத்தை லெகோ இன் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது

5. இ.மி.ச. இன் விநியோக ஒருங்கிணைப்பு குழு (டிசிசி), பொது முகாமையாளரிடமிருந்து பிரதான உடன்படிக்கையை பெற்றுக் கொண்ட பின்னர் 33kV ஊசி புள்ளி துணை மின்நிலையங்களை லெகோ மின் விநியோகத்திற்காக சமர்ப்பிதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்காக ஒரு குழுவை (LECO பிரதிநிதிகள் உளளடங்கிய) நியமித்துள்ளது.

6. அந்தக் குழுவின் இறுதி அறிக்கையின் மூலம் முன்மொழியப்பட்ட வரைவு ஆவணத்தை செயல்படுத்துவதற்கு முன்னர், PSA இல் கையொப்பமிடுவதற்கு LECO இன் இணக்கப்பபடானது ஒரு கட்டாய முன்நிபந்தனையாக உள்ளதுடன் இந்தக் குழுவிற்கான LECO இன் பிரதிநிதி மூலம் அது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

7. குறித்த குழுவினால் முன்மொழியப்பட்ட திட்டமானது 2022.06.06 அன்று நடைபெற்ற கூட்டத்தில் DCC இனால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. லெகோவின் “2015 மார்ச் மாத அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு இந்த பணி பூரணப்படுத்திய பின்னர், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட” விநியோக உரிமதாரர்களுக்கு (DLs) சொந்தமான லெகோ வழங்கல் நிலைப் பிரச்சினை தீர்த்துவைக்கப்படுவதுடன் விற்பனை உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கும் வழிவகை செய்யப்படும்.

9. கூறப்பட்ட திட்டத்தை செயல்படுத்துவதற்கு இணையாக, இ.மி.ச. இன் பொது முகாமையாளர் (GM-CEB) பரிமாற்ற உரிமதாரர் மற்றும் விநியோக உரிமதாரர்களுக்கு இடையேயான மின் விற்பனை ஒப்பந்தங்களை மதிப்பாய்வு செய்யவும் மேம்படுத்தவும் ஒரு குழுவை நியமித்துள்ளார். (2022-06-27 ஆந் தேதியிட்ட GM-CEB இன் கடிதம்). அதில், இ.மி.ச. மற்றும் லெகோ இற்கு இடையேயான வரைவு மின்சார விற்பனை ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து மேம்படுத்துவதற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளது.

**(ஐ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக அந்தக் கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 61.39 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. அநேகமான செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் அமுல்படுத்தப்பட்டிருக்காமையால் மேலதிக கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.**

அனைத்து செயற்திட்டங்களுக்கும் கடப்பாட்டுக் கட்டணம் பொதுவானதாக உள்ளதுடன் செயற்திட்டம் உரியவாறு கால எல்லைகளுக்கேற்ப செயல்பட்டாலும், கடன் உடன்படிக்கைகளிலுள்ள கடுமையான நிபந்தனைகள் காரணமாக அதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

**(ஒ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் சபையின் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் முன்னைய மோசடியைக் கருத்திற் கொள்ளாது மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 மாத்திரம் அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.**

திரு. ஆர்.பி. வெதகெதரவிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்காக, வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான கோப்புகளுடன் இலங்கை மின்சார சபை அதிகாரிகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பல தடவைகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஆர்.பி. வெதகெதரவிடமிருந்து இருப்புப் பற்றாக்குறையை அறவிடுவதற்காக 2021-11-01 அன்று சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் பூர்வாங்க கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. எவ்வாறாயினும், அந்த கலந்துரையாடலின் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

2022-09-12 அன்று பதிற்கடமையிலுள்ள பொது முகாமையாளருடன் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. பொது முகாமையாளர் (இ.மி.ச) ஆல் இருப்புக் குறைவு குறித்து மூவரடங்கிய குழுவின் அறிக்கையை கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(ஓ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3.79 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகையினை பதிவழிக்கும் செயற்பாட்டில் சபை ஈடுபட்டுள்ளது.**

திரு. என்.பி.எல். சமரசிங்க அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இருப்புப் பற்றாக்குறையினை அவரது ஓய்வூதியத்திலிருந்து மீளப்பெறுவது தொடர்பில் மூவரடங்கிய குழுவொன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் அந்தக் குழு அதன் பரிந்துரைகளை 2021-04-16 அன்று வழங்கியிருந்தது. அதில் உள்ள பரிந்துரைகளை பொது முகாமையாளரின் (இ.மி.ச.) ஒப்புதலுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய அவதானிப்புகளிலுள்ள இருப்பு பற்றாக்குறை குறித்து அறிக்கை தயாரிப்பதற்கு மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

**(ஔ) மின்பிறப்பாக்கப் பிரிவிலுள்ள மூலதன முடிவுறா வேலைகளில் 2018 திசெம்பர் 31 முதல் காணப்பட்ட ரூபா 22.88 மில்லியன் மீதி நகர்த்தப்படாமல் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது.**

LVPP க்கான உத்தேச சுற்றுலா விடுதிக்கு (UDA) இன் ஒப்புதலை பெறுவதற்காக ரூபா 26,315.65 செலுத்தப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் CEMS உதிரிபாகங்களை கொள்வனவு செய்வதற்கும், FGD க்கான காற்றின் தரத்தை உறுதிப்படுத்தும் சாதனத்தை நிறுவுவதற்கும் செலுத்தப்பட்ட ரூபா 6,211,035 தொகை LVPP இன் மூலதன முடிவுறா வேலையின் கீழுள்ள நகராத பொருட்களாகும்.

இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியானது சுற்றுலா விடுதியை அமைப்பதற்கு போதுமானதாக இல்லை எனவும் நிதியை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிலவும் சூழ்நிலை காரணமாக, மேலதிக நிதி அனுமதிக்கப்படவில்லை.

**(ஃ) ரூபா 62.95 பில்லியன் மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.**

| கிரய நிலையம் | மின்வலு நிலையம் | சொத்தின் பெறுமதி |
|---|---|---|
| 831.00 | விக்டோரியா | 14,412,751,075.25 |
| 832.00 | கொத்மலே | 22,087,081,294.30 |
| 833.00 | உக்குவெல | 2,581,412,890.05 |
| 834.00 | போவதென்ன | 1,968,826,674.74 |
| 835.00 & 836.00 | ரந்தெனிகல மற்றும் ரந்தெம்பே மின்வலு நிலையங்கள் | 21,901,386,018.15 |
| | **மொத்தம்** | **62,951,457,952.49** |

மேற்குறிப்பிட்ட அனைத்து மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான ஏனைய அனைத்து அணைகளும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் இயக்கப்பட்டு, பராமரித்து, நிர்வகிக்கப்படுகின்றது. இருப்பினும், நீர்த்தேக்கங்களில் மின்சாரத்தை பிறப்பித்தல் வரையான நீர்வழிப்பாதையை மட்டுமே சபை கையகப்ப டுத்தியுள்ளதுடன் அவற்றை முழுமையாக இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல் என்பன சம்பந்தப்பட்ட மின் நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன

**(க) ரூபா 28.79 பில்லியன் மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 8.5 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 2.46 பில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக காட்டப்பட்டுள்ளது. இந்தளவு அதிகமாக நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை பராமரிப்பதனால் அது சேதங்கள், இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் மற்றும் மோசடி போன்றன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.**

| பிரிவுகள் | மெதுவாக நகர்கின்ற, நகராத, பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புக்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| பிறப்பாக்கம் | லக்விஜய மின்நிலையத்தில் உள்ள சில நுகர்பொருட்கள் தேவையின் அடிப்படையில் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்படுவதால் மெதுவாக நகர்கின்றன. மகாவலி வளாகம் மற்றும் தெர்மல் வளாகத்தில் சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் லக்சபான வளாகத்தில் உள்ள காலாவதியான மற்றும் சேதமடைந்த பொருட்களை அப்புறப்படுத்த நான்கு பேர் கொண்ட குழு 2021.10.13 அன்று நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையுடன், காலாவதியான மற்றும் அசையாத பொருட்களிலிருந்து அடையாளம் காணப்பட்ட சில பொருட்களை அப்புறப்படுத்த AGM (பிறப்பாக்கம்) இடமிருந்து ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சமனல வளாகத்திலுள்ள நிலுவை தொகை ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படும். |
| சொத்து முகாமைத்துவம் | மெதுவாக நகரும் காலாவதியான மற்றும் சேதமடைந்த இருப்புக்களில் 3 வகைகள் உள்ளன (உருப்படி எண் 1: மின் உற்பத்தி நிலைய அலகு, உருப்படி எண் 2: ஏர் கண்டி'னிங் மற்றும் குளிர்சாதன பெட்டி அலகு, மற்றும் உருப்படி எண் 3: லி/ப்ட் அலகு). உருப்படியில் 1 இலுள்ள நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புகள், ஜெனரேட்டர் பராமரிப்புக்கு அவசியமான உதிரி பாகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, அவை அவசரமான சூழ்நிலைகளில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் சாதாரண நடைமுறைக்கு உட்பட்டு உடனடியாக மற்றும் சரியான நேரத்தில் அவற்றை வாங்க முடியாது. சேதமடைந்த மற்றும் காலாவதியான ஸ்டாக் மதிப்புகள், அகற்றப்பட வேண்டிய பொருட்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அவற்றை, அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும், உருப்படி 2 இலுள்ள: அசையாத இருப்பு என்பது சில்லர், AHU, பேக்கேஜ் செய்யப்பட்ட, குளிர் அறை மற்றும் குளிரூட்டி பராமரிப்புக்கு தேவையான உதிரி பாகங்களை குறிக்கிறது. அவசரமான சூழ்நிலைகளில் சேமித்து வைக்க வேண்டியவையாக இவை இருப்பதுடன் சாதாரண நடைமுறையில் இவற்றை உடனடியாகவும் உரிய வேளையிலும் வாங்க முடியாது. உருப்படி 3 இலுள்ள நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புகள் லி/ப்ட் பராமரிப்புக்கு அவசியமான உதிரி பாகங்களைக் குறிக்கின்றன, அவசரமான சூழ்நிலைகளில் சேமித்து வைக்க வேண்டியவையாக இவை இருப்பதுடன் சாதாரண நடைமுறையில் இவற்றை உடனடியாகவும் உரிய வேளையிலும் வாங்க முடியாது. சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்பின் பெறுமதிகள் அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்களைக் குறிப்பதுடன் அவற்றை அகற்றுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

| பிரிவுகள் | மெதுவாக நகர்கின்ற, நகராத, பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புக்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| விநியோகப் பிரிவு 1 | 2021-12-31 வரை DD1 கணக்குகளின் நகராத, மெதுவாக நகரும் மற்றும் வழக்கற்றுப் போன இருப்புகளின் மொத்த பெறுமதி ரூபா 824.14 மில்லியன் ஆகும். இதில் முக்கிய உதிரி பாகங்களின் ரூபா 30.28 மில்லியன் உள்ளடங்கியிருப்பதுடன் இருப்பின் அளவைக் குறைக்க தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, மெதுவாக நகரும் பொருட்கள் தகுந்த நேரத்தில் வேலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| விநியோகப் பிரிவு 2 | கிழக்கு மாகாணத்தில், 2021 ஆம் ஆண்டின் வருடாந்த இருப்பு சரிபார்ப்புக்குப் பிறகு, களஞ்சியத்திலுள்ள ரூபா 26.85 மில்லியன் பெறுமதியான காலாவதியான மற்றும் சேதமடைந்த இருப்புகளை அகற்றுவதற்காக, 2022 மார்ச் 22 அன்று சபையின் ஒப்புதல் பெறப்பட்டது. |
| விநியோகப் பிரிவு 3 | சப்ரகமுவவில் 2022 காலப்பகுதியில் ரூபா 6,167,272.83 பெறுமதியான மதிப்புள்ள சேதமடைந்த பொருட்கள் (சபை அங்கீகரித்த) விற்கப்பட்டுள்ளன. |
| விநியோகப் பிரிவு 4 | வருடாந்திர சரிபார்ப்பு செயல்முறைக்கு இணையாக, காலாவதியான.்.விளைவற்ற பொருட்களைக் கண்டறிந்து பரிந்துரைக்க, சரிபார்ப்பு/கணிப்பு சபை நியமிக்கப்பட்டது. சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத கையிருப்பு பொருட்களில், இருப்புக் கணிப்பீட்டுச் சபை (BOS) அடையாளம் கண்டுள்ள ரூபா 3,081,087.50 தொகை விற்கப்படும் என்பதுடன் ரூபா 683,669.00 பதிவழிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படும். அவதானிப்புகளின் அடிப்படையில், கணக்குகளில் இருந்து வழக்கற்றுப் போன, செயலற்ற மற்றும் சேதமடைந்த இருப்புக்களின் பெறுமதிகளை பதிவழிப்பதற்காக ஒப்புதல் பெறுவதற்கும், GM இன் 2021/GM/39/FM ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அந்த பொருட்களை விற்பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்காக 2022 மார்ச் 15 அன்று சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. சபை ஆவணங்கள் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இருப்புத் திருட்டுகள் மற்றும் தவறான நிர்வாகத்தின் அபாயத்தைத் தணிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br><br>2021/GM/39/FM ஆம் இலக்க 2021.09.07 ஆந் தேதிய GM இன் சுற்றறிக்கையின் படி தென் மாகாணம் 1 இற்கான இருப்புக் கணக்கெடுப்பு சபையின் அறிக்கையின்படி தொடர்புடைய சபைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.<br><br>தென் மாகாணம் 2 இல் மெதுவாக நகரும், அசையாத மற்றும் சேதமடைந்த இருப்புப் பொருட்களுக்கான சபைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு, குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டதுடன் குழு ஆவணங்கள் கணக்காய்வுக் குழுவின் மதிப்பாய்வு கட்டத்தில் உள்ளன. |

**(கா) சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான விலை வீதம் உண்மைக் கிரய முறையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த விலை வீதமானது சிற்றளவு நீர் மின் நிலையங்களின் உண்மைக் கிரயத்துடன் எந்தவித தொடர்பும் இல்லாத தவிர்க்கப்பட்ட கிரய முறையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தவிர்க்கப்பட்ட கிரய முறையானது அனல் மின் ஆலைகளின் வெளியேற்றத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன், அது எரிபொருள் கிரயத்திலிருந்து வேறுபட்டிருந்தது. பிரதிப் பொது முகாமையாளர் (DGM - முறைமைக் கட்டுப்பாடு) இன் DGM/SYC/TCH/41 கடிதத்தின் படி, சிற்றளவு நீர் மின் ஆலைகளின் அலகு விலை வீதமானது ரூபா 10.00 இற்கும் குறைவாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டிற்காக சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையில் நிர்ணயிக்கப்பட்ட விலை வீதமானது மழைக்காலத்திற்கு ரூபா 19.11 ஆகவும் வறண்ட பருவத்திற்கு ரூபா 20.59 ஆகவும் காணப்பட்டது. மேலும், புள்ளி விவர அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில் சபையின் ஒரு அலகு நீர் மின்சாரத்திற்கான கிரயம் ரூபா 2.49 ஆகும்.**

என்சிஆர், மின்வலு உற்பத்தி நிலைய மேம்பாட்டிற்காக முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான கட்டண முறை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்த முறையின் குறைபாடுகள் கண்டறியப்பட்டு, 2008 ஆம் ஆண்டு "கிரய பிரதிபலிப்பு, தொழில்நுட்பம் சார்ந்த மூன்று அடுக்குமுறைக் கட்டணம்" என அடையாளம் காணப்பட்ட ஒரு புதிய கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்த முறையும் போட்டி கூறுவிலை முறையால் மாற்றப்பட்டு அதற்கமைய சந்தை சக்திகளால கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது.

**(கி) சபைக்குச் சொந்தமான நிலங்களை அடையாளம் காணுதல், அளவீடு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகளிற்காக 2020 யூன் 01 முதல் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்ததுடன், அதாவது அளவீடு செய்தல் 34 சதவீதமாகவும் மதிப்பீடு செய்தல் 0.4 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டது.**

2022-05-31 இல் உள்ளவாறு இ.மி.ச. இன் நிலங்களை அளவீடு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தலின் செயல் முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது. நில அளவீட்டினதும் மதிப்பீட்டினதும் தற்போதைய செயல் முன்னேற்றம் முறையே 70% மற்றும் 16% ஆகும். தற்சமயம் இ.மி.ச. இன் 88 காணிகளின் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின் பிறப்பாக்கப் பிரிவுக்கு சொந்தமான நிலங்களின் மதிப்பீடு பின்வரும் காரணங்களால் தாமதமாகியுள்ளது.

1. அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புகளால் எல்லை மீளத்திறப்பு மற்றும் மதிப்பீட்டுச் சிக்கல்கள்.
2. நீர்த்தேக்கத்தினுள் காணப்படுகின்ற காணிகளின் மதிப்பீடு காரணமாக ஏற்படும் பிரச்சினைகள்.
3. கோவிட்-19 தொற்றுநோயின் போது அரசு அதிகாரிகளுடன் பணிகளை ஒருங்கிணைப்பதில் உள்ள சிரமங்கள் இ.மி.ச. இன் நிலங்களின் பொழிப்பு

இ.மி.ச. இன் நிலங்களை இனங்கண்டு அளவீடு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் (31.05.2022 வரை பெறப்பட்டவை) பிரதான நிலங்களின் பொழிப்பு (5 பேர்ச்சுக்கு மேல் விஸ்தீரணமுடையவை)

# குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி..)

| பிரிவு | கண்டறியப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை | சர்வே திட்டங்கள் உள்ள நிலங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| விநியோக பிரிவு -01 | 206 | 176 | 153 | 7,276,141,300.00 |
| விநியோக பிரிவு -02 | 398 | 346 | 275 | 4,701,083,600.00 |
| விநியோக பிரிவு -03 | 128 | 124 | 107 | 2,172,974,000.00 |
| விநியோக பிரிவு -04 | 161 | 151 | 127 | 3,324,137,400.00 |
| சொத்து முகமை பிரிவு | 5 | 5 | 5 | 5,366,450,000.00 |
| பரிமாற்ற பிரிவு | 123 | 107 | 62 | 5,758,928,500.00 |
| பிறப்பாக்க பிரிவு | 3086 | 2259 | 8 | 688,700,000.00 |
| 2022.05.31 இல் மொத்த தொகை | 4107 | 3168 | 737 | 29,288,414,800.00 |
| அனுமானிக்கப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை | 4500 | 4500 | 4500 | - |
| 2022.05.31 இல் முன்னேற்றம் | 91% | 70% | 16% | - |

**(கீ) லக்விஜய மின் நிலையத்திலுள்ள சில சரக்கிருப்புகள் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், அந்த சரக்கிருப்புகள் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.**

சில உதிரி பாகங்கள், தொடர்புடைய உதிரி பாகங்களின் தொடர் இலக்க விவரங்கள் இல்லாமல் லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் கட்டம் ஐ இன் போது இலவசமாக இ.மி.ச. இடம் ஒப்படைக்கப்பட்டவையாகும். இவ்வாறு ஏராளமானவை பெறப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை செயற்திட்ட நிர்மாணங்களின் போது எஞ்சியவையாகும். இந்த உதிரி பாகங்களுக்கான குறியீட்டு எண்களை வழங்கும் பணி இடம்பெற்று வருவதுடன் அதன்படி கணக்குகளில் பதிவு செய்யப்படும்.

**(கு) லக்விஜய மின் நிலையத்தில் எரிபொருள் பெறுவனவுகள் மற்றும் நுகர்வு பற்றிய பதிவேடுகள் 2021 திசெம்பர் 04 முதல் 2022 சனவரி 11 வரை கையிருப்புப் புத்தகங்களில் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை2021 திசெம்பர் 04 முதல் 2022 சனவரி 11 வரையிலான காலத்தில் மாதாந்த சராசரி எரிபொருள் பெறுவனவுகள் மற்றும் நுகர்வுகள் முறையே 442,200 லிட்டர்கள் மற்றும் 725,521 லிட்டர்கள் ஆகக் காணப்பட்டது.**

துவக்கம், நிறுத்தம் மற்றும் துணை கொதிகலன் சோதனைக்கு பயன்படுத்தப்படும் டீசல் மீதான பொருள் கோரிக்கைகள் ஒவ்வொரு மாத இறுதியிலும் வழங்கப்படுகின்றன. பின்னர், பெறுவனவுகள் மற்றும் டீசல் நுகர்வை சரக்கு புத்தகங்களில் உள்ளிடுவதற்கு முன் களஞ்சியக் காப்பாளர் கணக்குப் பிரிவின் பேரேட்டுப் பதிவுகளுடன் குறுக்கு சரிபார்த்தல்களை மேற்கொள்கின்றார். மேற்கூறிய பணிகள் முடிந்தவுடன் ஒவ்வொரு மாத இறுதியிலும் டீசல் பெறுவனவுகள் மற்றும் நுகர்வு பற்றிய அனைத்து விவரங்களும் இருப்புப் பேரேட்டுப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**(கூ) வாழைச்சேனை காகித கூட்டுத்தாபனம் தொடர்பான அமைச்சரவை தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 361,992,685 தொகையான மிகை அறவீடு மற்றும் வட்டிகளை தள்ளுபடி செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.**

ரூபா 361,992,685.22 தொகையை பதிவழிப்புச் செய்ய சபை ஒப்புதல் அளித்துள்ளதுடன் மீதித் தொகையை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஆறு மாத காலத்திற்குள் தவணை அடிப்படையில் அறவிடுதல் வேண்டும். எவ்வாறாயினும், இந்தச் சபை தீர்மானத்தை முன்னெடுப்பதற்காக, வாழைச்சேனை பேப்பர் கம்பனி லிமிடெட் மற்றும் இ.மி.ச. இற்கு இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.



**நளிந்த இலங்ககோன் ஆர் டபிள்யூ.பி ஆர் எஸ் பி**
தலைவர்
இலங்கை மின்சார சபை



**கலாநிதி டி.சி.ஆர் அபேயசேகர**
பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

# சுருக்கக் குறியீடுகள்

ABC - திரண்ட அடிப்படைப் பாடநெறி
ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி
AFM - மேலதிக நிதி முகாமையாளர்
AGC - தன்னியக்கப் பிறப்பாக்கக் கட்டுப்பாடு
AGM - மேலதிகப் பொது முகாமையாளர்
APH - காற்றுமுன் சூடாக்கி
ATS - தன்னியக்க மாற்றல் ஆளி
B&OS - வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம்
BFP - கொதிகலன் ஊட்டி நீர்ப் பம்பி
BOD - உயிர் இரசாயன ஒட்சிசன் கேள்வி
BSC - சுற்றுமுறிப்பான் இணைப்பிக் கொள்ளளவிகள்
BST - தொகையளவு வழங்கல் விதிப்பனவு
CCPP-GT - இணைந்த சுற்று மின்வலு ஆலை - எரிவாயு விசையாழி
CCPP-ST - இணைந்த சுற்று மின்வலு ஆலை - நீராவி விசையாழி
CDM - நிருமாணம் வடிவமைப்பு மற்றும் முகாமை
CEA Act. - மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டம்
CEB - இலங்கை மின்சார சபை
CEPSI - மின் வலு வழங்கல் தொழில்துறை மாநாடு
CMEC - சீன இயந்திரப் பொறியியல் கூட்டுத்தாபனம்
CMMS - கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமை
CNEEC - சீனத் தேசிய மின் உபகரணக் கூட்டுத்தாபனம்
CO - காபனோரோட்சைட்டு
COD - இரசாயன ஒட்சிசன் கேள்வி
COSEM - சக்தி அளவீட்டிற்கான துணை விவரக்குறிப்பு
CPC - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
CPD - தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி
CRH - குளிர் மீள்சூடாக்கி
CS&RA - நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்
CSC - நுகர்வோர் சேவை நிலையம்
CSR - நிறுவன சமூகப் பொறுப்புடமை
CT - மின்னோட்ட மின்மாற்றி
CW - குளிர் நீர்
CW&B - குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள்
DD1 - விநியோகப் பிரிவு 1
DD2 - விநியோகப் பிரிவு 2
DD3 - விநியோகப் பிரிவு 3
DD4 - விநியோகப் பிரிவு 4
DGM - பிரதிப் பொது முகாமையாளர்
DLMS - சாதன மொழிச் செய்தி விவரக்குறிப்பு
DSM - கேள்விப் பக்க முகாமைத்துவம்
EMS - சக்தி முகாமைத்துவ முறைமை
EMU - சுற்றாடல் கண்காணிப்பு அலகு
EPF - ஊழியர் சேமலாப நிதியம்
EPL - சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்
ERD - வெளிவாரி வளத் திணைக்களம்
ERP - நிறுவன வளத் திட்டமிடல்
ESP - மின் நிலைக்கூறு விரைவூக்கி
EV - மின் வாகனம்
FAT - தொழிற்சாலை ஏற்பனவுச் சோதனை
FD - கட்டாய வரைவு
FGD - அனற்குழல் வாயு கந்தக நீக்கல்
FS&PD - தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி
FSUR - மிதப்புக் களஞ்சியம் மற்றும் மீள்வாயுவாக்கல் அலகு
GPD&EEIPP - பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டச் செயற்றிட்டம்
GPS - பூகோள நிலைப்படுத்தல் முறைமை
GGH - வாயுவிலிருந்து வாயுவுக்கான சூடாக்கி
GIS - வாயு காப்பிடப்பட்ட உபமின் நிலையம்
GOSL - இலங்கை அரசாங்கம்
GSS - மின்தொகுப்பு உபமின் நிலையம்
GT - எரிவாயு விசையாழி
HES - ஹெட் என்ட் முறைமை
HP - உயர் அழுத்தம்
HR - மனித வளம்
ICBC - சீனாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி
ICT - கணினி தகவல் தொழினுட்பம்
ICTA - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப முகவராண்மை
ID - தூண்டப்பட்ட வரைவு
IESL - இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம்
IP - இணைய நெறிமுறை
IPP - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள்
IT - தகவல் தொழில்நுட்பவியல்
ITI - தொழில்துறை தொழினுட்ப நிறுவகம்
KCCPS - களனிதிஸ்ஸ இணைந்த சுற்று மின்வலு நிலையம்
KPI - பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்
KPS - களனிதிஸ்ஸ மின்வலு நிலையம்
LCLTGEP - ஆகக்குறைந்த கிரய நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம்
LECO - வரையறுக்கப்பட்ட லங்கா (தனி.) மின்சாரக் கம்பனி
LED - ஒளி உமிழ் இருமுனையம்
LKR - இலங்கை ரூபா
LOI - நோக்கக் கடிதம்
LNG - திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு
LP - குறைந்த அழுத்தம்
LTGEP - நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம்
LTTDP - நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம்
LTL - லங்கா டிரான்ஸ்போமர்ஸ் லிமிட்டெட்
LV - தாழ் மின்னழுத்தம்
LVPP - லக்விஜய மின்வலு ஆலை

MASL - இலங்கை மகாவலி அதிகாரசபை
MDMS - மானித் தரவு முகாமைத்துவ முறைமை
MEPA - கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை
MHPP - மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்
MITFIN - மில்லேனியம் தகவல் தொழினுட்ப மற்றும் நிதித் தகவல் வலையமைப்பு
MLKR - மில்லியன் இலங்கை ரூபாய்
MLTS - நடுத்தர மட்டத் தொழில்நுட்ப பணித்தொகுதியினர்
MMT - மில்லியன் மெற்றிக் தொன்
MOI - நீர்பாசன அமைச்சு
MOIWM - நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு
MOV - மோட்டார் இயக்கப்பட்ட வால்வு
MT - பிரதான மின்மாற்றி
MV - இடைநிலை மின்னழுத்தம்
MVA - மெகா வோல்ட் அம்பியர்
NARA - தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவராண்மை
NBQSA - தேசிய சிறந்த தர மென்பொருள் விருது
NCP - வட மத்திய மாகாணம்
NCRE - மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி
NFC - அண்மைக் களத் தொழினுட்பம்
NGO - அரசு சாரா நிறுவனங்கள்
NOX - நைதரசன் ஒட்சைட்டு
NRV - திரும்பலற்ற வால்வு
NSCC - தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையம்
NSDI - தேசிய இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு
NVQ - தேசிய தொழில்த் தகைமை
NWP - வட மேல் மாகாணம்
OCCW - திறந்த சுற்று குளிர்விக்கும் நீர்
ORE - ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி
PA - முதன்மைக் காற்று
PD - செயற்றிட்டப் பணிப்பாளர்
PDC - மின்வலு விநியோக நிலையம்
PEA –NWP - மாகாண சுற்றாடல் அதிகாரசபை - வட மேல் மாகாணம்
PIV - கொடுப்பனவு உறுதிச்சீட்டு
PM - குறிப்பிட்ட விடயம்
PMU - செயற்றிட்ட முகாமைத்துவ அலகு
POS - விற்பனை மையம்
PPA - மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை
PPP - பொது தனியார் பங்குடமை
PS - மின்வலு நிலையம்
PSHPP - உந்தப்பட்ட சேமிப்பு நீர் மின்வலு ஆலை
PSS/E - பொறியியலாளர்களுக்கான மின்வலு முறைமை உருவகப் போலி
PUCSL - இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
PV - ஒளி மின்னழுத்தம்
RADAR - வானொலி கண்டறிதல் மற்றும் வரையறை
PFP - முன்மொழிவுக்கான கோரிக்கை
R&D - ஆய்வு மற்றும் அபிவிருத்தி
RCL - ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம்
RH - மீள்சூடாக்கி
SAIDI - முறைமைச் சராசரி குறுக்கீட்டுக் காலச் சுட்டெண்
SAIFI - முறைமைச் சராசரி குறுக்கீட்டு அதிர்வெண் சுட்டெண்
SCADA - மேற்பார்வைக் கட்டுப்பாடும் தரவு கையகப்படுத்தலும்
SCC - முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம்
SCU - உபாயத் தொடர்பாடல் அலகு
SDDP - சீரற்ற இரட்டை இயக்க நிரலாக்கம்
SEA Act. - இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபைச் சட்டம்
SESRIP - ஆதரவு மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்பாட்டுச் செயற்றிட்டம்
SH - மீசூடாக்கி
SLE Act. - இலங்கை மின்சாரச் சட்டம்
SMS - குறுஞ் செய்திச் சேவை
SOX - சல்பர் ஒட்சைட்டு
SPPA - நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள்
SSC - மூழ்கிய சீவுளி செலுத்தி
SSM - வழங்கல் பக்க முகாமைத்துவம்
SST - நிலைய அவசரநிலை மின்மாற்றி
SVS - நிலைக்கூற்று வார் முறைமை
T&D - மின் பரிமாற்றமும் விநியோகமும்
TDS - மொத்த கரைந்த திடப்பொருள்கள்
TEC - தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்
TL - மின் பரிமாற்ற மார்க்கம்
TSS - மொத்த இடைநிறுத்தப்பட்ட திடப்பொருள்கள்
UAT - அலகு துணை மின்மாற்றி
UFLS - கீழ்நிலை அதிர்வெண் சுமை உதிர்தல்
UG - நிலத்தடி
UNT - சீரான தேசிய விதிப்பனவு
UOMDP - உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம்
USD - அமெரிக்க டொலர்
UTS - அலகு விசையாழி சேவை
VAT - பெறுமதி சேர் வரி
WPN - மேல் மாகாணம் வடக்கு
WPS - மேல் மாகாணம் தெற்கு
WRB - நீர் வளச் சபை
XLPE - குறுக்குத் தொடுக்கப்பட்ட பொலிஎதிலீன் கம்பிவடம்

**www.ceb.lk**

*50, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo*